# தண்டியலங்காரம்

சென்னை
வித்தியாநுபாலனயந்திரசாலையில்
அச்சிடப்பட்டது

# தண்டியலங்காரம்

## மூலமும் உரையும்

இவ்வுரை

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும்
பாலவனத்தம் ஜமீந்தாருமாகவிருந்த
ராஜராஜ ஸ்ரீமாந்

இராமநாதபுரம்

பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள்

விரும்பியவாறு


யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்புலவர்

புதுக்கியது



இவை

சுன்னாகம்

கு. அம்பலவாணபிள்ளையால்

பதிப்பிக்கப்பட்டன

1926

முதலாம்பதிப்பு 1903; இரண்டாம்பதிப்பு 1926

(*Copyright Registered*)

# இரண்டாம் பதிப்பு முகவுரை

இத்தண்டியலங்காரப் புத்துரை, மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசனாதிபதியும், தலைமைப் புலவருமாகிய ஸ்ரீமாந். பொ. பாண்டித்துரைத் தேவரவர்கள் விரும்பியவாறு, எமது தந்தையாரவர்களால் எழுதிச் சோபகிருது வருடம் வெளியிடப்பட்டது. பிரதிகள் முழுவதும் செலவாயினபடியால் இரண்டாம் முறை பதிப்பிக்கும் நோக்கத்துடன் தந்தையாரவர்கள், இவ்வுரையின் கண்ணே பல திருத்தங்கள் செய்தும் புதியன பல சேர்த்தும் எழுதிவைத்தார்கள். அவ்வாறே இவ்விரண்டாம் பதிப்பு எம்மாற் பதிப்பிக்கப்பட்டது.

சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் திருவாளர் ச. விசுவநாதபிள்ளையவர்கள் தமது வித்தியாநுபாலனயந்திரசாலையில் இப்பதிப்பைத் தாமதமின்றி அச்சிட்டு வெளிப்படுத்துவதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து பெரிதும் உதவிபுரிந்தனர். அவர் நன்றியும், இந்நூலுரையிலுள்ள தூலமுத்திரித வழுக்களைத் திருத்தி உபகரித்த எமது சகோதரர் முத்துக்குமாரசுவாமிப்பிள்ளையவர்கள் நன்றியும், எம்மாலும் பிறராலும் கொண்டாடப்படுவனவாகும்.

யாழ்ப்பாணத்துச்
சுன்னாகம்
அக்ஷயஹூ கார்த்திகைமீ

இங்ஙனம்,
கு. அம்பலவாணபிள்ளை

# சிறப்புப்பாயிரம்

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத்

தருமபரிபாலகராயிருந்த

ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்

இயற்றியது

நிலம்பாவுந் தமிழ்குரவ ரிறையனு
 ரரசுபுரி நேய மிக்க
நலம்பாவுங் கூடனகர்ச் செழியர்புறந்
 தந்தவா நயமிக் கோங்கப்
புலம்பாவு மச்சங்க மதுரைநீஇ
 வளரிசையிற் புவனி தேய்த்த
பொலம்பால வனத்தஞ்ச மீன்பாண்டித்
 துரைத்தேவன் புதுக்க வென்ன.

தண்டிகவி யியற்றுதமி ழலங்காரத்
 துரைபுதுக்கித் தகவிற் றந்தான்
மண்டுமியற் றமிழ்ப்புலமை வாய்ந்ததனோ
 டாரியமும் வல்லான் கேட்போர்
கொண்டுளத்திற் றெளிந்திடமெய்ந் நூலுரைகள்
 போதிக்குங் குரவன் கூர்ந்த
திண்டிறற்சொல் வன்மைகவி செய்வன்மை
 யவையஞ்சாத் திறமை மேன்மை.

முன்னுரு மிலக்கணங்க ளமைந்தகுணக்
 குன்றறிவின் முதுவோர் மன்னு
சுன்னுக நகர்வாசன் குமாரசா
 மிப்புலவன் றன்னு மேருக்
கென்நாளு மேர்செய்வா ரிலரொன்னுரைக்
 கரில்பரிப்பித் தெவரு மேத்தப்
பொன்னுரு மலங்காரக் கலங்காரம்
 புரிந்தபுகழ் புகழற் பாற்றே.

# உள்ளுறை


| | | | பக்கம் |
|---|---|---|---|
| உபக்கிரமணிகை | ... | ... | 1-8 |
| தண்டியலங்காரம் மூலமும் உரையும் | ... | ... | க - உ0எ |
| தற்சிறப்புப்பாயிரம் | ... | ... | க |
| பொதுவியல் | ... | ... | க - கசு |
| பொருளணியியல் | ... | ... | உ0 - கருங |
| சொல்லணியியல் | ... | ... | கருச - உ0எ |
| அருஞ்சொற்றொடர்ப்பொருள்கோள் | ... | ... | உ0அ - உகசு |
| அருஞ்சொற்பொருள்கோள் | | ... | உகஎ - உஉ0 |
| விஷயக்கிரமசூசிகை | ... | ... | உஉக - உஉசு |
| அரும்பதவகராதி | ... | ... | உஉஎ - உஉஅ |
| சூத்திரக்கிரமசூசிகை | ... | ... | உஉகூ - உஙக |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| ௨ | ௬ | பலகவிகளாய | பலகவிகளாய் |
| ௮ | ௨௭ | பெறுதற்கு | பொருள்பெறுதற்கு |
| ௧௮ | ௧௧ | கொளடர் | கெளடர் |
| ௨௪ | ௧௮ | ஆய், | ஆய் |
| ௮௫ | ௧௬ | ப்பொதுப்பொருளாகநின்று | (இப்பாகத்தைவிட்டு வாசிக்க) |
| ௧00 | ௬ | இவவணி | இவ்வணி |
| ௧௪௫ | ௨0 | விரொத | விரோத |
| ௧௬௨ | ௧௫ | இகுவினை | இருவினை |
| ௧௭0 | ௫ | விடகன | விடாகன |
| ௨௨௪ | ௧௮ | போலியுவமை | போலியுவமை |
| ௨௨௬ | ௧௨ | விபாபனை | விபாவனை |

# உபக்கிரமணிகை

நிலவுலகத்திலே பல்வேறு வகைப்பட்டுள்ள பிறப்புக்களெல்லாவற்றுள்ளும் மிக்க பெருஞ்சிறப்புடையது கல்வி கேள்விகளாலாகுஞ் செயற்கையறிவினைத் தேடிப் பெறுதற்குரிய மக்கட்பிறப்பேயாம். மக்கட்பிறப்பினைப் பெற்றுங் கல்விகேள்விகளாலாகுஞ் செயற்கையறிவினைத் தேடிப் பெற்றுக்கொள்ளாதவர் எச்சிறப்புடையராயினும் மிருகமென்றே அறிஞரால் இகழப்படுவர். ஸ்ரீராமபிரானுந் தக்கனவற்றையுந் தகாதனவற்றையும் பிரித்துணராத மக்களை மிருகமென்று கூறினர்.

'தக்க வின்ன தகாதன வின்னவென்
றொக்க வுன்னல ராயி னுயர்ந்துள
மக்க ளும்விலங் கேமனு வின்னெறி
புக்க வேலவ் விலங்கும்புத் தேளிரே.' (இராமாயணம்)

கல்வியறிவினைப் பெற்றுக்கொள்ளாதவர் கண்களுடையராயினுங் குருடரென்றே கொள்ளப்படுவர். "கண்ணுடையரென்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்." செல்வராயினும் வறிஞரென்றே மதிக்கப்படுவர். "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை - பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்." அம்மட்டோ! புண்ணிய பாவங்களையும், இம்மை மறுமைகளையும் பிறவற்றையும் அறியவும் மாட்டார்; அடையவும் மாட்டார்.

'இருவிழிகள் வாண்முகத்தி லிருந்தாலும்
வானிரவி யெழுந்தா லன்றிக்
கருதுநிலப் பலபொருளுங் காண்டலரி
தாமுலகிற் கண்போல் யாரும்
பெருகியசெல் வமுமறிவும் பெற்றாலு
நூற்கேள்வி பெறுவார்க் கன்றித்

திருவளர்புண் ணியபாவ மிம்மைமறு
மையும்வீடுந் தெரியா தன்றே.'
(திருக்குற்றாலப்புராணம்)

'அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு — முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.' (நீதிநெறிவிளக்கம்)

இக்கல்வியறிவும் யாவரானும் இலகுவாகப் பெறத்தக்க தொன்றன்று; பற்பல நூல்களையும் பலப்பல நாள்களாக வருந்திக் கற்றுப் பெற்றுக்கொளப்படுவதொன்றேயாம். "தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறு மறிவு." கற்கப்படும் நூல்களும் பற்பல தேச பாஷைகளிலும் பலராலுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் வழங்குந் தேசவாசிகளாகிய நம்மவர்களாற் கற்கப்படுதற்குரியன நந் தமிழ்மொழியிலே உறுதிபயப்பனவாயுள்ள நூல்களேயாகும். அவைகளுஞ் சங்கமருவிய சான்றோர் நூல்களும், மற்றைச் சான்றோர் நூல்களுமாகப் பற்பலவாய்ப் பரந்து கிடக்கின்றன. நாலடியார், திருக்குறள், நான்மணிக்கடிகை முதலியனவும் பிறவுஞ் சங்கமருவிய சான்றோர் நூல்களாகும். பெரியபுராணம், கந்தபுராணம், பாரதம், இராமாயணம் முதலியனவும் பிறவும் மற்றைச் சான்றோர் நூல்களாகும்.

இந்நூல்களையெல்லாம் ஐயந்திரிபற எளிதிற் கற்றுணர்தற்கு இலக்கணம், தருக்கம், நிகண்டு முதலிய நூல்கள் இன்றியமையாதனவாயுள்ள கருவிகளாகும். இவற்றுள்ளே சொற்பொருள்களை முட்டறுத்து விளக்குவது இலக்கணம். இவ்விலக்கணமும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து பாகுபாடுடையது. இவ்வைந்தனுள்ளும் பாஷைகளுக்கெல்லாம் பொதுவாக நின்று அவற்றினைச் சிறப்பிப்பது அணியிலக்கணம். அணியெனினும் அலங்காரமெனினும் ஒக்கும். வடநூலார் சிலர் சரீரத்திற்கு ஆடையாபரணங்கள் போலக் கவிகளுக்குச் சோபையைச் செய்யும் விசேடமாயுள்ள தன்மை தானே அலங்காரம் எனப்படும் என்பர். அலம் - ஆபரணம், வன்மை, நிறைவு. காரம் - செயல், செய்வது.

வடமொழியாகிய *சங்கதத்திலே அலங்காரம் பலரா லுஞ்செய்யப்பட்டுப் பலநூல்களாய் விரிந்து பரந்து கிடக்கின்றது. அவ்வலங்கார நூல்கள் காவ்யாதர்சம், காவ்யதர்ப்பணம், காவ்யப்பிரகாசம், சரசுவதிகண்டாபரணம், சாகித்திய தர்ப்பணம், சந்திராலோகம், சித்திரமீமாஞ்சை, குவலயானந்தம் முதலியன. இவற்றுள்ளே காவ்யாதர்சமும், சந்திராலோகமுங், குவலயானந்தமுந் தமிழிலும் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. காவ்யாதர்சஞ் செய்தவர் மஹாகவியாகிய தண்டியாசிரியர். வீரசோழியத்திலே வரும் அணியிலக்கணமும் இக் காவ்யாதர்சத்தின் மொழிபெயர்ப்பு. தமிழிலே வழங்கும் இத்தண்டியலங்காரமும் இதன் மொழிபெயர்ப்பு. இது செய்தவருந் தண்டி என்னும் பெயருடைய மற்றொரு பண்டிதர். இவரை அம்பிகாபதியின் மகனென்பாருமுளர்.

ஐவகை இலக்கணங்களுள்ளே எழுத்துச் சொல் என்னும் இலக்கணங்கள் இரண்டிற்கும் நன்னூலும், பொருளிலக்கணத்திற்கு நம்பியகப்பொருளும் வெண்பாமாலையும், யாப்பிலக்கணத்திற்கு யாப்பருங்கலக்காரிகையும் படிக்கப்பட்டு வருதல் போல அணியிலக்கணத்திற்கு இத்தண்டியலங்காரமே பலராலும் இப்போது படிக்கப்பட்டு வருகின்றது. கந்தபுராணம், சேதுபுராணம், பாரதம், இராமாயணம் முதலிய இலக்கியங்களிலே வரும் வைசித்திரியமான எத்தனையோ கவிகளின் பொருள்களையெல்லாம் உள்ளவாறறிதற்குப் பெரிதும் உபகாரகமாய் நிற்பதும் இத்தண்டியலங்காரமேயாம்.

'சுளையு டைப்பல வாசினி பூகமாந் துடைவை
உளைம லர்ச்சினை மருதமோ டொழிந்தன பிறவுங்
களைத லுற்றமாட் டெறிந்தது கண்ணகன் குடிஞை
அளவின் மிக்குறு பாணிபெற் றதற்கவை யரிதோ.'

(கந்தபுராணம்)

'கள்ள மிகுமவுணர் சிந்தையெனுங் காழிரும்பா
யுள்ள வுருகி யுரைசெழுமா யத்தீயின்
எள்ள வருங்கறையு மேகிநயந் திட்டனவால்
வெள்ளி மிகப்புணர்க்கின் மேலையுரு நின்றிடுமோ.'

(கந்தபுராணம்)

* சங்கதம் - சம்ஸ்கிருதம்; தற்பவம்.

'பொருவில் போரிது போற்பிற வின்மையர்
இருவர் போர்க்கு மிதர விதரமே
மீருவு நேருப மானம் வகுத்திடப்
பெருகு காதல் பெறிற்கவி வாணரே.' (சேதுபுராணம்)

இவற்றுள்ளே முன்னையன இரண்டும் சிலேடையின் முடித்தலாகிய வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணி பெறச்செய்த கவிகள். "அளவின் மிக்குறு பாணி பெற்றதற் கவையரிதோ" என்பதும், "வெள்ளிமிகப் புணர்க்கின் மேலை யுரு நின்றிடுமோ" என்பதுஞ் சிலேடையின் முடித்தல். 'பாணி' என்பது நீருக்குங் கைக்கும், 'வெள்ளி' என்பது சுக்கிரனுக்கும் வெண்பொன்னுக்குஞ் சிலேடை. பின்னையதாகிய "பொருவில்போரிது" என்பதன் பொருள் இத்தண்டியலங் காரத்திற் கூறப்பட்ட உவமவகையுளொன்றாகிய இதரேத ரோவமையின் இலக்கணங்கொண்டறியத்தக்கது. இவ்வாறு வருவனவும் எத்தனையோ பல. இவையெல்லாம் அணியிலக் கணத்திலே அப்பியாசமில்லாதவர்க்கு எப்படிப் புலப்படும்? இத்தண்டியலங்காரப் பயிற்சியுடையார்க்கு எளிதிற் புலப் படாதனவாகா. இவ்வணிகளெல்லாம் இத்தண்டியலங்காரத் திலே பொருளணியியலிலே காணப்படும்.

இத்தண்டியலங்காரம் பொதுவியல் என்றும், பொரு ளணியியல் என்றும், சொல்லணியியல் என்றும் மூன்று பாகு பாடுடையது. பொதுவியலிலே முத்தகம், குளகம் முதலிய கவிவகைகளும், கவிகளினுள்ளே நின்று அழகுசெய்வனவா கிய செறிவு, தெளிவு முதலிய குணவகைகளும் பொருளணி யியலிலே தன்மை, உவமை முதலிய பொருளணிவகைகளும், சொல்லணியியலிலே மடக்கு வகைகளும், சித்திரகவிவகை களும், கவிகளிலே வருதற்காகாத வழுக்களுங் கூறப்பட் டிருக்கின்றன. பொதுவியலைப் பொதுவணியியலென்பாரு முளர்.

பொருளணியியலிலே சொல்லப்படுமணிகள் முப்பத் தைந் தென்னுந் தொகையுடையனவாயினும் ஏறக்குறைய ஒவ்வொன்றும் பற்பல பாகுபாடுடையது. எல்லாவற்றுள் ளும் உவமையணி வகைகளும் விலக்கணிவகைகளும் மிகப்

பலவாயின. உவமையணி வகைகளுள்ளே சில, உவமவணி ஒன்றே கூறிய தொல்காப்பியத்துள்ள உவமவியற் சூத்திரங் களிலே அடங்குகின்றன. "சுட்டிக் கூறாவுவமம்" என்னுஞ் சூத்திரத்திலே தொகையுவமை என்பதும், "பொருளே யுவமஞ் செய்தனர்" என்னுஞ் சூத்திரத்திலே விபரீதவுவமை என்பதும், "தடுமாறுவமம்" என்னுஞ் சூத்திரத்திலே ஐய வுவமை, இதரவிதரவுவமை என்பனவும், "வேறுபட வந்த வுவமத்தோற்றம்" என்னுஞ் சூத்திரத்திலே உவமசம்பந்த முடைய வேறு பலவணிகளும் அடங்குவனவாம். இன்னும் உவமவகைகளுள்ளே சிலவற்றையும் வேறு சில பொருளணி களையும் சாகித்தியதர்ப்பணம், சரசுவதிகண்டாபரணம் முத லிய வடமொழியலங்காரகாரர் வேறு வேறலங்காரமாகக் கூறுவர். பொதுநீங்குவமையை 'அநந்நுவயவணி' என்பர். ஐயவுவமையை 'ஐயவணி' என்பர். விபரீதவுவமையைப் 'பிர தீபவணி' என்பர். திரிபதிசயவணியைப் 'பிராந்திமத்தணி' என்பர். இவ்வாறே வேறாகக் கூறப்படுவனவும் பல.

இத்தண்டியலங்காரத்திற்கு எழுதப்பட்டிருக்கும் உரை யோடமைந்துள்ளனவாகிய உதாரணகவிகளெல்லாம் சொல் லினும் பொருளினுஞ் சுவைபடும் இன்பமுடையன; சில கவி கள் நான்மணிக்கடிகை, திரிகடுகம், நாலாயிரப்பிரபந்தம் முத லியவைகளிலே வருவன; பல கவிகள் புலப்படாதன; அவற் றுள்ளும் பல அநபாய சோழராசாவின் புகழமைந்துள்ளன; முதலிலே முத்தகச்செய்யுளுக்கு உதாரணமாக வருங் கவி யினும்,

"என்னை சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யநபாயன் பொன்னெடுந்தோள்"

என அநபாயசோழராசாவின் பேர் வருகின்றது. இறுதி யிலுள்ள வாழ்த்தணியின் உதாரணகவியிலும் அவன்பேர் வருகின்றது. வெண்பா:

'மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர் — காவிரிநாட்
டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.'

இவ்வுரையை முதனூலாகிய காவ்யாதர்சத்தோடும், சாகித்தியதர்ப்பணம் சரசுவதிகண்டாபரணம் முதலியவைகளோடும், வேறு சில தமிழ்நூல்களோடுஞ் சேர்த்துப் பார்த்தபோது பல பாகங்கள் திருத்தப்படுதற் குரியனவாகக் காணப்பட்டன. "பெருங்காப்பியநிலை" என்னுஞ் சூத்திரத்திலே 'சந்தி' என்பதற்கு "வித்தல் விளைவுதுய்த்த லென்பதுபோல்வது" என்பதும், 'விரியுவமை' என்பதற்குப் "பண்பு முதலியன விரிந்துநிற்பது" என்பதும், 'மறுபொருளுவமை' என்பதற்கு "முன்னர் வைத்த பொருட்கு நிகராவதோர் பொருட் பின்னர் வைப்பது" என்பதும், 'பலவயிற்போலியுவமை' என்பதற்கு "ஒருதொடர்மொழிக்கட் பலவுவமை வந்தால் வந்தவுவமைதோறும் உவமைச்சொற் புணர்ப்பது" என்பதும், "உலகறிகாரணம்" என்னுஞ் சூத்திரத்திலே "வேறொரு காரணமியல்பு குறிப்பின்" என்பதற்கு "பிறிதோர் காரணம் இயல்பாகக் குறிப்பாக" என்பதும், ஒப்புமைக்கூட்டவணி உணர்த்துஞ் சூத்திரத்திலே "கருதியகுணத்தின்" என்பதற்கு "கருதியகுண முதலாயினவற்றின்" என்பதும் உரையாகக் காணப்பட்டன. சித்திரகவிகளுள்ளே இரண்டாங்கவி "கூடசதுக்கம்" என்றிருந்தது. காதைகரப்பு, கரந்துறைப்பாட்டு என்பவற்றினுரை மாறனலங்காரச் சூத்திரத்தோடு மாறுபட்டிருந்தது. ஆறுரச்சக்கரத்தின் உதாரணமாகிய "தண்மலர்வில்லி" என்னுங் கவி சக்கரத்திலே அமைக்கப்படும்போது, ஓரெழுத்தாய்க் குறட்டிலே பொதுவாக நின்று மும்முறை படித்தற்குரிய எழுத்து ஒரு முறை ரகரமெய்யும், இருமுறை ரகரவுயிர்மெய்யுமாகப் பெற்றும், சூட்டிலே பொதுவே நிற்றற்குரிய ஓரெழுத்து ஒருமுறை தகரமெய்யும், ஒருமுறை தகரவுயிர்மெய்யுமாகப் பெற்றும் பிழைப்பட்டிருந்தது.

இவைகளையும், இவைபோன்ற பிறவற்றையும் வேறுக்கியும், வேறு சிலவற்றை விலக்கியும், ஆவசியகமான சிலவற்றைக் கூட்டியும், விஷயங்களை வேறுவேறாக விரித்து விளக்கியும், முன்னுள்ள உதாரணகவிகளோடும் பின்னும் பலகவிகளைக் கந்தபுராணம் இராமாயணம் முதலியவற்றினின்றும்

எடுத்துக்காட்டியும், முரசபந்த கோட்டம் புதுவதாகத்தீட்டியும் இப்பொழுதெழுதப்பட்டிருத்தலால் இவ்வுரை புதுக்கப்பட்டதாயிற்று. உதாரணகவிகளெல்லாம் பெரும்பாலும் பொருள் புலப்பாடுடையனவாயிருத்தலால் உரையெழுதப்படவில்லை; இதனைக் கற்றற் குரியவரும் இலக்கியப்பயிற்சியும் ஏனையிலக்கணப் பயிற்சியும் பெற்றவராவர்; ஆயினும் புலப்பாடிலனவாகத் தோன்றிய சில சொற்களுக்குஞ் சில சொற்றொடர்களுக்கும் உரை எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றது. பல முன்னையவுரையை அநுசரித்தன. நன்கு புலப்படாதனவுஞ் சில. மாறுகக் காணப்படும் எவ்வகை வழுக்களையுந் திருத்தி வெளிப்படுத்துதல் தெள்ளியோர் கடன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள் பரோபகாரமாகத் தொடங்கி நடாத்தி வந்த வித்தியாதருமவிடயங்களைப் பரிபாலித்து வளர்த்து வருபவராகிய ஸ்ரீமத். ந. க. சதாசிவப்பிள்ளையவர்கள் செய்த உதவிகள் மிகப்பல. திருத்தங்கள் பலவாகச் செய்தும், பொருத்தமுந் தோற்றமும் பொருந்துமாறு பதிப்பித்தும், நாகபந்தம் முரசபந்தம் முதலியவைகளைச் சித்திரதோட்டங்களில் அமைப்பித்தும் இவ்வலங்காரத்தினை அச்சினும் அலங்காரமாக்கினார்கள். இவர்கள் நன்றி நம்மால் என்றுங் கொண்டாடப்படுக.

இதனை உள்ளக்கிளர்ச்சியோடும் விரைவின் முடிக்கும் பொருட்டு நல்லுரையான் மகிழ்வித்துத் திரவியோபகாரமுந் தக்கவாறு செய்த பெருமையாளருடைய பெருநன்றி மறக்கப்படுவதன்று; அந்நன்றியாளரும் என்றும் பண்பு பாராட்டப்படுதற்குரியர்.

'நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.'

செந்தமிழ்ப் பரிபாலநம் பூண்டு தண்டமிழின் மேலாந்தரமாயுள்ள திருக்குறளுரை, திருக்கோவையாருரை முதலிய செந்தமிழ் நூலுரைகள் வெளிப்படுதற்குக் காரணராய் விளங்கிய தந்தையார்போலச் செந்தமிழ் நூலுரைகளுக்குத் தாமும் உபகரித்துவரும் பெருமையுடையார் எவரோ அவரே அந்

நன்றியாளராவர். அவர் தாம் யாவரெனின்; பாலவனத்தம் ஜமீந்தார் என்றும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தலைவர் என்றும், தலைமைப்புலவர் என்றும், செந்தமிழ்க் கலாவிநோதர் என்றும், செந்தமிழ்ப் பரிபாலகர் என்றும், பிரபு என்றுஞ் சொல்லப்படும் ஸ்ரீமான். பாண்டித்துரைத்தேவர் என்போம். மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய்ப், பாவேந்தரும் குறைந்து பழைய நூலுரைகளும் மறைந்து, படிப்பாரு மின்றிக், கேட்பாருமின்றித் தமிழ்க்கல்வி மழுங்கிவரும் இக் காலத்திலே மதுரைமாநகரிலே வித்துவசங்கங் கூட்டியும் அருந்தமிழ் நூல்களை ஈட்டியும், படித்து வல்லராவார்க்குப் பரிசில்கொடுத்தும், "செந்தமிழ்" என்னும் வாசிக மாசிகப் பத்திரிகையை வெளிப்படவிடுத்தும் பிரபுவவர்கள் பலவாறு கச் செய்துவருந் தமது செந்தமிழ்ப் பரிபாலனச் செயல் களுள் இதனையும் ஒன்றாக மதிப்பார்கள் என்பது நமது கருத்து.

யாழ்ப்பாணத்துச்
சுன்னாகம்
சோபகிருதுஸு ஐப்பசிமீ } இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை

# தண்டியலங்காரம்

## தற்சிறப்புப்பாயிரம்

சொல்லின் கிழத்தி மெல்லிய லிணையடி
சிந்தைவைத் தியம்புவன் செய்யுட் கணியே.

# பொதுவியல்

## செய்யுள்வகை

க. செய்யு ளென்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகங் குளகந் தொகைதொடர் நிலையென
எத்திறத் தனவு மீரிரண் டாகும்.

இதன்பொருள் – செய்யுளென்று சொல்லப்படுவன எத்திறத்தனவும் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர் நிலை என நான்குவகைப்படும் என்றவாறு.

## முத்தகம்

உ. அவற்றுள்,
முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்.

இதன்பொருள் – அந்நால்வகையுள்ளே முத்தகச் செய்யுளாவது வேறு செய்யுளோடு தொடர்தலின்றி ஒரு செய்யுளேயாய்த் தனிநின்று பொருண்முடியப் பெறுவதே யாம் என்றவாறு.

உதாரணம்:

'என்னேய் சிலமடவா ரெய்தற் கெளியவோ
பொன்னே யநபாயன் பொன்னெடுந்தோள்—முன்னே
தனவேயென் றூளுஞ் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.'

எனவரும்.

இச்செய்யுள் ஒன்றேயாய்த் தனிநின்று பொருண்முடிந்தவாறறிக.

## குளகம்

௩. குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்.

இதன்பொருள் — குளகமாவது பலகவிகளாய ஒருவினைகொண்டு முடியப் பெறுவதாகும் என்றவாறு.

உதாரணம்:

'உப்புடைய முந்நீ ருடன்றுகரை கொல்லு
தொப்புடைய தானையு மொருதனிய னாகி
இப்படி யிறைமக னிருங்களிறு நூற
அப்படையு ளண்ணலு மழன்றுகளி றுந்தி.'

எனவும்,

'நீடக மிருந்தகிழ னேமிவல னேந்திக்
கேடக மறுப்பநடு வற்றரவு சேர்ந்தாங்
கோடுகதிர் வட்டமென வொய்யென்வு லம்பிக்
காடுகவர் தீயின்மிகை சீறுபு வெகுண்டான்.'

எனவும் வரும்.

இவ்விரு கவிகளுங் குளகமாய் ஒருவினைகொண்டு முடிந்தன. வடநூலாருள்ளே அக்கினிபுராணகாரர் தனியே ஒரு கவியாய் முடிவது முத்தகம் என்றும், இருகவிகளோடு கூடியது யுக்குமம் என்றும், மூன்றுகவிகளோடு கூடியது விசேஷகம் என்றும், நான்கு கவிகளோடு கூடியது கலாபம் என்றும், ஐந்து கவிகளோடு கூடியது குளகம் என்றுங் கூறுவர். இது முத்தகத்திற்கு எதிர்.

## தொகைநிலை

௪. தொகைநிலைச் செய்யு டோன்றக் கூறின்
ஒருவ ருரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருளிடங் காலந் தொழிலென நான்கினும்
பாட்டினு மளவினுங் கூட்டிய தாகும்.

இதன்பொருள்- தொகைநிலைச் செய்யுளாவது ஒன்றனைத் தொடர்தலின்றி ஒருவராற் பாடப்பட்டனவும் பலராற் பாடப்பட்டனவுமாகிப் பொருள் பற்றியும், இடம்பற்றியும், காலம்பற்றியும், தொழில்பற்றியும், கவிவகைபற்றியும், அளவுபற்றியுந் ஒருங்கு கூட்டப்பட்டதாகும் என்றவாறு.

தொகைநிலை - சமூகமாய் நிற்றலுடையது. பொருள்பற்றிக் கூட்டப்பட்டன புறநானூறு, அகநானூறு முதலியன. இடம்பற்றிக் கூட்டப்பட்டன களவழிநாற்பது முதலியன. காலம்பற்றிக் கூட்டப்பட்டன கார்நாற்பது முதலியன. தொழில்பற்றிக் கூட்டப்பட்டன ஊஞ்சல், * யானைத்தொழில் முதலியன. கவிபற்றிக் கூட்டப்பட்டன கலித்தொகை முதலியன. அளவுபற்றிக் கூட்டப்பட்டன பதிற்றுப்பத்து, குறுந்தொகை முதலியன.

ஒருவராற் பாடப்பட்டன திருவள்ளுவர், கார்நாற்பது முதலியன. பலராற் பாடப்பட்டன அகநானூறு, பன்னிருபடலம் முதலியன.

## தொடர்நிலை

ரு. பொருளினுஞ் சொல்லினு மிருவகை தொடர்நிலை.

இதன்பொருள் - பொருள்பற்றியுஞ் சொற்பற்றியும் தொடர்நிலைச்செய்யுள் இருவகைப்படும் என்றவாறு.

தொடர்நிலை - தொடர்ந்துநிற்றலுடையது. இது தொகைநிலைக்கு எதிர்.

## பொருட்டொடர்நிலை

சு. பெருங்காப் பியமே காப்பிய மென்றாங்
கிரண்டா மியலும் பொருட்டொடர் நிலையே.

இதன்பொருள் - அவ்விருவகையுள்ளே பொருட்டொடர் நிலைச்செய்யுள் பெருங்காப்பியம் என்றும், காப்பியம் என்றும் இரண்டுவகையாகி வழங்கப்படும் என்றவாறு.

* யானைத்தொழிலாவது யானையின் பிறப்பிடம், அழகு, உயர்ச்சி, வயசு, குலம், கொலை முதலியவற்றைக்காட்டி வஞ்சிப்பாவினாற் பாடப்படும் பிரபந்தம்.

## பெருங்காப்பியம்

எ. பெருங்காப் பியநிலை பேசுங் காலை
வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினொன்
றேற்புடைத் தாகி முன்வர வியன்று
நாற்பொருள் பயக்கு நடைநெறித் தாகித்
தன்னிக ரில்லாத் தலைவனை யுடைத்தாய்
மலைகட னாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றமென் றினையன புனைந்து
நன்மணம் புணர்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழி னுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியிற் புலத்தல் கலவியிற் களித்தலென்
றின்னன புனைந்த நன்னடைத் தாகி
மந்திரந் தூது செலவிகல் வென்றி
சந்தியிற் றொடர்ந்து சருக்க மிலம்பகம்
பரிச்சேத மென்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய தென்ப.

இதன்பொருள் – பெருங்காப்பியமாவது வாழ்த்து, வணக்கம், எடுத்துக்கொண்டபொருள் என்னும் மூன்றனுள் ஒன்றினை எற்றுவருதலுடைத்தாகிப் பாயிரத்திலே வருதலைப் பொருந்தியும், நாற்பொருள்களையும் பயக்கும் நீதிநெறிகளையுடையதாயும், சிறந்த நாயகன் ஒருவனையுடையதாயும், மலை, கடல், நாடு, நகர், பருவம், சூரியோதயம், சந்திரோதயம், என்பவைகளையும், இவைபோன்ற பிறவற்றையும் வர்ணித்தலுடையதாகியும், மணம்புணர்வு, முடிசூட்டு, பொழில்விளையாட்டு, புனல்விளையாட்டு, உண்டாட்டு, புதல்வர்ப்பேறு, புலவியிற்புலத்தல், கலவியிற்களித்தல், என்பவைகளையும் இவைபோன்ற பிறவற்றையும் வர்ணித்த நடையுடையதாயும், மந்திரம், தூது, மேற்செலவு, போர்புரிதல், வெற்றிபெறுதல் என்பவைகளைச் சந்திபோலத் தொடர்ந்து வர்ணித்தலுடையதாயும், சருக்கம், இலம்பகம், பரிச்சேதம் என்னும் பாகுபாடுகளுள் ஒன்றினால் விளங்குதலுடையதாகியும், மிக்க

சுவையும் பாவமுமுடைமையால், யாவரும் விரும்பும்படி கவி ஞரால் அலங்கரித்துப் பாடப்படுந் தன்மையுடையதாகும் என்றவாறு.

'வாழ்த்து, வணக்கம், வருபொருள்' என்பவற்றுள் ஒன் றன்றி இரண்டுவருதலும், மூன்றும் ஒருங்குவருதலும் வழக் காறுகும். முதனூலார் வாழ்த்தினை 'ஆசி' என்றும், வணக்கத் தினை 'நமஸ்கிரியை' என்றும், வருபொருளை 'வஸ்து நிர்த்தே சம்' என்றுங் கூறுவர்.

முன்வரவு - பாயிரம். முன்வருதலின் 'முன்வரவு' எனப் பட்டது.

'நாற்பொரு'ளாவன அறம், பொருள், இன்பம், வீடு என்பன.

'தன்னிகரில்லாத் தலைவன்' என்பதனால் நாயகன் சிறந் தவனுயிருத்தல் வேண்டும் என்பது பெறப்படும். நாயகனு வான் அழகு, இளமை, புகழ், ஆண்மை, ஆக்கம், ஊக்கம், அருள், பிரதாபம், கொடை, குலம் முதலிய குணங்களுடை யவனுய் இருத்தல் வேண்டு மென்று சாகித்திய தர்ப்பண காரர் கூறுவர். சிந்தாமணி என்னும் பெருங்காப்பியத் தலைவ னகிய சீவகனிடத்திலே இக்குணங்கள் பலவமைதலால் அவ னைத் 'தன்னிகரில்லாத் தலைவன்' என்பாருமுளர்.

'அருள்வலி யாண்மை கல்வி
யழகறி விளமை யூக்கந்
திருமலி யீகை போகந்
திண்புகழ் நண்பு சுற்றம்
ஒருவரிவ் வுலகில் யாரே
சீவக னொக்கு நீரார்
பெரிதரி திவனைக் கொன்றாய்
பெறுகெனச் சிறப்புச் செய்தான்.'

(சிந்தாமணி)

'பருவ'மாவன கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவே னில், முதுவேனில் என்பன.

'இனையன' என்பதனால் நதிவருணனை, பரிவருணனை, கரிவருணனை, சூரியாத்தமனவருணனை, சந்திராத்தமனவருணனை முதலியனவுங் கொள்ளப்படும்.

தேம்பிழிமது - தேனாற்சமைக்கப்பட்ட கள்ளு. மதுக்களி - உண்டாட்டு. புலவி - காதல்காரணமாக விரும் பிணக்கு. கலவி - புணர்ச்சி. மந்திரம் - ஆலோசனை; அது, நட்பாக்கல், பகையாக்கல், மேற்சேறல், இருத்தல், பிரித்தல், கூட்டல் என்னும் அறுகுணங்களையுஞ் சிந்தித்தாராய்தல்.

'சந்தி'யாவது நாடகலக்கணத்திற் சொல்லப்பட்ட ஒருறுப்பு. அது, முகம், பிரதிமுகம், கருப்பம், விளைவு, துய்த்தல் என ஐவகைப்படும். அவற்றுள், முகமாவது உழவினாற் சமைக்கப்பட்ட பூழியுளிட்டவித்துப் பருவஞ்செய்து முளைத்து முடிவது போல்வது. பிரதிமுகமாவது அங்ஙனம் முளைத்தன் முதலாய் இலைதோன்றி நாற்றாய் முடிவது போல்வது. கருப்பமாவது அந்நாற்று முதலாய்க் கருவிருந்து பெருகித் தன்னுட் பொருள் பொதிந்து முற்றி நிற்பது போல்வது. விளைவாவது கருப்பமுதலாய் விரிந்து கதிர்திரண்டு முற்றிவிளைந்து முடிவது போல்வது. துய்த்தலாவது விளைந்த பொருளைக் கொண்டுபோய் உண்டு மகிழ்வது போல்வது. இவ்வாறாய சந்திபோல 'மந்திரம்' முதலியனவும் ஒன்றனையொன்று தொடர்ந்து பயன் தருவனவாகும். 'சந்தி' என்பதற்கு 'ஒன்றினை யொன்று விரும்பித் தொடர்வது' என்பாருமுளர்.

'சருக்கம், இலம்பகம், பரிச்சேதம்' என்பன நூற்பிரிவுகளைப் பொதுவாக உணர்த்தும் நாமங்கள். படலமென்பது மது. பாரதம் முதலியன சருக்கம் என்பதும், சிந்தாமணி முதலியன இலம்பகம் என்பதும் பெற்றுவந்த காப்பியங்கள். 'பரிச்சேதம்' என்பது பெற்றன வந்துழிக் காண்க.

நெருங்கியசுவை-இடையீடின்றி நிறைந்தசுவை. 'சுவை' வீரம் அச்சம் முதலியனவாகப் பின்னர்க் கூறப்படுவன. பாவம் - மெய்ப்பாடு. இதன் விரிவைத் தொல்காப்பியத்து மெய்ப்பாட்டியலிற் காண்க.

கம்பராமாயணம், சிந்தாமணி, கந்தபுராணம் முதலியன இவ்விலக்கணங்கள் பெரிதுமமைந்த பெருங்காப்பியங்களாகும்.

## இதுவுமது

அ. கூறிய வுறுப்பிற் சிலகுறைந் தியலினும்
வேறுபா டின்றேன விளம்பினர் புலவர்.

இதன்பொருள்-முற்சூத்திரத்திற் சொல்லப்பட்ட மலைவருணனை, கடல்வருணனை முதலிய உறுப்புக்களுள்ளே சிலவுறுப்புக்கள் குறைந்து வருமாயினும் வேறொன்றாகச் சொல்லப்படுவதில்லை என்று சொல்லுவர் புலவர் என்றவாறு.

எனவே அவற்றுட் சிலவுறுப்புக் குறைந்து வருவதும் பெருங்காப்பியம் என்றே கொள்ளப்படும். அறம், பொருள் முதலியவற்றிற் குறைவுபடலாகாதென்பது வருஞ் சூத்திரத்தாற் பெறப்படும்.

## காப்பியம்

கூ. அறமுத லொன்கினுங் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப் படுமே.

இதன்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள் ஒன்றேனும் பலவேனும் குறைவுபடுதலுடையது காப்பியம் என்று கருதப்படும் என்றவாறு.

இது 'சிறுகாப்பியம்' எனவும்படும்.

## காப்பியநடை

க0. அவைதாம்,
ஒருதிறப் பாட்டினும் பலதிறப் பாட்டினும்
உரையும் பாடையும் விரவியும் வருமே.

இதன்பொருள் - அவ்விருவகைக் காப்பியங்களும் ஒருவகைப் பாட்டுக்களானும், பலவகைப் பாட்டுக்களானும் வருதலன்றி உரைப்பாட்டுக் கலந்தும், பாடை கலந்தும், வருதலையும் பெறும் என்றவாறு.

'பாட்'டாவது அடி, தொடை முதலிய உறுப்புக்கள் அமைந்து சந்தம் பெற்று வருவது. 'உரை'யாவது பாட்டுப் போல அடி, தொடை முதலியன பெறாது சூத்திரம் போலச் சென்று சொற்சீரடியான் முடிவது. இலக்கணவிளக்கப் பாட்டியலுரைகாரர் 'சொற்சீரடியானிற்ற சூத்திரம் உரைச் செய்யுள் என்பதாம்' என்றார். உரைப்பாட்டுக் கலந்து வந்த காப்பியம் சிலப்பதிகாரம் முதலியன. * 'பாடை'யாவது வழக்கத்திற் கதைசொல்வது போலச் சந்தம் முதலியுமின்றி வரும் வாக்கியவடிவம். இது 'கத்தியரூபம்' எனவும்படும்.

"பெருங் காப்பிய நிலை" என்னுஞ் சூத்திரம் தொடங்கி இச்சூத்திரம் வரையும் பொருட்டொடர்நிலைச் செய்யுள்வகை இரண்டுங் கூறி, வருஞ் சூத்திரத்தாற் சொற்றொடர்நிலை கூறுகின்றார்.

## சொற்றொடர் நிலை

கக. செய்யுளந் தாதி சொற்றொடர் நிலையே.

இதன்பொருள் – ஒரு செய்யுளினந்தம் அடுத்த செய்யுட்கு முதலாகிவரத் தொடுக்கப்படுவது சொற்றொடர் நிலைச் செய்யுளாகும் என்றவாறு.

அந்தாதி, கலம்பகம், மும்மணிக்கோவை முதலியன சொற்றொடர்நிலைச் செய்யுளாகும்.

## செய்யுணெறி

கஉ. மெய்பெறு மரபின் விரித்த செய்யுட்கு
வைதருப் பம்மே கௌட மென்றாங்
கெய்திய நெறிதா மிருவகைப் படுமே.

இதன்பொருள் – முன்னர் விரித்துக் கூறப்பட்ட செய்யுள்களுக்கெல்லாம் பெறுதற்குரிய முறையாற் பெறப்பட்ட நெறிகள் வைதருப்பம் எனவும், கௌடம் எனவும் இருவகைப்படும் என்றவாறு.

* பாடை என்பது திசைச்சொல் என்று மாறனலங்காரவுரைகாரர் கூறுவர்.

'வைதருப்பம்' என்பது விதர்ப்பதேசக் கவிஞரால் விரும்பிக் கைக்கொள்ளப்பட்ட நெறி. அது இனிய சொல் லும், இனிய பொருளும் தழுவி வரும் என்பர். 'கௌடம்' என்பது கௌடதேசக் கவிஞரால் விரும்பிக் கைக்கொள்ளப் பட்ட நெறி. அது கடினமான சொல்லும் கடினமான பொரு ளும் தழுவி வரும் என்பர். இவை யிரண்டும் இலகிலுணரத் தக்க வெளிப்படையான பேதமுடையன. மற்றைய மாகதம், அவந்திகை முதலிய நெறிகள் உணர்தற்கரிய சூக்குமபேத முடையன. 'நெறி' யாவது கவிகளையமைக்கும் இரீதி. இரீதி, நெறி, மார்க்கம் என்பன ஒருபொருட்கிளவிகள். சரசுவதி கண்டாபரணம் என்னும் அலங்காரகாரர் 'இரீதி' என்பதற் குச் 'சொற்களையைதற்குக் காரணமான போக்கு' என்பர். 'சொற்களைத் தொடுக்கும் சித்திரம்' என்பாருமுளர்.

## வைதருப்பம்

௧௩. செறிவே தெளிவே சமநிலை யின்பம்
ஒழுகிசை யுதார முய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி யென்றாங்
காய்ந்த வீரைங் குணனு முயிரா
வாய்ந்த வென்ப வைதருப் பம்மே.

இதன்பொருள்-மேற்கூறப்பட்ட இருவகை நெறி களுள்ளே செறிவு முதற் சமாதியீறாகச் சொல்லப்பட்ட பத் துக்குணங்களையும் உயிர்போலப் பொருந்தி வருவன வைத ருப்பம் என்று சொல்லுவர் என்றவாறு.

வீரம், மானம், வென்றி முதலிய குணங்கள் உயிரைச் சிறப்பிப்பது போலச் செறிவு முதலிய குணங்களுங் கவிக ளைச் சிறப்பிப்பனவாம். இக்குணங்களில்லாத கவிகள் உறுப் புக்கள் அமைந்துளவாயினும் சித்திரப்பதுமைபோல உயிரில் லனவாக எண்ணப்படும்.

## கௌடம்

௧௪. கௌட மென்பது கருதிய பத்தொடுங்
கூடா தியலுங் கொள்கைத் தென்ப.

இதன்பொருள் —கௌடம் என்று சொல்லப்படுவது மேலே கூறப்பட்ட செறிவு முதலிய பத்துக்குணங்களோடுங் கூடாமல் விபரீதப்பட்டு நடக்குங் கொள்கையுடையதென்று சொல்லுவர் என்றவாறு.

'பத்தொடும்' என்புழி முற்றும்மையை எச்சவும்மை யாக்கிச் சிலவற்றோடு கூடியும், வருமெனக்கொள்க. சிலவற்றோடு சிறிதும், சிலவற்றோடு பெரிதும் மாறுபட்டு வருமென் பாருமுளர்.

## செறிவு

௧௫ செறிவெனப் படுவது நெகிழிசை யின்மை.

இதன்பொருள் — செறிவென்று சொல்லப்படுவது நெகிழிசை யில்லாததாய்ச் சொற்கள் ஒன்றையொன்று தழுவி இறுக்கமுடையதாகத் தொடுக்கப்படுவது என்றவாறு.

செறிதல்-இறுகுதல், நெருங்குதல். இதனை முதனூலார் 'சிலிட்டம்' என்பர். சிலிட்டம் - ஒன்றையொன்று இறுகத் தழுவியது. பெரும்பாலும் வல்லினம் ஒற்றடுத்தும், அடாதும் வருதலும், நெடில் வருதலுஞ் செறிவுக்குக் காரணமாகும்.

'நெகிழிசை' யாவது வல்லினம் வாராது மற்றையினங் கள் பெரும்பாலும் வருதலுடையது.

உதாரணம்:

> 'சிலைவிலங்கு நீள்புருவஞ் சென்றொசிய நோக்கி
> முலைவிலங்கிற் றென்று முனிவாள்—மலைவிலங்கு
> தார்மாலை மார்ப தனிமை பொறுக்குமோ
> கார்மாலை கண்கூடும் போது.'

எனவரும்.

கௌடதேசக் கவிஞர் வல்லெழுத்தில்லாததாய் அநுப் பிராசமுடையதாய்ப் பெரும்பாலும் ஓரினமுடையதாய் வரு வதே செறிவென்று விரும்புவர். அநுப்பிராசம் -முன்வந்த எழுத்தே பின்னும் வருவது.

உதாரணம்:

'விரவலராய் வாழ்வாரை வெல்வா யொழிவா
யிரவுலவா வேலை யொலியே—வரவொழிவா
யாயர்வா யேயரிவை யாருயிரை யீராவோ
வாயர்வாய் வேயோ வழல்.'

எனவரும்.

இங்கே முன்வந்த எழுத்துக்களே அடிக்கடி வருதலும் எல்லாம் இடையினமாயிருத்தலும் அறிக.

## தெளிவு

கரு. தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே.

**இதன்பொருள்** – தெளிவென்று சொல்லப்படுவது, கவியாற் கருதப்பட்ட பொருள், குறிப்பு மொழியின்றி வெளிப்படையாய் விரைவிற் புலப்படுதலுடையதாகும் என்றவாறு.

பலபொருள் பயக்குந் திரிசொற்களுங் குறிப்பும் வாராமையே தெளிவுக்குக் காரணமாகும். தெளிவு - களங்கமில்லாதது; வெளிப்படை என்றபடி. இதனை முதனூலார் பிரசாதமென்பர். பிரசாதம்-களங்கமில்லாதது.

உதாரணம்:

'பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.' (திருக்குறள்)

எனவரும்.

கௌடதேசக்கவிஞர் பொருள் புலப்பாடிலதாயினும் விசேடமான பொருளையுணர்த்துஞ் சொல்லாற்றலுடையதாகத் தொடுக்கப்படுவதே சிறப்பெனக் கொள்வர்.

உதாரணம்:

'பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.' (திருக்குறள்)

எனவரும்.

## சமநிலை

௧௭. விரவத் தொடுப்பது சமநிலை யாகும்.

இதன்பொருள் — வன்மை, மென்மை, இடைமை என்னும் மூன்றும் ஆதிதொடங்கி அந்தம் வரைக்குஞ் சமமாகக் கலந்துவரத் தொடுக்கப்படுவது சமநிலையாகும் என்றவாறு.

வன்மை - வலிதான எழுத்தாலாய தொடை. மென்மை - மெலிதான எழுத்தாலாய தொடை. இடைமை - இவ்விருவகை எழுத்துக்களாலுமாய தொடை. வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் மூவினமும் விரவ என்பாருமுளர். முதனூலுரைகாரர் குறில், உயிர் முதலியன மென்மைக்கும், நெடில், உயிர் முதலியன வன்மைக்குங் காரணமென்பர். இதனை முதனூலார் சமதை என்பர்.

உதாரணம் :

'சோக மெவன்கொ விதழிபொன்
றூக்கின சோர்குழலாய்
மேக முழங்க விரைசூழ்
தளவங் கொடியெடுப்ப
மாக நெருங்கவண் டானங்
களிவண்டு பாடவெங்குந்
தோகை நடஞ்செயு மன்பர்
திண்டேரிங்குத் தோன்றியதே.'

எனவரும்.

கௌடதேசக் கவிஞர் பொருளும் அலங்காரங்களும் வன்மை முதலியனவாகி விரவத் தொடுப்பதே சிறப்பெனக் கொள்வர்.

உதாரணம் :

'இடர்த்திறத் தைத்துற பொற்றொடி
நீயிடித் துத்தடித்துச்
சுடர்க்கொடி திக்கனைத் துந்தடு
மாறத் துடிக்குமைக்கார்

மட்டிற்குயிற் கொத்தொளிக் கக்களிக்
கப்புக்க தோகைவெற்றிக்
கடற்படைக் கொற்றவன் பொற்கொடித்
தேரினிக் கண்ணுற்றதே.'

எனவரும்.

## இன்பம்

கஅ. சொல்லினும் பொருளினுஞ் சுவைபட லின்பம்.

இதன்பொருள் - சொல்லினாலும், பொருளினாலுஞ் சுவையுடையதாகத் தொடுக்கப்படுவது இன்பமாகும் என்றவாறு.

தேனுண்டற்கண் வண்டுகளுக்குண்டாகுங் களிப்புப் போலச் சொற்பொருள்களை ஆராய்தற்கண் பண்டிதர்கட்குண்டாகும் களிப்புக்குக் காரணமாகக் கவிகளில் அமைந்திருக்கும் குணவிசேடமே ஈண்டுச் 'சுவை' யெனப்பட்டது.

இன்பம் - இனிமையுடையது. இதனை முதனூலார் 'மாதுரியம்' என்பர். மாதுரியம் - மதுரத்தன்மையுடையது.

வழுவின்மை, செவிக்கினிமையாதல், பிரசித்தி முதலிய குணமமைந்த நன்மொழிகளும் மோனைச்சிறப்பும் அமையும்படி தொடுத்தல் சொற்சுவைபடற்குக் காரணமாகும்.

உதாரணம் :

'முன்னைத்தஞ் சிற்றின் முழங்கு
கடலோத மூழ்கிப் போக
அன்னைக் குரைப்ப னறிவாய்
கடலேயென் றலறிப் பேருந்
தன்மை மடவார் தளர்ந்துகுத்த
வெண்முத்தந் தயங்கு கானற்
புன்னையரும் பேய்ப்பப் போவாரைப்
பேதுறுக்கும் புகாரே யெம்மூர்.'

எனவரும்.

கௌடதேசக்கவிஞர் மோனை எதுகை முதலியன சிறந்தமைந்த தொடையே 'இன்ப' மெனக் கொள்ளுவர்.

உதாரணம் :

'துனிவருநீர் துடைப்பவராய்த் துவள்கின்றேன்
துணைவிழிசேர் துயிலை நீக்கி
இனவளைபோ வின்னலஞ்சோர்ந் திடருழப்ப
விறந்தவர்நாட் டில்லை போலுந்
தனியவர்க டளர்வெய்தத் தடங்கமலந்
தளையவிழ்க்குந் தருண வேனிற்
பனிமதுவின் பசுந்தாது பைம்பொழிலிற்
பரப்பிவரும் பருவத் தென்றல்.'

எனவரும்.

இங்கே இறுதியொழிந்த ஒவ்வொருசீரிலும் மோனை வந்தவாறறிக.

அருவருப்பு, நிந்தை, அமங்கலம் முதலியனவாகாத நற்பொருளமையத் தொடுத்தலே பொருட்சுவைபடற்குக் காரணமாகும். இது கௌடர்க்குமுடம்பாடு.

உதாரணம் :

'மானேர் நோக்கின் வளைக்கை யாய்ச்சியர்
கான முல்லை சூடார் கதுப்பிற்
பூவைப் புதுமலர் சூடித் தாந்தம்
அடங்காப் பணைமுலை யிழைவளர் முற்றத்துச்
சுணங்கின் செவ்வி மறைப்பினு மலர்ந்த
பூவைப் புதுமலர் பரப்புவர் பூவயின்
ஆநிரை வருத்தம் வீட மலையெடுத்து
மாரி காத்த காளை
நீல மேனி நிகர்க்குமா லெனவே.'

எனவரும்.

## ஒழுகிசை

கக. ஒழுகிசை யென்பது வெறுத்திசை யின்மை.

இதன்பொருள் – ஒழுகிசையென்று சொல்லப்படுவது வெறுத்திசையிலதாகத் தொடுக்கப்படுவதேயாம் என்றவாறு.

ஒழுகிசை - செவிக்கினிதாய்ச் செல்லும் மெல்லிசை. இதனை முதனூலார் சுகுமாரதை என்பர். சுகுமாரதை - மிரு துத்தன்மை.

வெறுத்திசை - செறிந்திசைக்குமிசை. வெறுத்தல் - செறிதல்.

மென்மையான எழுத்துக்கள் பலவும், அவற்றினிடையிடையே வன்மையான எழுத்துக்கள் சிலவுமாக அமையத் தொடுத்தல் 'ஒழுகிசை'க்குக் காரணமாகும். இது கௌடர்க்கும் உடம்பாடு.

உதாரணம் :

> 'இமைபிவர்கண் மோலி யிணைமலர்த்தாள் சூடச்
> சமயந் தொறுநின்ற தையல்—சிமய
> மலைமடந்தை வாச மலர்மடந்தை யெண்ணெண்
> கலைமடந்தை நாவலோர் கண்.'

எனவரும்.

## உதாரம்

௨௦. உதார மென்ப தோதிய செய்யுளிற்
குறிப்பி னொருபொரு ணெறிப்படத் தோன்றல்.

இதன்பொருள் - உதாரமென்று சொல்லப்படுவது சொல்லப்பட்ட செய்யுளிலே சொற்களாலன்றிக் குறிப்பினால் ஒருபொருள் முறைப்படத் தோன்றுதலுடையதாகும் என்றவாறு.

உதாரம் - மகத்து, அதிசயம். இதுவும் கௌடர்க்கும் உடம்பாடு.

குறிப்பு - புத்தியினாலறியப்படுவது.

உதாரணம் :

> 'செருமான வேற்சென்னி தென்னுறந்தை யார்தம்
> பெருமான் முகம்பார்த்த பின்னர்—ஒருநாளும்
> பூதலத்தோர் தம்மைப் பொருணசையாற் பாராவாங்
> கோதலித்துத் தாழ்ந்திரப்போர் கண்.'

எனவரும்.

இங்கே சோழன் இரப்பவர் வறுமைதீரக் கொடுப்பவன் என்பது குறிப்பினாற் றோன்றியபொருள்.

## உய்த்தலில்பொருண்மை

உக. கருதிய பொருளைத் தெரிவுற விரித்தற்
குரியசொல் லுடைய துய்த்தலில் பொருண்மை.

இதன்பொருள் — உய்த்தலில் பொருண்மையாவது கவியாற் கருதப்பட்ட பொருளை விரைவிற் புலப்படுமாறு விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களையுடையதாகும் என்றவாறு.

உய்த்தல் - சொற்களை வருவித்துச் சேர்த்தல். பொருண்மை - பொருளுடையது.

இதனை முதனூலார் 'அர்த்தவியக்தி' என்பர். அர்த்தம்-பொருள். வியக்தி - விளக்கமுடையது. இதுவுங் கௌடர்க்கும் உடம்பாடு.

உதாரணம் :

'இன்றுமையாண் மாசிலா வாண்முகங்கண் டேக்கற்றே
அன்றி விடவரவை யஞ்சியோ—கொன்றை
உளராவா றேடு மொளிர்சடையீர் சென்னி
வளராவா றென்னோ மதி.'

எனவரும்.

இங்கே கருதிய பொருளை விளக்குதற்கு வேண்டுஞ் சொற்களெல்லாம் வருவிக்கவேண்டாதமைந்திருத்தல் காண்க.

## காந்தம்

உஉ. உலகோழுக் கிறவா துயர்புகழ் காந்தம்.

இதன்பொருள் — காந்தமாவது உலகநடையைக் கடவாமல் அநுசரித்துப் பொதுவாக யாவரும் மகிழுமாறு உயர்த்துச் சொல்லப்படும் புகழுடையதேயாம் என்றவாறு.

காந்தம் - மனத்தினை மகிழ்விப்பது. இது ஒருவரையொருவர் அன்போடுபசரித்தற்கண் பெரிதும் வருமென்பாருமுளர்.

உதாரணம் :

'ஒருபே ருணர்வுடனே யொண்ணிறையுந் தேய
வருமே துறவென்பால் வைத்த—ஒருபேதை
போதளவு வாசப் புரிகுழல்சூழ் வாண்முகத்துக்
காதளவு நீண்டுலவுங் கண்.'

எனவரும்.

கௌடதேசக் கவிஞர் உலகநடையைக் கடந்ததேனும் கற்பனையால் ஒன்றினை உயர்த்திப் புகழ்தலே அழகென்று கூறுவர்.

உதாரணம் :

'ஐயோ வகலல்குல் சூழ்வருதற் காழித்தேர்
வெய்யோற் கநேகநாள் வேண்டுமால்—கைபரந்து
வண்டிசைக்குங் கூந்தன் மதர்விழிகள் சென்றுலவ
எண்டிசைக்கும் போதா திடம்.'

எனவரும்.

## வலி

உ௯. வலியெனப் படுவது தொகைமிக வருதல்.

இதன்பொருள் - வலியென்று சொல்லப்படுவது தொகைநிலைத்தொடர் அதிகமாக அடுத்தடுத்து வருதலுடையதாகும் என்றவாறு.

வலி - வன்மையுடையது. இதனை முதனூலார் 'ஓசம்' என்பர். ஓசம் - சாமர்த்தியம். தொகைநிலை - உருபுமுதலியன வெளிப்படுதலின்றி இரண்டு முதலிய சொற்கள் தொடர்ந்து ஒன்றிநிற்றல்.

உதாரணம் :

'காணிமிர்த்தாற் கண்பரிய வல்லியோ புல்லாதார்
மானனையார் மங்கலநா ணல்லவோ—தான
மழைத்தடக்கை வார்கழற்கான் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.'

எனவரும்.

இங்கே 'தானமழை' என்பது தொடங்கித் தொகை நிலை மிகவருதல் காண்க.

கௌடதேசக் கவிஞர் வல்லெழுத்து மிகவருதலே சிறப் பென்பர்.

உதாரணம் :

'செங்கலசக் கொங்கைச் செறிகுறங்கிற் சீறடிப்பேர்ப்
பொங்கரவ வல்குற் பொருகயற்கட்—செங்கனிவாய்க்
காருருவக் கூந்தற் கதிர்வளைக்கைக் காரிகைத்தாம்
ஓருருவென் னுள்ளத்தே யுண்டு.'

எனவரும்.

## சமாதி

௨௪ உரிய பொருளின்றி யொப்புடைப் பொருண்மேற்
றரும்வினை புணர்ப்பது சமாதி யாகும்.

இதன்பொருள் - ஒருபொருட்குரியதாய் வழங் கப்பட்ட வினை, தனக்குரிய அப்பொருளிற் புணர்த்தாது அதற்கு ஒப்பாந்தன்மையுடைய மற்றொருபொருண்மேலேற் றிச் சொல்லப்படுவது சமாதியாகும் என்றவாறு.

சமாதி-நன்றாக ஆரோபிக்கப்படுவது. இது கௌடர்க் கும் உடம்பாடு.

உதாரணம் :

'கடுங்கை வயலுழவர் காலைத் தடிய
மடங்கி யரியுண்ட நீலந்—தடஞ்சோரா
நீளரிமேற் கண்படுக்கு நீணீ ரவந்தியார்
கோளரியே றிவ்விருந்த கோ.'

எனவரும். இங்கே கண்ணுக்குரிய வினையாகிய கண்படுத்தல் நீலமலரின் குவிதற்கண் ஆரோபிக்கப்பட்டவாறறிக.

இதுவரையுங் கூறப்பட்ட பத்தும் குணவலங்காரங் களாம்.

## புறநடை

உரு. ஏற்ற செய்யுட் கியன்ற வணியெலாம்
முற்ற வுணர்த்தும் பெற்றிய தருமையிற்
காட்டிய நடைநெறி கடைப்பிடித் திவற்றொடு
கூட்டி யுணர்த லான்றோர் கடனே.

இதன்பொருள் – செய்யுளுக்குரிய குணவணிகள் எல்லாவற்றையும் முடிவுபெறுமாறு விளக்குதல் கூடாமையின், இங்கே காட்டப்பட்ட இருவகை நெறிகளையுங் கடைப்பிடித்து மற்றைய நெறிகளையும் இவற்றுடன் அமைத்துணர்தல் அறிஞர் கடனாகும் என்றவாறு.

பாஞ்சாலி, மாகதி, ஆவந்திகை, லாடி, வைதர்ப்பி, கௌடி எனச் சரசுவதிகண்டாபரணகாரர் 'நெறி' ஆறென்பர். வெளிப்படையான பேதமுடைய வைதர்ப்பி, கௌடி என்னும் இரண்டும் இங்கே கூறப்பட்டன. மற்றையனவெல்லாந் தம்முள்ளே சூக்கும பேதமுடையன. அதுபற்றிப் போலும் 'முற்றவுணர்த்தும் பெற்றிய தருமை' என்றார்.

# பொருளணியியல்

## சரசுவதிதேவி

என்னை யுடையாள் கலைமடந்தை யெவ்வுயிர்க்கும்
அன்னை யுடைய வடித்தளிர்கள்—இன்னளிசூழ்
மென்மலர்க்கே தங்கு மெனவுரைப்பர் மெய்யில்லா
வன்மனத்தே தங்குமோ வந்து.

## பொருளலங்காரவகை

உ௬. தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப்பொருள் வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே யதிசயந் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்ப மிலேச நிரனிறை
ஆர்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாகித முதாத்தம்
அரிதுண ரவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதர்சனம் புணர்நிலை பரிவருத் தனமே
வாழ்த்தொடு சங்கீ ரணம்பா விகமிவை
ஏற்ற செய்யுட் கணியே ழைந்தே.

*இதன்பொருள்* - *தன்மை என்பது முதற் பாவிகம் என்பதீறாகச் சொல்லப்பட்ட முப்பத்தைந்தும் செய்யுளுக்குரிய அலங்காரமாகும் என்றவாறு.*

## 1. தன்மையணி

உஎ. எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.

*இதன்பொருள்* - *எவ்வகைப்பட்ட பொருள்களையும் இயற்கையிலுள்ள உண்மையான பலவகையுந் தோன்ற*

விளக்குஞ் சொற்களாலே முறையே தொடுக்கப்படுவது தன்மையணியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் 'சுவபாவோக்தி' என்பர். சுவபாவம் - தன்மை. உக்தி - சொல்லுதல்.

௨௪. அதுவே,

பொருள்குணஞ் சாதி தொழிலொடு புலனும்.

இதன்பொருள் - அத்தன்மையணியானது பொருள், குணம், சாதி, தொழில் என்பவைகளோடு புலப்படும் என்றவாறு.

எனவே பொருட்டன்மை, குணத்தன்மை, சாதித்தன்மை, தொழிற்றன்மை எனத் தன்மையணி நான்குவகைப்படும் என்றாராயிற்று.

### க. பொருட்டன்மை

பொருளின்கணுள்ள பலவிதமான இயல்புகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது பொருட்டன்மையாகும்.

உதாரணம் :

'நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்—தோலுடையன்
கைம்மான் மறியன் கனன்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை.'

எனவரும்.

இங்கே 'கச்சாலையெம்மான்' என்பது பொருள்கருதிய வாசகம். நீலமணிமிடறுடைமை முதலியன அப்பொருளின் கணுள்ள தன்மைகள்.

### ௨. குணத்தன்மை

குணத்தின்கணுள்ள பலவிதமான தன்மைகளை உள்ளவாறே அலங்கரித்துக் கூறுவது குணத்தன்மையாகும்.

உதாரணம் :

'உள்ளங் குளிர வுரோமஞ் சிலிர்த்துரையுந்
தள்ளவிழி நீரரும்பத் *தான்மறந்தாள்—புள்ளலைக்குந்

தேந்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடஞ்செய்
பூந்தா மரைதொழுத பொன்.'

எனவரும்.

இங்கே 'மறந்தாள்' என்பது குணங்கருதிய வாசகம். 'உள்ளங் குளிர்தல்' முதலியன மறத்தலாகிய குணத்தோடு நிகழும் அதன் தன்மைகள். மறத்தற்கண் அக்குணங்கள் இயல்பாக நிகழுமாறறிக.

## ௩. சாதித்தன்மை

சாதியின்கணுள்ள பலவிதமான தன்மைகளை உள்ள வாறே அலங்கரித்துக் கூறுவது சாதித்தன்மையாகும்.

'சாதி' யாவது ஒரு நிகரனவாகிய பலபொருள்களுக்குப் பொதுவாக நிற்பதோர் தன்மை.

உதாரணம் :

'பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியுந்
துத்திக் கவைநாத் துளையெயிற்ற—மெய்த்தவத்தோர்
ஆகத்தா னம்பலத்தா ஞரா வழுத்ணங்கின்
பாகத்தான் சூடும் பணி.'

எனவரும்.

இங்கே பாம்பென்னுஞ் சாதியைக் குறித்தலாற் 'பணி' என்பது சாதிகருதிய வாசகம். அகடுடைமை, கறைமிட றுடைமை முதலியன அச்சாதியின்கண் இயல்பாயுள்ள தன் மைகள்.

## ச. தொழிற்றன்மை

தொழிலின்கணுள்ள பலவிதமான தன்மைகளை உள்ள வாறே அலங்கரித்துக் கூறுவது தொழிற்றன்மையாகும்.

உதாரணம் :

'சூழ்ந்து முரன்றணவி வாசந் துதைந்தாடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தாதருந்தும்—வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.'

எனவரும்.

இங்கே "தாதருந்தும்' என்பது தொழில் குறித்த வாசகம். சூழ்ந்து முரலுதல் முதலியன தாதுண்ணுதற்கண் இயல்பாக நிகழுந்தன்மைகள்.

## 2. உவமையணி

உ௯. பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை.

இதன்பொருள் - பண்பும், தொழிலும், பயனும் என்கின்ற இவைகாரணமாகப் பொருளோடு பொருளை ஒன்றும் பலவுமாகப் பொருந்த வைத்து, அவ்விரு பொருட்கும் ஒப்புமை தோன்றும்படி சொல்லப்படுவது உவமையணியாகும் என்றவாறு.

புணர்த்துச் சொல்லப்படும் அவ்விரு பொருள்களுள்ளே, ஒப்புமையறிதற்குக் காரணமாய் நிற்கும் பொருள் 'உபமானம்' எனவும், அதனுல் உபமிக்கப்படும்பொருள் 'உபமேயம்' எனவும் சொல்லப்படும். உபமானத்தினை 'உவமை' எனவும், உபமேயத்தினைப் 'பொருள்' எனவுஞ் சொல்லுவர். இவ்விரு பொருள்களிடத்தும் சமஞ் சொல்லுதற்குக் காரணமாய்ப் பொதுவாயிருக்குந் தன்மை 'பொதுத்தன்மை' எனப்படும். இதனை வடநூலார் 'சாதாரணதர்மம்' என்பர். சாதாரணம்-பொது. தர்மம்-தன்மை.

### க. பண்பு

'பவளம்போற் செந்துவர்வாய்' என்பது பண்புகாரணமாக வந்த உவமை.

'பண்'பாவது பொருட்குணமாய்த் தனக்கு வேறொரு குணமில்லதாய் நிற்பது. அது வண்ணம் வடிவு, அளவு முதலியன. வண்ணம் வெண்மை, செம்மை முதலாயின. வடிவு வட்டம், சதுரம் முதலாயின. அளவு நெடுமை, குறுமை முதலாயின. இங்கே 'பவளம்' உபமானம். 'வாய்' உபமேயம். இரண்டற்குஞ் சமஞ்சொல்லற்குக் காரணமான பண்பு

செம்மை யென்னும் வண்ணம். பொதுத்தன்மையும் அதுவே யாம். 'போல்' என்பது உவமவுருபு.

உ. தொழில்

உதாரணம்:

> 'அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
> மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.'

என்பது தொழில் காரணமாக வந்தஉவமை.

'தொழி'லாவது, பொருளின் புடைபெயர்ச்சியாய்க் காலத்தோடு புலப்படுவது. இங்கே காரணமாய் நின்ற தொழில் பிறருக்கறி வித்தல்.

ங. பயன்

உதாரணம்:

> 'மாரி யன்ன வண்மைத்
> தேர்வே ளாயைக் காணிய சென்மே.'

என்பது பயன்காரணமாக வந்த உவமை.

'பய'னாவது செயல் காரணமாகத் தோன்றுங் காரியம். இங்கே மழை பெய்தலும் ஆய், என்பவனுடைய கொடையுஞ் செயலாகும். அச்செயலால் அடையும் பொருள் பயனாகும்.

பண்பு, தொழில், பயன் என்பன உவமஞ் செய்யும் வழித் தனித்தனி வருதலன்றித் தம்முட் கலந்து வருதலு முண்டு.

> 'விரவியும் வரூஉ மரபின வென்ப'

என்பது தொல்காப்பியம்.

உவமைவகை

ஙo. அதுவே,
விரியே தொகையே யிதர விதரம்
உரைபெறு சமுச்சய முண்மை மறுபொருள்
புகழ்த னிந்தை நியம மநியமம்
ஐயந் தெரிதரு தேற்ற மின்சொல்

எய்திய விபரீத மியம்புதல் வேட்கை
பலபொருள் விகார மோக மபூதம்
பலவயிற் போலி யொருவயிற் போலி
கூடா வுவமை பொதுநீங் குவமை
மாலை யென்னும் பால தாகும்.

இதன்பொருள் — அவ்வுவமையணி விரியுவமை முதல் மாலையுவமையீறாகச் சொல்லப்பட்ட இருபத்துநான்கு வகையுடையதாகும் என்றவாறு.

'அதுவே' என்பது முற்சூத்திரத்திற் சொல்லப்பட்ட இலக்கணமுடையது என்பதனை விளக்கிற்று.

## க. விரியுவமை

அவற்றுள், விரியுவமையாவது, பொதுத்தன்மை வெளிப்படையாய் விரிந்து நிற்றலுடையதாகும்.

இதனை முதனூலார் 'தர்மோபமை' என்பர். தர்மம் — தன்மை. என்றது; பொதுத்தன்மையை.

உதாரணம் :

'பால்போலு மின்சொற் பவளம்போற் செந்துவர்வாய்
சேல்போற் பிறழுந் திருநெடுங்கண்—மேலாம்
புயல்போற் கொடைக்கைப் புனனாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ தவர்.'

எனவரும்.

இங்கே 'பால்போலுமின்சொல்' என்பதிலே 'பால்' உபமானம். 'சொல்' உபமேயம். இனிமை பொதுத்தன்மை. அது 'இன்' என விகாரமாயிற்று. 'போலும்' உவமவுருபு. சிலர் உவமவுருபும் விரியும் என்பர். 'பவளம்போற் செந்துவர்வாய்' முதலியவற்றிலும் இவ்வாறறிக.

## உ. தொகையுவமை

பொதுத்தன்மை வெளிப்பட்டு வாராமல் ஆராய்ந்துணரும்படி மறைந்து நிற்றலுடையது தொகையுவமையாகும்.

இதனை முதனூலார் 'வஸ்தூபமை' என்பர். பொதுத்தன்மையின்றிப் பொருண்மாத்திரங் கூறுதல்பற்றி வஸ்தூபமை என்றார் போலும். தொல்காப்பியர் 'சுட்டிக் கூறுவுவமம்' என்பர். வீரசோழியகாரர் 'பொருளுவமை' என மொழி பெயர்ப்பர். வஸ்து-பொருள்.

உதாரணம் :

'தாமரை வாண்முகத்துத் தண்டரளம் போன்முறுவல்
காமரு வேய்புரைதோட் காரிகையீர்—தேமருவும்
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து சொரந்தோ
பாங்குழலுந் தென்றற் பரிசு.'

எனவரும்.

இங்கே 'தாமரைவாண்முகத்து' என்பதில் செம்மை என்னும் பொதுத்தன்மை மறைந்து நின்றது. மற்றையவைகளிலும் இவ்வாறறிக.

## ௩. இதரவிதரவுவமை

ஒன்றற்கொன்று உவமையாய் உயர்வைக் குறிப்பித்துத் தொடர்ந்து வருமாறு இரண்டு வாக்கியமாகச் சொல்லப்படுவது இதரவிதரவுவமையாகும்.

எனவே முன் வாக்கியத்திலே உபமானமாய் நின்ற பொருள் உபமேயமாகவும், உபமேயமாய் நின்றபொருள் உபமாநமாகவும் பின் வாக்கியத்திலே வருமென்பது பெறப்படும்.

இதரவிதரம் - ஒன்றற்கொன்று. இதனை முதனூலார் 'அந்நியோந்நியோபமை' என்பர். சாகித்தியதர்ப்பணகாரர் 'உபமேயோபமை' என்பர். தொல்காப்பியர் 'தடுமாறுவமம்' என்பர். உதாரணம் :

'களிக்குங் கயல்போலு நின்கணின் கண்போற்
களிக்குங் கயலுங் கனிவாய்த்—தளிர்க்கொடியே
தாமரை போன்மலரு நின்முக நின்முகம்போற்
றாமரையுஞ் செவ்வி தரும்.'

எனவரும்.

இங்கே 'களிக்குங் கயல்போலு நின்கண்' என்பது ஒரு வாக்கியம். 'நின் கண்போற் களிக்குங் கயலும்' என்பது அதனைத் தொடர்ந்த மற்றை வாக்கியம். இத்தொடரிலே 'கயல்', 'கண்' என்னும் இருபொருள்களும் ஒன்றற்கொன்றுவமையாய் அழகு செய்தன. பின்வருங் கவியும் இதனைப் புலப்படுத்தும். உதாரணம்:

'பொருவில் போரிது போற்பிற வின்மையால்
இருவர் போர்க்கு மிதா விதரமே
மருவு நேருப மானம் வகுத்திடப்
பெருகு காதல் பெறிற்கவி வாணரே.' (சேதுபுராணம்

என்வரும்.

## ச. சமுச்சயவுவமை

இத்தன்மையானன்றி மற்றும் அத்தன்மையானும் இப்பொருளை இப்பொருளொக்கும் என்று இரண்டு மூன்று முதலிய தன்மைகள் ஒருங்கு கூட்டிக் காரணமாகச் சொல்லப்படுவது சமுச்சயவுவமையாகும்.

சமுச்சயம்-இரண்டு மூன்று முதலியவைகளின் கூட்டம்.

உதாரணம்:

'அளவே வடிவொப்ப தன்றியே பச்சை
இளவேய் நிறத்தாலு மேய்க்கும்—துளவேய்
கலைக்குமரி போர்துளக்குங் காரவுணர் வீரந்
தொலைக்குமரி யேறுகைப்பா டோள்.'

எனவரும்.

இங்கே இளமூங்கில் உபமானம். தூர்க்கைதோள் உபமேயம். அளவு, வடிவு, நிறம் என்பன இரண்டன் கண்ணும் ஒப்பவுள்ளனவாகச் சேர்த்துச் சொல்லப்பட்ட தன்மைகள்.

## ரு. உண்மையுவமை

பூரணமாய் வெளிப்பட்டுப் புலப்பட்ட ஒப்புமையினாலே உண்மையுணர்ந்து உபமானத்தை மறுத்து இதுவே உண்மையென்று உபமேயத்தைக் கூறுவது உண்மையுவமையாகும்.

உபமேயத்தை உள்ளவாறுணராமல் அதற்கொப்புமை யுடைய மற்றொரு பொருளென்று கருதியிருந்த விபரீத வுணர்ச்சியே இவ்வாறு கூறுதற்குக் காரணமாகும்.

இதனை முதனூலார் 'தத்துவாக்கியாநோபமை' என்பர். தத்துவம் - உண்மை. ஆக்கியாநம் - சொல்லுதல்.

உதாரணம் :

'தாமரை யன்று முகமேயீ திங்கிவையுங்
காமரு வண்டல்ல கருநெடுங்கண்—டேமருவு
வல்லியெனி லல்ல ளிவளென் மனங்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள்.'

எனவரும்.

இங்கே 'தாமரை', 'வண்டு', 'வல்லி' என்பன மறுத்துரைக்கப்பட்ட உபமானங்கள். 'முகம்', 'கண்', 'பெண்' என்பன உண்மை என்று சொல்லப்பட்ட பொருள்கள்.

## கூ. மறுபொருளுவமை

யாதேனும் ஒருபொருளைச் சொல்லக் கருதிய தன்மை யோடும் முன் ஒருவாக்கியத்திலே சொல்லி முடித்துப் பின் ஒரு வாக்கியத்திலே அத்தன்மையுடையதாகச் சொல்லி முடிக்கும் எதிர்ப்பொருளினால் அப்பொருட்கொப்புமை தோன்றுமா றொருதொடரிற் சொல்லப்படுவது மறுபொருளுவமையாகும்.

பொதுத்தன்மை ஒன்றேயாயினும் இருவாக்கியங்களினும் வெவ்வேறு வரல்வேண்டும் என்பது சாகித்தியதர்ப்பணகாரர் கருத்து.

மறுபொருள் - எதிர்ப்பொருள். இதனை முதனூலார் 'பிரதிவஸ்தூபமை' என்பர். பிரதி - எதிர். வஸ்து-பொருள். வீரசோழியகாரரும் 'எதிர்ப்பொருளுவமை' என்பர்.

உதாரணம் :

'அன்னைபோ லெவ்வுயிருந் தாங்கு மநபாயா
நின்னையா ரொப்பார் நிலவேந்தர்—அன்னதே

வாரி புடைசூழ்ந்த வையகத்திற் கில்லையாற்
சூரியனே போலுஞ் சுடர்.'

எனவரும்.

இங்கே முன்னிரண்டடியும் ஒருவாக்கியம். பின்னிரண்டடியும் ஒருவாக்கியம். முன்வாக்கியத்திலே வைக்கப்பட்ட பொருள் 'அநபாயன்' என்பது. பின்வாக்கியத்திலே எதிராக வைக்கப்பட்ட பொருள் 'சூரியன்' என்பது. 'ஆரொப்பார்' என்பதினாலும், 'போலுஞ்சுடரில்லை' என்பதினாலும் பெறப்பட்ட ஒப்பின்மை பொதுத்தன்மை. பின்வருவதுமிது.

உதாரணம்:

'அறையு மாடரங் கும்படப் பிள்ளைகள்
தறையிற் கீறிடிற் றச்சருங் காய்வரோ
இறையு ஞானமி லாதவென் புன்கவி
முறையி னாலுணர்ந் தாரு முனிவரோ.' (இராமாயணம்)

எனவரும்.

## எ. புகழ்தலுவமை

உபமேயத்தினை வாளாவிடுத்து யாதேனும் ஒரு மேன்மை காட்டி உபமானத்தினைப் புகழ்ந்து சொல்லுவது புகழ்தலுவமை யாகும்

உபமேயம் புகழப்பட்டிலதாயினும் ஒப்புமையாற் பெருஞ்சிறப்படையும்.

இதனை முதனூலார் 'பிரசஞ்சோபமை' என்பர். பிரசஞ்சா-துதி. உதாரணம்:

'இறையோன் சடைமுடிமே லெந்நாளுந் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற—தறைகடல்சூழ்
பூவலயந் தாங்கு மரவின் படம்புரையும்
பாவைதின் னல்குற் பரப்பு.'

எனவரும்.

இங்கே 'பிறை'யும், 'அரவின்பட'மும் புகழ்ந்து சொல்லப்பட்ட உபமானங்கள். 'பிறை'க்குச் சிவன் சடையிலிருத்தலும், 'அரவின்பட'த்திற்குப் பூமியைத் தாங்குதலுஞ் சொல்

லப்பட்ட புகழ்ச்சியாகும். 'நுதலு'ம், 'அல்குற்பரப்பு'ம் உபமேயங்கள்.

## அ. நிந்தையுவமை

உபமேயத்தினை உயர்த்தி உபமானத்தினை நிந்தித்துச் சொல்லுவது நிந்தையுவமையாகும்.

நிந்தை-இகழ்ச்சி.

உதாரணம்:

'மறுப்பயின்ற மாமதியு மாமதிக்குத் தோற்கும்
நிறத்தலரு நேரொக்கு மேனுஞ்—சிறப்புடைத்துத்
தில்லைப் பெருமா னருள்போற் றிருமேனி
முல்லைப்பூங் கோதை முகம்.'

எனவரும். இங்கே சந்திரனுந் தாமரைப்பூவும் நிந்தையுடையனவாகச் சொல்லப்பட்ட உபமானங்கள். சந்திரனுக்கு மறுவிருத்தலும், தாமரைப்பூவிற்குச் சந்திரனைக் கண்டு குவிதலும் நிந்தையாகும். முகம் உபமேயம்.

## கூ. நியமவுவமை

உபமானங்களைப் பலவாகக் கூறுதலால் உயர்வு பிறவாதென்று கருதி அவற்றுள்ளே சிறந்தவொன்றினை நிச்சயித்துக் கொண்டு இதுவே இப்பொருளுக்கு உபமானமாகுமென்று தேற்றேகாரத்தோடு சொல்லுவது நியமவுவமையாகும்.

நியமம்-நிச்சயம்.

உதாரணம்:

'தாதொன்று தாமரையே நின்முக மொப்பதுமற்
றியாதொன்று மொவ்வா திளங்கொடியே—மீதுயர்த்த
சேலே பணியப் புலியுயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்.'

எனவரும். இங்கே 'தாமரை'யும், 'வே'லும் தேற்றேகாரத்தோடுநியமஞ்செய்த உபமானங்கள். 'முக'மும், 'விழி'யும் உபமேயங்கள்.

## ௧௦. அநியமவுவமை

இதுவே இப்பொருளுக்கு உபமானம்; இதுபோலச் சிறந்த வேறொன்றுளதாயின், அதுவுமாகும் எனச் சொல்லப்படுவது அநியமவுவமையாகும்.

அநியமம்-நிச்சயமின்மை.

உதாரணம் :

'கவ்வை விரிதிரைநீர்க் காவேரி நன்னாட்டு
மவ்வல் கமழுங் குழன்மடவாய்—செவ்வி
மதுவார் கவிரேகின் வாய்போல்வ தன்றி
அதுபோல்வ துண்டெனினு மாம்.'

எனவரும்.

இங்கே முருக்கம்பூ உபமாநம். 'வாய்' உபமேயம். 'அதுபோல்வ துண்டெனினுமாம்' என்பதனால் அவ்வுபமானம் அநியமமாயிற்று.

## ௧௧. ஐயவுவமை

பொருள் இது என்றும் உபமானமிது என்றும் நிச்சயம் பெறாமல் இரண்டையுங் கருதி அதுவோ இதுவோ என்று ஐயப்பாடுற்றுச் சொல்லுவது ஐயவுவமையாகும்.

ஐயம் - பலதலையாயவுணர்வு.

இதனை முதனூலார் 'சஞ்சயோபமை' என்பர். சஞ்சயம்-ஐயம். சித்திரமீமாஞ்சாகாரர் இதனைச் 'சந்தேகாலங்காரம்' என வேறொன்றாகக் கூறுவர்.

உதாரணம் :

'தாதளவி வண்டு தடுமாறுந் தாமரைகொல்
மாதர் விழியுலவு வாண்முகங்கொல்—யாதென்
றிருபாற் கவர்வுற் றிடையூச லாடி
ஒருபாற் படாதென் னுளம்.'

எனவரும்.

இங்கே 'தாமரை'க்கும் 'முக'த்திற்குமுள்ள ஒப்புமையன்றித் தாமரையிலுலாவும் 'வண்டு'க்கும், முகத்திலுலாவுங்

கண்ணுக்கு முள்ள ஒப்புமையும் ஐயப்படுதற்குக் காரணமா யிற்று. பின்வருவது மிது.

உதாரணம்:

'வாளார் மதிமுகத்த வாளோ வடுப்பிளவோ
தாளார் கழுநீரோ நீலமோ தாமரையோ
நீள்வே லோவம்போ கயலோ நெடுங்கண்ணோ
கோளார்ந்த கூற்றமோ சொல்வான் றொடங்கினவே.'

எனவரும். (சிந்தாமணி)

## கஉ. தேற்றவுவமை

ஐயம் நீங்கித் தெளிந்தபின் இதுவேயாம் என்று காரணங்காட்டிச் சொல்லப்படுவது தேற்றவுவமையாகும்.

இவ்வாறு கூறுதலே உபமானோபமேயங்களின் ஒப்புமையைப் புலப்படுத்தும். தேற்றமாவது ஐயத்தின்பின்னே தோன்றும் நிச்சயவுணர்வு. இதனை முதனூலார் 'நிர்ணயோபமை' என்பர். நிர்ணயம்-நிச்சயம்.

உதாரணம்:

'தாமரை நாண்மலருந் தண்மதியால் வீறழியுங்
காமர் மதியுங் கறைவிரவு—மாமிதனாற்
பொன்னை மயக்கும் பொறிசுணங்கி னொண்முகமே
என்னை மயக்கு மிது.'

எனவரும்.

இங்கே ஐயம் நீங்கித் துணியப்பட்ட பொருள் 'முகம்.' இதற்கும் உண்மையுவமைக்கும் பேதம் யாதோவெனின்; இஃது ஐயவுணர்வு காரணமாகத் தோன்றும். அது மயக்கவுணர்வு காரணமாகத் தோன்றும்.

## கஙு. இன்சொலுவமை

உபமேயத்தினின்றும் உபமானத்துக்கோர் உயர்வுகூறி அவ்வுயர்வுடையதாயினும் அதற்கொப்பாவதன்றி உயர்ந்ததாகாதெனச் சொல்லுவது இன்சொலுவமையாகும்.

இதனை முதனூலார் 'சடுபமை' என்பர். சடு-பிரியவாக்கியம்.

உதாரணம் :

'மான்விழி தாங்கு மடக்கொடியே நின்வதனம்
மான்முழு தூந்தாங்கி வருமதிய—மானும்
முற்றிழை நல்லாய் முகமொப்ப தன்றியே
மற்றுயர்ச்சி யுண்டோ மதிக்கு.'

எனவரும்.

இங்கே மானின் உறுப்புக்களுள் ஒன்றாகிய விழியைத் தாங்குமுகம் உபமேயம். 'மான்முழுதுந் தாங்கிவரு மதியம்' உபமானம். 'விழி' முதலிய மானின் உறுப்புக்களெல்லாந் 'தாங்கி' என்பது போதர 'மான்முழுதுந் தாங்கி' என்றது உபமானத்துக்கு விசேடமாகக் கூறிய உயர்ச்சி.

## கசு. விபரீதவுவமை

ஒரு பொருளுக்குப் பண்டைக்காலந் தொட்டுப் பலராலும் வழங்கிவரப்பட்ட உபமானத்தை அப்பொருளுக்கே உபமேயமாக்கி விபரீதமாகச் சொல்லுவது விபரீதவுவமையாகும்.

இதனை முதனூலார் 'விபரியாசோபமை' என்பர். விபரியாசம் - அடிதலை தடுமாற்றம். குவலயானந்தகாரர் 'பிரதீபாலங்காரம்' என்பர்.

உதாரணம் :

'திருமுகம் போன்மலருஞ் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலுங் கயல்கள்—அரிவை
இயல்போலு மஞ்ஞை யிடைபோலுங் கொம்பர்
மயல்போலும் யாம்போம் வழி.'

எனவரும்.

'முகம்' முதலியவைகட்கு முறையே உபமானங்களாய் வழங்கி வரப்பட்ட தாமரை முதலியன அவ்வழக்கிற்கு மாறாக உபமேயங்களாய் இங்கே நின்றன. பின்வருவதுமிது.

உதாரணம் :

'மங்கையர் குறங்கென வகுத்த வாழைகள்
அங்கவர் கழுத்தெனக் கமுக மார்ந்தன

தங்கொளி முறுவலிற் றூம நான்றன
கொங்கையி னிரைந்தன கனக கும்பமே.' (இராமாயணம்)

எனவரும்.

## ௧௫. இயம்புதல்வேட்கையுவமை

குணமேயாயினுமாக, குற்றமேயாயினுமாக, இப்பொருள் இப்பொருளுக்கு உபமானமாகும் என்று கூறுதற்கு என்மனம் விரும்புகின்றதென்று சொல்லி முடிக்கப்படுவது இயம்புதல் வேட்கையுவமையாகும்.

இதனை முதனூலார் 'ஆசிக்கியாசோபமை' என்பர். ஆசிக்கியாசம்-சொல்ல விரும்பியது.

உதாரணம் :

'நன்றுநீ தென்றுணரா தென்னுடைய நன்னெஞ்சம்
பொன்றுதைந்த பொற்சுணங்கிற் பூங்கொடியே-மன்றன்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற் கொப்பென்
றெடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று.'

எனவரும்.

இங்கே 'எடுத்தியம்ப வேண்டுகின்ற தின்று' என்பதனால் முகத்திற்குத் தாமரையோடு உபமிக்கப்படுந்தன்மை பெறப்படினும் 'நன்றுநீ தென்றுணராது' என்பது மனத்திற்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் ஆச்சரியத்தை உண்டாக்கிற்று.

## ௧௬. பலபொருளுவமை

ஓருபமேயத்திற்குப் பலபொருள்கள் உபமானமாகச் சொல்லப்பட்டு அதிசயம் விளைத்து நிற்பது பலபொருளுவமையாகும்.

இதனை முதனூலார் 'வெகூபமை' என்பர். வெகு-மூன்று முதலிய பலவற்றோடு கூடியது.

உதாரணம் :

'வேலுங் கருவிளையு மென்மானுங் காவியும்
சேலும் வடுவகிருஞ் செஞ்சரமும்—போலுமால்

தேமருவி யுண்டு சிறைவண் டறைகூர்தற்
காமருவு பூங்கோதை கண்.'

எனவரும்.

இங்கே 'கண்' என்னும் ஒருபமேயத்திற்கே 'வேல்', 'கருவிளை', 'மான்' முதலிய பலபொருள்கள் உபமானமாகச் சொல்லப்பட்டன. பின்வருவது மிது.

உதாரணம்:

'மதியிலா விசும்புஞ் செவ்வி மணமிலா மலருந் தெண்ணீர்
நதியிலா நாடுஞ் செம்பொ னரம்பிலா நாத யாழும்
நிதியிலா வாழ்வுந் தக்க நினைவிலா நெஞ்சும் வேத
விதியிலா மகமும் போன்ற வீடுமெ னிலாத சேனை.'
(பாரதம்)

எனவரும்.

## கஎ. விகாரவுவமை

உபமானத்தின் விகாரமே உபமேயமென்று சொல்லுவது விகாரவுவமையாகும்.

இதனை முதனூலார் 'விக்கிரியோபமை' என்பர். விக்கிரியா - விகாரம், அது ஒருவிதமாயிருந்த வஸ்து வேறொரு விதமாகத் திரிதல்.

உதாரணம்:

'சீத மதியி னொளியுஞ் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யுங்கொண்டு—வேதாத்தன்
கைம்மலரா னன்றிக் கருத்தால் வகுத்தமைத்தான்
மொய்ம்மலர்ப்பூங் கோதை முகம்.'

எனவரும்.

இங்கே சந்திரனுந் தாமரைப்பூவும் உபமானம். அவற்றின் ஒளியும் மலர்ச்சியுங்கொண்டு படைத்தான் எனவே உபமேயமாகிய 'முகம்' அவற்றின் விகாரமாயிற்று.

## கஅ. மோகவுவமை

உபமானோபமேயங்களை உள்ளவாறுணராமல் மயக்கத்தினாற் கூறுவது மோகவுவமையாகும்.

மோகம் - மயக்கம், அறிவின்மை.

உதாரணம் :

'கயல்போலு மென்றுநின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போற் பிறழுந் திறத்தாற்—கயல்புகழ்வல்
ஆரத்தா ளேமருங்கு லந்தரள வாண்முறுவல்
ஈரத்தா லுள்வெதும்பும் யான்.'

எனவரும்.

இங்கே 'கயல்'போன்றதனாற் 'கண்'ணுக்குப் 'பழிப்பு'ம் 'கண்'போன்றதனாற் 'கய'லுக்குப் 'புகழ்'வுங் கூறியது மயக்கமேயாம். ஒப்புமை குறிப்பாலுணரப்படும்.

## ௧௧. அபூதவுவமை

உள்ளதாகாத ஒன்றினை ஒரு பொருளுக்கு உபமானமாக்கிச் சொல்லுவது அபூதவுவமையாகும்.

அபூதம் - இல்லாதது, அசத்தியம்.

உதாரணம் :

'எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்
வில்லேர் புருவத்து வேனெடுங்கண்—நல்லீர்
முகம்போலு மென்ன முறுவலித்தார் வாழும்
அகம்போலு மெங்க ளகம்.'

எனவரும்.

இங்கே 'எல்லாக் கமலத் தெழிலுந் திரண்டொன்றின்' என்பது உபமானம். திரண்டொன்றுதல் இல்லதாதலின் அபூதமாயிற்று. உதாரணம் :

'கருமுகி றாமரைக் காடு பூத்துநீ
டிருசுட ரிருபுறத் தேந்தி யேடவிழ்
திருவொடும் பொலியவோர் செம்பொற் குன்றின்மேல்
வருவபோற் கலுழன்மேல் வந்து தோன்றினான்.'

(இராமாயணம்)

என்பதும் அது.

## ௨௦. பலவயிற்போலியுவமை

ஒரு வாக்கியப் பொருளினாலே மற்றை வாக்கியப் பொருள் உபமிக்கப்படுவதாகப் பலவிடங்களிலே உவமவுருபு வெளிப்பட்டு நிற்க வருவது பலவயிற் போலியுவமையாகும்.

பலவயிற் போலி - பலவிடங்களிற் போலென்னுஞ் சொல் லுடையது. இதனை முதனூலார் 'அநேகேவசத்தம்' என்பர். அநேக - பல. இவ - போல. சத்தம் - சொல். வாக்கியம் - சொற்கூட்டம். உதாரணம்:

> 'மலர்வாவி போல்வரான் மாதர் கமல
> மலர்போலு மாதர் வதனம் — மலர்சூழ்
> அளிக்குலங்கள் போலு மளக மதனுட்
> களிக்குங் கயல்போலுங் கண்.'

எனவரும்.

இங்கே 'வாவி, கமலமலர், மலர்சூழளிக் குலங்கள், அதனுட்களிக்குங்கயல்' என்னும் வாக்கியப் பொருளினாலே 'மாதர் வதனம், அளகம், கண்' என்னும் மற்றை வாக்கியப் பொருள் உபமிக்கப்பட்டன. 'போல்' என்னும் உவமவுருபும் பலவிடங்களில் வந்தது. பின்வருமதும் இது.

உதாரணம்:

> 'மிக்க தாருக வனத்தினை யொத்தது விசும்பிற்
> றொக்க பேரிருண் மாதரொத் தனவுடுத் தோற்றஞ்
> செக்க ரீசனை யொத்ததொண் போனகஞ் செறிந்த
> கைக்க பாலம தொத்தது கதிரிளம் பிறையே.'
>
> (கந்தபுராணம்)

எனவரும்.

## ௨௧. ஒருவயிற்போலியுவமை

ஒரு வாக்கியப்பொருளினாலே மற்றொரு வாக்கியப் பொருள் உவமிக்கப்படுவதாக ஓரிடத்தின் மாத்திரம் உவமவுருபு வெளிப்பட்டு நிற்றலுடையதாய் வருவது ஒருவயிற் போலியுவமையாம்.

ஒருவயிற்போலி - ஓரிடத்திற் போல் என்னும் உவமவுருபுடையது. இதனை முதனூலார் 'ஏகேவசத்தம்' என்பர். ஏக - ஒன்று. இவ - போல.

உதாரணம்:

'நிழற்கோப மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலப மேல்விரித்த தோகை — தழற்குலவு
தீம்புகை யூட்டுஞ் செறிகுழலார் போலுங்கார்
யாம்பிரிந்தோர்க் கென்னோ மினி.'

எனவரும்.

இங்கே கார்காலவர்ணனையாகிய 'நிழற் கோபமல்க நிறைமலர்ப்பூங்காயா சுழற்கலபமேல் விரித்ததோகை' என்னும் பூர்வ வாக்கியப்பொருள் 'தழற்குலவு தீம்புகையூட்டுஞ் செறிகுழலார்' என்னும் பின் வாக்கியப் பொருளால் உபமிக்கப்பட்டது. 'புகையூட்டுங்' கூந்தல் விரிக்கப்பட்டிருத்தலின் 'விரித்த கலப' த்திற்கு உபமானமாயிற்று. நிழலிற் கிடக்கும் இந்திர கோபத்திற்கு புகை யூட்டற்கு மூட்டிய 'தழல்' உபமானம். இங்ஙனம் பிறவற்றையும் அறிக.

## ௨௨. கூடாவுவமை

சம்பவமாகாத ஒன்றினை ஒரு பொருளுக்கு உபமானமாக்கிச் சொல்லுவது கூடாவுவமையாகும்.

இதனை முதனூலார் 'அசம்பாவிதோபமை' என்பர். அசம்பாவிதம் - சம்பவித்தல் கூடாதது.

உதாரணம்:

'சந்தனத்திற் செந்தழலுந் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமா லும்மாற்றம் — பைந்தொடியீர்
வாவிக் கமல மதிமுகங்கண் டேக்கறுவார்
ஆவிக் கிவையோ வரண்.'

எனவரும்.

இங்கே 'சந்தனத்திற் செந்தழலும்', 'மதியில் வெவ்விடமும்' வருதல் கூடாமை அறிக.

## ௨௩. பொதுநீங்குவமை

தன்போன்றவைகளையெல்லாம் வென்று மேம்படுதல் பற்றி ஒரு பொருளினைத் தானே தனக்கு நிகராகுமென்று மேம்பாடு தோன்றக் கூறுவது பொது நீங்குவமையாகும்.

பொது நீங்குதல் - பொதுத்தன்மை நீங்குதல். உபமானம் உபமேயம் என்னும் இரண்டுமாய் ஒன்றே நிற்றலாற் பொதுத்தன்மையின்மையாயிற்று. இதனை முதனூலார் 'அசாதாரணோபமை' என்பர். அசாதாரணம் - பொதுத்தன்மையில்லாதது.

உதாரணம் :

'திருமருவு தண்மதிக்குஞ் செந்தா மரையின்
விரைமலர்க்கு மேலாந் தகையாற் — கருநெடுங்கண்
மானே யிருளளகஞ் சூழ்ந்தநின் வாண்முகந்
தானே யுவமை தனக்கு.'

எனவரும்.

இங்கே 'முகம்' என்னும் பொருளொன்றே உபமானமுமாய் உபமேயமுமாய்த் தன்போலுயர்ந்தது வேறில்லை என்பது தோன்ற நின்றது. பின்வருவது மிதுபோல்வது.

உதாரணம் :

'கொங்குறு கூந்த லாடன்
கோலவாண் முகத்துக் கொப்பாந்
திங்களென் றுரைக்கிற் றேயும்
வளர்வுறுஞ் சிறப்ப தன்றாற்
பங்கய மெனினு முண்டோர்
பழுதுமற் றதற்கு மென்னில்
அங்கதற் கதுவே யல்லா
லறையலாம் படிமற் றுண்டோ.' (கந்தபுராணம்)

எனவரும்.

## ௨௪. மாலையுவமை

ஒரு பொருளுக்குப் பலவுபமானங்கள் ஒன்றற்கொன்று சம்பந்தமுடையதாய்ப் புட்பமாலைபோல வருவது மாலையுவமையாகும்.

[library stamp]

மாலை - புட்பமாலிகை.

உதாரணம்:

'மலயத்து மாதவனே போன்று மவன்பால்
அலைகடலே போன்று மதனுட் — குலவும்
நிலவலய மேபோன்று நேரியன்பா னிற்குஞ்
சிலைகெழுதோள் வேந்தர் திரு.'

எனவரும்.

இங்கே பொதியத்திற்போய் நிலைபெற்ற அகத்தியரும், அவர் பால் உணவாயடங்கிய கடலும், அக்கடலுட் சோமகாசுரனாற் கொண்டுபோகப்பட்டடங்கிய பூமியும் உபமானங்கள். சோழனிடம் போய் நிலைபெற்ற 'திரு' உபமேயம். முன்னைய நிலைவிட்டுப் போய் ஓரிடத்தினிற்றல் பொதுத்தன்மை. ஒரு பூவோடு மற்றைப்பூத் தொடர்ந்து நிற்றல் போல மாதவனோடு கடலும் கடலோடு பூமியும் தொடர்புபெற்று நின்றவாறுணர்க. உதாரணம்:

'கடலெழு மிரவி போலுங் கடியசெங் கமலங் காமர்
மடலவிழ் வனசம் போலும் வனிதையர் வதன மன்னோர்
படரொளி வதனம் போலும் பனிமதி பரந்த வானிற்
சுடருமிழ் திங்கள் போலுஞ் சுரிமுகச் சங்க மாதோ.'

எனவருவதும் அது போல்வது.

௩௧. அற்புதஞ் சிலேடை யதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டந் தற்குறிப் பேற்றம்
விலக்கே யேதுவென வேண்டவும் படுமே.

இதன்பொருள் - அவ்வுவமவணி அற்புதம் முதல் ஏதுவீறாகச் சொல்லப்பட்ட அலங்காரங்களோடு சேர்ந்து வருமெனக் கவிஞராற் கொள்ளவும் படும் என்றவாறு.

கூடிவருதல்பற்றி இவை வேறாகக் கூறப்பட்டன.

## ௨௫. அற்புதவுவமை

உபமேயத்தின் குணங்களை உபமானப்பொருளிலேற்றி அற்புதந்தோன்ற அலங்கரித்துச் சொல்லுவது அற்புதவுவமையாகும்.

அற்புதம் - உலகிலில்லாப் பொருளைக் காண்டலால் உண்டாகும் ஆச்சரியம்.

உதாரணம் :

'குழையருகு தாழக் குனிபுருவந் தாங்கி
உழைய ருயிர்பருகி நீண்ட — விழியுடைத்தாய்
வண்டே டிருளளகஞ் சூழ வருமதியொன்
றுண்டே லிவண்முகத்துக் கொப்பு.'

எனவரும்.

இங்கே உபமேயம் 'முகம்'. உபமானம் 'மதி'. முகத்தின் குணங்களாகிய 'குழையருகுதாழ்'தல் முதலியன மதியிலேற்றி உரைக்கப்பட்டன. அவ்வாறு 'வருமதியொன்றுண்டேல்' என்பதனால் அற்புதம் வெளிப்படும். பின்வருவது மிது.

உதாரணம் :

'பொருப்பெனு வெழுந்து வில்லின்
பொற்பெனத் திரண்டு தென்னந்
தருப்பயி லிளநீ ரென்னத்
தண்ணெனு வமுதுட் கொண்டு
மருப்பெனக் கூர்த்து மாரன்
மகுடத்தின் வனப்பு மெய்தி
இருப்பதோர் பொருளுண் டாமே
லிணைமுலைக் குவமை யாமே.' (கந்தபுராணம்)

எனவரும்.

## உகூ. சிலேடையுவமை

சொற்பொதுமை காரணமாக உபமானவுபமேயங்களுக்கு ஒப்புமை கூறுவது சிலேடையுவமையாகும்.

சிலேடை - பலபொருள் பயக்கும் ஒருவகைச் சொற்றொடர்.

உதாரணம் :

'செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ டணிதழுவிச் — செந்தமிழ்நூல்

நற்றார் புனையுங் கவிபோன் மனங்கவரும்
முற்றா முலையாண் முகம்.'

எனவரும்.

இங்கே 'கவி' உபமானம். 'முகம்' உபமேயம். 'திரு', 'திங்கள்', 'பூ' முதலிய சொற்கள் கவிக்கும் முகத்திற்கும் இணங்குமாறு வெவ்வேறு பொருள் பயந்து சிலேடையாய் நின்றன.

## உஎ. அதிசயவுவமை

சார்ந்திருக்குந் தானமாகிய ஆதாரம் வேறுவேறென்ப தொன்றினலன்றி உபமானம், உபமேயம் என்னும் இரண்டற்கும் வேற்றுமையில்லை என்று சொல்லுவது அதிசயவுவமையாகும்.

அதிசயம் - அதிகமேன்மை.

உதாரணம் :

'நின்னுழையே நின்முகங் காண்டு நெடுந்தடந்
தன்னுழையே தன்னையுங் காண்குவம் — என்னும்
இதுவொன்று மேயன்றி வேற்றுமை யுண்டோ
மதுவொன்று செந்தா மரைக்கு.'

எனவரும்.

இங்கே உபமேயமாகிய முகத்திற்கு 'நின்னுழையே' எனவும், உபமானமாகிய தாமரைக்குத் 'தடந்தன்னுழையே' எனவும் இரண்டுக்கும் வேறு வேறு சார்பிடங்கூறி இதனாலன்றி வேறுபேதமில்லை என்பதனால் அதிசயந் தோன்றிய வாறறிக.

## உஅ. விரோதவுவமை

உபமானமும், உபமேயமுந் தம்முள்ளே விரோதகுணமுடையனவாகச் சொல்லப்படுவது விரோதவுவமையாகும்.

விரோதம் - ஒன்றோடொன்று கூடுதலின்மை.

உதாரணம் :

'செம்மை மரைமலருந் திங்களு நும்முகமுந்
தம்மிற் பகைவிளக்குந் தன்மையவே — எம்முடைய
வைப்பாகுஞ் சென்னி வளம்புகார் போலினியீர்
ஒப்பாகு மென்பா ருளர்.'

என்வரும்.

இங்கே தாமரையுஞ் சந்திரனும் உபமானம். 'முகம்' உபமேயம். தாமரை மலர்ந்து பிரகாசிக்கும்போது சந்திரன் மழுங்குதலும், சந்திரன் பிரகாசிக்கும்போது தாமரை மழுங்குதலும், முகம் பிரகாசிக்கும்போது இவ்விரண்டும் ஒருங்கே மழுங்குதலும் விரோத குணமென அறிக.

## உகூ. ஒப்புமைக்கூட்டவுவமை

ஒரு செயலைச் செய்தற்கண் அதிகமாந் தன்மையுடைய ஒரு பொருளோடு அச்செயலிற் குறைவாந்தன்மையுடைய மற்றொரு பொருளைக்கூட்டிச் செயலொன்றாயிருத்தல் பற்றிச் சமமாக்கிச் சொல்லுவது ஒப்புமைக்கூட்டவுவமையாகும்.

இதனை முதனூலார் 'துல்லியயோகோபமை' என்பர். துல்லியம் - ஒப்புமை. யோகம் - கூட்டம்.

உதாரணம் :

'விண்ணின்மேற் காவல் புரிந்துறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மே லன்னை வயவேந்தே — தண்ணளியிற்
சேரா வவுணர் திறங்களையுந் தேவர்கோன்
நேரார்மே லத்தகையை நீ.'

எனவரும்.

இங்கே இந்திரன் உபமானம். 'வேந்து' உபமேயம். இவ்விருவரும் காவல்புரிதலும், பகைகளைதலுமாகிய தொழில்களைச் செய்வாராயினும், அவற்றின் மிகுதிப்பாடுடையவன் இந்திரன் எனவும், அவனோடுவமிக்கப்படுதல்பற்றி வேந்தனுக்கு மேன்மையாயிற்று எனவும் அறிக.

## ௩௦. தற்குறிப்பேற்றவுவமை

உபமேயத்திற்கு மேன்மை தோன்றுமாறு கவிஞன் தான் குறித்த கருத்தை உபமானத்திலேற்றிச் சொல்லுவது தற்குறிப்பேற்றவுவமையாகும்.

இதனை முதனூலார் 'உற்பிரேக்ஷிதோபமை' என்பர்.

உதாரணம் :

'உண்ணீர்மை தாங்கி யுயர்ந்த நெறியொழுகி
வெண்ணீர்மை நீங்கி விளங்குமால் — தண்ணீர்த்
தரம்போலு மென்னத் தருகடம்பை மாறன்
கரம்போற் கொடைபொழிவான் கார்.'

எனவரும்.

இங்கே 'மாறன்கரம்' உபமேயம். 'முகில்' உபமானம். 'கரம் போற் கொடைபொழிவான் கார் உண்ணீர்மைதாங்கி யுயர்ந்தநெறி யொழுகி வெண்ணீர்மை நீங்கி' என்பது கவிஞனாற் கற்பித்தேற்றப்பட்ட கருத்து.

## ௩௧. விலக்குவமை

உபமேயத்திற்கு உயர்வுதோன்ற உபமானத்திலே ஒப்புமைக்கு விலக்காயுள்ள சிலதன்மைகள் புலப்படும்படி சொல்லுவது விலக்குவமையாகும்.

இதனை முதனூலார் 'பிரதிஷேதோபமை' என்பர். பிரதிஷேதம் - விலக்கு.

உதாரணம் :

'குழைபொருது நீண்டு குமிழ்மேன் மறியா
உழைபொரு தென்னுள்ளங் கவரா — மழைபோற்
றருநெடுங்கைச் சென்னி தமிழ்நா டனையார்
கருநெடுங்கண் போலுங் கயல்.'

எனவரும்.

இங்கே 'கயல்' உபமானம். 'கண்' உபமேயம். 'குழை பொருது நீண்டு குமிழ்மேன்மறியா' என்பது முதலியன

ஒப்புமைக்கு விலக்காக உபமானத்திற் சொல்லப்பட்ட தன்மைகள்.

## ரு௨. ஏதுவுவமை

இக்காரணத்தினால் இதனை இஃதொக்கும் என்று காரணம் புலப்படக் கூறுவது ஏதுவுவமையாகும்.

ஏது - காரணம்.

உதாரணம் :

'வாளரவின் செம்மணியும் வன்னியிளம் பாசிலையும்
நாளிளைய திங்க ணகைநிலவும் — நீளொளியால்
தேனுலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வானுலவு விற்போல் வரும்.'

எனவரும்.

இங்கே 'வானவில்' உபமானம். சிவனுடைய 'சடை' உபமேயம். நாகமணி, வன்னியிலை முதலியன ஒளிவிடுதல் காரணம். வானவில்லிலே காணப்படும் செம்மை, பசுமை முதலிய நிறங்கள் போலச் சிவபெருமானுடைய சடையிலும் நாகரத்தினம் முதலியன காரணமாகச் செம்மை, பசுமை முதலிய நிறங்கள் காணப்படு மாறுணர்க. பின் வருவது மிது.

உதாரணம் :

'தரும்பய மாற்ற லாலே
தந்தையை நிகர்க்குந் தம்பால்
இருந்தன மீகை யாலே
யீன்றவ ளேய்க்கு மெண்ணில்
வரும்படி யளித்த லாலே
மன்னவன் மானு மாட்சி
திருந்துவீ தேவ லாலே
தேசிக ளுந்தென் னாடு.' (சேதுபுராணம்)

எனவரும்.

## உவமவுருவமைதி

ரு௨. மிகுதலுங் குறைதலுந் தாழ்தலு முயர்தலும்
பான்மாறு படுதலும் பாகுபா டுடைய.

இதன்பொருள் — இங்கே சொல்லப்பட்ட உவமவணி மிகுதல், குறைதல் முதலிய பாகுபாடுகளையுமுடையன வாம் என்றவாறு.

'மிகுத'லாவது உவமானோபமேயங்கள் ஒன்றற்கொன்று அடைமொழிகளான் மிக்குவருதலுடைமை. 'குறைத'லாவது அவை அவ்வாறே குறைந்துவரலுடைமை. 'தாழ்த'லாவது ஒன்றற்கொன்று இழிந்த பொருளாதல். 'உயர்த'லாவது அவைகள் அவ்வாறே உயர்ந்த பொருளாதல். 'பான் மாறுபடுத'லாவது ஆண்பால் முதலிய ஐம்பால்களுள் உபமானம் ஒருபாலும் உபமேயம் மற்றொரு பாலுமாதல். இவைகள் குற்றமாயினும் ஒப்புமைக்குணம் மிக்குழிக் குணமாக அறிஞராற் கொள்ளப்படும். உதாரணங்கள் ஆங்காங்கு வந்துழிக் காண்க.

## உவமவுருபு

௩௩. போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏர வேய மலைய விழைய
ஒப்ப வெள்ள வுறழ வேற்ப
அன்ன வனைய வாங்க வமர
என்ன விகல விழைய வெதிரத்
துணைதூக் குண்டார் நகைமிகு தகைவீழ்
இணைகே ழற்றுச் சேத்தொடு பிறவு
நவைதீர் பான்மை யுவமச் சொல்லே.

இதன்பொருள் — போல என்பது முதற் சேத்து என்பதீறாகச் சொல்லப்பட்ட இவைகளும் இவை போன்ற பிறசொற்களும் உவமவுருபுகளாம் என்றவாறு.

'பிறவு'மென்பதனால் நாட, நடுங்க, நளிய, நந்த, ஓட, ஒட்ட, கள்ள, கருத, காட்ட என்பன முதலியவாக உபமானோபமேயங்களுக் கிடையில் ஒப்புமை புலப்படச் சேர்க்குஞ் சொற்களெல்லாங் கொள்ளப்படும். இவ்வுவமவுருபுகளுள்ளே 'அன்ன', 'ஆங்க', 'மான', 'என்ன', 'உறழ', 'தகைய' என்பன வினை காரணமாகவும், 'கடுப்ப', 'ஏய்ப்ப', 'புரைய',

'நிகர்ப்ப' என்பன வடிவப்பண்பு காரணமாகவும், 'எள்ள' 'விழைய', 'பொருவ', 'வீழ்' என்பன பயன்காரணமாகவும், 'போல', 'ஒப்ப', 'நேர', என்பன வண்ணப்பண்பு காரண மாகவும் வருமென்று தொல்காப்பியர் கூறுவர். அங்கே நச் சினார்க்கினியர் விரித்தனர். ஆண்டுக் காண்க. ஈண்டுப் பர க்குமென்று சுருக்கப்பட்டன.

தொல்காப்பியர் உவமவியலிலே உவமையணி ஒன்றே கூறி அதனுள்ளே பலவணிகளை அடக்கினர். வடநூலா ருள்ளே சித்திரமீமாஞ்சை என்னும் அலங்காரகாரர் உவமை யணி ஒன்றே வேறு படுத்திக் கூறுந் திறத்தாற் பலவித அலங்காரங்களாகும் என்பர். அவர் கூறியவைகளுள்ளே சிலவற்றை இங்கே காட்டுதும்.

க. 'சந்திரன் போன்ற முகம்' என்பது உவமை. இத னையே வேறுபடுத்திக் கூறப் பலவித அலங்காரங்கள் தோன் றும்.

உ. 'சந்திரன் போன்றது முகம்;' 'முகம் போன்றது சந்திரன்' என்பது உபமேயோபமை. இவர் 'இதரவிதர வுவமை' என்பர்.

ந. 'முகம் போன்றது முகம்' என்பது அநந்நுவய வணி.

ச. 'முகம்போன்றது சந்திரன்' என்பது பிரதீபாலங் காரம். இந்நூலார் 'விபரீதவுவமை' என்பர்.

ரு. 'சந்திரனைக் கண்டு முகத்தை நினைக்கின்றேன்' என் பது நினைப்பணி.

சு. 'முகமே சந்திரன்' என்பது உருவகம்.

எ. 'முகசந்திரனாலே தாபம் நீங்கிற்று' என்பது திரி பணி.

அ. 'இது முகமா சந்திரனா?' என்பது ஐயவணி. இந் நூலார்க்கு ஐயவுவமையாகும்.

கூ. 'நின்முகத்தினைச் சந்திரனென்று சகோரந் தொடர் கின்றது' என்பது மயக்கவணி. இவர் 'திரிபதிசயம்' என்பர்.

௧௦. 'நின்முகத்தைச் சந்திரன் என்று சகோரமும், தாமரை என்று வண்டுங் களிக்கின்றன' என்பது உல்லேகாலங்காரம். உல்லேகம் - பலபடச்செய்தல்.

௧௧. 'இது சந்திரன்; முகமன்று' என்பது ஒழிப்பணி.

௧௨. 'சத்தியமாகச் சந்திரன்' என்பது தற்குறிப்பேற்றம்.

௧௩. 'இது சந்திரன்' என்பது அதிசயம்.

௧௪. 'முகத்தினாலே சந்திரனையுங் கமலத்தையும் வென்றாள்' என்பது ஒப்புமைக்கூட்டம்.

௧௫. 'நின்முகமுஞ் சந்திரனும் நிசியிற் களிக்கின்றன' என்பது விளக்கணி.

௧௬. 'நான் நின்முகத்தையே விரும்புகின்றேன்; சகோரம், சந்திரனையே விரும்புகின்றது' என்பது பிரதிவஸ்தூபமை. இவர் 'மறுபொருளுவமை' என்பர்.

௧௭. 'விண்ணிலே சந்திரன்; மண்ணிலே நின்முகம்' என்பது திருட்டாந்தவணி.

௧௮. 'முகம் சந்திரசோபையைத் தரிக்கின்றது' என்பது நிதர்சனவணி.

௧௯. 'களங்கமில்லாத முகம் சந்திரனின் மிக்கது' என்பது வியதிரேகவணி.

௨௦. 'நின்முகத்தோடு சமமாகச் சந்திரனும் மகிழ்கின்றது' என்பது சகோத்தியணி.

௨௧. 'முகத்தின்முன் சந்திரன் ஒளியில்லதாகின்றது' என்பது பிரத்துதப்பிரமிசையணி.

இங்ஙனமே உவமை ஒன்றே பலவலங்காரங்களாயினவாறுணர்க.

## 3. உருவகவணி

௩௪. உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றெனு மாட்டின தஃதுருவக மாகும்.

இதன்பொருள் - உபமானம், உபமேயம் என்னும் இரண்டினையும் வேறுபாடுநீக்கி ஒன்றென்றுணர்ந்து கொள்ளும்படி மயங்கச் செய்யின்; அஃது உருவகவணியாகும் என்றவாறு.

உபமானம், உபமேயம் என்னும் இரண்டிற்கும் பேதந் தோன்றச் சொல்லப்படுவது 'உவமையணி' எனவும், பேதமின்மை தோன்றச் சொல்லப்படுவது 'உருவகவணி' எனவும் உணர்க. 'ரூபகம்' என்னும் வடமொழி உருவகமென்றாயிற்று. ரூபகம் - அபேதவுணர்வோடு கூடியது.

## உருவகவகை

௩௫. தொகையே விரியே தொகைவிரி யெனாஅ
இயைபே யியைபிலி வியனிலை யெனாஅச்
சிறப்பே விரூபகஞ் சமாதா னம்மெனாஅ
உருவக மேக மநேகாங் கம்மெனாஅ
முற்றே யவயவ மவயவி யெனாஅச்
சொற்றவைம் மூன்று மற்றதன் விரியே.

இதன்பொருள் - தொகையுருவகம் முதல் அவயவியுருவகமீறாகச் சொல்லப்பட்ட பதினைந்தும் அவ்வுருவகவணியின் விரியாகும் என்றவாறு.

### க. தொகையுருவகம்

ஒற்றுமையை விளக்குவனவாகி, ஆகிய, ஆக, என்னும் என்பன மறைந்து நிற்றலுடையது தொகையுருவகமாகும்.

உதாரணம்:

'அங்கை மலரு மடித்தளிருங் கண்வண்டுங்
கொங்கை முகிழுங் குழற்காருந்—தங்கியதோர்
மாதர்க் கொடியுளதா னண்பா வதற்கெழுந்த
காதற் குளதோ கரை.'

எனவரும்.

இங்கே 'அங்கைமலர்', 'அடித்தளிர்' முதலிய உருவகங்களிலே 'ஆகிய' என்னுஞ் சொல்லு மறைந்து நின்றது.

"அங்கைமலர்' என்பது அங்கையாகிய மலரென விரியும். பிறவுமின்ன.

## உ. விரியுருவகம்

ஆகிய முதலிய சொற்கள் வெளிப்பட்டு நிற்றலுடையது விரியுருவகமாகும்.

உதாரணம்:

'கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அங்கை மலரா வடிதளிரா—திங்கள்
அளிநின்ற மூர லணங்கா மெனக்கு
வெளிநின்ற வேனிற் றிரு.'

எனவரும்.

இங்கேயுள்ள உருவகங்களிலே 'ஆக' என்பது வெளிப்பட்டு நின்றது. 'மலரா' 'தளிரா' என்பவைகளிலே 'ஆக' என்பது 'ஆ' என நின்றது.

## ௩. தொகைவிரியுருவகம்

தொகையுருவகம் விரியுருவகம் என்னும் இரண்டுஞ் சேர்ந்து வருதலுடையது தொகைவிரியுருவகமாகும்.

உதாரணம்:

'வையந் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய சுடரோன் விளக்காகச் — செய்ய
சுடராழி யானடிக்கே சூட்டுவன் சொன்மாலை
இடராழி நீங்கவே யென்று.' (பொய்கையாரந்தாதி)

எனவரும்.

இங்கே 'இடராழி' என்பது தொகையுருவகம். மற்றையன விரியுருவகம்.

## ௪. இயைபுருவகம்

ஒன்றற்கொன் றியைபுடைய பொருள்கள் ஒருதொடரிலே உருவகமாக வருதலுடையது இயைபுருவகமாகும்.

இதனை முதனூலார் 'யுக்தரூபகம்' என்பர். யுக்தம் - இயைபு.

உதாரணம்:

'செவ்வாய்த் தளிரு நகைமுகிழுங் கண்மலரும்
மைவா ரளிக மதுகரமுஞ் — செவ்வி
உடைத்தாந் திருமுகமென் னுள்ளத்து வைத்தார்
துடைத்தாரே யன்றோ துயர்.'

எனவரும்.

இங்கே 'தளிர்' முதலியவற்றோடு அரும்பு முதலியவை கட்கும், 'வாய்' முதலியவைகளோடு 'நகை' முதலியவைகட்கும் இயைபுடைமை அறிக. பின்வருவது மிதுபோலும்.

உதாரணம்:

'கொங்கை யேபரங் குன்றமுங் கொடுங்குன் றுங்கொப்பூழ்
அங்க மேதிருச் சுழியலவ் வயிறுகுற் றாலஞ்
செங்கை யேட்க மேனியே பூவணந் திரடோள்
பொங்கர் வேய்வனந் திருமுக மதுரையாம் புரமே.'
(திருவிளையாடற்புராணம்)

எனவரும்.

## ரு. இயைபிலியுருவகம்

ஒன்றற்கொன்றியைபில்லாத பொருள்கள் ஒரு தொடரிலே உருவகமாக வருதலுடையது இயைபிலியுருவகமாகும்.

இதனை முதனூலார் 'அயுக்தரூபகம்' என்பர். அயுக்தம் - இயைபில்லது.

உதாரணம்:

'தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் — தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு.'

எனவரும்.

இங்கே 'கொன்றை' முதலியவற்றிற்கும் 'பொன்' முதலியவற்றிற்கும் இயைபின்மை உணர்க.

## ௬. வியநிலையுருவகம்

அவயவியை உருவகஞ்செய்தும், அவயவங்களுள்ளுஞ் சிலவற்றை உருவகஞ்செய்தும், சிலவற்றை வாளாவிடுத்தும் ஒரு தொடரிற் சொல்லுவது வியநிலையுருவகமாகும்.

இதனை முதனூலார் 'விஷமரூபகம்' என்பர். விஷமம் - சமமில்லது, ஏற்றிழிவானது. அது 'வியம்' என விகாரமாயிற்று.

உதாரணம் :

'செவ்வாய் நகையரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவா ணெடுங்கண் மதர்த்துலவச்—செவ்வி
நறவலருஞ் சோலைவாய் நின்றதே நண்பா
குறவர் மடமகளாங் கொம்பு.'

எனவரும்.

இங்கே 'மக'ளென்னும் அவயவி கொம்பாக உருவகிக்கப்பட்டது. 'செங்கை' என்னும் அவயவம் 'தளி'ராக உருவகஞ் செய்யப்பட்டது. பிற வாளாவிடப்பட்டன.

## ௭. சிறப்புருவகம்

ஒருபொருளின் விசேடணங்களை உருவகமாக்கி அவை காரணமாக அப்பொருளையும் உருவகமாக்கி முடிப்பது சிறப்புருவகமாகும்.

இதனை முதனூலார் 'விசேடணரூபகம்' என்பர்.

உதாரணம் :

'விரிகடல்சூழ் மேதினி நான்முகன் மீகாணச்
சுரநதிபா யச்சி தொடுத்த — அரிதிருத்தாள்
கூம்பாக வெப்பொருளுங் கொண்டபெரு நாவாய்
ஆம்பொலிவிற் றாயினதா லின்று.'

எனவரும்.

இங்கே 'மேதினி'யின் விசேடணங்களாகிய 'நான்முகன்' முதலியன உருவகிக்கப்பட்டமை காரணமாக அம்மேதினி 'நாவா'யாக உருவகிக்கப்பட்டவாறுணர்க.

## அ. விரூபகம்

விரோதமான தன்மையையுடைய உருவகம் விரூபகமாகும்.

விரூபகம் = வி + ரூபகம். வி - விரோதம்.

உதாரணம் :

'தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது
முண்மருவு தாண்மேன் முகிழாது—நண்ணி
இருபொழுதுஞ் செவ்வி யியல்பாய் மலரும்
அரிவை வதனம் புயம்.'

எனவரும்.

இங்கே 'முகம்' தாமரையாக உருவகஞ் செய்யப்பட்டது. தண்மதிக்குத் 'தோலாமை' முதலியன தாமரையின் விரோதகுணங்கள்.

## கூ. சமாதானவுருவகம்

ஒரு பொருளை உருவகஞ்செய்து அதனால் வருந் தீங்குக்கும் வேறு காரணங் காட்டிச் சமாதானஞ் சொல்லிமுடிப்பது சமாதானவுருவகமாகும்.

சமாதானம் - விரோதமின்மையாக்கல்.

உதாரணம் :

'கைகாந்தள் வாய்குமுதங் கண்ணெய்தல் காரிகையீர்
மெய்வார் தளிர்கொங்கை மென்கோங்கம் — இவ்வனைத்தும்
வன்மைசேர் தாவி வருத்துவது மாதவமொன்
றின்மையே யன்றோ வெமக்கு.'

எனவரும்.

இங்கே 'கை', 'வாய்' முதலியன, 'காந்தள்', 'குமுதம்' முதலியனவாக உருவகஞ் செய்யப்பட்ட வாறும், 'இவ்வனைத்தும் வன்மை சேர்ந்தாவி வருத்துவது' எனத் தீங்கு கூறிய வாறும், 'மாதவமொன்றின்மையே' என வேறொரு காரணங் கூறிச் சமாதானஞ் செய்தவாறும் அறிக.

## ௧௦. உருவகவுருவகம்

முன்னர் உருவகஞ் செய்யப்பட்ட ஒன்றினைப் பின்னர் மற்றொன்றாக உருவகஞ்செய்து கூறுவது உருவகவுருவகமாகும்.

உதாரணம் :

'கன்னிதன் கொங்கைக் குவடாங் கடாக்களிற்றைப்
பொன்னெடுந்தோட் குன்றே புனைகந்தா—மன்னவநின்
ஆகத் தடஞ்சே வகமாக யானனைப்பல்
சோகித் தருளேற் றுவண்டு.'

எனவரும்.

இங்கே 'கொங்கை', 'குவ'டாக உருவகஞ் செய்யப்பட்டவாறும், அது பின்னர்க் 'களி'றாக உருவகஞ் செய்யப்பட்டவாறும், பிறவும் அங்ஙனம் உருவகஞ் செய்யப்பட்டவாறும் அறிக.

## ௧௧. ஏகாங்கவுருவகம்

ஒரு பொருளின் உறுப்புக்கள் பலவற்றுள்ளே ஒன்றினை மாத்திரம் உருவகஞ்செய்து கூறுவது ஏகாங்கவுருவகமாகும்.

ஏகாங்கம் - ஓருறுப்பு.

உதாரணம் :

'காதலனைத் தாவென் றலவுங் கருநெடுங்கண்
ஏதிலனல் யாதென்னு மின்மொழித்தேன் — மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாண்முகத்து வந்த
இரண்டினுக்கு மென்செய்கோ யான்.'

எனவரும்.

இங்கே 'முக'மென்னும் பொருளினுறுப்புக்களாகிய 'கண்' 'மொழி' என்னும் இரண்டனுள்ளே 'மொழி'யென்னும் உறுப்புமாத்திரம் உருவகஞ்செய்யப்பட்டது.

## ௧௨. அநேகாங்கவுருவகம்

பலவுறுப்புக்களை உருவகஞ்செய்து கூறுவது அநேகாங்கவுருவகமாகும்.

அநேகாங்கம் - பலவுறுப்பு.

உதாரணம் :

'கைத்தளிராற் கொங்கை முகிழ்தாங்கிக் கண்ணென்னும்
மைத்தடஞ்சேன் மைந்தர் மனங்கலங்க — வைத்ததோர்
மின்னுளதான் மேக மிசையுளதான் மற்றதுவும்
என்னுளதா நண்பா வினி.'

எனவரும்.

இங்கே 'கை' முதலிய பலவுறுப்புக்கள் உருவகஞ் செய்யப்பட்டன. இதுவும், ஏகாங்கவுருவகமும், அவயவ வுருவக பேதங்கள். அவயவம், உறுப்பு, அங்கம் என்பன ஒருபொருட் கிளவிகள்.

## கங. முற்றுருவகம்

அவயவமும் அவயவியுமாக முற்றும் உருவகஞ் செய்யப்படுவது முற்றுருவகமாகும்.

உதாரணம் :

'விழியே களிவண்டு மென்னகையே தாது
மொழியே முருகுலாந் தேறல் — பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரையென் னுள்ளத் தடத்து.'

எனவரும்.

இங்கே அவயவியாகிய 'முகம்' 'தாமரை'யாகவும், அதன் அவயவங்களாகிய கண் முதலியன 'வண்டு' முதலியனவாகவும் உருவகஞ் செய்யப்பட்டவாறறிக.

## கசு. அவயவவுருவகம்

அவயவியை உருவகஞ்செய்யாமல் அவயவத்தை மாத்திரம் உருவகஞ் செய்வது அவயவவுருவகமாகும்.

அவயவம் - உறுப்பு.

உதாரணம் :

'புருவச் சிலைகுனித்துக் கண்ணம்பெ னுள்ளம்
உருவத் துரந்தா ரொருவர் — அருவி

பொருங்கற் சிலம்பிற் புனையல்குற் றேங்மேன்
மருங்குற் கொடிநுடங்க வந்து.'

எனவரும்.

இங்கே 'ஒருவர்' என்னும் அவயவி வாளாவிடப்பட்டவாறும், 'புருவம்' முதலிய அவயவங்கள் வில்லு முதலியவாக உருவகஞ்செய்யப்பட்டவாறும் அறிக.

## கரு. அவயவியுருவகம்

அவயவங்களை உருவகஞ்செய்யாமல் அவயவியை மாத்திரம் உருவகஞ்செய்வது அவயவியுருவகமாகும்.

அவயவி - அவயவத்தினையுடையது.

உதாரணம் :

'வார்புருவங் கூத்தாட வாய்மழலை சோர்ந்தசைய
வேரரும்பச் சேந்து விழிமதர்ப்ப.— மூரல்
அளிக்குந் தெரிவை வதனம் புயத்தாற்
களிக்குந் தவமுடையேன் கண்.'

எனவரும். இங்கே முகமென்னும் அவயவிமாத்திரம் 'அம்புய'மாக உருவகஞ் செய்யப்பட்டது.

## இதுவுமது

௩௬. உவமை யேது வேற்றுமை விலக்கே
அவநுதி சிலேடையென் றவற்றேடும் வருமே

இதன்பொருள் - முற்கூறிய உருவகவணி உவமை முதற் சிலேடையீறுகச் சொல்லப்பட்ட அலங்காரங்களோடு சேர்ந்தும் வரும் என்றவாறு.

## கசு. உவமவுருவகம்

உவமையோடு கூடிவரும் உருவகம் உவமவுருவகமாகும்.

உதாரணம் :

'மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே யொக்கும்—மதிதளர்வேன்

வெம்மை தணிய மதராக மேமிகுக்குஞ்
செம்மை யொளியாற் றிகழ்ந்து.'

எனவரும்.

இங்கே 'வதனமதியம்' என்னும் உருவகம் 'உதயமதி யமே ஒக்கும்' என்ற உவமையோடு கூடிவந்தவாறறிக.

## கஎ. ஏதுவுருவகம்

ஏதுவோடு கூடிவரும் உருவகம் ஏதுவுருவகமாகும்.

ஏது - காரணம்.

உதாரணம்:

'மாற்றத்தாற் கிள்ளை நடையான் மடவன்னந்
தோற்றத்தாற் றண்ணென் சுடர்விளக்கம் — போற்றும்
இயலான் மயிலெம்மை யிந்நீர்மை யாக்கும்
மயலார் மதர்நெடுங்கண் மான்.'

எனவரும்.

இங்கே 'கிள்ளை' முதலிய உருவகங்கள் 'மாற்றம்' முதலிய ஏதுவோடு கூடிவந்தவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம்:

'தருமன் றண்ணளி யாற்றன தீகையால்
வருணன் கூற்றுயிர் மாற்றலின் வாமனே
அருமை யாலழ கிற்கணை யைந்துடைத்
திருமக ன்றிரு மாநில மன்னனே.' (சிந்தாமணி)

எனவரும்.

## கஅ. வேற்றுமையுருவகம்

வேற்றுமையோடு கூடிவருவது வேற்றுமையுருவகமாகும்.

உதாரணம்:

'வையம் புரக்குமான் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானிற் பொழிகாரும்—கையாம்

இருகார்க்கு மில்லைப் பருவ மிடிக்கும்
ஒருகார் பருவ முடைத்து.'

எனவரும்.

இங்கே அரசன் கரத்தினை முகிலாக உருவகஞ் செய்த வாறும், இரண்டற்கும் பருவத்தினால் வேற்றுமை கூறிய வாறும், அதனாற் கரமாகிய முகிற்கு உயர்வு தோன்றிய வாறும் அறிக.

## கசூ. விலக்குருவகம்

விலக்கோடு கூடிவரும் உருவகம் விலக்குருவகமாகும்.

இதனை முதனூலார் 'ஆக்ஷேபரூபகம்' என்பர். ஆக்ஷேபம் - தடை.

உதாரணம் :

'வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை யுளதே லிரவன்றி—எல்லை
விளக்கு மொளிவளர்த்து வெம்மையா லெம்மைத்
துளக்கு மியல்புளதோ சொல்.'

எனவரும்.

இங்கே 'வதனம்' 'மதி'யாக உருவகஞ் செய்யப்பட்ட வாறும், 'இரவன்றி' என்பது முதலவாக விலக்குக் கூறிய வாறுமறிக.

## உ௦. அவநுதியுருவகம்

அவநுதியோடு கூடிவரும் உருவகம் அவநுதியுருவக மாகும்.

அவநுதி - உண்மையை மறுத்துரைத்தல்.

உதாரணம் :

'பொங்களக மல்ல புயலே யிவையிவையுங்
கொங்கை யிணையல்ல கோங்கரும்பே—மங்கைநின்
மையரிக்க ணல்ல மதர்வண் டிவையிவையுங்
கையல்ல காந்தண் மலர்.'

எனவரும்.

இங்கே உண்மையாகிய 'அளகம்' முதலியன மறுக்கப் பட்டவாறும், 'புயல்' முதலியனவாக உருவகஞ் செய்யப் பட்டவாறும் அறிக.

## உக. சிலேடையுருவகம்

சிலேடையோடு கூடிவரும் உருவகஞ் சிலேடையுருவக மாகும்.

உதாரணம் :

'உண்ணெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொற்றே டொளிவளரத்
தண்ணளிசூழ்ந் தின்பந் தரமலர்ந்து—கண்ணெகிழ்ந்து
காதல் கரையிறப்ப வாவி கடவாது
மாதர் வதனம் புயம்.'

எனவரும்.

இங்கே 'வதனம்' தாமரையாக உருவகஞ் செய்யப்பட்ட வாறும், 'உண்ணெகிழ்ந்த' என்பது முதலியன 'வதன'த் திற்குந் தாமரைக்குஞ் சிலேடையாய் நின்றவாறும் அறிக.

## புறநடை

கூஎ. உருவக முவமை யெனுமிரு திறத்தவும்
நிரம்ப வுணர்த்தும் வரம்பில வாதலிற்
கூறிய நெறியின் வேறுபட வருவன
தேறினர் கோட றெள்ளியோர் கடனே.

இதன்பொருள் – உருவகம் உவமை என்னும் இருவகை யலங்காரங்களும் இவையிவை என முற்றக்கூறு தற்குரிய எல்லையுடையனவல்லவாய் மிகப்பரந்து கிடத்த லால் இங்கே கூறப்பட்ட விதியினின்று வேறுபட வருவன வற்றையும் இயையுமாறறிந்து அமைத்துக் கொள்ளுதல் அறிஞர் கடனாகும் என்றவாறு.

அவ்வாறே அமைக்கப்படுவன சில இங்கே காட்டப்படு கின்றன.

## உருவகம்

உதாரணம் :

'எரி யிரண்டுஞ் சிறகா வெயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவா — நீர்வண்ணன்
அத்தியூர் வாயா வணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு.'

எனவும்,

'உருவிளக் கூர்நுதற் றேட்டி
விழிக்கய லொண்கொடிற் றுத்
திருவிளக் காடிமென் றேண்முழ
வாரத் திரட்கவரி
குருவிளக் கோர்முலைக் கும்ப
மயிரொழுக் குக்கொடியென்
றிருவிளக் கெண்மங் கலத்தொடு
மாதெதிர் கொண்டனளே.' (தணிகைப்புராணம்)

எனவும் வருவன. இவை இயைபுருவகத்தில் அமைக்கப்படும்.

உதாரணம் :

'மலையிற் பயிலா மடமஞ்ஞை வாரி
அலையிற் பிறவா வமுதம் — விலையிட்
டளவாத நித்தில மாராத தேறல்
வளவாண் மதர்நெடுங்கண் மான்.'

எனவரும். இது விலக்குருவகத்தில் அமைக்கப்படும்.

## உவமை

உதாரணம் :

'வாராழிக் கலசக் கொங்கை
வஞ்சிபோன் மருங்குலாடன்
தாராழிக் கலைசா ரல்குற்
றடங்கடற் குவமை தக்கோய்
பாராழி பிடரிற் றாங்கும்
பாந்தளும் பணியென் றேங்கும்
ஓராழித் தேருங் கண்ட
வுனக்குநா னுரைப்ப தென்னே.' (இராமாயணம்)

எனவரும். இது புகழ்தலுவமையிலே அமைக்கப்படும்.

உதாரணம் :

'தம்ஙியத் தியன்ற பொற்பிற்
றுவிலா வாவந் தானும்
சிமையநேர் கொங்கை மாதின்
றிகழ்கணைக் காலுந் தூக்கிற்
சமழ்து பொருளி தென்றே
தமியனேன் றுணிந்து சிந்தை
அமைவுற வறித றேற்றே
னையமுற் றிடுவன் யானே.' (கந்தபுராணம்)

எனவரும். இஃது ஐயவுவமையிலே அமைக்கப்படும்.

உதாரணம் :

'செப்பென்பன் கலச மென்பன்
செவ்விள நீருந் தேர்வன்
துப்பொன்று திரள்சூ தென்பன்
சொல்லுவன் றும்பிக் கொம்பைத்
தப்பின்றிப் பகலில் வந்த
சக்கர வாக மென்பன்
ஒப்பொன்று முலகிற் காணேன்
பலநினைந் துலவ னின்னும்.' (இராமாயணம்)

எனவரும். இது பலபொருளுவமையிலே அமைக்கப்படும்.

இவ்வாறே உருவகத்தினும் உவமையினுமாக வரும் பேதங்கள் அளவிறந்தன. ஆங்காங்கு வருபவைகளை ஆராய்ந்து அநுமானித்துப் பொருத்தி அறிக.

## 4. தீவகவணி

கூ௬. குணந்தொழில் சாதி பொருள்குறித் தொருசொல்
ஒருவயி னின்றும் பலவயிற் பொருடரிற்
றீவகஞ் செய்யுண் மூவிடத் தியலும்.

இதன்பொருள் - ஒரு சொல் குணம் முதலிய நான்கனுள் யாதேனும் ஒன்றனைக் குறித்து ஒருகவியிலே ஓரிடத்தினின்று பலவிடத்துஞ் சென்று பொருளை விளக்குமாயின், அது தீவகவணியாகும். அது, கவியின் முதல்,

இடை, கடை என்னும் மூன்றிடங்களுள் யாதேனும் ஒன்றிற் பொருந்தி நிற்கும் என்றவாறு.

ஓரிடத்து வைக்கப்பட்ட விளக்கானது பலவிடங்களிற் சென்று பொருள்களை விளக்குதல் போல, இதுவும் ஓரிடத்து நின்று பலவிடங்களிலுஞ் சென்று பொருள்களை விளக்குதலாலே தீவகமெனப்பட்டது. 'தீபகம்' என்பது 'தீவகம்' என்றாயிற்று. தீபகம் - விளக்கு.

முதல், இடை, கடை என்னும் மூவிடத்தும் நிற்றல் பற்றி முதனிலைத்தீவகம், இடைநிலைத்தீவகம், கடைநிலைத் தீவகம் எனப்படும். இம் மூன்றனோடுங் குணம் முதலிய நான்கினையுந் தனித்தனி கூட்டப் பன்னிரண்டாகும். முதனிலைக்குணத்தீவகம், முதனிலைத்தொழிற்றீவகம், முதனிலைச்சாதித்தீவகம், முதனிலைப்பொருட்டீவகம் என இவ்வாறே வரும்.

## க. முதனிலைக்குணத்தீவகம்

உதாரணம் :

> 'சேந்தன வேந்தன் றிருநெடுங்கண் டெவ்வேந்தர்
> ஏந்து தடந்தோ ளிழிகுருதி — பாய்ந்த
> திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த வம்பும்
> மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து.'

எனவரும்.

இங்கே செம்மை என்னும் அடியாற்றோன்றிக் குணங் குறித்து முதலிலே நின்ற 'சேந்தன' என்னுஞ் சொல் 'கண் சேந்தன' எனவும், 'திசையனைத்தும் சேந்தன' எனவும், 'அம்பும் சேந்தன' எனவும், 'மிசையனைத்தும் சேந்தன' எனவும், 'புட்குலமும் சேந்தன' எனவும் பல சொற்களோடுஞ் சேர்ந்து பொருள் கொள்ளும்படி நின்று எல்லா வாக்கியங்கட்கும் உபகாரமாயிற்று.

## உ. முதனிலைத்தொழிற்றீவகம்

உதாரணம்:

'சரியும் புனைசங்குந் தண்டளிர்போன் மேனி
வரியுந் தனதடஞ்சூழ் வம்பும் — திருமான
ஆரந் தழுவு தடந்தோ ளசளங்கன்
கோரந் தொழுத கொடிக்கு.'

எனவரும்.

இங்கே 'சரியும்' என்னும் வினைச்சொல் முதலினின்று "சங்கு', 'வரி', 'வம்பு' என்பவற்றோடு சேர்ந்து பொருள் விளக்கிற்று.

## ௩. முதனிலைச்சாதித்தீவகம்

உதாரணம்:

'தென்ற லகங்கன் றுணையாஞ் சிலகொம்பர்
மன்றற் றலைமகளும் வான்பொருண்மேற் — சென்றவர்க்குச்
சாற்றவிடுந் தூதாகுந் தங்கும் பெரும்புலவி
மாற்ற வருவிருந்து மாம்.'

எனவரும்.

இங்கே காற்றின் சாதிகுறித்ததாய் முதலிலே நின்ற 'தென்றல்' என்னும் ஒரு சொல் பல சொற்களோடுஞ் சேர்ந்து பொருள் விளக்கியவாறறிக.

## ௪. முதனிலைப்பொருட்டீவகம்

உதாரணம்:

'முருகவேள் சூர்மா முதறடிந்தான் வள்ளி
புரிகுழன்மேன் மாலை புனைந்தான் — சரணளித்து
மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலா னிடைகிழித்தான் வெற்பு.'

எனவரும்.

இங்கே பொருள்குறித்து முதலிலே நின்ற 'முருக வேள்' என்னுஞ் சொல் பலசொற்களோடுஞ் சென்று பொருள் விளக்கிற்று.

## ரு. இடைநிலைக்குணத்தீவகம்

உதாரணம்:

'எடுத்த நிரைகொண்டு வென்றலுமே வென்றி
வடுத்திலங்கு வைவாளை வாங்கத் — துடித்தனவே
தண்ணார மார்புந் தடந்தோளும் வேல்விழியும்
எண்ணாத மன்னர்க் கிடம்.'

எனவரும்.

இங்கே 'துடித்தனவே' என்பது குணங்குறித்து இடைநின்ற சொல்.

## கூ. இடைநிலைத்தொழிற்றீவகம்

உதாரணம்:

'எடுக்குஞ் சிலையின் றெதிர்ந்தவருங் கேளும்
வடுக்கொண் டொரந்துணிய வாளி — தொடுக்கும்
கொடையுந் திருவருளுங் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா.'

எனவரும்.

இங்கே 'தொடுக்கும்' என்பது வினைகுறித்து இடைநின்ற சொல்.

## எ. இடைநிலைச்சாதித்தீவகம்

உதாரணம்:

'காமருவு பொற்றொடியாங் காலிற் கழலாம்
பொருவில் புயவலய மாகும் — அரவரைமேல்
நாணு மரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணும் புனைமாலை யாம்.'

எனவரும்.

இங்கே 'அரவு' என்பது சாதிகுறித்து இடைநின்ற சொல்.

## அ. இடைநிலைப்பொருட்டீவகம்

உதாரணம்:

'மானமருங் கண்ணன் மணிவயிற்றில் வந்துதித்தான்
தானவரை யென்றுந் தலையழித்தான் — ஆனைமுகன்

ஓட்டினன் வெங்கலியை யுள்ளத் தினிதமர்ந்து
வீட்டின னம்மேல் வினை.'

எனவரும்.

இங்கே 'ஆனைமுகன்' என்பது பொருள். அஃது இடைநின்று முன்னும் பின்னுஞ் சென்று சென்று பொருள் விளக்கிற்று.

### கூ. கடைநிலைக்குணத்தீவகம்

உதாரணம்:

'ஒருவ னறிவானு மெல்லா மியாதொன்றும்
ஒருவ னறியா தவனு — மொருவன்
குணனடங்கக் குற்ற முளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.'

எனவரும்.

இங்கே 'இல்' என்னுங் குணச்சொல் கடையினின்று முன்னர்ச் சென்று சென்று பொருள் விளக்கிற்று.

### க0. கடைநிலைத்தொழிற்றீவகம்

உதாரணம்:

'துறவுளவாச் சான்றோ ரினிவரவுந் தூய
பிறவுளவா வூன்றுறவா வூணும் — பறைசறங்கக்
கொண்டா னிருப்பக் கொடிங்குழையா டெய்வமுமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.'

எனவரும்.

இங்கே இறுதியினின்ற 'வைக்கற்பாற்றன்று' என்னும் வினைச் சொல் முன்னர்ச் சென்று சென்று பொருள் விளக்கிற்று.

### கக. கடைநிலைப்பொருட்டீவகம்

உதாரணம்:

'புறத்தன வூரன நீரன மாவின்
நிறத்தன கொற்சேரி யவ்வே — அறத்தின்

மகனை முறைசெய்தான் மாவஞ்சி யாட்டி,
முகனை முறைசெய்த கண்.'

எனவரும்.

இங்கே 'கண்' என்னும் பொருள் இறுதியினின்று முன்னர்ச் சென்று சென்று பொருள் விளக்கிற்று. பின் வருவது மிது.

உதாரணம் :

'வானத்தன கடலின்புற வலயத்தன மதிசூழ்
மீனத்தன மிளிர்குண்டல மிதுனத்தன மிடல்வெங்
கானத்தன மலையத்தன திரைசுற்றிய வரியின்
தானத்தன காகுத்தன சரமுந்திய சிரமே.'
(இராமாயணம்)

எனவரும்.

## இதுவுமது

நகூ. அதுவே,
மாலை விருத்த மோருபோருள் சிலேடையேன
நால்வகை யானு நடக்கு மேன்ப.

இதன்பொருள் – முற்கூறப்பட்ட தீவகவணி யானது மாலை, விருத்தம், ஒருபொருள், சிலேடை என்னும் நான்கனோடும் கூடியும் வரும் என்றவாறு.

## கஉ. மாலைத்தீவகம்

உதாரணம் :

'மனைக்கு விளக்க மடவாண் மடவாள்
தனக்குத் தகைசால் புதல்வர் — மனக்கினிய
காதற் புதல்வற்குக் கல்வியே கல்விதனக்
கோதிற் புகழ்சா லுணர்வு.' (நான்மணிக்கடிகை)

எனவரும்.

இங்கே 'விளக்கம்' என்னுஞ் சொல் மாலைபோலத் தொடர்புடையதாய் எல்லா வாக்கியங்களோடுஞ் சென்று பொருள் விளக்கியவாறறிக.

## ௧௩. விருத்ததீவகம்

உதாரணம் :

'வரிவண்டு நாணு மதுமல ரம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் பொலிவும் — பிரிவின்
விளர்க்கு நிறமுடையார் தம்மேன் மெலிவும்
வளர்க்கு மலயா நிலம்.'

எனவரும்.

இங்கே 'மலயாநிலம்' என்பது தீவகமாய் நின்ற சொல் எனவும், 'பொலிவு'க்கு 'மெலிவு' விருத்தம் எனவும் அறிக. விருத்தம் - முரண்.

## ௧௪. ஒருபொருட்டீவகம்

தீவகமாய்நின்ற சொற் சென்று முடிதற்கிடனான சொற்களெல்லாம் ஒருபொருளனவாய் வருவது ஒருபொருட்டீவகமாகும்.

உதாரணம் :

'வியன்ஞாலஞ் சூழ்திசைக ளெல்லாம் விழுங்கும்
அயலாத் துணைநீத் தகன்றார் — உயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில்புதைக்கு மென்மயில்கள்
கண்கவரு மீதெழுந்த கார்.'

எனவரும்.

இங்கே தீவகமாய் நின்ற சொல் 'கார்' என்பதெனவும், அது சென்று முடிதற்கிடனாய் ஒருபொருளனவாய் நின்ற சொற்கள் 'விழுங்கும்', 'பருகும்', 'கவரும்', 'புதைக்கும்', 'கவரும்' என்பன எனவும் அறிக.

## ௧௫. சிலேடைத்தீவகம்

உதாரணம் :

'மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்டுள்ளந்
தான்மறுக நீண்ட தகையனவாம் — கான
விழியு மொருதனிநாம் வைத்தகலு மாதர்
விழியுந் தருமான் மெலிவு.'

எனவரும்.

இங்கே 'வழி', 'விழி' என்பன 'மான்மருவி' என்பது முதலிய சிலேடைவாக்கியங்களோடு சென்று பொருண் முடிந்தவாறறிக. இது 'வழி'க்கும் 'விழி'க்குஞ் சிலேடை.

"நால்வகையானும்" என்புழி உம்மையை எச்சமாக்கி வேறு வகையாக வருதலுமுண்டெனவுங் கொள்ளப்படும். அவற்றுட் சில காட்டப்படுகின்றன.

### க. உவமாதீவகம்

உதாரணம்:

> 'முன்னங் குடைபோன் முடிநா யகமணிபோன்
> மன்னுந் திலகம்போல் வாளிரவி — பொன்னகலந்
> தங்குங் கவுத்துவம்போ லுந்தித் தடமலர்போல்
> அங்க ணுலகளந்தார்க் காம்.'

எனவரும்.

இங்கே 'இரவி' என்னுஞ் சொல் நடுவிலே நின்று 'போல்' என்பவைகளோடு சென்று முடிந்து உவமையோடு கூடிய தீவகமாயிற்று.

### உ. உருவகதீவகம்

உதாரணம்:

> 'கானற் கயலாம் வயலிற் கமலமாம்
> ஏனற் கருவிளையா மின்புறவின் — மானும்
> கடத்துமேல் வேடர் கடுஞ்சரமா நீங்கிற்
> கடத்துமேன் மெல்லியலாள் கண்.'

எனவரும்.

இங்கே இறுதியினின்ற 'கண்' என்னுஞ் சொல் முன்னர்ச் சென்று சென்று உருவக தீவகமாய் முடிந்தவாறுணர்க.

## 5. பின்வருநிலை

சும. முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே.

இதன்பொருள் - ஒரு செய்யுளிலே முன்வந்த சொல்லும் பொருளுந் தனித்தனியாயினுங் கூடியாயினும் பலவிடங்களிலே பின் வருமாயின், அது, பின்வருநிலை என்னும் அணியாகும் என்றவாறு.

எனவே சொற்பின்வருநிலை, பொருட்பின்வருநிலை, சொற்பொருட்பின்வருநிலை என மூவகைப்படும் என்பது பெற்றாம்.

இதனை முதனூலார் 'ஆவிருத்தி' என்பர். ஆவிருத்தி - திரும்பி வருதல்.

## க. சொற்பின்வருநிலை

உதாரணம் :

'மால்கரி காத்தளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோ ளாதரித்த மாலையார் — மாலிருள்சூழ்
மாலையின் மால்கட லார்ப்ப மதன்றொடுக்கு
மாலையின் வாளி மலர்.'

எனவரும்.

இங்கே முன்னர் வந்த 'மால்' என்னுஞ் சொல்லே பின்னும் பலவிடங்களில் வந்தது. பின்வருவது மிது.

உதாரணம் :

'பேர்பரவை பெண்மையினிற் பெரும்பரவை விரும்பல்குல்
ஆர்பரவை யணிதிகழு மணிமுறுவ லரும்பரவை
சீர்பரவை யாயினா டிருவுருவின் மென்சாயல்
ஏர்பரவை யிடைப்பட்ட வென்னுசை யெழுபரவை.'
(பெரியபுராணம்).

எனவரும்.

## உ. பொருட்பின்வருநிலை

உதாரணம் :

'அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை — மகிழ்ந்துடன்

விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.'

எனவரும்.

இங்கே முன்வந்த 'அவிழ்ந்தன' என்பதின் பொருளே 'அலர்ந்தன' என்பது முதலியன வற்றிற் பின்னும் வந்தவா றுணர்க. பின் வருவது மிது.

உதாரணம் :

'பெருக்கிய குருத்துதி பிறங்குகலை நாதம்
அருக்கிய வறற்றமர மாடுபுன லோகித
சுருக்கிழுது துய்த்தெழு சுடர்க்கடவுள் சும்மை
இருக்கியன் மறைத்தொனி யெழுந்தவின மெங்கும்.'
(இரகுவமிசம்)

எனவரும்.

இங்கே 'நாதம்' என முன்வந்த சொல்லின் பொருளே 'தமரம்', 'ஓதை', 'சும்மை', 'தொனி'. என்பவைகளிற் பின் னும் வந்தது.

## ௩. சொற்பொருட்பின்வருநிலை

உதாரணம் :

'வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாணுண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.' (நாலடியார்)

எனவரும்.

இங்கே முன்னர் வந்த 'வைகல்' என்னுஞ் சொல்லும் அதன் பொருள்களாகிய நாள், கழிதல் என்பனவும் பின் னரும் வந்தன.

இவ்வலங்காரம் உவமை முதலியவற்றோடு கூடியும் வரும்.

## க. உவமப்பொருட்பின்வருநிலை

உதாரணம் :

'செங்கமல நாட்டஞ் செழுந்தா மரைவதநம்
பங்கயஞ் செவ்வாய் பதுமம்போற் — செங்கரங்கள்
அம்போ ருகந்தா ளரவிந்த மாரனுர்
தம்போ ருகந்தா டநம்.'

எனவரும்.

## உ. உருவகப்பின்வருநிலை

உதாரணம் :

'திருமுகங் கமல மிணைவிழி கமலஞ்
செய்யவாய் கமல நித்திலந்தாழ்
வருமுலை கமலந் துணைக்கரங் கமலம்
வலம்புரி யுந்திபொற் கமலம்
பெருகிய வல்குன் மணித்தடங் கமலம்
பிடிநடைத் தாள்களுங் கமலம்
உருவவட் கவ்வா ருதலி னன்றே
யுயர்ந்தது பூவினுட் கமலம்.' (தணிகைப்புராணம்)

என்வரும்.

## 6. முன்னவிலக்கணி

சுக முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமு மேவிய தாகும்

இதன்பொருள் - குறிப்பினுலே ஒன்றினை மறுத்து மேன்மை தோன்றச் சொல்லுவது முன்னவிலக்கு என்னும் அணியாகும்; அஃது இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூக்காலங்களையும் பற்றி வருதலுடையதாகும் என்றவாறு.

முன்னம் - குறிப்பு. விலக்கு - தடை.

இதனை முதனூலார் 'ஆக்கேபம்' என்பர். ஆக்கேபம் - தடை.

## க. இறந்தகாலவிலக்கு

உதாரணம் :

'பாலன் றனதுருவா யேழுலகுண் டாலிலையின்
மேலன்று கண்டுயின்றாய் மெய்யென்பர் — ஆலன்று
வேலைநீ ருள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்.'(பொய்கையாரந்தாதி)

எனவரும்.

இங்கே பண்டைக்காலத்திலே விட்டுணுமூர்த்தி ஆலிலையிலே நித்திரைகொண்டார் என்னுங் காரியத்தினை 'ஆலன்று வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ' என்பது கொண்டு அசம்பவம் என்பது தோன்றக் குறிப்பினால் விலக்கியவாறறிக.

## ௨. நிகழ்காலவிலக்கு

உதாரணம் :

'மாதர் நுழைமருங்கு நோவ மணிக்குழைசேர்
காதின் மிசைநீலங் கைபுனைவீர் — மீதுலவு
நீணீல வாட்க ணெடுங்கடையே செய்யாவோ
நாணீலஞ் செய்யு நலம்.'

எனவரும்.

இங்கே காதிற்கு நீலோற்பலப்பூச்செய்யும் அழகினைக் கடைக்கண்தானே செய்யும் என்று நீலோற்பலப்பூவணிதலை அணியும் போதே குறிப்பினால் விலக்கியவாறுணர்க.

## ௩. எதிர்காலவிலக்கு

உதாரணம் :

'முல்லைக் கொடிநுடங்க மொய்காந்தள் கைகுலைப்ப
எல்லை யினவண் டெழுந்திரங்க — மெல்லியன்மேற்
றீவாய் நெடுவாடை வந்தாற் செயலறியேன்
போவா யொழிவாய் பொருட்கு.'

எனவரும்.

இங்கே 'நெடுவாடை வந்தாற் செயலறியேன்' என வருங்காலசம்பவங் கூறிப், பிரிந்து செல்லலைக் குறிப்பாய் விலக்கியவாறறிக.

## விலக்கணிவகை

சஉ. அதுவே,
பொருள்குணங் காரணங் காரியம் புணரும்.

இதன்பொருள் – அவ் விலக்கலங்காரம் பொருள், குணம், காரணம், காரியம் என்பவைகளோடு புணர்ந்தும் வரும் என்றவாறு.

### ச. பொருள்விலக்கு

உதாரணம் :

'கண்ணு மனமுங் கவர்ந்தவ ளாடிடமென்
றண்ணே லருளு மடையாளம் — தண்ணிழலின்
சுற்றெல்லே கொண்டிலவுஞ் சோதித் திரளல்லான்
மற்றில்லே காணும் வடிவு.'

எனவரும்.

இங்கே தலைவியின் வடிவைச் சிறந்ததென்று கருதிய ஒரு நாயகனால் அவ்வடிவிலுள்ள ஒளியை நிலை பெறுத்தி அதற்கிடனாயுள்ள வடிவமென்னும் பொருள் விலக்கப்பட்ட வாறுணர்க.

### ரு. குணவிலக்கு

உதாரணம் :

'மாதர் துவரிதழ்வாய் வந்தென் னுயிர்கவருஞ்
சீத முறுவ லறிவழிக்கும் — மீதுலவி
நீண்ட மதர்விழியென் னெஞ்சங் கிழித்துலவும்
யாண்டையதோ மென்மை யிவர்க்கு.'

எனவரும்.

இங்கே 'உயிர் கவர்தல்', 'அறிவழித்தல்' முதலிய வன்செயல்கள்பற்றி 'மென்மை' என்னுங் குணம் இவர்க்கில்லை என விலக்கப்பட்டவாறறிக.

## கூ. காரணவிலக்கு

உதாரணம் :

'மதாரிக் கண்சிவப்ப வார்புருவங் கோட
அதரந் துடிப்ப வணிசேர் — நுதல்வியர்ப்ப
நின்பா னிகழ்வனகண் டஞ்சாதா லென்னெஞ்சம்
என்பாற் றவறின்மை யால்.'

எனவரும்.

இங்கே அஞ்சுதலாகிய காரியந் தோன்றுமையால் அதனையுளதாக்குங் 'கண்சிவத்தல்,' 'புருவங்கோடல்' முதலிய காரணங்கள் விலக்கப்பட்டன.

## எ. காரியவிலக்கு

உதாரணம் :

'மன்னவர் சேயர் மயிலகவி யாடலும்
பொன்னலருங் கொன்றையும் பூத்தளவின் — மென்மலரும்
மின்னுயிரா நீண்முகிலு மெய்யென்று கொள்வதேல்
என்னுயிரோ வின்னு முளது.'

எனவரும்.

இங்கே நாயகர் பிரிந்து சேய்மையிடத்தராகத் தனித்திருக்குந் தலைவி தனக்குக் கார்காலவரவு மரணகாரணமாகவும் 'என்னுயிரோ வின்னுமுளது' என்றமையான் மரணமாகிய காரியம் விலக்கப்பட்டது.

## இதுவுமது

சரு. வன்சொல் வாழ்த்துத் தலைமை யிகழ்ச்சி
துணைசெயன் முயற்சி பரவச முபாயம்
கையறு வுடம்படல் வெகுளி யிரங்கல்
ஐய மென்றுங் கறிந்தனர் கொளலே.

இதன்பொருள் - வன்சொல்விலக்கு முதல் ஐயவிலக்கீறாக இங்கே சொல்லப்பட்டவைகளும் அவ்வணியின் வகைகள் என அறிந்து கொள்க என்றவாறு.

## அ. வன்சொல்விலக்கு

உதாரணம்:

'மெய்யே பொருண்மேற் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகுதிக்கு — நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்தெங்கள் வாழ்நாளைக்
கொள்ள வுழலுமாங் கூற்று.'

எனவரும்.

இங்கே பிரிந்தவுடன் இறந்துவிடுவோம் என்பது தோன்ற 'வேறொரு தையலை நாடத்தகும்' எனவும், இயமன் பிரியுஞ்சமயம் பார்த்துத்திரிவான் எனவும் வன்சொற் கூறிச் செலவு விலக்கியவாறறிக. பின்வருவது மிதுபோலும்.

உதாரணம்:

'என்னொடு சொல்லுக செல்லாமை யுண்டெனி னீரமதி
தன்னொடு மல்கு சடையாளர் வெங்கைத் தடஞ்சிலம்பிற்
பொன்னொடு சொல்லுக நீநின் செலவைப் பொருணினைந்து
முன்னொடு பின்னு மிழப்பான் கருதிய முன்னவனே.
(வெங்கைக்கோவை)

எனவரும்.

இங்கே 'முன்' 'பின்' என்றது அறத்தையும், இன்பத்தினையும்.

## கூ. வாழ்த்துவிலக்கு

வாழ்த்துக் கூறித் தன்னிலைமையையுங் குறிப்பித்து விலக்குவது வாழ்த்து விலக்காகும்.

உதாரணம்:

'செல்லு நெறியனைத்துஞ் சேம நெறியாக
மல்க நிதியம் வளஞ்சிறக்க — வெல்லும்
அடற்றேர் விடலை யகன்றுறைவ தாங்கோர்
இடத்தே பிறக்க வியாம்.'

எனவரும்.

இங்கே 'ஆக', 'மல்க', 'சிறக்க' என்று வாழ்த்தி 'விடலை யகன்றுறைவ தாங்கோர் இடத்தே பிறக்க' என்பத

ஞல் மரணம் சம்பவிக்கும் என்பது பெறப்படக் கூறிச் செல்லுதலை விலக்கியவாறுணர்க.

## ௧௦. தலைமைவிலக்கு

தலைமையாகிய சுவாதீந நிலைமை தோன்றுமாறு சொல்லி விலக்குவது தலைமைவிலக்காகும்.

உதாரணம் :

'பொய்ம்மை நெறிநீர் பொருளீ மிகப்பயக்கும்
எம்முயிர்க்கு மேது மிடரில்லை — வெம்மைதீர்ந்
தேக வினிய நெறியணிய வென்றாலும்
போக லொழிவாய் பொருட்கு.'

எனவரும்.

இங்கே 'எம்முயிர்க்கு மேதுமிடரில்லை' என்பதனாலே சுவாதீந நிலைமை தோன்றுமாறறிக.

## ௧௧. இகழ்ச்சிவிலக்கு

காரியத்திற்குரிய காரணத்தை இகழ்ந்து விலக்குவது இகழ்ச்சி விலக்காகும்.

உதாரணம் :

'ஆசை பெரிதுடையே மாருயிர்மே லப்பொருண்மேல்
ஆசை சிறிது மடைவிலமால் — தேசு
வழுவா நெறியின் வருபொருண்மே லண்ணல்
எழுவா யொழிவா யினி.'

எனவரும்.

இங்கே 'அண்ணலே, நீ செல்க அல்லது தவிர்க' என்றுளாயினும் 'நின் செலவால் உயிரிழப்பேம்; உயிர்மேலன்றிப் பொருண்மேல் எமக்கு விருப்பில்லை' என்பதனாற் செல்லுகைக்குக் காரணமான பொருளை இகழ்ந்து கூறிச் செல்லுதலை விலக்கியவாறறிக.

## கஉ. துணைசெயல்விலக்கு

உதாரணம்:

'வினைபொருண்மே லண்ணல் விரும்பினையே லீண்டெங்
கிளையழுகை கேட்பதற்கு முன்னே — வினைதேன்
புடையூறி பூந்தார்ப் புனைகழலாய் போக்குக்
கிடையூறு வாராம லேகு.'

எனவரும்.

இங்கே செல்லுகைக்குத் துணை செய்வார் போலக் கூறி னும் 'ஈண்டெங் கிளையழுகை கேட்பதற்கு' என்பதனால் இறந்துப்படுவேம் என்பது தோன்றச் சொல்லிச் செல்லுதலை விலக்கியவாறுணர்க.

## கங. முயற்சிவிலக்கு

உதாரணம்:

'மல்லணிந்த தோளா யிதென்கொலோ வான்பொருண்மேற்
செல்க விரைந்தென் றுளந்தெளிந்து — சொல்லுதற்கே
என்று முயல்வல்யா னேகனீ யென்றிடையே
தோன்றுகின்ற தென்வாயிற் சொல்.'

எனவரும்.

இங்கே 'நீ விரும்பியவாறே செல்க, எனச் சொல்ல முயன்றும், அநர்த்தங் குறிப்பதாய்ச் செல்லற்க என்னுஞ் சொல் என்வாயிற் றோன்றுகின்றது' என்று முயற்சி தோன் றக் கூறி விலக்கியவாறுணர்க.

## கச. பரவசவிலக்கு

உதாரணம்:

'செல்கை திருவுளமேல் யானறியேன் றேங்கமழ்தார்
மல்லகலந் தங்கு மதர்விழியின் — மெல்லிமைகள்
நோக்கு விலக்குமே னேவா ளிவள்காதல்
போக்கி யகல்வாய் பொருட்கு.'

எனவரும்.

இங்கே பிரிந்து செல்ல விரும்பிய தலைவனை நோக்கி "நின்மார்பையே பார்த்து நிற்கும் விழிகளை இமை மறைக்கு

மாயின்; அதனால் வருந்துமியல்புடைய இவள் 'காதலை நீக்கியே செல்க' எனத்தன் வசமின்றிக் காதலின் வசமாய் நிற்றலாகிய பரவசங் கூறி விலக்கியவாறறிக.

## கரு. உபாயவிலக்கு

உதாரணம்:

'இன்னுயிர் காத்தளிப்பாய் நீயே யிளவேனின்
மன்னவனுங் கூற்றுவனும் வந்தணைந்தால் — அன்னோர்
தமக்கெம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின் றருள்புரிந்தே யேகு.'

எனவரும்.

இங்கே 'காமநோயினின்றும் எம்மைக் காக்கும் நீ, காமனுக்கும் யமனுக்கும் வெளிப்படாதிருக்கத்தக்க ஒரு வித்தையை உதவிச் செல்க' எனக்கூறி அவ்வாறாய வித்தையாகிய உபாயமின்மை காரணமாக விலக்கியவாறறிக.

## கசு. கையறல்விலக்கு

கையறல் தோன்றக் கூறி விலக்குவது கையறல் விலக்காகும்.

கையறல் - செய்யாதொழிந்த வினைகளுக்கு வருந்துதல். இதனை முதனூலார் 'அநுசயாக்ஷேபம்' என்பர். அநுசயம் - வினையொழிந்தயர்தல்.

உதாரணம்:

'வாய்த்த பொருள்விளைத்த தொன்றில்லை மாதவமே
ஆத்த வறிவில்லை யம்பலத்துக் — கூத்துடையான்
சீலஞ் சிறிதேயுஞ் சிந்தியேன் சென்றொழிந்தேன்
காலம் வறிதே கழித்து.'

எனவரும்.

இங்கே 'பொருள் தேடப்படவில்லை; அறிவு தேடப்படவில்லை; அம்பலக்கூத்தனையுஞ் சிந்திக்கவில்லை; வாழ்நாளை வீணாகக் கழித்தேன்' எனக் கையறல் தோன்றக் கூறி அவை இனிச் செய்தற்குரியவாகா என விலக்கப்பட்டவாறறிக.

## கஎ. உடன்படல்விலக்கு

உதாரணம் :

'அப்போ தடுப்ப தறியே னருள்செய்த
இப்போ திவளு மிசைகின்றாள் — தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ வெழும்.'

எனவரும்.

இங்கே 'இப்போதிவளு மிசைகின்றாள்' என்பதனால் உடன்பாடு தோன்றக் கூறி 'மாலை இருளோ நிலவோ வெழும்' 'அப்போ தடுப்ப தறியேன்' என்பனவற்றால் 'நீ பிரியின் மயக்கம் மிகுந்திறப்பாள்' என்பது தோன்றக் கூறிச் செலவை விலக்கியவாறறிக.

## கஅ. வெகுளிவிலக்கு

உதாரணம் :

'வண்ணங் கருக் வளைசரிய வாய்புலர
எண்ணந் தளர்வே மெதிர்நின்று — கண்ணின்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலேம் யாம்.'

எனவரும்.

இங்கே தலைவன் பிரியின் வண்ணங் கருகுதல் முதலிய நிகழ எதிர்நின்று 'யாதும் பயமிலேம் யாம்' என்றதனால் வெகுளிதோன்றக் கூறி விலக்கியவாறறிக.

## கக. இரங்கல்விலக்கு

உதாரணம் :

'ஊசு றொழிலிழக்கு மொப்பு மயிலிழக்கும்
வாசஞ் சுனையிழக்கும் வள்ளலே — தேசு
மொழிலிழக்கு நாளையெம் பூங்குழலி நீங்க
எழிலிழக்கு மந்தோ விவண்.'

எனவரும்.

இங்கே 'வள்ளலே, நின் பிரிவால் இத்தலைவியின் உயிரிழக்க ஊசல் முதலியனவும் தொழின் முதலியன இழக்கும்' என இரக்கந் தோன்றக் கூறிச் செல்லுகை விலக்கியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'இறத்த னீசெயி னுய்யுமீ தொன்றுமே யையவாம்
பிறத்த லாகிய வுயிரெலாந் துயருறல் பெரிதால்
அறத்து நேரினீ தாய்ந்துணர் பெரிதம ராடும்
மறத்து மாருயி ரடாதுவெண் கண்டிடும் வழக்கோய்.'
(இரகுவமிசம்)

எனவரும்.

## ௨௦ ஐயவிலக்கு

உதாரணம் :

'மின்னோ பொழிலில் விளையாடு மிவ்வுருவம்
பொன்னோ வெனுஞ்சுணங்கிற் பூங்கொடியோ — என்னோ
திசையுலவுங் கண்ணுந் திரண்முலையுந் தோளும்
மிசையிருளுந் தாங்குமோ மின்.'

எனவரும்.

இங்கே 'மின்னோ,' 'கொடியோ' என்னும் ஐயம், 'கண்' முதலியவைகளை 'மின் தாங்குமோ' என்பதனால் விலக்கப் பட்டவாறறிக.

## இதுவுமது

௪௪. வேற்றுப்பொருள் சிலேடை யேதுவென் றின்னவை
மேற்கூ றியற்கையின் விளங்கித் தோன்றும்.

இதன்பொருள் – வேற்றுப்பொருள்வைப்பு, சிலேடை, ஏது எனப்பட்ட இவ்வலங்காரங்கள் மேற்கூறப் பட்ட இயல்புடைய விலக்கலங்காரம் போலவுந் தோன்றும் என்றவாறு.

## உக. வேற்றுப்பொருள்வைப்புவிலக்கு

உதாரணம் :

'தண்கவிகை யாலுலகந் தாங்கு மநபாயன்
வெண்கவிகைக் குள்ளடங்கா வேந்தில்லை — எங்கும்
மதியத் துடனிரவி வந்துலவும் வானிற்
பொதியப் படாத பொருள்.'

எனவரும்.

இங்கே விலக்கு வேற்றுப்பொருள் வைப்போடு சேர்ந்து வந்தவாறறிக.

## உஉ. சிலேடைவிலக்கு

உதாரணம் :

'அம்போ ருகஞ்செற் றமுத மயமாகி
வம்பார் முறுவ லொளிவளர்க்க — இம்பர்
முகைமதுவார் கோதை முகமுண் டிலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு.'

எனவரும்.

இங்கே விலக்குச் சிலேடையோடு கூடிவந்தது. இது முகத்திற்குஞ் சந்திரனுக்குஞ் சிலேடை.

## உங. ஏதுவிலக்கு

உதாரணம் :

'பூதலத்து ளெல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால் — நீதி
அடுத்துயர்ந்த கீர்த்தி யநபாயா யார்க்குங்
கொடுத்தியெனக் கொள்கின் றிலேம்.'

எனவரும்.

இங்கே 'தாமே கவர்தலால்' என்னும் ஏதுவினால் கொடுக்கின்றாயெனக் கொள்ளுதல் விலக்கப்பட்டது. இதனால் பெருங்கொடையாளன் என்பதும் பெறப்படுகின்றது. காரணவிலக்குக்கும் இதற்கும் பேதம் யாதோவெனின்;

காரணவிலக்குக் காரணத்தையே விலக்குவதெனவும், இது காரணத்தால் விலக்குவதெனவும் அறிக.

## 7. வேற்றுப்பொருள்வைப்பணி

சரு. முன்னொன் றுதொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்னொரு பொருளை யுலகறி பேற்றி
ஏற்றிவைத் துரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே.

இதன்பொருள் - யாதேனுஞ் சொல்லும்படி தொடங்கிய பொருளை ஒரு தன்மையோடு சொல்லி அதனைச் சாதிக்கும்பொருட்டு வலியுடைய மற்றொரு பொருளை உலகறிந்த அத்தன்மையை ஏற்றிவைத்துச் சொல்லுவது வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணியாகும் என்றவாறு.

சிறப்புப்பொருளை உறுதிப்படுத்தி முடித்தற்குப் பொதுப் பொருளும், பொதுப்பொருளை உறுதிப்படுத்தி முடித்தற்குச் சிறப்புப் பொருளுமாக இருபொருளும் இருவாக்கியத்திற் சொல்லப்படுவது வேற்றுப்பொருள்வைப்பு என்பாருமுளர். இதனை முதனூலார் 'அர்த்தாந்தரநியாசம்' என்பர். அர்த்தம் - பொருள். அந்தரம் - வேறு. நியாசம் - வைப்பு.

## வேற்றுப்பொருள்வைப்பணிவகை

சசா. முழுவதுஞ் சேற லொருவழிச் சேறல்
முரணித் தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா வியற்கை கூடு மியற்கை
இருமை யியற்கை விபரீதப் படுத்தலென்
றின்னவை யெட்டு மதன தியல்பே.

இதன்பொருள் - முழுவதுஞ் சேறல் என்பது முதல் விபரீதப்படுத்தல் என்பதீறாகவுள்ள இவ்வெட்டும் அவ்வேற்றுப்பொருள்வைப்பு என்னும் அணியின் வகையாகும் என்றவாறு.

## க. முழுவதுஞ்சேறல்

வேறாக வைக்கப்படும் பொருள் எங்குஞ் சென்று வியாபித்தலுடையது முழுவதுஞ்சேறலாகும்.

முழுவதுஞ் சேறல் - எங்குஞ்சென்று நிறைதல்.

உதாரணம் :

'புறந்தங் திருளிரியப் பொன்னேமி யுய்த்துச்
சிறந்தவொளி வளர்க்குந் தேரோன் — மறைந்தான்
புறவாழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றார் யார்.'

எனவரும்.

இங்கே பின்னிரண்டடியினும் சொல்லப்பட்ட பொருள் எல்லாரும் இறப்பார் என எங்குஞ் சென்று வியாபித்து முழுவதுஞ்சேறலாயினவாறும், அது பொதுப்பொருளாய் நின்று முன்னீரடியினுஞ் சொல்லப்பட்ட சிறப்புப் பொருளாகிய சூரியனது இறந்துபடுகையைப் பொதுப்பொருளாக நின்று உறுதிப்படுத்தியவாறும், இறந்துபடுகை உலகறி பெற்றியாய வாறும் அறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'குருளை மான்பிணித் திளஞ்சிறு
ரூர்ந்திடுங் கொடித்தேர்
உருளை யொண்பொனே மணித்தலங்
கவர்ந்துகொண் டுறுவ
வெருளின் மாக்களை வெறுப்பதென்
முனிவரும் விழைவார்
பொருளி னசையை நீங்கினர்
யாவரே புவியில்.' (கந்தபுராணம்).

எனவரும்.

## உ. ஒருவழிச்சேறல்

வேறாக வைக்கப்படும் பொருள் எங்குஞ் சென்று வியாபியாது சிலவிடத்து மாத்திரஞ் சென்று வியாபித்தலுடையது ஒரு வழிச்சேறலாகும்.

ஒருவழி - சிலவிடம்.

உதாரணம் :

'எண்ணும் பயன்றூக்கா தியார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாம னருள்வளர்க்குந் — தண்ணறுந்தேன்
பூத்தளிக்குந் தாராய் புகழாளர்க் கெவ்வுயிருங்
காத்தளிக்கை யன்றே கடன்.'

எனவரும்.

இங்கே முன்னர்ச் சொல்லப்பட்ட சிறப்புப்பொருளைப் பின் வேறாக வைக்கப்பட்ட பொதுப்பொருள் பிரமாணப் படுத்தியவாறும், அது, புகழாளராகிய சிலரிடஞ் சென்று ஒருவழிச் சேறலாயினவாறும் அறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'பளிக்கறை யன்னதோர் படிகர்ப் பாங்கினுந்
தளிர்ப்புற செறுவினுந் தவறுற் றேகுவார்
தெளிப்பவ ரின்மையி னெறியிற் சென்றிலர்
களிப்பவர் தமக்குமோர் கதியுண் டாகுமோ.'

(கந்தபுராணம்)

எனவரும்.

## ௩. முரணித்தோன்றல்

மாறுபட்டுத் தோன்றும் இயல்புடையதாய வேற்றுப் பொருள் முரணித்தோன்றலாகும்.

உதாரணம் :

'வெய்ய குரற்றோன்றி வெஞ்சினவே றுட்கொளினும்
பெய்யு முகிறன்னைப் பேணுவரால் — வையத்
திருள்பொழியுங் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள்பொழிவார் மேற்றே புகழ்.'

எனவரும்.

இங்கே 'முகி'லிடத்துள்ள முழக்கத்திற்கும் இடியேற் றிற்கும் அதனைப் பேணுதலும், கொடுப்பாரிடத்தே 'குற்ற' மிருத்தற்குப் 'புக'ழும் முரணுமெனவுணர்க.

## ௪. சிலேடையின்முடித்தல்

சிலேடை வாயிலாக முன் வைத்த பொருளை உறுதிப் படுத்தி முடிப்பது சிலேடையின் முடித்தலாகும்.

உதாரணம் :

'எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த
முற்றிழையாள் வாட முறுவலிக்கும் — முற்றும்
முடியாப் பரவை முழங்குலகத் தென்றுங்
கொடியார்க் குண்டோ குணம்.'

எனவரும்.

இங்கே 'எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்தெடுத்த முற்றிழையாள் வாட முறுவலிக்கும்' என்பது சிறப்புப் பொருள். 'கொடியார்க்குமுண்டோ குணம்' என்பது இதனைச் சாதித்து முடித்த பொதுப்பொருள். 'கொடியார்' என்பது இழிவு பற்றிக் கொடிக்கும் கொடுமையுடையவருக்கும் சிலேடையாய் நின்றது. பின்வருவது மிது.

உதாரணம் :

'கல்லென் பேரிசைப் புனன்மழை
பொழிதலாற் கானத்
தொல்லும் போழல் யாவையு
மிமைப்பினி லொளித்த
வெல்லுந் தீஞ்சல மருவுமிக்
காருக்கு வியன்பார்
செல்லுங் காலையி லங்கண்வீற்
றிருப்பரோ தீயோர்.' (கந்தபுராணம்)

எனவரும்.

## ௫. கூடாவியற்கை

இயல்புக்கு மாறாக ஒன்றற்குச் சொல்லப்பட்ட தன்மை பின் வைக்கும் பொருளான் முடிக்கப்படுவது கூடாவியற்கை யாகும்.

கூடாவியற்கை - இயைபில்லாத தன்மையுடையது.

உதாரணம் :

'ஆர வடமு மதிசீத சந்தனமும்
ஈர நிலவு மெரிவிரியும் — பாரிற்
றுதிவகையான் மேம்பட்ட துப்புரவுந் தத்தம்
விதிவகையான் வேறு படும்.'

எனவரும்.

இங்கே முத்துமாலை, சந்தனம், நிலவு என்பவைகளிலே எரி விரிதல் இயல்புக்கு மாறுனதன்மை. இது 'தத்தம் விதிவகையான் வேறுபடும்' எனப் பின் வைக்கப்பட்ட பொருளான் முடிக்கப்பட்டது. பின்வருவது மிது.

உதாரணம் :

'கொஞ்சுகிளி யன்னமொழி குமுதவித ழமுதால்
எஞ்சின னராதிபதி யீதொரு வியப்போ
அஞ்சுதரு தீவினையி னுலமுது நஞ்சாம்
நஞ்சமமு தாமுரிய நல்வினையின் மாதோ.' (பாரதம்)

எனவரும்.

## கூ. கூடுமியற்கை

ஒன்றற்குப் பொருத்தமுள்ளதாகச் சொல்லப்பட்ட தன்மை பின் வரும் பொருளாலே முடிக்கப்படுவது கூடுமியற்கையாகும்.

உதாரணம் :

'பொய்யுரையா நண்பா புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந் தாவி கரைந்துகுவார் — மெய்வெதும்பப்
பூத்தகையுஞ் செங்காந்தள் பொங்கொலிநீர் ஞாலத்துத்
தீத்தகையார்க் கீதே செயல்.'

எனவரும்.

இங்கே தலைவருடைய தேர் வழிபார்த்து வருந்துவாருடைய சரீரம் வெதும்பும்படி 'காந்தள்' பூத்துக் கிளரும் என்னுஞ் சிறப்புப் பொருள் 'தீத்தகையார்க் கீதே செயல்' என்னும் பொதுப்பொருளாற் சாதிக்கப்பட்டது. 'தீத்தகையார்க்கு' வெதும்பச்செய்தல் கூடுமியற்கையாகும். பின்வருவது மிது.

உதாரணம் :

'சேனம் வெம்பணி யொண்புரு விரலைமான் செந்நாய்
யானை யாதிக ளவ்வனத் திருக்கவு மாவி
போன தில்லையா லங்கியிற் றோன்றிய பொருள்கள்
மேனிகன் றுவ தன்றியே விளியுமோ வதனால்.'
(கந்தபுராணம்)

எனவரும்.

## எ. இருமையியற்கை

பொருத்தமுடைமை, பொருத்தமின்மை என்னும் இரு தன்மையையும் ஒருங்குகூறி வேற்றுப்பொருளான் முடிப்பது இருமையியற்கையாகும்.

உதாரணம் :

'கோவலர்வாய் வேய்ங்குழலே யன்றிக் குரைகடலுங்
கூவித் தீயோரைக் கொல்லுமால் — பாவாய்
பெரியோரும் பேணாது செய்வரே போலுஞ்
சிறியோர் பிறர்க்கியற்றுந் தீங்கு.'

எனவரும்.

இங்கே வேய்ங்குழற்குக் கூடு மியற்கையும், கடலுக்குக் கூடாவியற்கையுமாயுள்ள கொல்லுந்தன்மை பின் வாக்கியப் பொருளாற் சாதிக்கப்பட்டது.

## அ. விபரீதப்படுத்தல்

இயற்கைக்கு மாறாய் விபரீதமாகச் சொல்லப்பட்ட பொருள் பின் சொல்லப்படும் பொருளாற் சாதிக்கப்படுவது விபரீதப்படுத்தலாகும்.

உதாரணம் :

'தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங் கடிந்தான் — உலகில்
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேற் றப்பாம்
வினையும் விபரீத மாம்.'

எனவரும்.

இங்கே 'தலையிழந்தவன்' சிருட்டித்தான் என்பதும், 'பிதா'வைக் கொன்றவன் குற்றத்தினீங்கினான் என்பதும் விபரீதப்பொருள். அது பின் சொல்லப்பட்ட பொருளாற் சாதிக்கப்பட்டது.

காரணத்தாற் காரியமும், காரியத்தாற் காரணமும் நாட்டப்படுவதும் இவ்வலங்காரம் என்பாருமுளர். அவையெல்லாம் இங்கே அடங்கும்.

## 8. வேற்றுமையணி

௩எ. கூற்றினுங் குறிப்பினு மோப்புடை யிருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை யதுவே.

**இதன்பொருள்** – கூற்றினானாவது குறிப்பினானாவது ஒப்புடைய இருபொருள்கள் தம்முள்ளே வேறுபாடு தோன்ற வருமாயின், அது வேற்றுமையென்னும் அணியாகும் என்றவாறு.

இங்கே 'கூற்'றென்றது ஒப்புடைய இருபொருட்கண்ணுமுள்ள பொதுத்தன்மையைச் சொற்களால் வெளிப்படையாக அறிவித்தலை எனவும், 'குறிப்'பென்றது அதனைத் தொடர்ந்து ஊகித்தறிய நிற்றலை எனவும் அறிக.

இதனை முதனூலார் 'வியதிரேகம்' என்பர். சாகித்திய தர்ப்பணகாரர் உபமானத்தினின்றும் உபமேயத்திற்கு உயர்வாவது தாழ்வாவது தோன்றச் சொல்வது வேற்றுமை என்பர்.

இவ்வேற்றுமை சமமும் உயர்வுந் தாழ்வுந் தோன்ற வரும்.

### க. ஒருபொருள்வேற்றுமைச்சமம்

சமமுடைய இருபொருள்களுள்ளே ஒன்றற்குச் சொல்லும் பேதத்தினால் இரண்டுஞ் சமமாகப் பேதமுறுவது ஒருபொருள் வேற்றுமைச் சமமாகும்.

உதாரணம் :

'அனைத்துலகுஞ் சூழ்போ யரும்பொருள் கைக்கொண்
டினைத்தளவைத் தென்றற் கரிதாம் — பனிக்கடல்
மன்னவநின் சேனைபோன் மற்றது நீர்வடிவிற்
றென்னு மிதுவொன்றே வேறு.'

எனவரும்.

இங்கே 'கடல்', 'சேனை' என்னும் இருபொருள்களுள்ளே 'நீர்வடிவிற்று' என்று கடற்குச் சொன்ன பேதத்தினால் அவ்விரண்டுஞ் சமமாகப்பேதமெய்தியவாறும் 'அனைத்துலகுஞ் சூழ்போ யரும்பொருள் கைக்கொண் டினைத்தளவைத் தென்றற் கரிதாம்' எனப் பொதுத்தன்மை வெளிப்படையாகச் சொல்லப்பட்டமையாற் கூற்றினானுவமை எய்தியவாறும் அறிக.

## உ. இருபொருள்வேற்றுமைச்சமம்

இரு பொருளின் கண்ணும் வேற்றுமை சமமாகச் சொல்லப்பட்டு வருவது இருபொருள் வேற்றுமைச் சமமாகும்.

உதாரணம் :

'சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுள்ளே
நின்றளவி லின்ப நிறைப்பவற்றுள் — ஒன்று
மலரிவருங் கூந்தலார் மாதர்நோக் கொன்று
மலரிவருங் கூத்தன்றன் வாக்கு.'

எனவரும்.

இங்கே பெண்கள் கண்ணும், மலரியென்னு மூரிற் கூத்தனுடைய கவியுமாகிய இருபொருட்கண்ணும் 'சென்று செவியளக்கும்' என்பது முதலவாக வேற்றுமை சமமாகச் சொல்லப்பட்டவாறும், அதுவே பொதுத்தன்மையாய் வெளிப்படையாய் நின்றவாறும் அறிக.

## ௩. உயர்ச்சிவேற்றுமை

உபமானத்தினின்றும் உபமேயத்திற்கு உயர்ச்சியாகிய வேற்றுமை சொல்லப்படுவது உயர்ச்சி வேற்றுமையாகும்.

உதாரணம்:

'மலிதேரான் கச்சியு மாகடலுந் தம்முள்
ஒலியும் பெருமையு மொக்கும் — மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ வெல்லாம் படும்.'

எனவரும்.

இங்கே 'கச்சி', 'கடல்' என்னும் இருபொருள்களுள்ளே கச்சி கடல்பொருந்துவனவெல்லாம் பொருந்தும் எனவும், கடல் கச்சி பொருந்துவனவெல்லாம் பொருந்தமாட்டா என்வும் கச்சியாகிய உபமேயத்திற்கு உயர்ச்சியாகிய பேதங் கூறியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம்:

'அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுஞ் சான்றோரு மொப்பர்மன் — திங்கள்
மறுவாற்றுஞ் சான்றோரஃ தாற்றார் தெருமந்து
தேய்வ ரொருமா சுறின்.' (நாலடியார்)

எனவரும்.

இதுவரையுங் கூற்றினுடைய ஒப்புடைப் பொருள்களின் வேற்றுமை கூறப்பட்டது. இனிக் குறிப்பினுடைய ஒப்புடைப் பொருள்களின் வேற்றுமை கூறப்படுகின்றது.

## ச. இருபொருள்வேற்றுமைச்சமம்

உதாரணம்:

'கார்க்குலமும் பாய்திரையுங் காட்டுங் கடல்படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்குமால் — ஏற்ற
கலமுடைத்து முந்நீர் கதிராழித் திண்டேர்
பலவுடைத்து வேந்தன் படை.'

எனவரும்.

இங்கே 'கடல்', 'படை' என்னும் இருபொருள்களுக்கும் வேற்றுமை சமமாகச் சொல்லப்பட்டவாறும், ஒப்புமை குறிப்பாயறிய நின்றவாறும் அறிக.

### ரு. உயர்ச்சிவேற்றுமை

உதாரணம் :

‘பதுமங் களிக்கு மளியுடைத்துப் பாவை
வதந மதர்நோக் குடைத்துப் — புதையிருள்சூழ்
அப்போ தியல்பழியு மம்போ ருகம்வதநம்
எப்போது நீங்கா தியல்பு.’

எனவரும்.

இங்கே ‘பதுமம்’, முகம் என்னும் இருபொருள்களுக்கும் பொதுத்தன்மை குறிப்பாய் அறிய நின்றவாறும், உபமேயத்திற்கு உயர்ச்சி கூறியவாறும் அறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

‘மன்னனு மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னற்குத்
தன்றேச மல்லாற் சிறப்பில்லை கற்றோற்குச்
சென்றவிட மெல்லாஞ் சிறப்பு’ (வாக்குண்டாம்)

எனவரும்.

## இதுவுமது

சஅ அதுவே,
குணம்பொருள் சாதி தொழிலொடும் புணரும்.

இதன்பொருள் - அவ்வேற்றுமையணி குணம் முதலிய நான்கனோடு கூடியும் வரும் என்றவாறு.

### சு. குணவேற்றுமை

உதாரணம் :

‘சுற்றுவிற் காமனுஞ் சோழர் பெருமானுங் [டியே
கொற்றப்போர்க் கிள்ளியுங் கேழொவ்வார் — பொற்றொ
ஆழி யுடையான் மகன்மாயன் சேயனே
கோழி யுடையான் மகன்.’

எனவரும்.

இங்கே காமனுக்குஞ் சோழனுக்கும் 'மாயன்' எனவுஞ், 'செய்யன்' எனவும், கருமை செம்மை என்னுங் குணங்களால் வேற்றுமை சொல்லப்பட்டது. மாயம் - கறுப்பு.

## எ. பொருள்வேற்றுமை

உதாரணம் :

> 'ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
> ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் — ஆங்கவற்றுள்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
> தன்னே ரிலாத தமிழ்.'

எனவரும்.

இங்கே 'ஓங்கலிடைவருதல்' முதலிய தொழில்கள் ஒன்றேயாகவும் அத்தொழில்களையுடைய பொருள் 'கதிரோன்' எனவும், 'தமிழ்' எனவும் இரண்டேயாய்ப் பொருள் வேற்றுமையாயினவாறறிக.

## அ. சாதிவேற்றுமை

உதாரணம் :

> 'வெங்கதிர்க்குஞ் செந்தீ விரிசுடர்க்கு நீங்காது
> பொங்கு மதியொளிக்கும் போகாது — தங்கும்
> வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க்
> கிளமையான் வந்த விருள்.'

எனவரும்.

இங்கே 'மருட்சி', 'இருள்' என்னும் இரண்டும் இருளென்னும் ஒரு சாதியாதல்பற்றி ஒன்றாக வைத்து வேற்றுமை சொல்லப்பட்டவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

> 'தீயினாற் சுட்டபுண் ணுள்ளாறு மாறாதே
> நாவினாற் சுட்ட வடு.' (திருக்குறள்)

எனவரும்.

## கூ. தொழில்வேற்றுமை

உதாரணம்:

'புனனாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுவர் — புனனாடன்
ஏற்றெறிந்து மாற்றலர்பா லெய்தியபார் மாயவன்
ஏற்றிரந்து கொண்டமையி னால்.'

எனவரும்.

இங்கே சோழனுக்கும் விட்டுணுவுக்கும் வேற்றுமை தொழிலால் வந்தவாறறிக. உரையிற் கோடலால் இவ்வணி விலக்கு, சிலேடை முதலிய பிறவணிகளோடு சேர்ந்து வருதலுங் கொள்ளப்படும்.

## க. விலக்கியல்வேற்றுமை

உதாரணம்:

'தம்மாற் பயன்றூக்கா தியாவரையுந் தாங்குகினுங்
கைம்மாறுங் கால முடைத்தன்றே — எம்மாவி
அன்னவனை யாழி யகபா யனைமலராண்
மன்னவனை மானுமோ வான்.'

எனவரும்.

இங்கே சோழனுக்கும் முகிலுக்கும் வேற்றுமை விலக்கோடு கூடிவந்தது.

## உ. சிலேடைவேற்றுமை

உதாரணம்:

'ஏறடர்த்து வின்முருக்கி யெவ்வுலகுங் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக் — காறெழுதற்
கெஞ்சினு ரில்லெனினு மாய னிகனெடுமால்
வஞ்சியா னீர்நாட்டார் மன்.'

எனவரும்.

இங்கே 'மாயன்', 'வஞ்சியான்' என்னுஞ் சிலேடைகளால் விட்டுணுவுக்குஞ் சோழனுக்கும் வேற்றுமை காட்டப்பட்டது. 'மாயன்' என்பது கரியன் எனவும், கபடமுடையவன் எனவும், வஞ்சியான் என்பது வஞ்சியென்னும் ஊரு

டையான் எனவும், வஞ்சகஞ் செய்யான் எனவும் பொருள் பட்டுச் சிலேடையானவாறறிக. சோழன் வஞ்சமில்லாதவன் என்பதும் பெறப்பட்டவாறறிக.

இன்னும் இவ்வலங்காரம் வேறுக வருதலையும், இவ்வுதாரணங்களிற் சிலவற்றைச் சிலர் வேறுக்கூறுதலையும் ஆங்காங் கறிந்து கொள்க.

## 9. விபாவனையணி

சசு. உலகறி காரண மொழித்தோன் றுரைப்புழி
வேருரு காரண மியல்பு குறிப்பின்
வெளிப்பட வுரைப்பது விபாவனை யாகும்.

இதன்பொருள் – ஒன்றனைக் கூறுமிடத்து உலகத்தாராற் பிரசித்தமா யறியப்பட்ட காரணத்தினை ஒழித்து வேருரு காரணமாவது இயற்கையிலமைந்த தன்மையாவது குறிப்பினுல் வெளிப்படும்படி சொல்லப்படுவது விபாவனை யென்னும் அணியாகும் என்றவாறு.

விபாவனை – விசேடமாகவெண்ணுதல். சாகித்தியதர்ப் பணகாரர், விபாவனையாவது காரணத்தை யொழித்துக் காரியத்தைச் சொல்லுவதெனவும், அதுவுஞ் சொல்லப்பட்ட காரணமுடையது, சொல்லப்படாத காரணமுடையது என இருவகைப்படும் எனவுங் கூறுவர்.

குறிப்பின் வெளிப்படல் – சிந்தித்தாராய்தலினுலே வெளிப்படுதல்.

### க வேருருகாரணவிபாவனை

உதாரணம் :

'தீயின்றி வேந்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் — வாயிலார்
இன்றிச் சிலருட நீர்ந்தா ரிகலின்றிக்
கன்றிச் சிலைவளைக்குங் கார்.'

எனவரும்.

வெகுதற்குத் 'தீ'யும், மகிழ்தற்குத் 'தேற'லும், ஊடல் தீர்தற்கு 'வாயிலா'ரும், வில்வளைத்தற்குப் போரும் பிரசித்த காரணங்களாகவும், இங்கே அக்காரணங்களின்றி வெகுதன் முதலிய காரியங்கள் பிறந்தன எனவும், அவை பிறத்தற்குக் 'கார்'காலமென்னும் வேறொரு காரணம் சிந்தித்தாராய்தலினால் வெளிப்படுகின்றதெனவும் அறிக. வாயிலார் - கூட்டுவோர். இது சொல்லப்பட்ட காரணமுடையது.

## உ. இயல்புவிபாவனை

உதாரணம் :

'கடையாமே கூர்த்த கருநெடுங்கண் பேடைப்
படையாமே யேய்ந்ததனம் பாவாய் — கடைஞெமியக்
கோட்டாமே கோடும் புருவங் குலிகச்சே
ரூட்டாமே சேந்த வடி.'

எனவரும்.

இங்கே கூர்மை முதலியவற்றிற்குப் பிரசித்தகாரணங்களாகிய கடைதன் முதலியன இல்லையென ஒழித்தலால் 'கண்'முதலியவைகளிலே அவை இயல்பிலமைந்தன என அனுமித்துக் கொள்ளப்படுமாறறிக.

இன்னும் பொதுவே சொல்லளவிற் காரணம் விலக்கிக் காரியம்புலப்படச் சொல்லுவதையும், வினையை எதிர்மறையாக்கி இது பொருளென நிச்சயம்பெறச் சொல்லுவதையும் இவ்வலங்காரத்தின்பாற் படுத்துவாருமுளர்.

உதாரணம் :

'காரண மின்றி மலயா நிலங்கனலும்
ஈர மதிவெதுப்பற் கென்னிமித்தம் — காரிகையார்க்
கியாமே தளர வியல்பாக நீண்டனகண்
டாமே திரண்ட தனம்.'

எனவரும்.

இங்கே 'காரணமின்றி' எனவும், 'என்னிமித்தம்' எனவும், 'இயல்பாக' எனவும், 'தாமே' எனவும் பொதுவே சொல்லளவிற் காரணம் விலக்கிக் 'கனலும்' எனவும், 'வெதுப்

பற்கு' எனவும், 'நீண்ட' எனவும், 'திரண்ட' எனவும் காரியம் புலப்படச் சொல்லியவாறறிக.

### வினையெதிர்மறுத்துப்பொருள்புலப்படுத்தல்

உதாரணம் :

'பூட்டாத விற்குனித்துப் பொங்கு முகிலெங்குந்
தீட்டாத வம்பு சிதறுமால் — ஈட்டமாய்க்
காணாத கண்பரப்புந் தோகை கடம்பழிக்கு
நாணா தயர்த்தார் நமர்.'

எனவரும்.

இங்கே சாதாரண வில்லுக்குரிய நாண்பூட்டப்படுதலாகிய வினையை எதிர்மறையாக்கி வானவில்லென்னும் பொருள் நிச்சயமாகப் புலப்படுமாறு 'பூட்டாதவில்' என்றார். 'தீட்டாதவம்பு' முதலியவைகளையும் இங்ஙனங் கொள்க. பின் வருவதுவு மிது.

உதாரணம் :

'உடுத்தி டாதபல் கலைதினஞ்
சூழ்தருங் கற்றவ ருயர்நாவிற்
படுத்தி டாதபல் கவிக்குலம்
பயிற்றுறும் பண்புடைப் பெரியோராற்
றொடுத்தி டாதபல் கடாவிடை
கொடுத்திடுந் தோகையன் னவர்நெஞ்சின்
அடுத்தி டாதவண் கற்புமிக்
கணைத்திடு மனையகீள் வனமன்னே.'

(காஞ்சிப்புராணம்)

எனவரும்.

## 10. ஒட்டணி

௫௦. கருதிய பொருடொகுத் ததுபுலப் படுத்தற்
கொத்ததொன் றுரைப்பினஃ தொட்டென மொழிப.

இதன்பொருள் - பாடும்புலவன் தன்னாற் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனைப் புலப்படுத்தும் பொருட்டு

அதுபோன்ற பிறிதொன்றினைச் சொல்லுமாயின், அதனை அறிஞர் ஒட்டென்னும் அணி என்பர் என்றவாறு.

இதனை முதனூலார் 'சமாசோக்தி' என்பர். சமாசோக்தி-தொகைமொழி. சமாசம், தொகை, 'ஒட்டு' என்பன ஒருபொருட் கிளவிகள். சரசுவதிகண்டாபரணமென்னும் அலங்காரகாரர் உபமானத்தினாலே அதன் உபமேயம் அறியும்படி சொல்லுவது இவ்வணி என்பர். இதனை 'உவமப் போலி' எனவும், 'பிறிதுமொழிதல்' எனவும், 'நுவலா நுவற்சி' எனவும் சொல்வாருமுளர்.

## ஒட்டணிவகை

ருக. அதுவே,

அடையும் பொருளு மயல்பட மொழிதலும்
அடைபொது வாக்கி யாங்ஙன மொழிதலும்
விரவத் தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநால் வகையினு மியலு மென்ப.

இதன்பொருள் — அவ்வொட்டணி அடையும்பொருளுமயல்படமொழிதல் முதலிய நான்குவகையானும் நடக்குமென்று அறிஞர் கூறுவர் என்றவாறு.

### க அடையும்பொருளுமயல்படமொழிதல்

விசேடணமாகிய அடைமொழியும், அதனால் விசேடிக்கப்பட்ட விசேடியமும் வேறுபடச் சொல்லப்படுவது அடையும்பொருளும் அயல்பட மொழிதலாகும்.

உதாரணம் :

'வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டுங் குறுகும் — நிறைமதுச்சேர்ந்
துண்டாடுந் தன்முகத்தே செவ்வி யுடையதோர்
வண்டா மரைபிரிந்த வண்டு.'

எனவரும்.

இங்கே கவிஞன் சொல்லக்கருதி மறைத்த பொருள் தலைவியைப் பிரிந்து பரத்தையை விரும்பிச்செல்லுந் தலைவன்

எனவும், அதனை வெளிப்படுத்துதற்குச் சொல்லப்பட்ட பொருள் தாமரைப்பூவைப் பிரிந்து குவளைப்பூவை விரும்பிச் செல்லும் வண்டு எனவும், அதுவே விசேடியம் எனவும், 'வெறிகொ ளினச்சுரும்பு' முதலியன விசேடண மொழிகள் எனவும் அறிக.

'வெறிகொ ளினச்சுரும்பு மேய்ந்ததோர் காவி' என்றது பலரானும் அநுபவித்து விடப்பட்ட பரத்தையை. 'குறைபடுதேன்' என்றது அப்பரத்தை மாட்டுள்ள குறைவாகிய இன்பத்தினை. 'தாமரை' என்றது தலைவியை. 'நிறைமது' என்றது அத்தலைவிமாட்டுள்ள நிறைவாகிய இன்பத்தினை. 'வண்டு' என்றது தலைமகனை.

## உ. அடைபொதுவாக்கிப்பொருள்வேறுபடமொழிதல்

மறைத்த பொருளும் அதனைப் புலப்படுத்தும் பொருளுமாகிய இரண்டற்குஞ் செல்லுமாறு அடைமொழிகளைப் பொதுவாகக் கூறிப் புலப்படுத்தும் பொருளை வேறாகச் சொல்லுவது அடை பொதுவாக்கிப் பொருள்வேறுபட மொழிதலாகும்.

உதாரணம்:

> 'உண்ணிலவு நீர்மைத்தா யோவாப் பயன்சுரந்து
> தண்ணளி தாங்கு மலர்முகத்துக் — கண்ணெகிழ்ந்து
> நீங்க லரிய நிழலுடைத்தாய் நின்றெமக்கிங்
> கோங்கியதோர் சோலை யுளது.'

எனவரும்.

இங்கே மறைத்த பொருள் ஒருவள்ளல். அதனைப் புலப்படுத்துமாறு ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் 'சோலை.' இரண்டற்கும் பொதுவாய் நின்ற அடைமொழிகள் 'உண்ணிலவு நீர்மைத்தாய்' என்பது முதலியன.

இக்கவியில் 'உள்' என்பதற்கு மனம் எனவும், நடு எனவும், 'நீர்மை' என்பதற்குக் குணம் எனவும், நீர்த்தன்மை எனவும், 'தண்ணளி' என்பதற்குக் கிருபை எனவும், குளிர்ந்த வண்டு எனவும், 'மலர்முகம்' என்பதற்கு மலர்போலும்முகம்

எனவும், மலரிடம் எனவும், 'கண்ணெகிழ்ந்து' என்பதற்குக் கண்ணேடி எனவும், தேனெகிழ்ந்து எனவும், 'நிழல்' என்பதற்கு ஒளி எனவும், சாயை எனவும் வள்ளலுக்குஞ் சோலைக்குஞ் சிலேடையாகப் பொருள் கொள்க.

## ௩. அடைவிரவத்தொடுத்தல்

சொல்லக் கருதித் தொகுத்த பொருளுக்கும், அதனைப் புலப்படுத்தும் பொருளுக்கும், பொதுவாகவும், அவற்றுள் ஒன்றற்குச் சிறப்பாகவும், அடைமொழிகள் கலந்துவரத் தொடுக்கப்படுவது அடைவிரவத் தொடுத்தலாகும்.

உதாரணம் :

> 'தண்ணளிசேர்ந் தின்சொன் மருவுந் தகைமைத்தாய்
> எண்ணிய வெப்பொருளு மெந்நாளும் — மண்ணுலகில்
> வந்து நமக்களித்து வாழு முகிலொன்று
> தந்ததான் முன்னைத் தவம்.'

எனவரும்.

இங்கே சொல்லக் கருதித் தொகுத்தபொருள் ஒரு வள்ளல். அதனைப் புலப்படுத்தற்குக் கூறிய பொருள் 'முகில்.' 'இன்சொல்' வள்ளலுக்குச் சிறப்பு. பிற பொது.

## ௪. அடைவிபரீதப்படுத்தல்

முன்சொல்லியன போலாது அடைமொழிகளை விபரீதமாக்கிச் சொல்லுவது அடைவிபரீதப்படுத்தலாகும்.

உதாரணம் :

> 'கடைகொ ளுலகியற்கை காலத்தின் நீங்கால்
> அடைய வறிதாயிற் றன்றே — அடைவோர்க்
> கருமை யுடைத்தன்றி யந்தேன் சுவைத்தாய்க்
> கருமை விரவாக் கடல்.'

எனவரும்.

இங்கே சொல்லக்கருதி மறைத்த பொருள் ஒரு வள்ளல். அதனைப் புலப்படுத்தற்குக் கூறியபொருள் 'கடல்.'

'அடைவோர்க் கருமை'யின்மையும், 'தேன்சுவை'யும், 'கருமைவிர' வாமையுங் கடற்கின்மையின் அடைமொழிகள் விபரீதமாயின.

தொனியினுலாவது சிலேடையினுலாவது வேறும் ஒரு பொருள் தோன்றுமாறு வைப்பதனையும் சிலர் இவவணியின் பாற் சேர்ப்பர். உதாரணம்:

'மிக்குய ருவண மன்ன மிசைப்படு மெகினப் புள்ளும்
மைக்குயில் சேவ லாகி மயூரமாம் வலியன் றானும்
புக்கமர் தெரிக்கு மாடற் றூவையுங் கொடிய தான
குக்குட முதலு மஞ்சக் கொக்குரு வாகி நின்றான்.'
(கந்தபுராணம்)

எனவரும்.

இங்கே விட்டுணுவும், பிரமாவும், இந்திரனும், வீரதுர்க்கையும், கோழிக்கொடியும் அஞ்சுமாறு சூரன் மாமரமாய் நின்றான் என்னும் பொருளன்றிக் கருடன், அன்னம், குயில், மயில், வலியன், நாகணவாய், காகம், கோழி என்னும் பறவைகள் பயப்படக் கொக்குப்பறவையாய் நின்றானென வேறுமொரு பொருள் தோன்றச் சொல்லியவாறறிக.

உதாரணம்:

'அத்தியி னரசு பேர
வாலமுந் தெரிக்கி லேங்க
மெய்த்திறல் வாகை வன்னி
மெலிவுற வீரை யாவுந்
தத்தம திருப்பை நீங்கத்
தாதவிழ் நீபத் தாரோன்
உய்த்திடு தனிவேன் முன்ன
ரொருதனி மாவாய் நின்றான்.' (கந்தபுராணம்)

எனவரும்.

இங்கே வருணன் நிலைகுலைய, நஞ்சு மேங்க, அக்கினியும் மெலிய, கடலெல்லாம் இருக்கை நீங்கச், சூரன் 'மா'மரமாய் நின்றானென்னும் பொருளன்றி, 'அத்தி', 'அரசு' என்னும் மரங்கள் பேர, 'ஆல்'மரமு மேங்க, 'வாகை', 'வன்னி' என்னும் மரங்கள் மெலிய, 'வீரை', 'இருப்பை' என்னும்

மரங்கணிங்க, மரமரமாய் நின்றுனென வேறுமொரு பொருள் தோன்றச் சொல்லியவாறறிக.

## 11. அதிசயவணி

ருஉ. மனப்படு மொருபொருள் வனப்புவந் துரைப்புழி
உலகு வரம்பிறவா நிலைமைத் தாகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ ததிசயம்

இதன்பொருள் - கவிஞன் தான்கருதிய ஒரு பொருளின் அழகினை உவந்து சொல்லும்போது உலகினெல்லை கடவாத நிலைமையுடையதாகி அறிஞர்கள் வியக்கும்படி தோன்றுவது அதிசயம் என்னும் அணியாகும் என்றவாறு.

அதிசயம் - அதிகமேம்பாடு.

சரசுவதிகண்டாபரணகாரர் உலகத்திலில்லாத மேன்மையைச் சொல்லுவது அதிசயவணிஎன்பர். முதனூலாரும் உலகினெல்லையைக் கடந்த மேன்மை என்பர். அதற்கிசைய இச்சூத்திரத்திலே "உலகுவரம்பிறவா" என்பதனை "உலகு வரம்பிறக்கும்" எனக் கொள்வது நன்று.

### அதிசயவணிவகை

ருங. அதுவே,
பொருள்குணந் தொழிலையந் திரிபே துணிவெனத்
தெருளுறத் தோன்று நிலைமைய தென்ப.

இதன்பொருள் - மேலே கூறப்பட்ட அதிசயவணி பொருள், குணம், தொழில், ஐயம், திரிபு, துணிவு என்னும் வகையினையுடையதெனத் தெளியும்படி தோன்றும் நிலைமையையுடையதென்பர் என்றவாறு.

### க. பொருளதிசயம்

உதாரணம்:

'பண்டு புரமெரித்த தீமேற் படர்ந்தின்றும்
அண்ட முகடு நெருப்பறா'— தொண்டளிர்க்கை

வல்லி தழுவக் குழைந்த வடமேரு
வில்லி நுதன்மேல் விழி.'

எனவரும்.

இங்கே 'புரமெரித்ததீ மேற்படர்ந் தின்றும் அண்ட முகடு நெருப்பருது' எனத் 'தீ' என்னும் பொருளான் அதிசயந் தோன்றியவாறறிக.

## உ. குணவதிசயம்

உதாரணம் :

'மாலை நிலவொளிப்ப மாத ரிழைபுனைந்த
நீல மணிக ணிழலுமிழ — மேல்விரும்பிச்
செல்லு மிவள்குறித்த செல்வன்பாற் செல்லுதற்கு
வல்லிருளா கின்ற மறுகு.'

எனவரும்.

இங்கே 'நீலமணி' களின் ஒளியால் 'மறுகு' மிக்க 'இருளடைகின்ற' தெனக் குணத்தால் அதிசயந் தோன்றியவாறறிக. பின்வருவது மிதுபோலும்.

உதாரணம் :

'துப்போடிமிர் விதியின்படி
துவர்கொண்டொளிர் சுடரின்
தப்போவில மணியின்வெயி
றடைசெய்தன விலையேல்
மைப்போதுயர் மாடத்திசை
தரளம்வரு கதிரோன்
கைப்போதுமு கிழ்ப்பச்சுடர்
காலாதொழி யாவே.' (இரகுவமிசம்)

எனவரும்.

## ௩. தொழிலதிசயம்

உதாரணம் :

'ஆளுங் கரியும் பரியுஞ் சொரிகுருதி
தோளுந் தலையுஞ் சுழித்தெறிந்து — நீள்குடையும்

வள்வார் முரசு மறிதிரைமேற் கொண்டொழுக
வெள்வா ளுறைகழித்தான் வேந்து.'

எனவரும்.

இங்கே வாளினை உறைகழித்தலாகிய தொழிலால் மிகப் பலவாகிய கீலாளும், யானையும், குதிரையும் வெட்டுண்ணலாகிய அதிசயந் தோன்றியவாறறிக.

## ௪. ஐயவதிசயம்

உதாரணம் :

'ஊள்ளம் புகுந்தே யுலாவு மொருகாலென்
உள்ள முழுது முடன்பருகும் — ஒள்ளிழைகின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்
உள்ளம் பெரிதோ வுரை.'

எனவரும்.

இங்கே 'விழிபெரியவோ உள்ளம்பெரியவோ' என்ற ஐயத்தினாலே 'விழி'க்கு மிக்க மேம்பாடு தோன்றியவாறறிக. பின்வருவது மிது.- உதாரணம் :

'தேசிவன் சிறிது கொல்லோ
தந்தைவீற் றிருந்த செம்பொன்
ஆசனஞ் சிறிது கொல்லோ
வமர்ந்தகத் திருந்த போதிற்
றேசிவன் மணிக்கா லுள்ளே
வவ்வுபு சிறந்த செம்பொன்
ஆசனப் புறம்பு பாய்ந்த
தம்மகொ லறிகி லேமே. (இரகுவமிசம்)

எனவரும்.

இங்கே ஐயத்தினாலே சுதரிசனன் என்பவனுடைய இராசகாந்திக்கு அதிகமேன்மை தோன்றியவாறறிக.

## ௫. துணிவதிசயம்

உதாரணம் :

'பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீதிரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால் — எங்கோன்றன்

தில்லையே யன்னா ரிவரல்குற் றேரின்மேல்
இல்லையோ வுண்டோ விடை.'

எனவரும்.

இங்கே 'இல்லையோ உண்டோ விடை' என்னும் ஐயம் நீங்கி 'மீதிரண்டு செங்கலசக் கொங்கை திகழுமால்' என்பதிற் பெறப்பட்ட துணிவினாலே 'இடை'யின் சிறுமைக்கு அதிகமேம்பாடு தோன்றியவாறறிக. துணிவு - நிர்ணயம்.

## சு. திரிபதிசயம்

உதாரணம்:

'திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பாலென்று வாய்மடுப்ப — அங்கயலே
காந்தர் றுயக்கொழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலா மென்று.'

எனவரும்.

இங்கே நிலாமுற்றத்திலே வெள்ளிக்கிண்ணத்திலே தோன்றும் நிலாக்கிரணத்தைக் கிளிப்பறவை 'பால்' என்றும், பெண்கள் 'துகில்' என்றுங் கொள்ளும் மயக்கத்தினாலே அந் நிலாக் கிரணத்திற்கு அதிகமேம்பாடு தோன்றியவாறறிக.

திரிபு - ஒன்றினை வேறொன்றாகத் துணிதல். சிலர் இதனை 'மயக்கவணி' என்பர். பின்வருவனவு மிது.

உதாரணம்:

'வடிக்கண் மகளிர் வைத்த மரக தநன் மணிகள்
ஒடிக்கச் சுடர்விட் டெமிழ வுழையம் பிணையொன் றணுகிக்
கொடிப்பு லென்று கறிப்பா னாவிற் குலவி வளைப்பத்
தொடிக்கட் பூவை நோக்கி நகுமா றெளிதோ காண்மின்.'
(சீவகசிந்தாமணி)

எனவும்,

'வண்டு போய்மலர்க் காந்தளின் மூசுதல்
கண்ட முற்குட் கவிழ்ந்தன வென்றுநீர்

நொண்டு நுண்டுளி தூஉய்ப்பெயர்த் தோகையுட்
கொண்டு மந்தி குனிக்குமோர் பாலெல்லாம்.'
(தணிகைப்புராணம்)

எனவும் வரும்.

## 12. தற்குறிப்பேற்றவணி

௫௪. பெயர்பொரு ளல்பொரு ளெனவிரு பொருளினும்
இயல்பின் விளைதிற னன்றி யயலொன்று
தான்குறித் தேற்றுத றற்குறிப் பேற்றம்.

இதன்பொருள் – இயங்கியற்பொருளிடத்தாவது நிலையியற்பொருளிடத்தாவது இயல்பாக நிகழுந்தன்மையை ஒழித்துக் கவிஞன் வேறொரு பிரகாரத்தை நன்கு சிந்தித்து அதனை ஏற்றிச் சொல்லுதல் தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும் என்றவாறு.

தற்குறிப்பேற்றம் - தன்குறிப்பையேற்றுதல்; குறிப்பு-கருத்து. இதனை முதனூலார் 'உற்பிரேட்சை' என்பர். சரசுவதிகண்டாபரணகாரர் ஒருவிதமாய் இருக்கும் பொருளை வேறொருவிதமாகச் சிந்தித்துச் சொல்வது 'தற்குறிப்பேற்றவணி' என்பர்.

'பெயர்பொருள்', இயங்கியற்பொருள், சரப்பொருள் என்பன ஒருபொருட் கிளவிகள்.

'அல்பொருள்' - அப் பெயர்பொருளல்லாத அசரப்பொருள். அசரப்பொருள், நிலையியற்பொருள், என்பன ஒருபொருட் கிளவிகள்.

### க பெயர்பொருட்டற்குறிப்பேற்றம்

உதாரணம் :

'மண்படுதோட் கிள்ளி மதயானை மாற்றரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் — விண்படர்ந்து
பாயுங்கொ லென்று பனிமதியம் போல்வதூஉந்
தேயுந் தெளிவிசும்பி னின்று.'

எனவரும்.

இங்கே பெயர்பொருள் சந்திரன். 'தேய்தல்' அதன்கண் இயல்பாக நிகழுந் தன்மை. அதனை ஒழித்துக் கவிஞன் வேறொரு பிரகாரமாகக் கருதி ஏற்றிய குறிப்பு சோழனுடைய மதயானை பகையரசர் குடையைச் சிதைத்த கோபத்தினைக்கண்டு தன்மேலும் பாயுமோ என்று பயந்து தேயும் என்பது.

## உ. நிலையியற்பொருட்டற்குறிப்பேற்றம்

உதாரணம் :

'வேனில் வெயிற்குலர்ந்த மெய்வறுமை கண்டிரங்கி
வானின் வளஞ்சுரந்த வண்புயற்குத் — தானுடைய
தாதுமே தக்க மதுவுந் தடஞ்சினையாற்
போதுமீ தேந்தும் பொழில்.'

எனவரும்.

இங்கே நிலையியற்பொருள் சோலை. அதன்கண் இயல்பாக நிகழுந் தன்மை வளர்ந்து உயர்ந்து கொம்பர்களிலே பூவுந் தேனுங் கொண்டிருத்தல். இதன்மேற் கவிஞன் கருதி ஏற்றிய கருத்து 'தான் வெய்யிலினால் வாடிய வறுமைகண்டு தன்மேலிரங்கி மழை சொரிந்து அவ்வறுமை தீர்த்த முகிற்குக் கைமாறாகக் கொடுத்தற்கு சினையாகிய கையினாற் பூவின் மேலே தேனை யேந்திக்கொண்டு நிற்கும்' என்பது. பின்வருவது மிது.

உதாரணம் :

'தெளிபுன லுகுத்துத் தங்களைப் புரக்குஞ்
செய்ந்நன்றி மதித்துவர் பருகு
மளிமுகிற் குலத்துக் கருஞ்சுவை யிளநீ
ரளிக்கிய விழைந்தன போலும்
வளிவழக் கழுங்க மிடைந்துபல் குலைகண்
மடலிறக் கான்றுபூம் பாளைக்
குளிர்மணங் கஞற்றி நிழன்றுவா னோங்கிக்
குயின்குழாந் தைவருந் தாழை.' (தணிகைப்புராணம்)

எனவரும்.

## இதுவுமது.

ருரு. அன்ன போலெனு மவைமுத லாகிய
சொன்னிலை விளங்குந் தோற்றமு முடைத்தே.

இதன்பொருள் - அன்ன, போல், என்பது முதலாகிய சொற்களை நிலையாய் விளங்குந் தன்மையையும் அவ்வலங்காரமுடையது என்றவாறு.

'முதலாகிய' என்பதனால் ஐயம், துணிபு முதலியவைகளை விளக்குஞ் சொற்களுங் கொள்ளப்படும்.

உதாரணம் :

'காமருதேர் வெய்யோ னெங்குங் கரம்பரப்பித்
தேமரு சோலை மலர்திறக்கும் — தாமரையின்
தொக்க விதழ்விரித்துப் பார்க்குந் தொலைத்திருள்போய்ப்
புக்க புரைகிளைப்பான் போல்.'

எனவரும். இங்கே 'போல்' என்னும் உவமச்சொல் வந்தது.

## 13. ஏதுவணி

ருசா. யாதன் றிறத்தினு மிதனிது விளைந்ததென்
றேதுவிதந் துரைப்ப தேது வதுதான்
காரக ஞாபக மெனவிரு திறப்படும்.

இதன்பொருள் - எத்திறத்தானுவது இதனாலே இது நிகழ்ந்ததென்று காரணம் விதந்து சொல்லப்படுவது ஏதுவணியாகும்; அது காரகம் எனவும், ஞாபகம் எனவும் இருவகைப்படும் என்றவாறு.

ஏது - காரணம்.

சந்திராலோகம் என்னும் அலங்காரகாரர் காரணத்தோடு காரியத்தையுஞ் சேர்த்துச்சொல்லுவது ஏதுவணி என்பர்.

## காரகவேது

ருஎ. முதல்வனும் பொருளுங் கருமமுங் கருவியும்
ஏற்பது நீக்கமு மெனவிவை காரகம்.

இதன்பொருள் - முதல்வனும் பொருளும் கருமமும் கருவியுமாகிய இவை, ஏற்பதும் நீக்கமும் என இரு வகையாகி வருவன காரகவேதுக்களாம் என்றவாறு.

ஏற்பது - தரிப்பது, ஆக்கம். நீக்கம் - நீக்குவது, அழிப்பது. ஏற்பதை வடநூலார் 'பிரவிருத்தி' என்றும், நீக்கத்தை 'நிவிர்த்தி' என்றுங் கூறுவர். காரகம் - தொழிலை இயற்றுவிப்பது.

## க. கர்த்தாகாரகவேது

உதாரணம் :

> 'எல்லைநீர் வையகத் தெண்ணிறந்த வெவ்வுயிர்க்குஞ்
> சொல்லரிய பேரின்பந் தோற்றியதால் — முல்லைசேர்
> தாதலைத்து வண்கொன்றைத் தாரலைத்து வண்டார்க்கப்
> பூதலத்து வீழ்ந்த புயல்.'

எனவரும்.

இங்கே 'வீழ்ந்தபுயல்' என்னும் கர்த்தா 'இன்பம் தோற்றியது' எனக் காரகமாய் நின்று 'தாதலைத்தல்', 'தாரலைத்தல்' என்னும் ஏதுப் பொருண்மையை விசேடணமாகக் கொள்ளுதலும், இன்பம் தோற்றுதலாகிய ஆக்கத்தை உட்கொண்டு வருதலும் அறிதற்பாலன.

உதாரணம் :

> 'கனிகொள் பொழிலருவி கைகலந்து சந்தின்
> பனிவிரவிப் பாற்கதிர்க டோய்ந்து — தனியிருந்தோர்
> சிந்தை யுடனே யுயிருணக்குந் தென்மலயந்
> தந்த தமிழ்மா ருதம்.'

எனவரும்.

இங்கே 'தமிழ் மாருதம்' என்னும் கர்த்தா 'உயிருணக்கும்' எனக் காரகமாய் நிற்றலும், 'பொழில் கலத்தல்', 'அருவிகலத்தல்', 'பனிவிரவல்', 'பாற்கதிர்க டோய்தல்' என்னும் ஏதுப்பொருண்மையை விசேடணமாகக் கொண்டு நிற்றலும், 'சிந்தையுடனே யுயிருணக்கும்' அழிவை உட்

கொண்டு நிற்றலும் அறிதற்பாலன. 'தமிழ் மாருதம்' என்பதை 'மல்யந்தந்த' என்பதனுற் செயப்படு பொருளாகக் கொண்டு 'பொருட்காரகம்' என்பாரு முளர்.

## உ. கருமகாரகவேது

உதாரணம் :

'மலையி னலைகடலில் வாளரவின் வெய்ய
தலையிற் பயின்ற தவத்தாற் — றலைமைசேர்
அம்மாதர் புல்லு மபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.'

எனவரும்.

இங்கே 'எம்மாதவம்' என்புழித் 'தவம்' என்னும் செயப்படுபொருள் புணர்தலைச் செய்வித்துக் காரகமாய் நிற்றலும், புணர்தற்கு ஏதுவாய் நிற்றலும் அறிதற்பாலன.

## ௩. கருவிகாரகவேது

உதாரணம் :

'கரடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ் — சொரியுமால்
நீளார்த் தொடையபயன் ஞோரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்.'

எனவரும்.

இங்கே 'கரட'மும் 'கண்'ணும் 'கோடு'ம், 'மாரி'முதலியவற்றைச் சொரிந்து காரகமாய் நிற்றலும், சொரிதற்கேதுவாய் நிற்றலும் அறிதற்பாலன. மற்றையவற்றிற்கு உதாரணம் வந்துழிக்காண்க.

## ச. ஞாபகவேது

ருஅ. அவையல பிறவி னறிவது ஞாபகம்.

இதன்பொருள் - அந்தக் காரகங்களல்லாத பிறவற்றால் சிந்தித்து அறிவனு ஞாபகவேதுவாகும் என்றவாறு.

ஞாபகம் - அறிவிப்பது. இது கவிஞருடைய பிரயோகங்களால் அறியத்தக்கது.

உதாரணம் :

'காதலன்மே லூடல் கரையிறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப — மீது
மருங்குவளை வின்முரிய வாளிடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து.'

எனவரும்.

இங்கே 'காதலன்மேலூடல் கரையிறத்த'லை 'நுதல்வியர்'த்தல் முதலியன அறிவித்து ஞாபகவேதுவாயின.

## அபாவவேது

ருக. அபாவந் தானு மதன்பாற் படுமே.

இதன்பொருள் - அபாவம் என்பதுவும் அந்த ஏதுவணியின் பகுதியாகவரும் என்றவாறு.

அபாவம் - ஒன்றனதின்மை.

## அபாவவகை

ரு௦ என்று மபாவமு மின்மைய தபாவமும்
ஒன்றினொன் றபாவமு முள்ளத னபாவமும்
அழிவுபாட் டபாவமு மெனவைந் தபாவம்.

இதன்பொருள் - மேலே சொல்லப்பட்ட அபாவவேது என்றுமபாவம் முதலாகிய ஐந்துவகையினையுடையது என்றவாறு.

### ரு. என்றுமபாவவேது

ஒரு காரிய நிகழ்ச்சிக்கு எக்காலத்துமில்லாததன்மை ஏதுவாக வருவது என்றுமபாவவேதுவாகும்.

உதாரணம் :

'யாண்டு மொழிதிறம்பார் சான்றவ ரெம்மருங்கும்
ஈண்டு மயில்க ளினமினமாய் — மூண்டெழுந்த
காலையே கார்முழங்கு மென்றயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்.'

எனவரும்.

இங்கே மொழிதிறம்புதல் சான்றவருக்கு எக்காலத்தும் இல்லாத ஒரு தன்மை. அது வருவேம் என்ற மாலைக்காலத்திலே சான்றவராகிய 'காதலர்தேர்' வரும் என்பதற்கு ஏதுவாயிற்று.

## சு. இன்மையபாவவேது

இல்லாமையினது இன்மை ஏதுவாக வருவது இன்மையபாவ வேதுவாகும்.

உதாரணம் :

'காரார் கொடிமுல்லை நின்குழன்மேற் கைபுனைய
வாராமை யில்லை வயவேந்தர் — போர்கடந்த
வாளையேய் கண்ணி நுதன்மேல் வரும்பசலை
நாளையே நீங்கு நமக்கு.'

எனவரும்.

இங்கே 'வாராமை யில்லை' என்பது இன்மையபாவம். 'வாராமை' என்பது வருதலாகிய உண்மையின் இன்மை. 'இல்லை' என்பது அதனதின்மை. 'வாராமை இல்லை' எனவே வருதலுண்டென்பது பெறப்பட்டு அது 'பசலை' நீங்குதற்கு ஏதுவாயிற்று.

## எ. ஒன்றினொன்றபாவவேது

ஒன்றின்கண் ஒன்றனதின்மை ஏதுவாக வருவது ஒன்றினொன்றபாவ வேதுவாகும்.

உதாரணம் :

'பொய்ம்மை யுடன்புணரார் மேலானோர் பொய்ம்மையும்
மெய்ம்மைசூழ் மேலோரை மேவாவாம் — இம்முறையாற்

பூவலர்ந்த தாரார் பிரிந்தாற் பொலங்குழையார்
காவலர்சொற் போற்றல் கடன்.'

எனவரும்.

இங்கே பொய்ம்மையை மேலானோர் சேராமையும், மேலானோரைப் பொய்ம்மை சேராமையுமாக ஒன்றின்கண் ஒன்றனதின்மை காவலர்சொல்லைப் பேணுதற்கு ஏதுவாயிற்று.

## அ. உள்ளதனபாவவேது

ஓரிடத்திலே ஒருகாலத்திலே உள்ள பொருளின் இன்மை ஏதுவாகவருவது உள்ளதனபாவவேதுவாகும்.

உதாரணம் :

'கரவொடு நின்றார் கடிமனையிற் கையேற்
றிரவொடு நிற்பித்த தெம்மை — அரவொடு
மோட்டாமை பூண்ட முதல்வனை முன்வணங்க
மாட்டாமை பூண்ட மனம்.'

எனவரும்.

இங்கே உள்ளது 'மனம்.' அதனதின்மை வணங்காமை. அஃது இரந்து நிற்றற்கு ஏதுவாயிற்று.

## கூ. அழிவுபாட்டபாவவேது

அழிந்தொழிதலாகிய இன்மை ஏதுவாக வருவது அழிவுபாட்டபாவவேதுவாகும்.

அழிவுபாடு - அழிவுபடுதல்.

உதாரணம் :

'கழிந்த திளமை களிமயக்கந் தீர்ந்த
தொழிந்தது காதன்மே லூக்கம் — சுழிந்து
கருநெறியுங் கூந்தலார் காதனோய் தீர்ந்த
தொருநெறியே சேர்ந்த துளம்.'

எனவரும்.

இங்கே 'இளமைகழிதல்', 'மயக்கந்தீர்தல்' முதலியன அழிவுபாட்டபாவம். அது மனமொருவழிப்படுதற்கு ஏது வாயிற்று.

## சித்திரவேது

கூக. தூர காரியமு மொருங்குடன் றோற்றமும்
காரிய முந்துறூஉங் காரண நிலையும்
யுத்தமு மயுத்தமு முத்தையோ டியலும்.

**இதன்பொருள்** : தூரகாரியம் முதல் அயுத்தமீறு கச் சொல்லப்பட்ட இவைகளும் அவ்வேதுவலங்காரத்தோடு பொருந்திவரும் என்றவாறு.

இவைகளை முதனூலார் 'சித்திரவேது' என்பர். சித்திரம் - ஆச்சிரியம்.

'முந்தை' என்பது 'முத்தை' என விகாரமாயிற்று.

### கO தூரகாரியவேது

தூரத்திலே நிகழுங் காரியத்தினையுடைய ஏது தூர காரிய வேதுவாகும்.

உதாரணம் :

'வேறொரு மாதர்மேல் வேந்த னகநுதியால்
ஊறுதர விம்மா துயிர்வாடும் — வேறே
இருவரே மெய்வடிவி னேந்திழை நல்லார்
ஒருவரே தம்மி லுயிர்.'

எனவரும்.

இங்கே பரத்தைபால் ஊறுசெய்தலாகிய காரணத்திற்குக் காரியமாகச் சொல்லப்பட்ட 'உயிர்வாடுதல்' அப்பரத்தையிடம் நிகழாது வேறோரிடத்துள்ள தலைவியிடம் நிகழ்ந்து தூரமாயிற்று.

### கக. ஒருங்குடன்றோற்றவேது

காரியத்தோடு ஒருங்கே உடன் தோற்றமுடைய ஏது ஒருங்குடன்றோற்ற வேதுவாகும்.

உதாரணம் :

'விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும் — பிரிந்தோர்
நிறைதளர்வு மொக்க நிகழ்ந்தனவா லாவி
பொறைதளரும் புன்மாலைப் போது.

எனவரும்.

இங்கே நிலவின்மேம்பாடு, 'மதவேள் போர்' என்னுங் காரணங்கள் பிரிந்தோர் 'நிறை தளர்த'லாகிய காரியத்தோடு ஒருங்கே நிகழ்ந்த வாறறிக.

## கஉ. காரியமுந்துறூஉங்காரணநிலை

அஃதாவது காரியம் முன்னரே நிகழப்பெற்ற காரணத்தின் நிலை.

இதனை முதனூலார் 'காரியானந்தரசம்' என்பர். அநந்தரசம் - பின்னர்ப்பிறந்தது.

உதாரணம் :

'தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவேள் — அம்பு
பொருமென்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வருமென் றிருண்ட மனம்.'

எனவரும்.

இங்கே அம்புதைத்தலாகிய காரணம் நிகழுதற்கு முன்னே 'ஆகம்புண்கூர்த'லாகிய காரியமும், 'மாலைக்கால வருகை'யாகிய காரணம் நிகழுமுன்னே 'மனம்' மயங்குதலாகிய காரியமும் நிகழ்ந்த வாறறிக.

## கங. யுத்தவேது

பொருத்தமான காரியத்தோடு கூடிய ஏது யுத்தவேதுவாகும்.

யுத்தம் - பொருத்தம்.

உதாரணம்:

'பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்ன ரஞ்சந்து முகுளிக்கும் — தன்னோர்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்த நூறா யிரம்.'

எனவரும்.

இங்கே 'கை'யாகிய தாமரையின் குவிவு காரியம் எனவும், வேற்படையின் ஒளியாகிய 'நிலாக்கிரணம்' அக்குவிவுக்குப் பொருத்தமான காரணம் எனவும் அறிக. பின்வருவது மிது.

உதாரணம்:

'அடிகள் வீட்டிடும் வேற்படை யெனப்படு மலரி
கடிது சேறலும் வானவர் வதனமாங் கமலம்
நெடிது மாமகிழ் வெய்தியே மலர்ந்தன நெறிநீர்
கொடிய தானவர் முகமெனுங் கருவிளங் குவிய.'
(கந்தபுராணம்)

எனவரும்.

## கச. அயுக்தவேது

பொருத்தமில்லாத காரியத்தோடு கூடிய ஏது அயுக்தவேதுவாகும்.

அயுக்தம் - பொருத்தமின்மை. அ - இன்மை; யுக்தம் - பொருத்தம்.

உதாரணம்:

'இகன்மதமால் யானை யநபாய னெங்கோன்
முகமதியின் மூர னிலவால் — நகமலர்வ
செங்கயற்க ணல்லார் திருமருவு வாள்வதந
பங்கயங்கள் சாலப் பல.'

எனவரும்.

இங்கே 'பங்கயங்க'ளின் மலர்ச்சியாகிய காரியத்திற்கு நிலாக்கிரணம் பொருத்தமில்லாத காரணமாதலறிக. தாமரை மலர்ச்சிக்குச் சூரியகிரணமே பொருத்தமான காரணம்.

இன்னும் இந்த ஏதுவலங்காரம் எத்தனையோ பலவிதமாக வருதலை வடமொழியலங்கார நூல்களிற் காண்க.

ஐயவேது

உதாரணம்:

'மாத ருமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையி னொலியாலோ — யாதாலோ
சோல மிருதிறனுக் கொண்டான் றிருமிடற்றி
னால மமிர்தான வாறு.'

எனவரும்.

இங்கே 'ஆலம்' 'அமிர்தான'தற்குக் காரணம் 'மழலைமொழியாலோ, மறையினொலியாலோ, யாதாலோ' என ஐயமாகக் கூறியவாறறிக.

## 14. நுட்பவணி

கூஉ. தெரிபுவேறு கிளவாது குறிப்பினுந் தொழிலினும்
அரிதுணர் வினைத்திற நுட்ப மாகும்.

இதன்பொருள் - தெரிந்து வேறுகச் சொல்லப் படாமல் குறிப்பினாலாவது தொழிலினாலாவது அநுமித்து அரிதாக அறியத்தக்க செய்கைத்திறமுடையது நுட்பமென்னும் அணியாகும் என்றவாறு.

அறிதற்கருமைபற்றி 'நுட்பம்' எனப்பட்டது. இதனை முதனூலார் 'சூக்குமாலங்காரம்' என்பர்.

'குறிப்'பென்றது மனத்திற் கருதியனத அறிவிக்கவல்ல சரீரத்தின் சேட்டையை.

### க. குறிப்புநுட்பம்

உதாரணம்:

'காதலன் மெல்லுயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதைய ராயம் பிரியாத — மாதர்

படரிருள் கால்சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்குங் குறிப்பு.'

எனவரும்.

இங்கே சூரியனை நோக்கி 'மேற்குத்திசையையும் நோக்குங் குறிப்பினால் சூரியன் அஸ்தமிக்கும் மாலைக்காலத்திலே கூடுதற்கு நேர்ந்தாள் என்பது அநுமித்து அறியப்படும்.

### உ. தொழினுட்பம்

உதாரணம்:

'பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்
கூட லவாவாற் குறிப்புணர்த்தும் — ஆடவற்கு
மென்றீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்
இன்றீங் குறிஞ்சி யிசை.'

எனவரும்.

இங்கே 'குறிஞ்சியிசை'யைப் பாடுதலாகிய தொழிலினாலே இடையாமத்திலே கூடுதற்கு நேர்ந்தாள் என்பது அநுமானித்து அறியப்படும். குறிஞ்சிக்குச் சிறுபொழுது இடையாமம் என அறிக,

## 15. இலேசவணி

கூரு. குறிப்பு வெளிப்படுக்குஞ் சத்துவம் பிறிதின்
மறைத்துரை யாட லிலேச மாகும்

இதன்பொருள் – கருதியதை வெளிப்படுத்துஞ் சத்துவகுணங்களை வேறொன்றாலே நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும் என்றவாறு.

அற்பமாத்திரமாக வெளிப்படுத்தலானோக்கி 'இலேசம்' என்றார் போலும். லேசம் - அற்பம்.

'சத்துவ'மாவது பளிங்குமணியிற் கோத்த செந்நூலினின்று செம்மை வெளியே தோன்றுமாறு போல உள்ளங் கருதியதினின்று வெளியே தோன்றுங் குணங்கள். அவை,

மயிர்சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், வியர்வை முதலியன. சத்துவம் - உள்ள தன் தன்மை.

உதாரணம் :

'கல்லுயர்தோட் கிள்ளி பரிதொழுது கண்பனிசோர்
மெல்லியலார் தோழியர்முன் வேறொன்று—சொல்லுவரால்
பொங்கும் படைபரப்பி மீதெழுந்த பூந்துகள்சேர்ந்
தெங்கண் கலுழ்ந்தனவா லென்று.'

எனவரும்.

இங்கே சோழனை விரும்பிய கருத்தினின்று வெளிப்பட்ட சத்துவமாகிய கண்ணீர்வார்தல், தூளியாகிய வேறொன்றுலாயதென்று மறைத்துரையாடியவாறுணர்க.

உதாரணம் :

'மதுப்பொழிதார் மன்னவனை மால்கரிமேற் கண்ட
விதிர்ப்பு மயிரரும்பு மெய்யும் — புதைத்தாள்
வளவா ரணநெடுங்கை நுண்டுவலை வாய்ந்த
இளவாடை கூர்ந்த தென.'

எனவரும்.

இங்கே சோழனைக்கண்ட ஆசையினாலுண்டாய நடுக்கம், மயிர்சிலிர்த்தல் என்பன 'இளவாடை'யாகிய வேறொன்றுலாயின என மறைத்துச் சொல்லியவாறுணர்க.

## இதுவுமது

கூ௪. புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையு மன்னவென் றறைகுந ருளரே.

இதன்பொருள் - ஒன்றனைப் புகழ்வதுபோலப் பழித்தலும், பழிப்பது போலப் புகழ்தலுமாகிய அவையும் அவ்விலேசவணியாகும் என்று சொல்லுவாருமுளர் என்றவாறு.

## க. புகழ்வதுபோலப்பழித்தல்

உதாரணம் :

'மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாய றளாராமற் றூங்குமால் — சேயிழாய்
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்.

எனவரும்.

இங்கே அறிவழியவேண்டிய புணர்ச்சிக் காலத்திலே அறிவழியாமை தோன்றச் 'சாய றளாராமற் றூங்குமால்' எனப் புகழ்ந்தமையால் இது புகழ்வதுபோலப் பழித்தல்.

## உ. பழிப்பதுபோலப்புகழ்தல்

உதாரணம் :

'ஆடன் மயிலியலி யன்ப னணியாகங்
கூடுங்கான் மெல்லென் குறிப்பறியான் — ஊடல்
இனிவந்த செய்கை யிரவாளன் யார்க்கும்
வினிவந்த வேட்கை யிலன்.'

எனவரும்.

இங்கே 'கூடுங்கான் மெல்லென் குறிப்பறியான்' எனப் பழிப்பதுபோலக் கூறப்படினும் அக்காலத்திலே அறிவழிந்தமை பெறப்படலாற் புகழாயிற்று. பின்வருவது மிது.

உதாரணம் :

'உடுப்போர்க் குடுக்குந் தொழில்களா
லுண்போர்க் குண்ணும் பொருள்களாற்
றொடுப்போர்க் கெடுக்கு மலர்களா
லணியோர்க் கணியுஞ் சுடரிழையால்
அடுப்போர்க் கடுக்கு மனைகளாற்
குறைபா டுடைய தன்றதுதான்
தொடுப்போர்க் கிரப்பா ரில்லாத
குறையொன் றுளது கூறுங்கால்.' (பிரபுலிங்கலீலை)

எனவரும்.

இங்கே 'இரப்போரில்லாத குறையொன்றுளது' என்று பழிப்பது போலக் கூறினும் யாவருஞ் செல்வர் என்பது தோன்றப் புகழ்ந்தவாறறிக.

## 16. நிரனிறையணி

கூரு. நிரனிறுத் தியற்றுத னிரனிறை யணியே.

இதன்பொருள் – முன்னர் வைக்கப்பட்ட சொற்பொருள்களோடு பின்னர் வைக்கப்படுஞ் சொற்பொருள்கள் முறையே சேர்ந்து பொருள்படுமாறு வரிசையாக நிறுத்தப் படுவது நிரனிறை என்னும் அணியாகும் என்றவாறு.

நிரனிறை - வரிசையாக நிறுத்தப்படுவது. இதனை முதனூலார் 'யதாசங்கியம்' என்பர்.

உதாரணம் :

'காரிகை மென்மொழியா னோக்காற் கதிர்முலையால்
வார்புருவத் தாலிடையால் வையகத்து — நேர்தொலைந்த
கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு விற்கரும்பு
வல்லி தனியேன் மனத்து.'

எனவரும்.

இங்கே 'மொழி'யாலே தொலைந்தது 'கொல்லி'ப்பண் எனவும், 'நோக்'காலே தொலைந்தது 'நெடுவேல்' எனவும், 'முலை'யாலே தொலைந்தது 'கோங்கரும்பு' எனவும், 'புருவ'த்தாலே தொலைந்தது 'விற்கரும்பு' எனவும், 'இடை'யாலே தொலைந்தது 'வல்லி' எனவும் பொருள் படுமாறு நிரையே வைக்கப்பட்டவாறறிக.

## 17. ஆர்வமொழி

கூகூ. ஆர்வமொழி மிகுப்ப தார்வ மொழியே.

இதன்பொருள் – உள்ளே கொண்ட ஆர்வம்பற்றி நிகழும் மொழிகள் அதிகந் தோன்றும்படி சொல்லப்படுவது ஆர்வமொழி என்னும் அணியாகும் என்றவாறு.

உதாரணம் :

'சொல்ல மொழிதளர்ந்து சோருந் துணைமலர்த்தோள்
புல்ல விருதோள் புடைபெயரா — மெல்ல
நினைவே மெனினெஞ் சிடம்போதா தெம்பால்
வினைதீரராய் வந்ததற்கு மாறு.'

எனவரும்.

இங்கே ஆர்வமொழிகள் மிகுத்துச் சொல்லப்பட்டவா றறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'முன்ன மேதுயின் றருளிய முதுபயோ ததியோ
பன்ன காதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்ன மாதவஞ் செய்ததிச் சிறுகுடி லென்றான்.'
(பாரதம்)

எனவரும்.

## 18. சுவையணி

சூஎ. உண்ணிகழ் தன்மை புறம்பொழிந் தோங்க
எண்மெய்ப் பாட்டி னியல்வது சுவையே.

இதன்பொருள் - உள்ளத்திலே நிகழுந்தன்மை வெளியிற் புலப்பட்டு விளங்கும்படி எட்டுவகைப்பட்ட மெய்ப் பாட்டினானும் நடப்பது சுவை என்னும் அணியாகும் என்றவாறு.

'மெய்ப்பா'டாவது உலகத்தார் உள்ளநிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோராற்றான் வெளி ப்படுதல். இது நச்சினார்க்கினியர் கருத்து. வீரசோழியவுரை காரர் 'மெய்க்கட்பட்டு விளங்கிய தோற்றம்' என்பர். இதனை வடநூலார் 'பாவம்' என்பர். பாவம் - மனநிலை.

'சுவை'யாவது விபாவங்களாலும், அநுபாவங்களாலும், வியபிசாரிபாவங்களாலும் உண்டாகும் விருப்பம் முதலிய மனச்செய்கை என்று குவலயானந்தகாரர் கூறுவர். விபாவங்

களாவன வடிவம், இளமை முதலியன. அநுபாவங்களாவன கட்பார்வை, மயிர்சிலிர்த்தல் முதலியன. வியபிசாரிபாவங் களாவன வெறுப்பு, பலக்குறைவு முதலியன.

## சுவைவகை

கூஙு. அவைதாம்,
வீர மச்ச மிழிப்போடு வியப்பே
காம மவல முருத்திர நகையே.

இதன்பொருள் – மேலே கூறப்பட்ட எண்வகை மெய்ப்பாடுகளும் யாவையெனின், வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்பனவாம் என்றவாறு.

## க. வீரச்சுவை

வீரங் காரணமாகத் தோன்றுஞ் சுவை வீரச்சுவை யாகும்.

'வீர'மாவது மேலான காரியங்களில் உண்டாகும் மனத் துணிவு. இதனைத் தொல்காப்பியர் 'பெருமிதம்' எனவும், கல்வி, தறுகண், புகழ், கொடை என்னும் நான்கும் பற்றிப் பிறக்கும் எனவுங் கூறுவர்.

உதாரணம் :

'சேர்ந்த புறவி னிறைதன் திருமேனி
ஈர்ந்திட் டியர்துலைதா னேறினான் — நேர்ந்த
கொடைவீர மோமெய்ந் நிறைகுறையா வன்கட்
படைவீர மோசென்னி பண்பு.'

எனவரும்.

இங்கே சிபியென்னுஞ் சோழன் தன்பாலடைந்த புறா வின் நிறையளவு மாமிசம் தன்னுடம்பில் அரிந்து கொடுத் தும் போதாது தன் சரீரம் முழுவதையுங் கொடுக்கத் துணிந்த மனத்துணிவாகிய வீரத்தினாலே சுவை தோன்றியவாறறிக. இது கொடைபற்றித் தோன்றியது. இதனை வடநூலார் 'தானவீரம்' என்பர். பின்வருவதும் இது.

உதாரணம் :

'அருகலி லுவகைசொல் பவர்க்கு மன்னவன்
வருகென வேண்டுவ மகிழ்ந்து வீசினன்
இருகவ ரியுமுல கெங்கு மூடிய
ஒருகவி கையுமலா தொழிந்த தில்லையே.' (இரகுவமிசம்)

எனவரும்.

## உ. அச்சச்சுவை

அச்சங் காரணமாகத் தோன்றுஞ் சுவை அச்சச் சுவையாகும்.

'அச்ச'மாவது மிக்க சாமர்த்தியங்கண்டுழி அதனாற் றோன்றும் மனக்கலக்கம். குவலயானந்தகாரர் குரூரமுடையவைகளைப் பார்த்தல் முதலியவைகளாலுண்டாகும் மனக்குலைவு என்பர். தொல்காப்பியர் அணங்கு, விலங்கு, கள்வர், இறை என்னும் நான்குங் காரணமாக அச்சம் பிறக்கும் என்பர். அணங்கு பேய், பூதம் முதலியன. விலங்கு சிங்கம், புலி முதலியன. இறையெனப்படுவார் அரசன், பிதா முதலியோர்.

உதாரணம் :

'கைநெரிந்து வெய்துயிர்ப்பக் காறளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்க ணீர்ததும்ப வாய்புலர்ந்தேன் — வெய்ய
சினவேல் விடலையாற் கையிழந்த செங்கட்
புனவேழ மேல்வந்த போது.'

எனவரும்.

இங்கே யானையைக் கண்ட அச்சங் காரணமாகச் சுவை தோன்றியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'கைத்தல மொன்று நீண்ட காய்ப்புடை வெரிநிற் போட்ட
பைத்தலை பிடிப்ப வொன்று புகாதலைப் பாகு பற்ற
மொய்த்தலை வெய்தி முன்பின் பார்த்திடு முகத்த ராகி
எவ்த்தலி னிருதாள் சோர வேகுவார் வணிக ரெல்லாம்.'
(இரகுவமிசம்)

எனவரும்.

இங்கேயும் ஒரு யானையைக் கண்ட அச்சங் காரணமாகச் சுவை தோன்றியவாறறிக.

## ௩. இழிப்புச்சுவை

இழிப்புக் காரணமாகத் தோன்றுஞ் சுவை இழிப்புச் சுவையாகும்.

'இழிப்'பாவது குற்றமுடையவைகளைக் காணுதல் முதலிய காரணங்களாலே மனத்திலே தோன்றும் அருவருப்பு. இதனைத் தோல்காப்பியர் 'இளிவரல்' எனவும், மூப்பு, பிணி, வருத்தம், மென்மை என்னும் நான்குங் காரணமாகப் பிறக்கும் எனவும் கூறுவர்.

உதாரணம் :

'உடைதலையு மூளையு மூன்றடியு மென்புங்
குடருங் கொழுங்குருதி யீர்ப்ப — மிடைபேய்
பெருநடஞ்சேர் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறுங் களம்.'

எனவரும்.

இங்கே உடைந்த 'தலை', 'மூளை' முதலியவைகளால் இழிப்புச் சுவை தோன்றுமாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'மேதினி யளப்பவரின் மென்மெல நடந்தங்
கூதைநனி நாசியி னுயிர்த்திடை யிடைக்கண்
ஊதவுகு வானென வுலைந்துநிலை கொண்டே
ஆதவன் மறைத்தகுடை யோடெதி ரடுத்தான்.'
(தணிகைப்புராணம்)

எனவரும். இங்கே மூப்புப்பற்றி இழிப்புச்சுவை தோன்றியவாறறிக.

## ௪. வியப்புச்சுவை

வியப்புக் காரணமாகத் தோன்றுஞ் சுவை வியப்புச் சுவையாகும்.

'வியப்'பாவது முன்னர்க் காணப்படாத ஒன்றைக் கண்டுழி உண்டாகும் மனவிரிவு. தொல்காப்பியர் இதனை 'மருட்கை' எனவும், இது புதுமை, பெருமை, சிறுமை' ஆக்கம் என்னும் நான்கும் காரணமாகப் பிறக்கும் எனவுங் கூறுவர். ஆக்கம் ஒன்று வேறொன்றாய்த் திரிந்தது.

உதாரணம் :

'முத்தரும்பிச் செம்பொன் முறிதழைந்து பைந்துகிரின்
தொத்தலர்ந்து பல்கலனுஞ் சூழ்ந்தொளிருங் — கொத்தி
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன் [னதாம்
தன்னேர் பொழியுந் தரு.'

எனவரும்.

இங்கே 'தரு'வின்கண் 'முத்தரும்பு' தன் முதலியவைகளான் வியப்புச்சுவை தோன்றுமாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'செம்பொன் வேங்கை சொரிந்தன சேயிதழ்க்
கொம்பர் நல்லில வங்கள் குவிந்தன
பொங்கர் வெண்பொரி சிந்தின புன்கிளந்
திங்கள் வாழ்சடை யாடிரு முன்றிலே.' (சிலப்பதிகாரம்)

எனவரும்.

## ரு. காமச்சுவை

காமங் காரணமாகத் தோன்றுஞ் சுவை காமச்சுவையாகும்.

'காம'மாவது சம்போகவிஷயம் முதலியவற்றிலுண்டாகும் விருப்பம். தொல்காப்பியர் இதனை 'உவகை' எனவும், செல்வம், அறிவு, புணர்ச்சி, விளையாட்டு என்னும் நான்கும் காரணமாகத் தோன்றும் எனவுங் கூறுவர்.

உதாரணம் :

'திங்க ணுதல்வியர்க்கும் வாய்துடிக்குங் கண்சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்குஞ் சொல்லசையுங் — கொங்கை
யொருகாலு மூடிப் புடைபெயருங் காலும்
இருகாலு மொக்கு மிவர்க்கு.'

எனவரும்.

இங்கே புணர்ச்சியாற் காமச்சுவை தோன்றியவாறறிக.

## சு. அவலச்சுவை

அவலங் காரணமாகத் தோன்றுஞ் சுவை அவலச்சுவையாகும்.

'அவல'மாவது தனக்குப் பற்றுள்ள ஒன்றினைப் பிரிதலினாலாவது பற்றில்லாத ஒன்றினை அடைதலினாலாவது தோன்றும் மனவியாகுலம். தொல்காப்பியர் இதனை 'அழுகை' எனவும், இளிவு, இழவு, அசைவு, வறுமை என்னும் நான்கும் பற்றித் தோன்றும் எனவும் கூறுவர்.

உதாரணம்:

'கழல்சேர்ந்த தாள்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்னெஞ் சயர்ந்தான் — குழல்சேர்ந்த
தாமந் தரியா தணையுந் தளிர்மேனி
ஈமந் தரிக்குமோ வென்று.'

எனவரும்.

இங்கே மனைவியை இழந்த அவலத்தினாலே சுவை தோன்றியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம்:

'மின்னே சுரத விளையாட்டின் வேர்வரும்பு
நின்னேர் மதிமுகத்து நீங்காது நின்றனவாற்
பொன்னேயென் கண்மணியே பூவே புனமயிலே
என்னே புவிமீதி லீதோ வுயிர்வாழ்வே.' (இரகுவமிசம்)

எனவரும்.

## எ. உருத்திரச்சுவை

உருத்திரங் காரணமாகத் தோன்றுஞ் சுவை உருத்திரச்சுவையாகும்.

'உருத்திர'மாவது தனக்கநுகூலமல்லாத செயலினாலாகும் மனக்கொதிப்பு. இதனைத் தொல்காப்பியர் 'வெகுளி'

எனவும், உறுப்பறை, குடிகோள், அலை, கொலை என்னும் நான்கும் பற்றிப் பிறக்கும் எனவுங் கூறுவர்.

உதாரணம் :

'கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்டெழுந்தான் — வெய்யபோ
தார்வேய்ந்த தோளான் மகளைத் தருகென்று [ர்த்
போர்வேந்தன் றூதிசைத்த போது.'

எனவரும்.

இங்கே 'மகளைத் தருக' என்று கேட்டலாகிய செயலால் உருத்திரச்சுவை தோன்றியவாறறிக.

## அ. நகைச்சுவை

நகை காரணமாகத் தோன்றுஞ் சுவை நகைச்சுவையாகும்.

'நகை'யாவது வேறுபாடான வடிவம், வேஷம், வார்த்தை முதலியவைகளைக் கண்டுழி உண்டாகுஞ் சிரிப்பு. இதனைத் **தொல்காப்பியர்** எள்ளுதல், இளமை, பேதைமை, மடம் என்னும் நான்கும் பற்றித் தோன்றும் என்பர்.

உதாரணம் :

'நாண்போலுந் தன்மனைக்குத் தான்சேற லிந்நின்ற
பாண்போலும் வெவ்வழலிற் பாய்வதூஉங் — காண்டோழி
கைத்தலங் கண்ணுக் களவுகாண் பாலொருவன்
பொய்த்தலைமுன் னிட்டியற்றும் போந்து.'

எனவரும்.

இங்கே 'நாண்போலுந் தோழி' என்பது முதலியவைகளான் நகைச்சுவை தோன்றியவாறறிக.

## 19. தன்மேம்பாட்டுரை

சுக. தான்றற் புகழ்வது தன்மேம் பாட்டுரை.

இதன்பொருள் — ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து சொல்லுவது தன்மேம்பாட்டுரை என்னும் அணியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் 'ஊர்ஜச்சுவி' என்பர். ஊர்ச்சம் - பெலம்.

உதாரணம் :

'எஞ்சினா ரில்லை யெனக்கெதிரா வின்னுயிர்கொண்
டஞ்சினா ரஞ்சாது போயகல்க — வெஞ்சமத்துப்
பேரா தவராகத் தன்றிப் பிறர்முதுகிற்
சாராவென் கையிற் சரம்.'

எனவரும்.

இங்கே ஒருவன் தன்மேம்பாட்டினைத் தானே எடுத்துச் சொல்லியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'ஐயமேற் றருந்து பித்த
  கேட்டியான் பிறந்த வன்றே
செய்யதண் கமலத் தோனைப்
  பிடித்துவெஞ் சிறையி லுய்த்தேன்
மையலங் களிறோ டெட்டும்
  வானவர் முதல்வ னோடென்
கையினிற் பற்றி மற்றை
  யண்டத்திற் காவல் செய்தேன்.' (கூர்மபுராணம்)

எனவரும். இது சலந்தரன் சிவனைநோக்கித் தன்பெலங் கூறியது.

## 20. பரியாயவணி

எ௦. கருதியது கிளவா தப்பொரு டோன்றப்
பிறிதோன் றுரைப்பது பரியா யம்மே.

இதன்பொருள் — சொல்ல விரும்பிய பொருளை வெளிப்படுத்துதற்குரிய சொற்களாற் சொல்லாமல் அப்பொருள் தோன்றும்படி வேறொரு பிரகாரஞ் சொல்லுவது பரியாயவணியாகும் என்றவாறு.

பரியாயம்.- சாமர்த்தியமாக அறிவிக்கும் வார்த்தை.

உதாரணம் :

'மின்னிகரா மாதே விரைச்சாந் துடன்புணர்ந்து
நின்னிகரா மாதவிக்க ணின்றருணீ — தன்னிகராம்
செந்தீ வரமலருஞ் செங்காந்தட் போதுடனே
இந்தீ வரங்கொணர்வல் யான்.'

எனவரும்.

இஃது ஒரு தலைவியை நாயகனோடு சேர்க்க விரும்பிய தோழி சொல்லியது. இங்கே பிரியமுள்ள நாயகனைப் பெற்றுக்கொள்வாய் என்னும் பொருள் தோன்றக் 'குருக்கத்திச் சோலையிலே நில், காந்தட்பூவும் கருங்குவளைப்பூவும் கொண்டு வருவேன்' என வேறொரு பிரகாரத்தினாற் சொல்லியவாறுணர்க. பின்வருவது மிது.

உதாரணம் :

'பற்றின் மிக்கதோர் பாவை யிவ்வரை
சுற்றி யேகினீ சூடுங் கோடல்கள்
குற்று வந்துநின் குழற்கு நல்குவன்
நிற்றி யீண்டென நிறுவி யேகினாள்.' (கந்தபுராணம்)

எனவரும்.

## 21. சமாகிதவணி

எக. முந்துதான் முயல்வுறூஉந் தொழிற்பயன் பிறிதோன்று
தந்ததா முடிப்பது சமாகி தமாகும்.

இதன்பொருள் — ஒருவன் முன்னர்த் தான்முயன்ற தொழிலின்பயனாகிய காரியம் அத்தொழிலாற் சித்தியாகாது வேறொன்றினாலே தரப்பட்டதாக முடிக்கப்படுவது சமாகிதம் என்னும் அணியாகும் என்றவாறு.

சமாஹிதம் - துணைப்பேறு.

உதாரணம் :

'அருவியங் குன்ற மரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்பரையன் பாவை — பெருமான்

அணியாக மாரத் தழுவினு டான்முன்
தணியாத ஊட றணிந்து.'

எனவரும்.

இங்கே முயன்ற தொழில் 'ஊட' றணிவித்தல் எனவும், அதன் பயனாகிய காரியம் ஊடறணிதல் எனவும், அதுவும் இராவணன் மலையைப் பெயர்த்தலாகிய வேறொரு காரணத்தாற் சித்தியாயிற்று எனவும் அறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'வேண்டிய மாற்றங் கொள்ளாள்
வெகுண்டுசென் றிடுவாண் முன்னீர்
ஆண்டொரு மதமால் யானை
யடர்த்துவர் திடலு மஞ்சிப்
பூண்டிடு புலவி நீங்கிக்
கணவனைப் புல்லிக் கொண்டாள்
ஆண்டரு தோளி னானு
மிபத்தினைத் தொழுது நின்றான்.' (கந்தபுராணம்)

## 22. உதாத்தவணி

எஉ. வியத்தகு செல்வமு மேம்படு முள்ளமும்
உயர்ச்சி புனைந்துரைப் பதுதாத் தமாகும்.

இதன்பொருள் — வியக்கத்தக்க செல்வத்தின் உயர்ச்சியையாவது, விரும்பத்தக்க உள்ளத்தின் உயர்ச்சியையாவது அலங்கரித்துச் சொல்லுவது உதாத்தம் என்னும் அணியாகும் என்றவாறு.

உதாத்தம் - பிறிதொன்றற்கில்லாத மகத்துவம். சிலர் இதனை 'வீறுகோளணி' என மொழி பெயர்ப்பர். உள்ளம் - ஊக்கம்.

### க. செல்வப்பெருமை

உதாரணம் :

'கன்றும் வயவ ரினங்கள் பலகவர்ந்தும்
என்றும் வறிஞ ரினங்கவர்ந்தும் — ஒன்றும்

அறிவரி தாகிற்கு மளவினதா லம்ம
செறிகதிர்வேற் சென்னி திரு.'

எனவரும்.

இங்கே சோழனுடைய செல்வத்தின் மகத்துவஞ் சொல்லப்பட்டவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'பொற்சிறு தேர்மிசைப் பைம்பொற் போதகம்
நற்சிறா ரூர்தலி னங்கை மார்விரீஇ
உற்றவர் கோழிமே லெறிந்த வொண்குழை
மற்றத்தே ருருள்கொடா வளமை சான்றவே.'

(சிந்தாமணி).

எனவரும்.

இங்கே நெற்கவர வந்த 'கோழி'க்குப் பெண்களெறிந்த காதணி 'தே'ரைத்தடுக்கின்றதெனை ஏமாங்கதநாட்டுச் செல்வப்பெருமை கூறியவாறறிக.

## உ. உள்ளப்பெருமை

உதாரணம் :

'மண்ணகன்று தன்கிளையி னீங்கி வனம்புகுந்து
பண்ணுந் தவத்திசைந்த பார்த்தன்றன் — எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலந்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு.'

எனவரும். இங்கே அருச்சுனனது உள்ளத்தின் பெருமை கூறியவாறறிக.

## 23. அவநுதியணி

எ௩. சிறப்பினும் பொருளினுங் குணத்தினு முண்மை
மறுத்துப் பிறிதுரைப்ப தவநுதி யாகும்.

இதன்பொருள் - சிறப்பின்கண்ணுவது பொருளின்கண்ணுவது குணத்தின்கண்ணுவது இயல்பாயுள்ள

தன்மையை மறுத்துவிட்டு வேறொரு தன்மையை ஏற்றிச் சொல்லுவது அவநுதி என்னும் அணியாகும் என்றவாறு.

அவநுதி - மறுத்துரைத்தல்.

## க. சிறப்பவநுதி

உதாரணம் :

'நறைகமழ் தார்வேட்டார் நலனணியு நாணும்
நிறையு நிலேதளரா நீர்மை — அறநெறிசூழ்
செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடுபோர்
வெங்கோப மால்யானே வேந்து.'

எனவரும்.

இங்கே அரசனைச் சிறப்பித்தற்கண் 'செங்கோ'ன்மை மறுத்துக் 'கொடுங்கோ'ன்மையேற்றிச் சொல்லப்பட்டது.

## உ. பொருளவநுதி

உதாரணம் :

'நிலனும் விசும்பா நிமிர்கானீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியா மன்றி — மலர்கொன்றை
ஒண்ணறுந் தாரா னொருவனிய மானனுமாய்
எண்ணிறந்த வெப்பொருளு மாம்.'

எனவரும்.

இங்கே 'கொன்றை யொண்ணறுந் தாரான்' என்னும் பொருளின்கண் ஒருவனுந் தன்மை மறுத்து 'நிலன்' முதலிய பலவாந் தன்மை சொல்லப்பட்டவாறறிக.

## ங. குணவவநுதி

உதாரணம் :

'மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கு மாரப்
பனித்தொடையற் பார்த்திவர்கோ னெங்கோன் — தனிக்
தண்மை நிழற்றன்று தற்றொழுத பேதையர்க்கு [கவிகை
வெம்மை நிழற்றாய் மிகும்.'

எனவரும்.

இங்கே சோழனுடைய குடையிலே தண்மை மறுத்து வெம்மை யேற்றிச் சொல்லப்பட்டவாறறிக.

இவ்வலங்காரஞ் சிலேடையோடு கூடிவருதலுமுண்டு.

உதாரணம்:

'நறவேந்து கோதை நலங்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியா னல்லன் — துறையின்
விலங்காமை நின்று வியன்றமிழ்நா டைந்தின்
குலங்காவல் கொண்டொழுகுங் கோ.'

எனவரும்.

இங்கே 'வஞ்சியான்' என்பது வஞ்சிக்கமாட்டான் எனவும், வஞ்சி நகருடையவன் எனவுஞ் சிலேடையாக நின்றவாறறிக.

## 24. சிலேடையணி

எச. ஒருவகைச் சொற்றொடர் பலபொருட் பெற்றி
தெரிவுதர வருவது சிலேடை யாகும்.

இதன்பொருள் - உச்சரித்தற்கண் ஒருவடிவாக நின்ற சொற்றொடர் பலபொருளுடையதாக வருவது சிலேடையாகும் என்றவாறு.

சிலேடை - தழுவுதலுடையது; பலபொருள்களிணைந்து நிற்பதென்றபடி. குவலயானந்தகாரர் பலபொருளுடையதாகச் சொற்களைத் தொடுத்தலே சிலேடை என்பர்.

### சிலேடையணிவகை

எரு. அதுவே,
செம்மொழி பிரிமொழி யெனவிரு திறப்படும்.

இதன்பொருள் - அச்சிலேடையணி செம்மொழிச் சிலேடை எனவும் பிரிமொழிச்சிலேடை எனவும் இருவகைப்படும் என்றவாறு.

## க. செம்மொழிச்சிலேடை

பிரிக்கப்படுதலில்லாதனவாய் நேரே நின்று பலபொருள் கொடுக்குஞ் சொற்களாலாய தொடர் செம்மொழிச்சிலேடையாகும்.

செம்மை - நேர்மை. மொழி - சொல்.

இதனை முதனூலார் 'அபிந்நபதச்சிலேடை' என்பர். அபிந்நபதம் - பிரிக்கப்படாத சொல்.

உதாரணம்:

'செங்கரங்க ளாணிரவு நீக்குந் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயில — பொங்குதயத்
தோராழி வெய்யோ னுயர்ந்தநெறி யொழுகும்
நீராழி நீணிலத்து மேல்.'

எனவரும்.

இது சூரியனுக்குஞ் சோழனுக்குஞ் சிலேடை. இங்கே 'கரம்', 'இரவு' முதலிய சொற்கள் நேரே நின்று இருபொருள் தந்தவாறறிக.

## உ. பிரிமொழிச்சிலேடை

பிரிக்கப்பட்டுப் பலபொருள் பயக்குஞ் சொற்களாலாய தொடர் பிரிமொழிச்சிலேடையாகும்.

இதனை முதனூலார் 'பிந்நபதச்சிலேடை' என்பர். பிந்நபதம் - பிரிக்கப்படும் மொழி.

உதாரணம்:

'தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய
எள்ளா வரிமா னிடர்மிகுப்ப — உள்வாழ்தேம்
சிந்துந் தகைமைத்தே யெங்கோன் றிருவுள்ளம்
நந்துந் தொழில்புரிந்தார் நாடு.'

எனவரும்.

இது சோழனுடைய நண்பருக்கும் பகைவருக்குஞ் சிலேடை.

## இதுவுமது

எசு. ஒருவினை பலவினை முரண்வினை நியமம்
நியம விலக்கு விரோத மவிரோதம்
எனவெழு வகையினு மியலு மென்ப.

இதன்பொருள் - முன்னர்க் கூறப்பட்ட சிலேடையணி ஒருவினைச்சிலேடை, பலவினைச்சிலேடை, முரண்வினைச்சிலேடை, நியமச்சிலேடை, நியமவிலக்குச்சிலேடை, விரோதச்சிலேடை, அவிரோதச்சிலேடை என எழுவகையானும் நடக்கும் என்பர் என்றவாறு.

### ௩. ஒருவினைச்சிலேடை

உதாரணம் :

'அம்பொற் பணைமுகத்துத் திண்கோட் டணிநாகம்
வம்புற்ற வோடை மலர்ந்திலங்க — உம்பர்
நவம்புரியும் வானதியு நாண்மதியு நண்ணத்
தவம்புரிவார்க் கின்பந் தரும்.'

எனவரும்.

இது விநாயகருக்கும் மலைக்குஞ் சிலேடையாய் 'இன்பந் தரும்' என்னும் ஒரு வினையான் முடிந்தவாறறிக.

### ௪. பலவினைச்சிலேடை

உதாரணம் :

'தவிரா மதுவுண் களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் — குயிலிசையும்
மின்னுயிரா நுண்ணிடையார் மென்னோக்கு மேவலார்
இன்னுயிரை யீர்கின் றன.'

எனவரும்.

இது குயிற்குரலுக்கும், பெண்களின் கண்களுக்குஞ் சிலேடையாய், 'நீண்டு', 'மருவி' என்பன முதலிய பலவினை பற்றி வந்த வாறறிக.

## ரு. முரண்வினைச்சிலேடை

ஒன்றற்கொன்று மாறுபாடாயுள்ள வினையான் வருவது முரண்வினைச்சிலேடையாகும்.

முரண் - மாறு.

உதாரணம் :

'மாலை மருவி மதிதிரிய மாமணஞ்செய்
காலைத் துணைமேவ லார்கடிய — வேலைமிசை
மிக்கார் கலியடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலியடங்கும் புள்.'

எனவரும்.

இது, புணர்ந்தார்க்கும், பிரிந்தார்க்குஞ் சிலேடை. இங்கே 'மேவலார் கடிய' என்பது புணர்ந்தார் விளங்க எனவும், பிரிந்தாரஞ்ச எனவும் பொருள்பட்டு முரணுயிற்று.

## ௬. நியமச்சிலேடை

பலபொருள்களுக்கியையுமாறு சிலேடித்ததைத் தேற்றேகாரம் புணர்த்தி ஒன்றற்கு நியமமாக்குவது நியமச்சிலேடையாகும்.

உதாரணம் :

'வெண்ணீர்மை தாங்குவன முத்தே வெறியவாய்க்
கண்ணீர்மை சோர்வ கடிபொழிலே — பண்ணீர
மென்கோ லியாழே யிரங்குவன வேல்வேந்தே
நின்கோ லுலாவு நிலத்து.'

எனவரும்.

இங்கே 'வெண்ணீர்மை' என்பது வெண்மை எனவும், அறிவின்மை எனவும் பொருள்பட்டுச் சிலேடையாய் நின்றவாறும், அது முத்தொன்றிற்கே நியமமாகச் சொல்லப்பட்டவாறும், அதனுல் அவனிலத்திலே அறிவின்மை இல்லை என்பது பெறப்பட்டவாறும் அறிக. மற்றைய 'கண்ணீர்மை' முதலிய சிலேடைகளையும் இவ்வாறு முடிக்க. பின்வருவது மிது.

உதாரணம்:

'கொடியன மகளிர் தங்கள்
குழையுறுண் ணுசுப்பே வாளா
படுகொலை புரிவ மாதர்
படைநெடுங் குவளைக் கண்ணே
அடியிசை முறையிட் டென்று
மரற்றுவ சிலம்பே சூழ்ந்து
கடிமது நுகர்வ வன்னோர்
கருங்குழற் காமர் வண்டே.' (நைடதம்)

எனவரும்.

## எ. நியமவிலக்குச்சிலேடை

நியமஞ்செய்து கூறிய சிலேடையை வேறொன்றிற்குங் கூறி அந்நியமத்தை விலக்குவது நியமவிலக்குச் சிலேடையாகும்.

உதாரணம்:

'சிறைபடுவ புட்குலமே தீம்புனலு மன்ன
இறைவநீ காத்தளிக்கு மெல்லை — முறையில்
கொடியன குன்றத்தின் மாளிகையே யன்றிக்
கடியவிழ்பூங் காவு முள.'

எனவரும்.

இங்கே 'சிறைபடுவ' என்பது சிறகுகளுடையன எனவும், சிறைச்சாலையடைவன எனவும் பொருள்பட்டுச் சிலேடையாய் நின்றவாறும், 'புட்குலமே' என நியமஞ் செய்யப்பட்டவாறும், 'தீம்புனலு மன்ன' என அந்நியமம் விலக்கப்பட்டவாறும் அறிக. 'கொடியன' என்பதையும் அவ்வாறு முடிக்க.

## அ. விரோதச்சிலேடை

முன்னர்ச் சிலேடிக்கப்பட்ட பொருள்களுள் ஒன்று பின் வரும் பொருள்களோடு விரோதமுறத் தொடுக்கப்படுவது விரோதச் சிலேடையாகும்.

உதாரணம் :

'விச்சா தரனெனு மந்தரத்து மேவானல்
அச்சுத னேனுமம் மாயனலன் — நிச்ச
நிறைவான் கலையா னகளங்க னீதி
இறையா னநகனெனங் கோ.'

எனவரும்.

இங்கே வித்தையைத் தரித்தவன் எனவும், விஞ்சையன் எனவும் பொருள்படுகின்ற 'விச்சாதரன்' என்பது முன்னர்ச் செய்யப்பட்ட சிலேடை. அது விஞ்சையன் என்னும் பொருளிலே பின் வரும் 'அந்தரத்து மேவான்' என்பதனோடு விரோதித்து மற்றைப் பொருளை வலியுறுத்தியவாறறிக. மற்றையவைகளையும் இவ்வாறு பொருள் செய்து முடிக்க.

உதாரணம் :

'பூத்திருந்தும் புனற்றடங்கள் யாவரையுந்
தோய்ந்துபுகழ்ப் பொருளு மாக்குங்
காத்திருந்துங் கடிமலர்கள் கமழ்நறுந்தேன்
சோர்வுடைத்தாய்க் களிப்பு மாக்கும்
ஏத்திருந்தும் வயவர்சிலை யெதிர்ந்தவர்த
முயிர்வாங்கி யிசையு மீட்டும்
பாத்திருந்தும் புலவர்குழா மொருகலைமான்
றனைமணந்து பழியுந் தீரும்.'

எனவருவது மது.

இங்கே 'பூத்திருந்தும்' என்பது பூத் திருந்தப்பெற்று எனவும், பூப்புப்பெற்றிருந்தும் எனவும் பொருள்படும். பூப்புடைமை யாவரையுந் தோய்ந்து புகழ்தேடுதற்கு விரோதம். 'காத்திருந்தும்' என்பது முதலியவைகளையும் இவ்வாறு முடிக்க.

## கூ. அவிரோதச்சிலேடை

முன்னர்க் கொண்ட சிலேடைச் சொற்பொருள்களோடு பின்வருஞ் சிலேடைச்சொற்பொருள்கள் விரோதமுறாமல் இயையத் தொடுப்பது அவிரோதச் சிலேடையாகும்.

அவிரோதம் - விரோதமின்மை.

உதாரணம்:

> 'சோதி யிரவி கரத்தா னிரவொழிக்கும்
> மாதிடத்தான் மன்மதனை மாறழிக்கும் — மீதாம்
> அநக மதிதோற்றிக் குமுத மளிக்குந்
> தனத னிருநிதிக்கோன் றன்.'

எனவரும்.

இங்கே 'சோதியிரவி' என்பது முதலிய சிலேடைச் சொற்பொருள்களோடு பின் வந்த 'கரத்தா னிரவொழிக்கும்' என்பது முதலிய சிலேடைச்சொற்பொருள்கள் இணங்கி இயையுமாறறிக.

## 25. விசேடவணி

எள. குணந்தொழின் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட வொருபொருள் விளம்புதல் விசேடம்.

இதன்பொருள் – காரியசித்திக்கு வேண்டப்படுவனவாகிய குணம், தொழில் முதலாயின குறைவுபடுதல் காரணமாக மேம்பாடு தோன்ற ஒருபொருளைச் சொல்லுதல் விசேடவணியாகும் என்றவாறு.

விசேடம் - மேம்பாடு.

'முதலிய' என்பதனால் சாதிக்குறை, பொருட்குறை, உறுப்புக்குறை முதலியனவுங் கொள்ளப்படும்.

### க. குணக்குறைவிசேடம்

உதாரணம்:

> 'கோட்டந் திருப்புருவங் கொள்ளா வவர்செங்கோல்
> கோட்டம் புரிந்த கொடைச்சென்னி — நாட்டம்
> சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
> சிவந்தன செந்தீத் தெற.'

எனவரும்.

இங்கே சோழனுடைய கோபத்தினைக் காட்டும் 'புருவங் கோடுதல், கண்சிவத்தல் முதலிய குணங்களின் குறைவு காரணமாக அவன் செயற்கு விசேடம் கூறிய வாறறிக.

## ௨. தொழிற்குறைவிசேடம்

உதாரணம் :

'எங்கா முகில்பொழியா நாளும் புனறேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா — நீங்கா
வளைபட்ட தாளணிகண் மாறெதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாட்டா மரை.'

எனவரும்.

இங்கே 'நீங்கா வளைப்பட்ட தாளணிகள்' என்றதனால் யானையின் போர்த் தொழிலைக் குறைத்துக் காட்டிக் காரிய மாகி பகை வெல்லலின் மேம்பாடு தோன்றக் கூறியவாறறிக. பின்வருவது மிது.

உதாரணம் :

'உற்றா னலன்றவந் தீயினின் றூனல னாண்புனலா
வற்றா னலனுகர் வூந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்றா னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்றா னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே.'
(நால்வர்நான்மணிமாலை)

எனவரும்.

இங்கே அப்பூதிநாயனாரைத் 'துன்பில்பதம்' பெறுத லிலே விசேடமாக்குதற்குத் தவஞ்செய்தல் முதலிய தொழில்களின் குறை கூறப்பட்டது.

## ௩. சாதிக்குறைவிசேடம்

உதாரணம் :

'மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுபுண்ட
ஆயனார் மாறேற் றமர்புரிந்தார் — தூய
பெருந்தருவும் பின்னுங் கொடுத்துடைந்தார் விண்ணோர்மேற்
புரந்தரனும் வானோரும் போல்.'

எனவரும்.

இங்கே விட்டுணு இடையனாயிருந்தும் போரில் வென் றார் எனச் சாதிக்குறைவு காரணமாக விசேடங் கூறிய வாறறிக.

## ௪. பொருட்குறைவிசேடம்

உதாரணம் :

> 'தொல்லை மறைதேர் துணைவன்பால் யாண்டுவரை
> எல்லை யிருநாழி நெற்கொண்டோர் — மெல்லியலாள்
> ஒங்குலகில் வாழு முயிரனைத்து மூட்டுமால்
> ஏங்கொலிநீர்க் காஞ்சி யிடை.'

எனவரும்.

இங்கே உலகிலுள்ள உயிர்களெல்லாவற்றையும் உண்பித்தலால் உமாதேவியாரை விசேடமாக்குதற்கு 'இருநாழி நெற்கொண்டு' எனப் பொருட்குறைவு கூறப்பட்டது.

## ௫. உறுப்புக்குறைவிசேடம்

உதாரணம் :

> 'யானை யிரதம் பரியா ளிவையில்லை
> தானு மநங்கன் றனுக்கரும்பு — தேனார்
> மலரைந்தால் வென்று வடுப்படுத்தான் மாரன்
> உலகங்கண் மூன்று மொருங்கு.'

எனவரும்.

இங்கே வெல்லுதற்குக் காரணமாகிய 'யானை', 'இரதம்' முதலிய உறுப்புக்களின்மைகாரணமாக உலகம் மூன்றினையும் வென்றான் என மன்மதனுக்கு விசேடந்தோன்றக் கூறியவாறறிக.

# 26. ஒப்புமைக்கூட்டவணி

எஅ. கருதிய குணத்தின் மிகுபொரு ளுடன்வைத்
தொருபொரு ளுரைப்ப தொப்புமைக் கூட்டம்.

இதன்பொருள் - சொல்லக் கருதிய பொருளின் குணம் யாதோ அக்குணத்தினை அப்பொருளினும் அதிகமாகவுடைய மற்றொன்றனோடு அப்பொருளையும் ஒருங்குசேர்த்துச் சொல்லுவது ஒப்புமைக்கூட்டம் என்னும் அணியாகும் என்றவாறு.

ஒப்புமைக் கூட்டம் - சமத்தன்மையுடையவைகளை ஒருங்கு கூட்டுதல். இதனை முதனூலார் 'துல்லியயோகிதை' என்பர். துல்லியம் - ஒப்புமை. யோகிதை - கூட்டம்.

## இதுமவது

எக. புகழினும் பழிப்பினும் புலப்படு மதுவே.

இதன்பொருள் - அவ்வொப்புமைக் கூட்டவணியானது ஒரு பொருளைப் புகழ்ந்துரைத்தற்கண்ணும், இகழ்ந்துரைத்தற்கண்ணும் தோன்றும் என்றவாறு.

### க. புகழொப்புமைக்கூட்டம்

உதாரணம் :

'பூண்டாங்கு கொங்கை பொரவே குழைபொருப்புந்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் — நீண்டாங்கு
வண்மைசால் சான்ற வருங்காஞ்சி வண்பதியும்
உண்மையா லுண்டிவ் வுலகு.'

எனவரும்.

இங்கே 'உலகு' உளதாதற்குக் காரணமான குணங்களிற் சிறந்த சிவன் முதலிய பொருள்களோடு 'காஞ்சி' நகரமுங் கூட்டிச் சொல்லப்பட்டுப் புகழப்பட்டவாறறிக. பின்வருவது மிது. உதாரணம் :

'என்னனைய முனிவரரு மிமையவரு
மிடையூறொன் றுடைய ராற்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாது புகலுண்டோ
விகல்கடந்த புலவு வேலோய்.' (இராமாயணம்,

எனவரும்.

இங்கே புகலிடமாக அடைதற்குச் சிறந்த கைலாச மலை முதலியவைகளோடு 'அயோத்தி' நகரும் ஒருங்குவைத்துப் புகழப்பட்டவாறறிக.

உ. பழிப்போப்புமைக்கூட்டம்

உதாரணம் :

‘கொள்பொருள் வெஃகிக் குடியலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல்லிருந் தெல்லை கடப்பாளு மிம்மூவர்
வல்லே மழையருக்குங் கோள்.’

எனவரும்.

இங்கே நெறிதவறிய பெண்ணைக் ‘குடியலைக்கும் வேந்தன்’ முதலியவர்களோடு சேரவைத்துப் பழித்தவாறறிக. பின்வருவது மிது. உதாரணம் :

‘நட்பிடைக் குய்யம் வைத்தான்
பிறர்மனை நலத்தைச் சேர்ந்தான்
கட்டழற் காமத் தீயிற்
கன்னியைக் கலக்கி னானும்
அட்டுயி ருடலந் தின்றா
னமைச்சனா யரசு கொன்றான்
குட்டநோய் நரகந் தன்னுட்
குளிப்பவ ரிவர்கள் கண்டாய்.’ (சிந்தாமணி)

எனவரும்.

## 27. விரோதவணி

ரூ௦. மாறுபடு சொற்பொருண் மாறுபாட் டியற்கை
விளைதர வுரைப்பது விரோத மாகும்

இதன்பொருள் - மாறுபட்ட சொல்லாலாவது பொருளாலாவது மாறுபாட்டுத் தன்மை தோன்றச் சொல்லுவது விரோதம் என்னும் அணியாகும் என்றவாறு.

க. சொல்விரோதம்

உதாரணம் :

‘காலையு மாலையுங் கைகூப்பிக் காரொழுதான்
மேலை வினையெல்லாங் கீழவாம் — கோலக்

கருமான்றேல் வெண்ணீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.'

எனவரும்.

இங்கே கருமை, வெண்மை முதலியன ஒன்றற்கொன்று மாறுபட்ட சொற்கள். பின்வருவது மிது.

உதாரணம் :

'ஒருகையி லேந்து முடிக்காய் சரண
முடையென வாசை யுடுத்தாய் சரணம்
முருகலர் பதுமத் தடியாய் சரண
முனிவொடு பகலை யடித்தாய் சரணம்
திருமதி பகலழல் விழியாய் சரணந்
திருமக னெரிய விழித்தாய் சரணம்
பொருவறு மிமயப் பிடியாய் சரணம்
பொருதிரி வேல்கை பிடித்தாய் சரணம்.'

(மச்சபுராணம்)

எனவரும்.

## உ. பொருள்விரோதம்

உதாரணம் :

'சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தடங்க
ஆலு மயிலினங்க ளார்த்தெழுந்த — ஞாலம்
குளிர்ந்த முகில்கறுத்த கோபஞ் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்.'

எனவரும்.

இங்கே குயிலுக்கு அடங்குதலும், மயிலுக்கு ஆர்த்தெழுதலும் முதலாயுள்ள ஒன்றற்கொன்று மாறுபட்ட தன்மை தோன்றச் சொல்லியவாறும், அதனாற் கார்காலச் சிறப்புத் தோன்றியவாறும் அறிக.

இவ்வணி சிலேடை முதலியவைகளோடு சேர்ந்தும் வரும்.

உதாரணம் :

'இனமா னிகல வெளிய வெனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும் — வனமார்

கரியுருவங் கொண்டு மரிசிதறக் காயும்
விரிமலர் மென்கூந்தல் விழி.'

எனவரும்.

இங்கே கண்ணுக்கு 'மான்' பகைக்க 'எளிய'வாதல் 'புண்டரிகம் வாட்டு'தற்கும், 'கரியுருவ'ங் கொண்டிருத்தல் 'அரிசிதறக் காய்'தற்கும் விரோதம். 'புண்டரிகம்' என்பது தாமரைக்கும் புலிக்கும், 'கரி' என்பது கருமைக்கும் யானைக்கும், 'அரி' என்பது சிங்கத்திற்கும் வரிக்குஞ் சிலேடை. பின்வருவது மிது. உதாரணம் :

'கொங்கை யேந்திய வாண்களு மவணகொம் புடைய
துங்க வேங்கையின் குலமெலா மவணபால் சுரந்து
பொங்கு சேவினங்களு மவணவான் புனலை
அங்கண் வேட்டுணு மொற்றைத்தா ளெகினமு மவண.'
(காஞ்சிப்புராணம்)

எனவரும்.

இங்கே 'ஆண்'களுக்குக் கொங்கையுடைமையும், 'வேங்கை'க்கு (புலிக்கு) 'கொம்பு'டைமையும், 'சேவினங்க'ளுக்கு (எருதுகளுக்கு) 'பால்சுர'க்கையும், 'எகின'ங்களுக்கு (அன்னங்களுக்கு) 'ஒற்றைத்தா'ளுடைமையும், விரோதமாய் அந்நாட்டுக்கு அதிசயந் தோன்ற நின்றவாறும், 'கொங்கு' பரிமளம் எனவும், 'ஆண்' முதலியன ஒவ்வொரு மரங்கள் எனவும் பொருள்பட்டுச் சிலேடையாய் நின்றவாறும் அறிக.

## 28. மாறுபடுபுகழ்நிலை

ருக. கருதிய பொருடொகுத் தாங்கது பழித்தற்கு
வேறொன்று புகழ்வது மாறுபடு புகழ்நிலை.

இதன்பொருள் - சொல்லக் கருதிய பொருளை மறைத்துவிட்டு அதனைப் பழிக்கும்பொருட்டு வேறொன்றைப் புகழ்ந்துரைப்பது மாறுபடுபுகழ்நிலை என்னும் அணியாகும், என்றவாறு.

குவலயானந்தகாரர் சொல்லக் கருதிய பொருளின் இகழ்ச்சி புலப்படுமாறு மற்றொரு பொருளைப் புகழ்ந்துரைப்

பது 'மாறுபடுபுகழ்நிலை' என்பர். இதனை முதனூலார் 'அப்பிரத்துதப்பிரசஞ்சை' என்பர்.

உதாரணம் :

'இரவறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலுந் தண்ணீரும் புல்லும் — ஒருவர்
படைத்தனவுங் கொள்ளாவிப் புள்ளிமான் பார்மேற்
றுடைத்தனவே யன்றோ துயர்.'

எனவரும்.

இங்கே சொல்லக்கருதி மறைத்த பொருள் யாசகன் எனவும், யாசகனைப் பழித்தற்காக 'இரவறியா' என்பது முதலிய கொண்டு அலங்கரித்துச் சொல்லப்பட்டது 'புள்ளிமான்' எனவும் அறிக. பின்வருவது மிதுபோலும்.

உதாரணம் :

'போதுந் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து
சூதப் பணைதழுவித் தோன்றுமால் — மாதே
பலமா தவங்கள் பயின்றதோ பண்டிக்
குலமா தவியின் கொடி.'

எனவரும்.

இங்கே குருக்கத்திக் கொடியைப் புகழும் முகத்தால் தலைவனைக் கரவிற் கூடிய ஒரு தலைவி நிந்திக்கப்பட்டவாறறிக. பின்வருவனவு மிதுபோலும்.

உதாரணம் :

'அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை
நகைத்துரைப்பா னரக்க ரேனும்
சிந்தனையில் விரகெண்ணார் செருமுகத்தில்
வஞ்சகமுஞ் செய்யா ரையா
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார்
நிரைக்கழுவில் வீழச் சொல்லார்
உந்துபுன லிடைப்புதையா ரோருரி
விருப்பகற்று ருரையுந் தப்பார்.' (பாரதம்)

எனவும்,

'செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ந்நன்றி
கொன்றறியார் தீங்கு பூணார்

அழுந்துமனத் தழுக்குரு ரச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கான
மடைவித்துக் கொல்ல வெண்ணார்
எழுந்தமரின் முதுகிடா ரிவையெல்லா
மடிகளுக்கே யேற்ப வென்றான்.' (பாரதம்)

எனவும் வருவன.

இவை தன்னை அரக்கிமகனென்றிகழ்ந்த துரியோதன னுடைய வசைகள் புலப்படுமாறு அரக்கரைப் புகழ்ந்து கடோற்கசன் கூறிய கவிகள்.

## 29. புகழாப்புகழ்ச்சியணி

அஉ. பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.

இதன்பொருள் – பழிப்பது போலும் பான்மையி னால் ஒரு பொருளுக்கு மேம்பாடு தோன்றச் சொல்லுவது புகழாப்புகழ்ச்சி என்னும் அணியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் 'வியாசஸ்துதி' என்பர்.

உதாரணம்:

'போர்வேலின் வென்றதூஉம் பல்புகழாற் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தாற் றாங்குவதூஉம் — நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையாற் காப்பதூஉஞ் செங்கண்மால்
ஓரடிக்கீழ் வைத்த வுலகு.'

எனவரும்.

இங்கே விட்டுணுவால் 'ஓரடிக்கீழ் வைத்த வுலகு' எனப் பழிப்பது போலக் கூறி அவ்வுலகை மனிதனாகிய இச்சோழன் வென்று புகழான் மூடிப் புயத்திலே தாங்கியது செயற்கருஞ் செயலெனை மேம்பாடு தோன்ற வைத்தவாற றிக. உதாரணம்:

'நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினு என்றே — மநுநூல்

புணர்ந்த நெறியொழுகும் பூழியர்கோ னிந்நாள்
மணந்த தடமலர்மேன் மாது.'

எனவருவது மது.

இங்கே 'சோழனே நின்குலத்தோர் யாவரும் புணர்ந்த இலக்குமியை நீயும் புணர்ந்தாய்' எனப் பழிப்பது போலக் கூறி அவனுக்குப் பெருஞ்செல்வன் என்னும் மேன்மை தோன்ற வைத்தவாறறிக.

## 30. நிதரிசநவணி

அ௬. ஒருவகை நிகழ்வதற் கோத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை யென்றிவை புலப்பட
நிகழ்வ தாயி னிதரிசந மதுவே.

இதன்பொருள் - ஒரு பிரகாரம் நிகழ்வதாகிய ஒரு பொருளுக்குரிய பிரயோசனமானது பிறிதொரு பொருளுக்கு நன்மையாவது தீமையாவது புலப்பட நிகழ்வதாகச் சொல்லப்படுமாயின், அது நிதரிசநம் என்னும் அணியாகும் என்றவாறு.

குவலயானந்தகாரர் ஒரு பொருள் தன் செய்கையால் மற்றொரு பொருளுக்கு நற்பயனாவது தீப்பயனாவது காட்டுவது நிதரிசநம் என்பர். நிதரிசநம் - காட்சி.

### க. புகழ்மைநிதரிசநம்

உதாரணம் :

'பிறர்செல்வங் கண்டாற் பெரியோர் மகிழ்வுஞ்
சிறியோர் பொறாத திறமும் — அறிவுறீஇச்
செங்கமல மெய்ம்மலர்ந்த தேங்குமுத மெய்யயர்ந்த
பொங்கொளியோன் வீறெய்தும் போது.'

எனவரும்.

இங்கே தாமரைப்பூவின் மலர்ச்சியாகிய பயன் பெரியோரிடத்து நன்மை புலப்பட நிகழ்ந்ததாகச் சொல்லப் பட்டவாறறிக.

### உ. தீமைநிதரிசநம்

உதாரணம்:

'பெரியோ ருழையும் பிழைசிறி துண்டாயின்
இருநிலத்துள் யாரு மறிதல் — தெரிவிக்கும்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு.'

எனவரும்.

இங்கே சந்திரனிடத்துள்ள 'மறு' பெரியோரிடத்தும் 'பிழை' யுண்டென்பது புலப்பட நிகழ்ந்தவாறறிக. பின்வருவது மிது. உதாரணம்:

'இட்ட மெத்திய வெய்யவ ரிடுக்கண்வந் திறுத்தான்
முட்ட வந்தலைப் பகைவ ராகுவரென முன்னோர்
பட்டு ரைத்தன காட்டுமோ பானுவாற் பரியுங்
கட்ட கட்டலைக் கொட்டைவான் சரோருகக் களையே.'
(இரகுவமிசம்)

எனவரும்.

## 31. புணர்நிலையணி

௨௬. வினைபண் பெனுமிவை யிருபொருட் கொன்றே
புணர மொழிவது புணர்நிலை யாகும்.

இதன்பொருள் - தொழில், குணம் என்னும் இவை காரணமாக இருபொருளுக்கு முடிக்குஞ் சொல்லாக ஒரு வாசகம் புணர்ந்து நிற்கச் சொல்லுவது புணர்நிலையென்னும் அணியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் 'சகோத்தி' என்பர். சக - கூட, உத்தி - சொல்லல். கூடி நிற்கும் வலியினால் இருபொருளுக்கும் முடிவு ஒரு வாசகமாக வருவதே 'சகோத்தி' என்று சாகித்தியதர்ப்பணகாரர் கூறுவர்.

### க. வினைப்புணர்நிலை

உதாரணம்:

'வேண்டுருவங் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகிலுடனே நீர்பொழிந்த — ஆண்டகையோர்

மேவல் விரும்பும் பொருணசையான் மெல்லாவி
காவல் புரிந்திருந்தோர் கண்.'

எனவரும்.

இங்கே 'கண்', 'முகில்' என்னும் இருபொருளுக்கும் உடனிகழ்ச்சிபற்றி 'நீர்பொழிந்த' என ஒரு வாசகம் புணர்ந்து நிற்கக் கூறியவாறறிக.

உ. பண்புப்புணர்நிலை

உதாரணம்:

'பூங்காவிற் புள்ளொடுங்கும் புன்மாலைப் போதுடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் — தாங்காதல்
வைக்குந் துணைவர் வருமவதி பார்த்திரவி
உய்க்குந் தமியா ருயிர்.'

எனவரும்.

இங்கே 'தமியாருயிர்', 'மாலைப்போது' என்னும் இருபொருளையும் 'வெம்மையவாய் நீண்டன' எனக் குணம் பற்றி ஒரு வாசகத்தான் முடித்தவாறறிக.

## 32. பரிவருத்தனையணி

அரு. பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே.

இதன்பொருள் - பொருள்களுடைய பரிமாறுதலைச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அணியாம் என்றவாறு.

பரிவருத்தனை - ஒன்று கொடுத்து வேறொன்று வாங்குதல்.

இது சமப்பொருளோடு சமப்பொருளும், அதிகமான பொருளோடு குறைவான பொருளும், குறைவான பொருளோடு அதிகமான பொருளும் மாறப்படுதல் பற்றி மூவகைப்படும் என்பாருமுளர். உதாரணம்:

'காமனை வென்றோன் சடைமதியுங் கங்கையுந்
தாமகிழ லோரொன்று தாங்கொடுத்து — வாமப்

பருவா ளரவப் பணமணிக டோறும்
உருவா யிரம்பெற் றுள.’

எனவரும்.

இங்கே சந்திரனுங் கங்கையும் ஒவ்வோர் நிழல் கொடுத்து ஆயிரம் ஆயிரம் உருவம் பெற்றுள எனப் பரிமாறுதல் கூறப்பட்டது. பின்வருவனவு மிது.

உதாரணம் :

‘கடுப்பொதி நயன வாளிக்
குறத்தியர் காமர் கண்ணி
தொடுப்பமென் னகை மாறிச்
சூடல்புன் னகைஞ் சோரா
தெடுப்பவிக் கார நேர்கொண்
டைபவே யார மேறக்
கொடுப்பநற் கண்டில் வெண்ணெய்
கொள்வதோ வாவின் வெண்ணெய்.’ (இரகுவமிசம்)

எனவும்,

‘சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.’ (திருக்குறள்)

எனவும் வரும்.

## 33. வாழ்த்தணி

அகூ. இன்னார்க் கின்ன தியைக வென்றுதா
முன்னியது விரித்தல் வாழ்த்தென மொழிப.

இதன்பொருள் – இவருக்கு இன்னது பொருந்துக என்று தாம் நினைத்ததை விரித்துச் சொல்லுவது வாழ்த்தென்னும் அணியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் ‘ஆசி’ என்பர். ‘ஆசி’யாவது இட்டமான நன்மை விருத்தியாகும்படி பிரார்த்தித்தல்.

உதாரணம் :

‘மூவாத் தமிழ்பயந்த முன்னூன் முனிவாழி
ஆவாழி வாழி யருமறையோர் — காவிரிநாட்

டண்ண லநபாயன் வாழி யவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.'

எனவரும்.

இங்கே அநபாயனுக்குத் தீர்க்காயுசு நிகழ்க எனவும், அவனுட்டிற்கு நன்மை பயப்பனவாகிய 'மழை' முதலியன வாழ்க எனவும் வாழ்த்தியவாறறிக.

## 34. சங்கீர்ணவணி

௯எ. மொழியப் பட்ட வணிபல தம்முட்
டழுவ வுரைப்பது சங்கீ ரணமே.

இதன்பொருள் – மேலே சொல்லப்பட்ட அலங்காரங்கள் பல தம்முள்ளே கலந்து ஓரிடத்திலே வருமாறு சொல்லுவது சங்கீர்ணம் என்னும் அணியாகும் என்றவாறு.

சங்கீரணம் - கலப்பு, கலந்த பலவிதசாதி.

உதாரணம் :

'தண்டுறை நீர்நின்ற தவத்தா லளிமருவு
புண்டரிக நின்வதநம் போன்றதால் — உண்டோ
பயின்று ருளம்பருகும் பான்மொழியாய் பார்மேன்
முயன்றுன் முடியாப் பொருள்.'

எனவரும்.

இங்கே 'தண்டுறை நீர்நின்ற தவத்தால்' என்பது தற்குறிப்பேற்றம். 'அளிமருவு' என்பது சிலேடை. 'புண்டரிக நின்வதநம் போலும்' என்பது உவமை. 'உளம்பருகும் பான் மொழியாய்' என்பது சுவை. 'முயன்றுன் முடியாப் பொருள் உண்டோ' என்பது வேற்றுப்பொருள் வைப்பு. இவை யெல்லாங் கலந்து நிற்றலால் இது சங்கீரணம்.

### உவமவுருவகங்களின்புறநடை

௯௯. ஒப்புமை யில்லது மையமு முவமையிற்
செப்பிய திறமு முவம வுருவகம்
உருவகத் தடக்கலு முணர்ந்தனர் கோளலே.

இதன்பொருள் – ஒப்புமையில்லதையும், ஐயத்தையும் உவமையணியுள்ளே அடக்கிப் பொதுநீங்குவமை எனவும், ஐயவுவமை எனவுஞ் சொல்லிய தன்மையையும், உவமவுருவகத்தினை உருவகவணியுள்ளே அடக்கிச் சொல்லிய தன்மையையும் ஆராய்ந்தறிந்து கொள்க என்றவாறு.

## 35. பாவிகவணி

௬௬. பாவிக மென்பது காப்பியப் பண்பே.

இதன்பொருள் – பாவிகமென்று சொல்லப்படுவது கவிஞனுடைய கருத்தினாலே காப்பியங்களிலே அமைந்து தோன்றுங் குணமேயாம் என்றவாறு.

'பாவிகம்' என்பது பாவசம்பந்தமுடையது எனப் பொருள் படும். பாவமாவது கவிஞனுடைய கருத்து.

இவ்வணி காவியத்தின் ஆரம்பந் தொடங்கி முடிவுபரியந்தம் வனப்பாக அமைந்திருப்பதன்றி ஒரு சொல்லிலாவது வாக்கியத்திலாவது அமைந்திருப்பதன்று.

இராமாயணத்திலே இராமர் முதலியோர் சரிதத்தினாலே சத்தியம், தருமம், கற்பு, வீரம் முதலிய விடயங்கள் கவிகருதியவாறு அமைந்து தோன்றுதலை உதாரணமாகக் கொள்க.

## சொல்லணியியல்

### 1. மடக்கு

௬௦. எழுத்தின் கூட்ட மிடைபிறி தின்றியும்
பெயர்த்தும்வேறு பொருடரின் மடக்கெனும் பெயர்த்தே.

இதன்பொருள் – எழுத்துக்களின் கூட்டம் இடைவிட்டும், இடை விடாதும் பின்னும் வந்து வேறு பொருடருமாயின், அது மடக்கென்னும் பெயருடையதாகும் என்றவாறு.

மடக்கு - மடங்கிவருதலுடையது. இதனை முதனூலார் 'யமகம்' என்பர்.

### இதுவுமது

௬௧ அதுதான்,
ஓரடி முதலா நான்கடி காறுஞ்
சேரு மென்ப தெளிந்திசி னோரே.

இதன்பொருள் – அந்த மடக்கென்னுஞ் சொல்லணி ஓரடி முதலாக நான்கடிவரையும் வருமென்று சொல்லுவர் அறிஞர் என்றவாறு.

### மடக்குவகை

௬௨. ஆதி யிடைகடை யாதியோ டிடைகடை
இடையொடு கடைமுழு தெனவெழு வகைத்தே.

இதன்பொருள் – அம்மடக்கு ஆதிமடக்கு, இடைமடக்கு, கடைமடக்கு, ஆதியோடிடைமடக்கு, ஆதியோடு கடைமடக்கு, இடையோடு கடைமடக்கு, முழுதுமடக்கு என எழுவகைப்படும் என்றவாறு.

## இதுவுமது

கூகூ. ஓரடி யொழிந்தன தேருங் காலை
இணைமுதல் விகற்ப மேழு நான்கும்
அடைவுறும் பெற்றியி னறியத் தோன்றும்.

இதன்பொருள் – ஓரடிமடக்கல்லாதன ஆராய்வுழி இணைமுதலியன போன்ற வேறுபாடுடைய ஏழும் நான்குமாகிய பதினொன்றும் முறையே விளங்கித் தோன்றும் என்றவாறு.

யாப்பிலக்கணத்திலே கூறிய இணை, பொழிப்பு முதலிய தொடைவிகற்பம் போல மடக்கும் வருதலின் "இணைமுதல் விகற்பம்" என்றார். இம்மடக்கும் அளவடி நான்கால் வருஞ் செய்யுளிற் கொள்ளப்படும்.

முதலீரடியுமடக்கு, முதலடியுமூன்றாமடியுமடக்கு, முதலடியுநான்காமடியுமடக்கு, கடையீரடியுமடக்கு, இடையீரடியுமடக்கு, இரண்டாமடியுநான்காமடியுமடக்கு என்னும் இரண்டடிமடக்கு ஆறும், முதன்மூன்றடியுமடக்கு, பின்மூன்றடியுமடக்கு, இரண்டாமடியொழிந்த மூன்றடியுமடக்கு, மூன்றாமடியொழிந்த மூன்றடியுமடக்கு என்னும் மூன்றடிமடக்கு நான்கும், முற்றுமடக்கு ஒன்றுமாகப் பதினொன்றுங் கொள்க.

இப்பதினொன்றும், ஓரடிமடக்கு நான்குமாகிய பதினைந்தும் ஆதிமடக்கு முதலிய ஏழுவகையோடுங் கூட்ட நூற்றைந்துவகைப்படும். அவை இடையிட்டு வருதல் முதலியவற்றாற் பின்னும் பலவகைப்படும். அவற்றுட் சில இங்கே கூறப்படுகின்றன.

### க. முதலடிமுதன்மடக்கு

உதாரணம் :

'துறைவா துறைவார் பொழிற்றுணைவர் நீங்க
உறைவார்க்கு முண்டாங்கொல் சேவல் — சிறைவாங்கிப்
பேடைக் குருகாரப் புல்லும் பிறங்கிருள்வாய்
வாடைக் குருகா மனம்.'

என்வரும். இங்கே 'துறைவா துறைவார்' என்பது மடக்கு.

## உ. இரண்டாமடிமுதன்மடக்கு

உதாரணம் :

'கனிவா யிவள்புலம்பக் காவல நீங்கில்
இனியா ரினியா ரெமக்குப் — பனிநாள்
இருவராத் தாங்கு முயிரன்றி யெங்குண்
டொருவராத் தாங்கு முயிர்.'

எனவரும்.

## ௩. மூன்றாமடிமுதன்மடக்கு

உதாரணம் :

'தேங்கானன் முத்தலைக்குந் தில்லைப் பெருந்தகைக்
கோங்காரத் துட்பொருளா மொண்சுடர்க்கு — நீங்கா
மருளா மருளா தரித்துரைக்கு மாற்றம்
பொருளாம் புனைமாலை யாம்.'

எனவரும்.

## ச. ஈற்றடிமுதன்மடக்கு

உதாரணம் :

'இவளளவுந் தீயுமிழ்வ தென்கொலோ தோயும்
கவள மதமான் கடத்திற் — றிவளும்
அலையார் புனலருவி நீயணுகா நாளின்
மலையா மலையா நிலம்.'

எனவரும்.

## ரு. முதலடியுமிரண்டாமடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'நினையா நினையா நிறைபோ யகலா
வினையா வினையா மிலமால் — அனையாள்
குரவாருங் கூந்தற் குமுதவாய்க் கொம்பிற்
புரவாள நீபிரிந்த போது.'

எனவரும்.

### சு. முதலடியுமூன்றாமடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'அடையா ரடையா ராணழித்தற் கின்னல்
இடையூடு நெஞ்சமே யேழை — யுடையோர்
மயிலூ மயிலா மதர்நெடுங் கண்மாற்றங்
குயிலாமென் றெண்ணல் குழைந்து.'

எனவரும்.

### எ. முதலடியுமீற்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'மானவா மானவா நோக்கின் மதுகரஞ்சூழ்
கானவாங் கூந்தலெங் காரிகைக்குத் — தேனே
பொழியாரந் தார்மேலு நின்புயத்து மேலுங்
கழியா கழியா தரவு.'

எனவரும்.

### அ. மூன்றாமடியுநான்காமடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'மாத ருயிர்தாங்க வள்ளல் வருநெறியிற்
பேதுறவு செய்யும் பெரும்பாந்தள் — யாதும்
வரையா வரையா மெனுமா மதமா
விரையா விரையா வெழும்.'

எனவரும்.

### கூ. இரண்டாமடியுமூன்றாமடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'குரவார் குழலாள் குவிமென் முலைதாம்
விரவா விரவாமென் றென்றல் — உரவா
வரவா வரவா மெனநினையாய் வையம்
புரவாளர்க் கீதோ புகழ்.'

எனவரும்.

### க௰. இரண்டாமடியுமீற்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'மழையார் கொடைத்தடக்கை வாளபய னெங்கோன்
விழையார் விழையார் மெல்லாடை — குழையார்
தழையா முணவுங் கனியா மினமு
முழையா முழையா முறை.'

எனவரும்.

### கக. முன்னையமூன்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'இறைவா விறைவால் வளைகாத் திருந்தியார்
உறைவா நுறைவார் புயலால் — நறைவாய
வண்டளவு வண்டளவு நாளின் மயிலாலக்
கண்டளவி னீர்பொழியுங் கண்.'

எனவரும்.

### கஉ. இரண்டாமடியொழிந்தமூன்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'கோடியார் கோடியார் மதின்மூன்றுங் கொன்ற
படியார் பணைத்தடக்கை நால்வாய்க் — கடியார்
உரியா நுரியா ரெமையாள வோதற்
கரியார் கரியார் களம்.'

எனவரும்.

### கங. ஈற்றயலொழிந்தமூன்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'மலையு மலையு மகிழ்ந்துறையும் வேயும்
கலையுங் கலையுங் கடவுள் — தொலைவில்
அமரி யெமக்கரணு மென்னுமவர் முன்னிற்
குமரி குமரிமேற் கொண்டு.'

எனவரும்.

## கச. முதலொழிந்தமூன்றடியுமுதன்மடக்கு

உதாரணம் :

'பாலையாழ் தன்னிற் பதிற்றிரட்டி வெய்தன்றே
யாலைவாய் மாலைவா யின்னிசை — மேலுரை
மேவலர் மேவலர் மெல்லாவி வாட்டாதோ
காவலர் காவலராங் கால்.'

எனவரும்.

## கரு. முற்றுமடக்கு

உதாரணம் :

'வரைய வரைய சுரஞ்சென்றார் மாற்றம்
புரைய புரையவெனப் பொன்னே — உரையல்
நனைய நனைய தொடைநம்மை வேய்வர்
வினையர் வினையர் விரைந்து.'

எனவரும். இவை பதினைந்தும் அடிமுதன் மடக்கு.

## க௬. இடைமுற்றுமடக்கு

உதாரணம் :

'மனமேங் குழைய குழையவாய் மாந்தர்
இனமீங் கரிய கரிய — புனைவதனத்
துள்வாவி வாவிக் கயலொக்கு மென்னுள்ளங்
கள்வாள வாளவாங் கண்.'

எனவரும். ஒழிந்தன வந்துழிக் காண்க.

## கஎ. இறுதிமுற்றுமடக்கு

உதாரணம் :

'மாலை யருளாது வஞ்சியான் வஞ்சியான்
மேலை யமரர் கடைவேலை — வேலை
வளையார் திரைமேல் வருமன்ன மன்ன
இளையா ளிவளை வளை.'

எனவரும்.

### கஅ. முதலுமிடையுமுற்றுமடக்கு

உதாரணம்:

'கோண்டல் கொண்டலர் பொழிரெறும்
பண்ணையாய் பண்ணையாயத் துள்ளார்
வண்டல் வண்டலர் தாதுகொண்
டியற்றலின் வருமணமணன் முன்றில்
கண்டல் கண்டக மகிழ்செய
வோதிமங் கலந்துறை துறைவெள்ளம்
மண்டன் மண்டல முழுதுடன்
வளைதரு வளைதரு மணிவேலை.'

எனவரும்.

### கசு. முதலுமிறுதியுமுற்றுமடக்கு

உதாரணம்:

'நிரையா நிரையா மணிபோனிறை கோடல் கோடல்
வரையா வரையாமிருண்முன்வரு மாலை மாலை
விரையா விரையா வெழுமின்னொளி மேக மேகம்
உரையா வுரையா ரினுமொல்லன முல்லை முல்லை.'

எனவரும்.

### உO. இடையுமிறுதியுமுற்றுமடக்கு

உதாரணம்:

'வருகம் புளினம் புளினம்பயில் வேலை வேலை
ஒருகா லுலவா வுலவாவரு மோத மோத
வருகே தகைகே தகைசேர்தரு மன்ன மன்ன
பெருகா தனவே தனவேரசை மாதர் மாதர்.'

எனவரும்.

### உக. அடிதோறுமுன்றிடத்துமடக்கு

உதாரணம்:

'களைகளைய முளரியரு கடைகடைய
மகளிர்கதிர் மணியுமணியும்
வளைவளைய கரதலமு மடைமடைய
மதுமலரு மலையமலைய

இளையிளைஞர் கிளைவிரவி யரியரியின்
மிசைகுவளை மலருமலரும்
கிளைகிளைகொ ளிசையளிகள் மகிழ்மகிழ்செய்
கெழுதகைய மருதமருதம்.'

எனவரும்.

## ௨௨. இடையிட்டுவந்தமுதன்முற்றுமடக்கு

உதாரணம் :

'தோடு கொண்டளி சூரன்றெழக் குடையவர் குழல்சோர்
தோடு கொண்டதே மலர்சுமந் தகில்கமழ்ந் தவர்தந்
தோடு தைந்தசெஞ் சாந்தணி திரண்முலை யிடைதோய்ந்
தோடு தண்புன னித்திலந் துறைதொறுஞ் சொரியும்.'

எனவரும்.

## ௨௩. இடையிட்டுவந்தவிடைமுற்றுமடக்கு

உதாரணம் :

'பரவி நாடொறும் படியவாம் பலபுகழ்ப் பரப்பின்
இரவி சீறிய படியவாம் பதியெரி கவர
விரவி மான்பயில் படியவாம் வேய்தலை பிணங்கும்
அருவி வாரணம் படியவாம் புலர்பணை மருதம்.'

என்வரும்.

## ௨௪. இடையிட்டுவந்தவிறுதிமுற்றுமடக்கு

உதாரணம் :

'சொன்ன நாளிது சுரும்பிமி ரிதழிபொன் கால
மின்னு வாள்விட வில்வளைத் தூன்றிய கால
இன்ன கார்முகி லினமிருண் டெழுதரு கால
மன்னர் வாரலர் தான்வரு மயின்மருங் கால

எனவரும்.

## ௨௫. இடையிட்டுமிடாதும்வந்தவிடையிறுதிகண்மடக்கு

உதாரணம் :

'வரிமான மான மழைபோன் மதமான யான
நாமான யானக மூற்று முகமான மான

தீமான மானவர் புகாத்திற மான மான்
காமான மான கல்சுரங் கனன்மான மான.'

எனவரும். இன்னும் பலவிதமாக வரும் மடக்குகளின் வேறு பாடுகளையும் வந்துழிக் கண்டு கொள்க. அவற்றுட் சில காட்டப்படுகின்றன. வரலாறு :

'வருமறை பலமுறை வசையறப் பணிந்தே
மதியொடு சடைமுடி மருவுமப் பணிந்தே
அருநட நவில்வது மழகுபெற் றமன்றே
அருளொடு கடவுவ தழகுபெற் றமன்றே
திருவடி மலரன திகழொளிச் சிலம்பே
தெளிவுட னுறைவது திருமறைச் சிலம்பே
இருவினை களைபவ ரடைமதத் தனன்றே
இமையவர் புகலிறை யெனகினைத் தனன்றே.'

எனவும்,

'அனைய காவலர் காவலர் காவலர்
இனைய மாலைய மாலைய மாலைய
எனைய வாவிய வாவிய வாவிய
வினைய மாதர மாதர மாதரம்.'

எனவும் வரும்.

## அடிமுழுதுமடக்கு

கூச. அடிமுழுது மடக்கலு மாங்கதன் சிறப்பே.

இதன்பொருள் - அடிகள் முழுதும் மடக்கி வருதலும் அம்மடக்கிற்குச் சிறப்புடைத்து என்றவாறு.

### உகூ. முதலீரடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக
வரைமேவு நெறியூடு தனிவாரன் மலைநாட
நிரைமேவு வளைசோர விவளாவி நிலைசோரும்.'

எனவரும்.

## உஎ. முதலடியுமூன்றாமடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு நிறைசோர மெலிவாட னுயிர்நோவு
கடன்மேவு கழிகாதன் மிகநாளு மகிழ்வார்கள்
உடன்மேவு பெடைகூடி மறுகாலு முறையாகொல்.'

எனவரும்.

## உஅ. இடையீரடிமுழுதுமடக்கு

உதாரணம் :

'கருமாலை தொறுகாதல் கழியாது தொழுதாலும்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
உருமாய மதனுக மடுமாறு புரிவார்முன்
வருமாய் வினைதீர வொருநாளு மருளார்கொல்.'

எனவரும்.

## உகூ. முதலடியுமீற்றடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'மறைநுவல் கங்கை தாங்கினர்
நிறைதவ மங்கை தாங்கினர்
குறையென வண்டர் வேண்டவே
மறைநுவல் கங்கை தாங்கினர்.'

எனவரும்.

## ௩0. கடையீரடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'கொல்லியம் பொருப்பனை மேவார் கோநகர்
இல்லெரி மேவுவ தியம்ப வேண்டுமோ
வல்லியந் தாமரை வனங்க ளாயின
வல்லியந் தாமரை வனங்க ளாயின.'

எனவரும்.

## ௩௧. இரண்டாமடியுமீற்றடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'நலத்தகை பெறவிரு சரண மோதுநங்
குலத்தகை பணிகோ ளோகாம் பரத்தனே
நலத்தகை மகளொரு பாக நண்ணுமேற்
குலத்தகை பணிகோ ளோகாம் பரத்தனே.'

எனவரும்.

## ௩௨. இறுதியொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'காம ரம்பயி னீர மதுகரம்
காம ரம்பயி னீர மதுகரம்
காம ரம்பயி னீர மதுகரம்
நாம ரந்தை யுறசினை யார்நமர்.'

எனவரும்.

## ௩௩. முதலொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'வரிய வாங்குழன் மாத ரிளங்கொடி
அரிய வாங்கய தான வனங்களே.
அரிய வாங்கய தான வனங்களே
அரிய வாங்கய தான வனங்களே.'

எனவரும்.

## ௩௪. இரண்டாமடியொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு

உதாரணம் :

'கடிய வாயின காமரு வண்டினம்
அடிய வாவகன் றூருமை வாரலர்
கடிய வாயின காமரு வண்டினம்
கடிய வாயின காமரு வண்டினம்.'

எனவரும்.

## ௩௫. மூன்றாமடியொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு

உதாரணம்:

'கோவ ளார்ப்பன கோந கரங்களே
கோவ ளார்ப்பன கோன கரங்களே
மேவ ளக்கர் வியன்றிரை வேலைசூழ்
கோவ ளார்ப்பன கோன கரங்களே.'

எனவரும்.

## ௩௬. நான்கடியுமுழுதுமடக்கு

உதாரணம்:

'வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின
வான கந்தரு மிசைய வாயின.'

எனவரும்.

## ௩௭. ஒருசொல்லேநான்கடியுமடக்கு

உதாரணம்:

'உமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதர
னுமாதர னுமாதரன்.'

எனவரும்.

## ௩௮. இரண்டடிப்பாடகமடக்கு

உதாரணம்:

'பணிப வணந்தன தாக மன்னுவார்
பணிப வணந்தன தாக மன்னுவார்
அணியென மேயது மன்ப ராகமே
அணியென மேயது மன்ப ராகமே.'

எனவரும்.

## ௩௯. அந்தாதிமடக்கு

உதாரணம் :

'மாலை யாகவெய் யனங்கவேள் பயிறரு மாலை
மாலை வேட்டவர் மனங்கொலோ வவன்றுழாய் மாலை
மாலை யோவுடைத் ததுவினைத் தெழுதரு மாலை
மாலை யாவுடை யவரைவர் திடர்செயு மாலை.'

எனவும்,

'கயலேர் தரவருங் கடிபுனற் காவிரி
காவிரி மலருகக் கரைபொரு மரவம்
மரவம் பூஞ்சினை வண்டொடுஞ் சிலம்பும்
சிலம்புசூழ் தளிரடித் திருமனைக் கயலே.'

எனவும் வரும்.

## ௪0. ஓரெழுத்துமடக்கு

கூ௫. ஓரெழுத்து மடக்கலு முரித்தென மொழிப.

இதன்பொருள் - ஓரெழுத்துத்தானே மடங்கி வருதலும் அம்மடக்கணி என்பர் என்றவாறு.

உதாரணம் :

'நாநா நாதங் கூடிசை நாடுந் தொழிலோவா
தாதா தார மாக விரைத்தண் மலர்மீதே
வாவா வார்தண் சோலையில் வாழும் வரிவண்டே
யாயா யாளிற் சேர்த்து வதன்பற் றிசையாமால்.'

எனவரும்.

## ௪க. ஒருயிர்மடக்கு

உதாரணம் :

'அமல லகல மகல லபய
கமல பவன மவள
வமல மடர வளக வதன மடர மதன.'

எனவரும். இங்கே அகரம் என்னும் ஒருயிர்மடக்காய் வந்த வாறறிக.

உதாரணம் :

‘தாயாயா ளாராயா டாமாறு தாராயா
யாமாரா வாறுடா மாதாமா தாவாவா
யாவாகா லாறுகா வாகாகா ணாநாமா
மாலாறு மாநாதா வா.’

எனவரும்.

இஃது ‘ஆ’ என்னும் நெட்டுயிரான் வந்த மடக்கு.

## ௪௨. ஒருவருக்கப்பாட்டு

உதாரணம் :

‘காக்கைக்கா காகூகை கூகைக்கா காகாக்கை
கோக்குக்கூ காக்கைக்குக் கொக்கொக்கக் — கைக்கைக்
காக்கைக்குக் கைக்கைக்கா கா.’ [குக்

எனவரும்.

இது ககாரம் என்னும் ஒரேவருக்க எழுத்துக்களால் வந்த பாட்டு. பின்வருவது மிது.

உதாரணம் :

‘தத்தித்தா தூதுதி தாதூதித் தத்துதி
துத்தித் துதைதி துதைத்ததா தூதுதி
தித்தித்த தித்தித்த தாதெது தித்தித்த
தெத்தாதோ தித்தித்த தாது.’

எனவரும். இது தகார வருக்கத்தால் வந்த பாட்டு.

## ௪௩. இருவருக்கப்பாட்டு

உதாரணம் :

‘மன்னுமான் மான்முன்ன மானமு மீனமா
மின்னமா னேமுன்னு மானினி — மென்மென
மின்னுமா மென்னிறு மன்னமுமா மென்மனனே
மன்னுமா மானுமான் மான்.’

எனவரும்.

இது மகாரம், னகாரம் என்னும் இருவருக்கங்களாலும் வந்த பாட்டு.

## சச. மூவருக்கப்பாட்டு

உதாரணம் :

'மின்றுவான் முன்னு மெனினு மினிவேனின்
மன்று வினைவே னெனைவினவா — முன்றனை
வானவனை மீனவனை மான் வினைவென்வேன்
மானவனை மானுமோ வான்.'

எனவரும். இது மகாரம், னகாரம், வகாரம் என்னும் மூன்று வருக்கத்தாலும் வந்த பாட்டு.

## சரு. நால்வருக்கப்பாட்டு

உதாரணம் :

'யானக வென்னே யினையனு வாக்கின
கானக யானை யனையானைக் — கோனவனைக்
கொன்னயன வேனக்க கோகனகக் கைக்கன்னிக்
கன்னிக் கனியனைய வாய்.'

எனவரும். இது யகாரம், னகாரம், ககாரம், வகாரம் என்னும் நான்கு வருக்கத்தாலும் வந்த பாட்டு.

## சசா. ஒற்றெழுத்தில்லாப்பாட்டு

உதாரணம் :

'அமது புனலி வளியி வரிவை
யமுத விதழி னிகலு — குமுத
மருவி நறவு பருக வளரு
முருவ முடைய துரை.'

எனவரும்.

## சஎ. வல்லினப்பாட்டு

உதாரணம் :

'துடித்துத் தடித்துத் துடுப்பெடுத்த கோட
றெடுத்த தொடைக்கடுக்கை பொற்போற் — பொடித்துத்

தொடிப்டைத்த தோடுடித்த தோகைகூத் தாடக்
கடிப்டைத் துக் காட்டிற்றுக் காடு.'

எனவரும்.

## சுஅ மெல்லினப்பாட்டு

உதாரணம்:

'மானமே நண்ணு மனமென் மனமென்னு
மானமான் மன்னு நனிநாணும் — மீனமா
மானு மினன்மின்னி முன்முன்னே நண்ணினு
மானு மணிமேனி மான்.'

எனவரும்.

## சுகூ. இடையினப்பாட்டு

உதாரணம்:

'யாழியல் வாய வியலள வாயவொலி
யேழிய லொல்லாவா லேழையுரை — வாழி
யுழையே வியலா வயில்விழி யையோ
விழையே லொளியா விருள்.'

எனவரும்.

## 2. சித்திரகவி


கூசு. கோமூத் திரியே கூட சதுர்த்தம்
மாலை மாற்றே யெழுத்து வருத்தநம்
நாக பந்தம் வினாவுத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திரம்
அக்கர சுதகமு மவற்றின் பால.

இதன்பொருள் - கோமூத்திரி, முதலியவைகளும் அவ்வலங்காரத்தின் பாலனவாய் வரும் என்றவாறு.

### க. கோமூத்திரி

கோமூத்திரவடிவமாக அமைக்கப்பட்ட ரேகையிலே எழுத்துக்கள் அமைத்துப் பாடப்படுவது கோமூத்திரியாகும்.

# கோமூத்திரிகா பந்தம்



கோ - பசு. மூத்திரி - மூத்திரவடிவுடையது.

உதாரணம் :

'பருவ மாக விதோகன மாலையே
பொருவி லாவுழை மேவன கானமே
மருவு மாசைவி டாகன மாலையே
வெருவ லாயிழை பூவணி காலமே.'

எனவரும்.

## உ. கூடசதுர்த்தம்

நான்காமடி யெழுத்துக்கள் ஏனைய மூன்றடிகளுள்ளும் மறைந்து நிற்குமாறு பாடப்படுவது கூடசதுர்த்தமாகும்.

கூடம் - மறைவு. சதுர்த்தம் - நான்காவது. மறைவான நான்காமடியுடையதென்றவாறு.

உதாரணம் :

'புகைத்தகைச் சொற்படைக் கைக்கதக்
கட்பிறைப் பற்கறுத்த
பகைத்திறச் சொற்கெடச் செற்றகச்
சிப்பதித் தூர்க்கைபொற்புத்
தகைத்ததித் தித்ததுத் தத்தசொற்
றத்தைப்பத் தித்திறத்தே
திகைத்தசித் தத்தைத் துடைத்தபிற்
பற்றுக் கெடக்கற்பதே.'

எனவரும்.

இங்கே நான்காமடியிலுள்ள எழுத்துக்களெல்லாம் மற்றைய மூன்றடிகளுள்ளும் நிற்குமாறுணர்க.

## ௩. மாலைமாற்று

மாலைமாற்றுவது இறுதியிலே தொடங்கிப் படிக்கும் போதும் முதற்கணின்று படிக்கும்போது முடிந்தவாறு போல முடியும்படி எழுத்துக்களமைத்துப் பாடப்படுவதாகும்.

மாலை - வரிசை. மாற்று - மாறுதலுடையது.

'ஒருசெய்யுண் முதலீ றுரைக்கினு மஃதாய்
வருவதை மாலை மாற்றென மொழிப.'

என்பது மாறனலங்காரம். உதாரணம்:

'நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ.'

எனவும்,

'வாயாயா நீகாவா யாதாமா தாமாதா
யாவாகா நீயாயா வா.'

எனவும் வரும்.

இக்குறள் வெண்பாக்கள் இறுதியிலே தொடங்கிப் படிக்கும்போதும், முதற்கணின்று படிக்கும்போது முடிவதுபோல முடியுமாறுணர்க.

## ௯. எழுத்துவருத்தனம்

எழுத்துவருத்தனமாவது யாதேனும் ஒரு பொருள் பயக்கும் ஒரு மொழியை எடுத்துக்கொண்டு அது தானே வெவ்வேறு சொல்லாய் வெவ்வேறு பொருள்படுமாறு எழுத்துக்களை ஒவ்வொன்றாகச் சேர்த்து வளர்ப்பதுவாகும்.

வருத்தனம் - வளர்த்தல்.

உதாரணம்:

'ஏந்திய வெண்படையு முன்னொ ளெடுத்ததுவும்
பூந்துகிலு மாலுந்தி பூத்ததுவும் — வாய்ந்த
உலைவி லெழுத்தடைவே யோரொன்றாச் சேர்க்கத்
தலைமலைபொன் றாமரையென் றாம்.'

எனவரும்.

இங்கே சங்கென்னும் பொருளுடைய 'கம்பு' என்பதிலே 'கம்' என்பதனை எடுத்துக்கொண்டு அதன்மேல் 'ந' என்னும் எழுத்தினைச் சேர்க்க அது தானே 'நகம்' என வேறொரு சொல்லாய் மலை என்னும் பொருளும், 'நகம்' என்

பதன் மேல் 'க' என்னும் எழுத்தினைச் சேர்க்கக் 'கநகம்' என வேறொரு சொல்லாய்ப் பொன் என்னும் பொருளும், 'கந கம்' என்பதன்மேல் 'கோ' என்னும் எழுத்தினைச் சேர்க்கக் 'கோகநகம்' என வேறொரு சொல்லாய்த் தாமரை என்னும் பொருளும் படுமாறறிக.

## ரு. நாகபந்தம்

நாகபந்தமாவது இரண்டு பாம்புகள் புணர்ந்து விளையாடுவன போலத் தோன்றும்படி உபதேசமுறைப்படி சித்திரித்த அறைகளிலே எழுத்துக்களைத் தொகையிற் சுருங்கிப் பொதுவாக நிற்கும்படி அமைத்துப் பாடப்படுவதுவாகும்.

நாகம் - பாம்பு. பந்தம் - சிறை, ஒடுக்குதல்.

உதாரணம் :

'அருளின் திருவுருவே யம்பலத்தா யும்பர்
தெருளின் மருவாச் சீர்ச்சீரே — பொருவிலா
ஒன்றே யுமையா ளுடனே யுருத்தரு
குன்றே தெருள வருள்.'


எனவும்,

'மருவினவ ருளத்தே வாழ்சுட ராய்கருசு
பெருகொளியான் மேயபெருஞ் சோதித் — திருவிலா
வானஞ் சுருங்க மிகுசுடரே சித்த
மயரு மளவை யொழி.'

எனவும் வரும்,

இக்கவிகளிரண்டினையும் இரண்டு பாம்புகள் பின்னிப் புணர்ந்து விளையாடுவன போலாக உபதேசமுறைப்படி சித்திரிக்கப்பட்ட அறைகளிலே எழுதும்போது இவ்விரண்டிலுமுள்ள நூற்றுப்பதினெட்டெழுத்துக்களுந் தொண்ணூற்றுருக அமையும். இருகவிகளிலுமுள்ள முதலெழுத்துக்களிரண்டும் ஒவ்வொன்றுக இரண்டு தலைகளிலும், ஐவைந்தாக எழுத்துக்களிருபது • நான்கு மூலைகளிலும், ஐவைந்தாக எழுத்துக்கள் பத்து இரு வயிறுகளிலும், எழுத்துக்கள் ஒன்பது இரண்டு வால்களிலும், எஞ்சிய எழுத்துக்கள் நடுவி

# இரட்டை நாக பந்தம்.



ளுள்ள உறுப்புக்களிலுமாக எழுதப்படும். இருபத்திரண்டெழுத்துக்கள் சந்திகளிலே நின்று இரு கவிகளுக்கும் பொதுவாகப் படிக்கப்பட்டு நாற்பத்து நான்கெழுத்துக்களாகும். சந்திகளுக்கிடையிலும் ஒவ்வோரெழுத்து நிற்கும்.

## கூ. வினுவுத்தரம்

பல மொழிகளாகப் பிரிந்து பொருள்படத்தக்க ஒரு பெயரை எடுத்துக்கொண்டு அம்மொழிகளே விடைகளாமாறு வினுக்களை வினவி அப்பெயரையுங் கூறி முடிப்பது வினுவுத்தரமாகும். உதாரணம் :

'பூமகள்யார் போவானை யேவுவா னென்னுரைக்கும்
நாமம் பொருசரத்திற் கென்னென்பர் — தாமழகின்
பேரென் பிறைசூடும் பெம்மா னுவந்துறையுஞ்
சேர்வென் திருவேகம் பம்.'

எனவரும்.

இங்கே கூறப்பட்ட திருவேகம்பம் என்னும் பெயரிலே 'திரு' என்பது 'பூமகள் யார்' என்னும் வினுவிற்கும், 'ஏகு' என்பது 'போவானை யேவுவா னென்னுரைக்கும்' என்னும் வினுவிற்கும், 'அம்பு' என்பது 'நாமம் பொருசரத்திற் கென்' என்னும் வினுவிற்கும், 'அம்' என்பது 'அழகின் பேரென்' என்னும் வினுவிற்கும் உத்தரமாயமைந்தவாறறிக. திரு + ஏகு + அம்பு + அம் = திருவேகம்பம்.

## எ. காதைகரப்பு

யாதேனும் ஒரு செய்யுளுக்குரிய எழுத்துக்களெல்லாந் தேடி எடுக்கத்தக்கனவாக ஆங்காங்கமைத்துப் பாடி அச்செய்யுளை மறைத்துவைப்பது காதைகரப்பாகும்.

* காதை - கவி. கரப்பு - மறைத்தல்.

உதாரணம் :

'அகலல்குற் றேரே யதர மமுதம்
பகர்தற் கரிதிடையும் பார்க்கின் — முகமதிய

முத்தென்ன வாமுறுவன் மாதர் முழுநீல்
மைத்தடங்கண் வெவ்வேறு வாள்.'

எனவரும். இங்கே,

'அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.'

என்னுங் குறளிலுள்ள எழுத்துக்களெல்லாம் ஆங்காங்கு வருமாறமைத்து அக்குறட்கவியை மறைத்தவாறுணர்க.

## அ. கரந்துறைப்பாட்டு

ஒவ்வோரெழுத்து இடைவிட்டுப் படிக்கும்போது வேறும் ஒரு கவி தோன்றும்படி எழுத்துக்கள் அமைத்துப் பாடப்படுவது கரந்துறைப் பாட்டாகும்.

கரந்துறைப்பாட்டு – கரந்துறைவதையுடைய பாட்டு.

'முதலொரு செய்யுண் முடித்தத னீற்றின்
பதமத னிறுதியிற் பயிலெழுத் தாத்தொடுத்
திடையிட் டிட்டெதி ரேறுய் முதலய
லடைதரப் பிறிதொரு செய்யுள் கரந்தங்
குறைவது கரந்துறைச் செய்யு ளாகும்.'

என்பது மாறனலங்காரம். உதாரணம் :

'தாயேயா நோவவா வீரு வெமன்னினை
பின்னை வெருவா வருவதொ ரத்தப
வெம்புகல் வேறிருத்தி வைத்திசி னிச்சைகவர்
தாவா வருங்கலரீ யே.'

எனவரும். இங்கே இறுதியிலுள்ள 'க' என்னும் எழுத்திலே தொடங்கி ஒவ்வோரெழுத்து இடைவிட்டுப் படித்துச் செல்லும்போது,

'கருவார் கச்சித்
திருவே கம்பத்
தொருவா வென்னை
மருவா நோயே.'

என்னுந் தேவாரந் தோன்றுமாறுணர்க.

## ௧. சக்கரபந்தம்

வண்டியின் சில்லுப்போல அமைக்கப்பட்ட சித்திரத்திலே சில உறுப்பிலே எழுத்துக்கள் பொதுவாக நிற்கும்படி அமைத்துப் பாடப்படுவது சக்கரபந்தமாகும்.

சக்கரம் - வண்டியின் சில்லு. பந்தம் - கட்டு, ஒடுக்குதல்.

'சக்கரத் துட்டடு மாறுத ருனே
சக்கர பந்த மெனச்சாற் றினரே.'

என்பது மாறனலங்காரம்.

இச்சக்கரபந்தம் நான்காரச்சக்கரம், ஆறாரச்சக்கரம், எட்டாரச்சக்கரம் என மூவகைப்படும். நான்காரச்சக்கரமாவது நான்கு ஆரங்களையுடைய வண்டிச்சில்லு. ஆரமாவது வண்டிச்சில்லின் நடுவிலுள்ள குறட்டிலிருந்து விளிம்பு வலயத்திற் சென்று பொருந்தும்படி தைக்கப்பட்டிருக்கும் கம்பு. அரம் ஆரமென்றாயிற்று. மற்றையவும் இன்ன. 'ஆர்ச் சக்கரம்' எனவும் 'ஆரைச்சக்கரம்' எனவுங் கூறுவாருமுளர்.

### நான்காரச்சக்கரபந்தம்


உதாரணம்:

'மேரு சாபமு மேவுமே
மேவு மேயுண வாலமே
மேல வாமவ ளுபமே
மேய ளுனடி சாருமே.'

எனவரும்.

இதனை நான்காரச் சக்கரபந்தத்திலே முறையே அமைக்கும்போது இதன்கணுள்ள முப்பத்திரண்டெழுத்துக்களும் பதினேழெழுத்துக்களாய்ச் சுருங்கும். குறடாகிய நடுவினின்ற 'மே' என்னும் எழுத்து எட்டுமுறை வாசிக்கப்பட்டு எட்டெழுத்தாகும். ஆரத்திலே நின்ற எட்டெழுத்துக்களும் இருமுறை வாசிக்கப்பட்டுப் பதினறெழுத்துக்களாகும். சூட்டிலுள்ள எழுத்துக்கள் பதினறு. ஆக எழுத்துக்கள் முப்பத்திரண்டு.

# நான்காரச் சக்கரம்




## ஆரூரச்சக்கரபந்தம்

உதாரணம் :

'தண்மலர் வில்லிதன் போரா
னமக்குத் தயையளித்த
கண்மலர்க் கருவிக் கெதிரா
வனவன்று கைப்பொலிந்த
பண்மலர் யாழ்பயில் வாரார்வு
சேர்பதி நாகைமிக்க
தண்மை யகத்துப் பதுமத்த
மாதர் தடங்கண்களே.'

எனவரும்.

இதனை ஆரூரச்சக்கரபந்தத்திலே அமைக்கும்போது அடிதோறும் முதற்கணின்ற நான்கெழுத்துக்களும் எட்டெ



ழுத்தாகவும், இறுதியடியொழிந்த மற்றை மூன்றடிகளிலும் இறுதிக்கணின்ற மூன்றெழுத்துக்களும் ஆறெழுத்துக்களாகவும், நடுவிலுள்ள ரகரவாகாரம் குறட்டினின்று மூன்றெழுத்

துக்களாகவும் வாசிக்கும்படி நின்று இதன்கண்ணுள்ள எழுத்துக்கள் சுருங்குமாறும் குறட்டிலே 'போதிவானவர்' என்பது தோன்றுமாறும் பிறவும் அறிக.


## எட்டாரச்சக்கரபந்தம்

உதாரணம் :

'மலர்மலி சோலை யகநலங் கதிர்க்க
மடமயி லியற்றக மாதிரம் புதைத்து
வளைந்து புகன்மேக வல்லிருண் மூழ்க
வரியளி துதைந்த கதுப்பினி தடைச்சி
மன்னுமா மடமொழி வடிவாள் வளவன்
கன்னித் துறைவன் கனகச் சிலம்பே.'

எனவரும்.

இதனை எட்டாரச் சக்கரத்திலே முறையே அமைத்து



எழுத்துக்கள் சுருங்குமாறும் குறட்டிலே 'அற்மேதண்மாவது' என்னும் வாக்கியந் தோன்றுமாறும் பிறவும் அறிக.

## க0. சுழிகுளம்

சுழிகுளமாவது எவ்வெட்டெழுத்துக் கொண்ட நான்கடியாய் மேனின்று கீழிழிந்தும், கீழ்நின்று மேலேறியும் புறஞ்சென்றுண்முடியப் படிக்கத்தக்கதாகப் பாடப்படுவது.

உதாரணம் :

'கவிமுதி யார் பாவே
விலையரு மா நற்பா
முயல்வ துறு நர்
திருவ ழிந்து மாயா.'

எனவரும். வரலாறு :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| க | வி | மு | தி | யா | ர் | பா | வே |
| வி | லை | ய | ரு | மா | ந | ற் | பா |
| மு | ய | ல் | வ | து | று | ந | ர் |
| தி | ரு | வ | ழி | ந் | து | மா | யா |

உதாரணம் :

'மதந விராகா வாமா
தநத சகாவே நீவா
நததந தாதா வேகா
விசநவி ரோதா காரா.'

எனவரும். வரலாறு :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ம | த | ந | வி | ரா | கா | வா | மா |
| த | ந | த | ச | கா | வே | நீ | வா |
| ந | த | த | ந | தா | தா | வே | கா |
| வி | ச | ந | வி | ரோ | தா | கா | ரா |

## கக சருப்பதோபத்திரபந்தம்

சருப்பதோபத்திரமாவது நான்கு புறத்தும் வாயில்களையுடையதாய் நினைத்தவழியாற் செல்லத்தக்கதாய்ச் சமைக்கப்

படும் ஒருவகை வீடு. அதுபோல எப்பக்கத்திலே தொடங்கிப் படித்துச் சென்றாலும் அச்செய்யுளேயாகும்படி எவ்வெட்டெழுத்துடைய நான்கடிகளுடையதாய் அறுபத்துநான்கறைகளிலே முதலறை தொடங்கி ஒரு முறையும் இறுதியறை தொடங்கி ஒரு முறையுமாக இருமுறை எழுதி இயையுமாறு பாடப்படுஞ் செய்யுள்.

‘சர்வதோபத்திரம்’ என்பது ‘சருப்பதோபத்திரம்’ என்றாயிற்று. சர்வதஸ் - எப்பக்கத்தும்; பத்திரம் - வாயில்.

உதாரணம்:

‘மாவா நீதா தாநீ வாமா
வாயா வாமே மேவா யாவா
நீவா ராமா மாரா வாநீ
தாமே மாரா ராமா மேதா.

எனவரும். வரலாறு :

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| தா | மே | மா | ரா | ரா | மா | மே | தா |
| நீ | வா | ரா | மா | மா | ரா | வா | நீ |
| வா | யா | வா | மே | மே | வா | யா | வா |
| மா | வா | நீ | தா | தா | நீ | வா | மா |

இக்கவி இந்த அறைகளிலே எட்டுவழியாகப் படிக்கத் தக்கதாய் எழுத்துக்களமைந்து நிற்கின்றது. நந்நான்கு வரிகளாக முதலறை தொடங்கி வலப்பக்கமாக வாசித்தும், வாசித்தவாறே இறுதியினின்று முதல்வர வாசித்தும், முதலறையினின்று கீழிழிய வாசித்தும், வாசித்தவாறே மேலேற வாசித்தும், முதல்வரியினிறுதியினின்று கீழிழிய வாசித்தும்

வாசித்தவாறே மேலேற வாசித்தும், இறுதிவரியின் முதல் தொடங்கி இடப்பக்கமாக வாசித்தும் முடித்துக்காண்க.

## கஉ அக்கரசுதகம்

முழுவதும் நின்று ஒரு பொருள் பயப்பதாயும், ஒவ்வோரெழுத்தாக நீக்க வெவ்வேறு மொழியாய் வெவ்வேறு பொருள் பயப்பதாயுமுள்ள ஒரு சொல்லை எடுத்துக்கொண்டு பொருள்கள் காட்டிப் பாடப்படுவது அக்கரசுதகமாகும்.

அக்கரம் - எழுத்து. சுதகம் - குறைத்தல்.

உதாரணம் :

'பொற்றூணில் வந்தசுடர் பொய்கை பயந்த வண்ணல்
சிற்றூயன் முன்வனிதை யாகி யளித்த செம்மல்
மற்றியார் கொல்லென்னின் மலர்தூவி வணங்கி நாளுங்
கற்றோர் பரவுங் கநகாரி நகாரி காரி.'

எனவரும்.

இங்கே எடுத்துக்கொண்ட சொல்லுக் 'கநகாரி' என்பது. அதன் முதலெழுத்தாகிய 'க'கரத்தை நீக்க 'நகாரி' என்றாகும். 'நகாரி' என்பதிலே முதலெழுத்தாகிய நகரத்தை நீக்கக் 'காரி' என்றாகும். கநகாரி - விட்டுணு. நகாரி - முருகக்கடவுள். காரி - மாசாத்தன். கநகன் - இரணியன். நகம் - மலை. அரி - பகைவன்.

## கரு. நிரோட்டம்

இதழ் முயற்சியாற் பிறப்பனவாகிய உ, ஊ, ஒ, ஓ, ஔ, ப, ம, வ, என்னும் எழுத்துக்கள் வாராமற் பாடப்படுவது நிரோட்டமாகும்.

நிரோட்டியம் என்பது நிரோட்டம் என நின்றது. நிர் - இன்மை; ஓட்டியம்-ஓட்டசம்பந்தமுடையது. ஓட்டம்-உதடு.

உதாரணம் :

'சீலத்தான் ஞானத்தாற் றேற்றத்தாற் சென்றகன்ற
காலத்தா லாராத காதலான் — ஞாலத்தார்

இச்சிக்கச் சாலச் சிறந்தடி யேற்கினி தாங்
கச்சிக்கச் சாலைக் கனி.'

எனவரும்.

## கசு. ஒற்றுப்பெயர்த்தல்

ஒரு மொழியுந் தொடர்மொழியுமாய் நின்று கருதிய பொருளன்றி வேறு பொருளும் பயக்கத்தக்கதாகப் பாடப் படுவது ஒற்றுப்பெயர்த்தலாகும்.

உதாரணம் :

'வண்புயலைக் கீழ்ப்படுத்து வானத் தருமலைந்து
மண்குளிரச் சாயல் வளர்க்குமாங் — தண்கவிகைக்
கொங்கா ரலங்கலந பாயன் குளிர்பொழில்சூழ்
கங்கா புரமாளி கை.

எனவரும்.

இங்கே 'கங்காபுரமாளிகை' என்பது கங்காபுரத்திலுள்ள மாளிகை எனவும், கங்காபுரத்தினை ஆள்பவனுடைய 'கை' எனவும் பொருள்பட்டு ஒருமொழியுந் தொடர்மொழியுமாய் ஒற்றுப்பெயர்த்தலாயிற்று.

## கரு. மாத்திரைச்சுருக்கம்

யாதேனும் ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல்லின்கணுள்ள எழுத்தின் மாத்திரையைச் சுருக்குதலால் அச்சொல் வேறு சொல்லாகி வேறுபொருள் பயக்கும்படி பாடப்படுவது மாத்திரைச் சுருக்கமாகும்.

உதாரணம் :

'நேரிழையார் கூந்தலினோர் புள்ளிபெற நீண்மரமாம்
நீர்நிலையோர் புள்ளி பெறநெருப்பாம் — சீரளவுங்
காட்டொன் றொழிப்ப விசையா மதனளவு
மீட்டொன் றொழிப்ப மிடறு.'

எனவரும்.

இங்கே 'நேரிழையார் கூந்தல்' என்றது 'ஓதி' என்னுஞ் சொல்லினை. இதன்கணுள்ள ஓகாரநெட்டெழுத்தின் இரு மாத்திரையில் ஒரு மாத்திரையைக் குறைக்க ஒருமாத்திரையுடைய ஒகரமாய் 'ஒதி' என்றாய் ஒருமரப் பெயராகும். 'நீர் நிலை' என்றது 'ஏரி' என்னுஞ் சொல்லினை எனவும், 'காடு' என்றது 'காந்தாரம்' என்னுஞ் சொல்லினை எனவும் அறிக. ஒகரவெகரங்கள் அக்காலத்துப் புள்ளிபெறுதலை நோக்கியே 'புள்ளிபெற' என்றார். மாத்திரையைச் சுருக்கும்போது 'ஏரி' என்பது 'எரி' எனவும், 'காந்தாரம்' என்பது 'கந்தாரம்' எனவும், 'கந்தாரம்' என்பது 'கந்தரம்' எனவும் சொல்லப்படும். எரி - நெருப்பு. கந்தாரம் - ஓரிசை. கந்தரம் - மிடறு.

## கசு. மாத்திரைவருத்தநம்

யாதேனும் ஒரு பொருள் பயக்கும் ஒரு சொல்லின் கணுள்ள எழுத்திற்கு மாத்திரையைக் கூட்டுதலால் அச் சொல் வேறொரு சொல்லாகி வேறு பொருள் பயக்கும்படி பாடப்படுவது மாத்திரை வருத்தநமாகும்.

உதாரணம் :

'அளபொன் றேறிய வண்டதி ரார்ப்பினல்
அளபொன் றேறிய மண்ணதிர்ந் தக்குமால்
அளபொன் றேறிய பாட லருஞ்சுனை
அளபொன் றேறழ கூடலந் தாடுமால்.'


எனவரும்.

இங்கே மாத்திரையைக் கூட்டி வளர்த்தலால் வண்டின் பெயராகிய 'அளி' என்பது 'ஆளி' எனவும், மண்ணின் பெயராகிய 'தரை' என்பது 'தாரை' எனவும், பாடலின் பெயராகிய 'கவி' என்பது 'காவி' எனவும், அழகின் பெயராகிய 'வனப்பு' என்பது 'வானப்பு' எனவும் வேறாகி வேறு பொருள் பயந்த வாறுணர்க.

## கஎ. முரசபந்தம்

முரசபந்தமாவது நான்கடியுடையதாய் மேலிரண்டடிகளுந் தம்முட் கோமூத்திரியாகவும், கீழிரண்டடியுந் தம்முட்

# முரச பந்தம்



கோமூத்திரியாகவும் சிறுவார் போக்கி, முதலடி இரண்டா மடியினும் மூன்றாமடியினும் நான்காமடியினுங் கீழூற்று மீண்டு மேலே போய்க் கீழேயிறங்கி முடியவும், இவ்வாறே இறுதியடியும் மேலே போய்க் கீழேயிறங்கி மேலே போய் முடியவுந் தக்கதாகப் பெருவார் போக்கி, எழுத்துக்களமைத்துப் பாடப்படுவதாகும்.

முரசம் - மிருதங்க வாச்சியம்.

உதாரணம் :

> 'கான வாரண மரிய வாயினனே
> தான வாரண மரிய வாயினனே
> மான வாரண மரிய வாயினனே
> கான வாரண மரிய வாயினனே.'

எனவரும். இதனை முரசபந்தவறையினுள்ளே அமைத்து எழுத்துக்கள் பொதுவாக நிற்குமாறும், அடிகள் கோமூத்திரியாகுமாறும் மேலுங் கீழுஞ் செல்லுமாறும் பிறவும் அறிக

## கஅ. திரிபாகி

மூன்றெழுத்துக்களைச் சேர்க்க ஒரு மொழியாகியும், அதன்கணுள்ள முதலெழுத்தையும் இறுதியெழுத்தையுஞ் சேர்க்க மற்றொரு மொழியாகியும், இடையெழுத்தையும் கடையெழுத்தையும் சேர்க்கப் பின்னொரு மொழியாகியும் வருவது திரிபாகியாகும்.

திரி - மூன்று; பாகி - பாகமுடையது.

உதாரணம் :

> 'மூன்றெழுத்து மெங்கோ முதலீ ரொருவள்ளல்
> என்றுலகங் காப்ப திடைகடை — யான்றுரைப்பிற்
> பூமாரி பெய்துலகம் போற்றிப் புகழ்ந்தேத்துங்
> காமாரி காரிமாரி.'

எனவரும்.

இங்கே 'மூன்றெழுத்து மெங்கோ' என்றது சிவனெனப் பொருள்படுங் 'காமாரி' என்னுஞ் சொல்லினை எனவும்,

அதன்கணுள்ள முதலெழுத்தையுங் கடையெழுத்தையுஞ் சேர்க்கக் 'காரி' என்றாய் ஒரு வள்ளல் எனப் பொருள்படும் எனவும், இடையெழுத்தையுங் கடையெழுத்தையுஞ் சேர்க்க 'மாரி' என்றாய் உலகத்தினைக் காக்கும் மழை எனப் பொருள் படும் எனவும் அறிக. காமாரி - காமனுக்குப் பகைவனாகிய சிவன்.

## கக. திரிபங்கி

யாதேனும் ஒரு செய்யுளாய் நின்றே ஒரு பொருள் பயப்பதன்றி அதுவே மூன்று செய்யுளாய்ப் பிரிந்து முடிந்து வெவ்வேறு பொருள் பயக்கத்தக்கதாகவும் பாடப்படுவது திரிபங்கியாகும்.

திரி - மூன்று; பங்கி-பங்கமுடையது. பங்கம் - பேதம்.

உதாரணம் :

'ஆதரந் தீரன்னை போலினி யாயம்பி காபதியே
மாதுபங் காவன்னி சேர்சடை யாய்வம்பு நீண்முடியாய்
ஏதமுய்ந் தாரின்னல் சூழ்வினை தீரெம் பிரானினியார்
ஓதுமொன் றேயுன்னு வாரமு தேயும்பர் நாயகனே.'

எனவரும்.

இக்கட்டளைக் கலித்துறையிலே அடிதோறுமுள்ள முதலாஞ் சீர்களையும் இரண்டாஞ் சீர்களிலுள்ள முதலசைகளையுஞ் சேர்க்க,

'ஆத ரந்தீர்
மாது பங்கா
ஏத முய்ந்தா
ரோது மொன்றே.'

எனவரும் ஒரு வஞ்சித்துறையாக முடியும். அதன்பின் நான்காஞ் சீர்களிலுள்ள முதலாமசைகள் வரையும் நான்கடிகளையும் படிக்க,

'அன்னைபோ லினியாய்
வன்னிசேர் சடையாய்

இன்னல்சூழ் வினைதீர்
உன்னுவா ரமுதே.'

எனவரும் வேறொரு வஞ்சித்துறையாக முடியும். மற்றைய நான்கடியும்,

'அம்பிகா பதியே
வம்புநீண் முடியாய்
எம்பிரா னினியார்
உம்பர் நாயகனே.'

எனவரும் மற்றொரு வஞ்சித்துறையாகும்.

## இதுவுமது

உதாரணம் :

'சங்கந்தா பூணாரந் தாமே கலைதாநற்
புங்கவன்மால் காணாப் புலவுடைய — சங்கரா
கோணா கலாமதிசேர் கோடீர சங்கரா
சோணா சலாசலமே தோ.'

எனவரும். இவ்வெண்பாவைப்,

'பூணாரந் தாமே கலைதாநற் புங்கவன்மால்
காணாப் புலவுடைய சங்கரா — கோணா
கலாமதிசேர் கோடீர சங்கரா சோணா
சலாசலமே தோசங்கந் தா.'

எனப்படிக்க வேறொரு வெண்பாவும்,

'சலமேதோ சங்கந்தா பூணாரந் தாமே
கலைதாநற் புங்கவன்மால் காணாப் — புலவுடைய
சங்கரா கோணா கலாமதிசேர் கோடீர
சங்கரா சோணா சலா.'

எனப்படிக்க மற்றொரு வெண்பாவுமாய் இதுவுந் திரிபங்கியாயிற்று.

## ௨௦. பிறிதுபடுபாட்டு

அடிதொடைகளை வேறுபடுத்தலால் முன்னைய நிலை மாறி வேறொரு செய்யுளாகும்படி பாடப்படுவது பிறிதுபடுபாட்டாகும்.

உதாரணம்:

'தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும் பரிசுகொண்டு
வரியளி பாட மருவரு வல்லி யிடையுடைத்தாய்த்
திரிதருங் காமர் மயிலிய லாயநண் ணுத்தேமொழி
யரிவைதன் னேரெனலா குமெம் மையயா மாடிடமே'

எனவரும். இக்கலித்துறை,

'தெரிவருங் காதலிற் சேர்ந்தோர் விழையும்
பரிசு கொண்டு வரியளி பாட
மருவரு வல்லி யிடையு டைத்தாய்த்
திரிதருங் காமர் மயிலிய லாயநண்ணுத்
தேமொழி யரிவைதன் னேரென
லாகுமெம் மைய யாமா டிடமே.'

என ஒரு நேரிசையாசிரியப்பாவாகக் கொள்ளப்படுமாறு முணர்க.

நிரோட்டம் முதலிய ஏழும் உரையிற் கொள்ளப்பட்டன.

## 3. வழுக்களின்வகை

கூ௭. பிரிபொருட் சொற்றொடர் மாறுபடு பொருண்மொழி
மொழிந்தது மொழிவே கவர்படு பொருண்மொழி
நிரனிறை வழுவே சொல்வழு யதிவழு
செய்யுள் வழுவொடு சந்தி வழுவென
எய்திய வொன்பது மிடனே காலங்
கலையே யுலக நியாய மாகம
மலைவுமுள் ளுறுத்தவும் வரைந்தனர் புலவர்.

இதன்பொருள் – பிரிபொருட்சொற்றொடர் முதலிய ஒன்பதும், இடமலைவு முதலிய ஆறுமாகிய பதினைந்து குற்றங்களும், காப்பியத்திலே வரலாகாதென விலக்கினர் புலவர் என்றவாறு.

### புறனடை

கூ௮. மேற்கோ ளேது வெடுத்துக் காட்டென
ஆற்றுளி கிளக்கு மவற்றது வழுநிலை
நிரம்ப வுணர்த்த வரம்பில வேன்ப

இதன்பொருள் – மேற்கோள், ஏது, உதாரணம் என முறையாற் சொல்லப்படும் அவைகளுடைய வழுநிலைகள் முற்றக் கூறுதற்கு வரம்புடையனவல்ல; ஆதலின் அவை ஈண்டுக் கூறப்படவில்லை என்றவாறு.

'மேற்கோ'ளாவது சாத்தியத்தை நிர்த்தேசஞ் செய்வதாகிய பிரதிஞ்ஞை. 'ஏது'வாவது அதனைச் சாதிக்குஞ் சாதநம். 'எடுத்துக்காட்'டாவது பிரசித்தமான உதாரணம். இவற்றின் வழுக்களை நியாயநூல்களுட் காண்க. பிரிபொருட்சொற்றொடர் முதலாக இங்கே கூறப்பட்டனவன்றி வேறு வழுக்களில்லையா? என்னும் ஆசங்கையைப் பரிகரித்தற்காக இச்சூத்திரங் கூறப்பட்டது. மேற்கோள்வழு முதலியன இங்கே அவசியஞ் சொல்லற்பாலனவல்ல என்பார் "நிரம்ப வுணர்த்த வரம்பில" என்றார்.

## க. பிரிபொருட்சொற்றொடர்

கூக. அவற்றுள்,

பிரிபொருட் சொற்றொடர் செய்யுண் முழுவதும்
ஒருபொருள் பயவா தொரீஇத் தோன்றும்.

இதன்பொருள் – அவைகளுள்ளே பிரிபொருட்சொற்றொடராவது செய்யுண் முழுவதும் ஒரு பொருள் பயவாது பிரிந்து தோன்றும் பொருளுடையதாகும் என்றவாறு.

பிரிபொருட்சொற்றொடர் - பிரிந்து தோன்றும் பொருளுடைய சொற்றொடர். இதனை முதனூலார் 'அபார்த்தகம்' என்பர். அபார்த்தகம் - சம்பந்தமில்லாத அர்த்தமுடையது.

உதாரணம்:

'கொண்டன் மிசைமுழங்கக் கோபம் பரந்தனவாற்
றெண்டிரைநீ ரெல்லாந் திருமுநியே — உண்டெமிழ்ந்தான்
வஞ்சியார் கோமான் வரவொழிக மற்றிவளோர்
பஞ்சியார் செஞ்சீ றடி.'

எனவரும்.

இச்செய்யுள் ஒரு பொருள் பயவாது ஒன்றற்கொன்று சம்பந்தமில்லாத நான்கு வாக்கியங்களாய் நான்கு பொருள்

பயக்குமாறுணர்க. இது முற்றும் நோக்கும்போது பொருளாற் சம்பந்தமுறாமையின் அபார்த்தகமாயிற்று.

இதுவுமது

௧௦௦. களியினும் பித்தினுங் கடிவரை யின்றே.

இதன்பொருள் - பிரிபொருட்சொற்றொடர் என்னுங் குற்றம் கள்ளுண்டு களிப்போன் கூற்றின்கண்ணும், பித்துடையோன் கூற்றின்கண்ணும் கடிந்து விலக்கப்படுவதன்று என்றவாறு.

உதாரணம் :

'காம ருருவங் கலந்தேன்யான் காங்கேயன்
வீமனெதிர் நின்று விலக்குமோ — தாமரைமேல்
மால்பொழிய வந்தா ரருகர் மதுவுடனே
பால்பொழியு மிவ்வூர்ப் பனை.'

எனவரும்.

இதுவுஞ் சம்பந்தமில்லாத பலபொருளைப் பயந்ததாயினும் கள்ளுண்டு மயங்கினான் கூறியதாதலால் விலக்கப்பீடவில்லை. பித்தன் கூற்று வந்துழிக்காண்க.

௨. மாறுபடுபொருண்மொழி

௧௦௧. மாறுபடு பொருண்மொழி முன்மொழிந் ததற்கு
மாறுபடத் தோன்றி வருமொழித் தாகும்.

இதன்பொருள் - மாறுபடுபொருண்மொழியாவது முன்னர்ச் சொல்லப்பட்ட பொருளுக்கு மாறாகப் பொருள் தோன்றிவரும் சொல்லுடையதாகும் என்றவாறு.

இதனை முதனூலார் 'வியர்த்தம்' என்பர். வியர்த்தம் - விரோதமான பொருளுடையது.

உதாரணம் :

'மின்னார் மணிப்பைப்பூண் வேந்தே நினக்குலகில்
இன்னா தவர்யாரு மில்லையால் — ஒன்னார்

குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீயே
தலமுழுதுந் தாங்க றகும்.'

எனவரும்.

இங்கே, 'இன்றுதவர் யாருமில்லை' என்பதற்கு 'ஒன்னார் குலமுழுதுங் கூற்றங் கொளவெகுண்டு நீ' என்பது மாறு.

## இதுவுமது

க0உ. காமமு மச்சமுங் கைமிகி னுரித்தே.

இதன்பொருள் - மாறுபடுபொருண் மொழியும் காமமும் அச்சமும் மிகுந்து கூறுமிடத்துக் கொள்ளப்படு தற்கு உரியதாகும் என்றவாறு.

உதாரணம் :

'என்னே டிகல்புரியப் பஞ்சவர்க ளஞ்சாரோ
மின்னனைய பாஞ்சா லியைவிடேன் — அன்னோ
மிகல்புரியுங் கூற்றனைய வீம னெதிர்நின்
றிகல்புரிய வாற்றுவலோ யான்.'

எனவரும்.

இங்கே 'பஞ்சவர்க ளஞ்சாரோ' என்பதற்கு, 'வீம னெதிர்நின் றிகல்புரிய வாற்றுவலோ யான்' என்பது மாறு படுபொருண்மொழியாயினும் அச்சம் மிகுந்து கூறியதனால் அங்கீகாரமாயிற்று.

## ௩. மொழிந்தது மொழிவு

க0௩. மொழிந்தது மொழிவே கூறியது கூறி
வேறுபட வொருபொருள் விளங்கா தாகும்.

இதன்பொருள் - மொழிந்தது மொழிவாவது முன்னர்ச் சொன்ன பொருளையே சொல்லி அதனின் வேறாக ஒரு பொருள் விளங்குதற்கிடனுகை வையாததுவாகும் என்ற வாறு.

இதனை முதனூலார் 'ஏகார்த்தம்' என்பர்.

உதாரணம் :

‘அங்க மிலாத வநங்கன் றலம்புரியும்
வெங்கணையுங் காக்குங்கொல் வேல்வேந்தர் — தங்கோன்
நிலையார்த் தொடையதுல னேரிழைக்காய் முன்னோர்
மலையாற் கடல்கடைந்தான் மால்.’

எனவரும்.

இங்கே ‘அங்கமிலாத’ என்பதும், ‘அநங்கன்’ என்பதும் ஒரு பொருளையே பயத்தலால் மொழிந்ததுமொழிவாயிற்று.

## இதுவுமது

கச. விரைவினுஞ் சிறப்பினும் வரைவின் றதுவே.

இதன்பொருள் - மொழிந்தது மொழிவு விரைவின் கண்ணும், சிறப்பின்கண்ணும் விலக்கப்படுவதன்று என்றவாறு.

உதாரணம் :

‘ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாட
ரருவ ரருவ ரெனவஞ்சி — வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது.’

எனவரும்.

இங்கே ‘தீத்தீத்தீ’ என்பது மொழிந்ததுமொழிவாயினும் விரைவுபற்றிக் கூறியதனாற் குணமாயிற்று.

## ச. கவர்படுபொருண்மொழி

கரு. ஒருபொரு ணிய வுரைக்க லுற்றசொல்
இருபொருட் கியைவது கவர்படு பொருண்மொழி.

இதன்பொருள் - ஒரு பொருளையே துணியும்படி சொல்லப்பட்ட சொல்லானது பலபொருள் கொள்ளுமாறு இயைந்துநிற்பது கவர்படுபொருண்மொழியாகும் என்றவாறு.

இதனை முதனூலார் ‘சஞ்சயம்’ என்பர். சஞ்சயம் - ஐயம்.

உதாரணம்:

'புயலே புறம்பொதிந்து பூந்தா தொழுக்கி
மயலே கடவுளர்க்கு வாய்த்துச் — செயலே
எரிமருவு பூந்துணர்த்தாய் யாவருமூ டாடார்
அரிமருவு சோலை யகத்து.'

எனவரும்.

இங்கே 'அரி' என்பது வண்டு, சிங்கம் முதலிய பல பொருள்கள் கொள்ளற்கிட்டுகை நிற்றலாற் கவர்படுபொருண் மொழியாயிற்று.

## இதுவுமது

க0௬. வழூஉப்பட லில்வழி வரைவின் றதுவே.

**இதன்பொருள்** - அக் கவர்படுபொருண்மொழியும் வழூப்படுதலில்லாத விடத்து விலக்கப்படுவதன்று என்றவாறு.

உதாரணம்:

'வானவர்க டாழ்ந்து பணிகேட்ப மாறுய
தானவர்கள் சுற்றந் தடிந்தொழித்த — மேன்மை
அரியே யனைத்துலகுங் காக்குங் கடவுள்
எரியே மறையோர்க் கிறை.'

எனவரும்.

இங்கே 'அரி' என்பது விஷ்ணுவையும் இந்திரனையும் உணர்த்துமாயினும் இருபொருளும் இயைதலாற் குற்றமாகாமை உணர்க.

## ரு. நிரனிறைவழு

க0எ. ஒருநிரன் முன்வைத் ததன்பின் வைக்கும்
நிரனிறை பிறழ்வது நிரனிறை வழுவே

**இதன்பொருள்** - ஒரு வரிசையை முன்னர் வைத்து அதன்பின் வைக்கும் வரிசை முன்னிறுத்திய வரிசைக்கு இயையாது பிறழுவது நிரனிறைவழுவாகும் என்றவாறு.

உதாரணம்:

'தெற்குக் குடக்கு வடக்குக் குணக்குமேல்
நிற்குந் திறத்துலகை நீடளிக்கும் — பொற்பினோ
ரீரெண் கலையோன் வருண னிரவியமன்
யாரும் புகழியல்பி னோர்.'

எனவரும்.

இங்கே 'தெற்கு', 'குடக்கு', 'வடக்கு', 'குணக்கு' என வைத்த வரிசைக்கு இயைய 'இயமன்', வருணன், 'ஈரெண்கலையோன்', 'இரவி' என வைக்காது பிறழவைத்தமையான் நிரனிறை வழுவாயிற்று.

இதுவுமது

கஎரு. உய்த்துணர வரும்வழி யவ்வாறு முரித்தே.

இதன்பொருள் - அந்நிரனிறை உய்த்துணர்ந்து கொள்ளும்படி வருமிடத்து அவ்வாறு பிறழ்ந்து வருதலு முரியதாகும் என்றவாறு.

உதாரணம்:

'குடபால் வடபால் குணபா றென்பாலென்
றடைவே திசைநான் கவற்றுள் — இடையிரண்டு
நன்மைபுரி வோர்பயந்து நோக்குப வேனைய
வன்மை புரிவோர்க்கே யாம்.'

எனவரும்.

இங்கே 'இடையிரண்டு' மென்றுரேனும், 'நன்மை புரிவோர்'க்கு வடக்குங் கிழக்கும், 'வன்மை புரிவோர்'க்குத் தெற்கும் மேற்கும் உரியவெனக் கொள்க.

## சா. சொல்வழு

கஎசு. சொல்வழு வென்பது சொல்லிலக் கணத்தொடு
புல்லா தாகிய புகர்படு மொழியே.

இதன்பொருள் - சொல்வழுவாவது சொல்லிலக் கணத்தோடு பொருந்தாத குற்றமுடைய மொழியாகும் என்றவாறு.

உதாரணம்:

'யாவகைய் தாயர்க்கு மெந்தையர்க்கு மெங்களுக்கும்
ஆவி யிவளே யனையவர்க்கும் — கோவே
நுனக்கபய மிந்த நுண்மருங்குன் மாது
தனக்கிடரொன் றில்லாமற் றுங்கு.'

எனவரும். இங்கே 'நுனக்கு' என்பது சொல்வழு.

இதுவுமது

ககo. வழக்கா றுயின் வழுவின் றதுவே.

இதன்பொருள் – குறிக்கப்பட்ட சொல்லும் சான்றோரால் வழங்கப்படு முறையுடையதாயின் வழுவுடையதன்றாகும் என்றவாறு.

உதாரணம்:

'யாவ ரறிவா ரிவரொருவ ரிக்குறிஞ்சிக்
காவலரோ விஞ்சையர்தங் காவலரோ — பாவாய்
அருமந்தன் னார்நம் மகன்புனம்விட் டேகார்
தெருமந் தழலுந் திறம்.'

எனவரும்.

இங்கே 'அருமருந்தன்னார்' என்பது 'அருமந்தன்னார்' என வரினும் வழக்காறுய் வழுவில்லதாயிற்று.

எ. யதிவழு

ககக. யதிவழு வென்ப தோசை யறுவழி
நேறிப்பட வாரா நிலைமைய தென்ப.

இதன்பொருள் – யதிவழு என்று சொல்லப்படுவது ஓசைகொண்டு சீர்முடியுமிடத்து முறைப்பட வாராத நிலைமையையுடையதாகும் என்றவாறு.

சீர் முடியுமிடத்துப் பதமுடிபு பொருந்தாததென்பதாம்.

இதனை முதனூலார் 'யதிப்பிரஷ்டம்' என்பர். யதி – செய்யுளிலே ஓசை முடியுமிடம்; பிரஷ்டம் – வழுவுதல்.

உதாரணம் :

'மாடு பயிலும் வரையாளி மால்யானைக்
கோடுபுய்த் துண்டுழலுங் கொள்கைத்தாங் — காடு
அரிதா மியல்பிற் றரையிருட்கண் வாரல்
பெரிதாகு மைய பிழை.'

எனவரும்.

இங்கே 'காடு அரிதாம்' என்பது சீர் முடியுமிடத்து நெறிப்பட வாராது வழூவாயிற்று.

இதுவுமது

கக௨. வகையுளி யுரைப்புழி வழுவின் றதுவே.

இதன்பொருள் - யதிவழூவும் வகையுளியாகச் சொல்லுமிடத்து விலக்கப்படுவதன்று என்றவாறு.

'வகையுளி'யாவது பதநோக்காது இசைநோக்கிப் பிரிக்கப்படுதலுடையது.

உதாரணம் :

'மேவிவாழ் வார்மே விருணீக்கி யாருமலர்த்
தேவிநீங் காள்செம்பொற் றேளிணைகள் — கோவினணி
சென்னிவிடா மாலினடி வேலினுதி நீலநிறக்
கன்னிவிடா ளீகைவிடா கை.'

எனவரும்.

இங்கே 'மேவி' எனவும் 'வாழ்வார் மேல்' எனவும் பதநோக்கிப் பிரிக்கப்பட வேண்டியன சீர் நோக்கி 'மேவிவாழ்' எனவும் 'வார்மேல்' எனவும் பிரிக்கப்படுதலையும், 'தேவி' எனவும் 'நீங்காள் செம்பொன்' எனவும் பிரிக்கப்படவேண்டியன 'தேவிநீங்' எனவும் 'காள்செம்பொன்' எனவும் பிரிக்கப்படுதலையும் அறிக. இவ்வாறு பதம்பிரிக்கப்படுதலே வகையுளியாகும்.

௮. செய்யுள்வழு

ககரு. செய்யுள் வழுவே யாப்பிலக் கணத்தோ
டெய்த லில்லா வியல்பிற் றாகும்.

**இதன்பொருள்** - செய்யுள் வழுவாவது யாப்பிலக்கணத்தோடு பொருந்தாத இயல்பினையுடையதாகும் என்றவாறு.

உதாரணம் :

'ஆதரந் துயர்தர வயர்தருங் கொடிக்குப்
பூதலம் புனைபுகழ் வளவன் — தாதரு
தாங்கரும்பா லன்றித் தணியுமோ தாரநங்கன்
பூங்கரும்பால் வந்தடுத்த போர்.'

எனவரும்.

இது முன் ஆசிரியமும், பின் வெண்பாவுமாக வந்து யாப்பிலக்கணத்திற்குப் பொருந்தாதாயிற்று. யாப்பிலக்கணத்திலே முன்னர் ஆசிரியமும், பின்னர் வெண்பாவுமாக வருங்கவிக்கு யாண்டும் விதியில்லை.

இதுவுமது

ககச. ஆரிடத் துள்ளு மவைபோல் பவற்றுளு
நேரு மென்ப நெறியுணர்ந் தோரே.

**இதன்பொருள்** - செய்யுள்வழுவும் ஆரிடத்துள்ளும், ஆரிடம் போன்றவைகளுள்ளும் வருமென்று சொல்லுவர் அறிஞர் என்றவாறு.

'ஆரிட'மாவது இருடிகளாற் சொல்லப்பட்ட நூல். 'ஆரிடம்' போன்றவைகளாவன சாவவும், கெடவும், வாழவும் பாடவல்ல புலவர் செய்யுள்கள்.

உதாரணம் :

'கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியு ளோஒ கிடப்பதே — கெண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பண்ணாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.'

எனவரும். இது பதினாறு சீர்களுடையதாய் வெண்பாவிலக்கணத்தோடு மாறுபடினும் பாடினோர் பெருமை நோக்கி அங்கீகரிக்கப்பட்டது.

### ௯. சந்திவழு

௧௧௫. சந்தி வழுவே யெழுத்திலக் கணத்துச்
சந்தியோடு முடியாத் தன்மைத் தாகும்.

இதன்பொருள் – சந்திவழுவாவது எழுத்திலக்கணத்திற் சொல்லப்பட்ட புணர்ச்சியிலக்கணத்தோடு பொருந்தாத தன்மையுடையதாகும் என்றவாறு.

சந்தி – புணர்ச்சி.

உதாரணம் :

'என்பூ துருக வினைவேன் மனங்கலக்கும்
பொன்பூண் சுமந்த புணர்முலையீர் — மின்போல்
நுடங்கிடைக்குங் காவலாய் நோக்கக் கவரும்
படங்கிடைக்கு மல்குற் பரப்பு.'

எனவரும்.

இங்கே 'பொற்பூண்' எனற்பாலது 'பொன்பூண்' என வந்தது சந்திவழுவேயாம்.

"ணனவல்லினம் வரட்டறவும் வேற்றுமைக்கு."

என்பது விதியாதலின்.

### இதுவுமது

௧௧௬. இரண்டாம் வேற்றுமைக் கெதிர்மறுத் தும்வருமே.

இதன்பொருள் – இரண்டாம் வேற்றுமையாயின், எழுத்திலக்கணத்திற் சொல்லப்பட்ட விதியை மறுத்தும் புணர்ச்சி வரும் என்றவாறு.

உதாரணம் :

'இரவி துணைத்தா ளிகல்வேந்தர் சென்னி
விரவு மலர்பொழிய மேவா — அரசிரிய
மின்பொழியுஞ் செவ்வேல் வெறியோ ரினங்கவரப்
பொன்பொழியுஞ் செங்கைப் புயல்.'

எனவரும். இங்கே 'பொன்பொழியும்' என்பது இரண்டாம் வேற்றுமையாய் இயல்பாயிற்று.

## க. இடமலைவு

ககஎ. இடமெனப் படுபவை மலைநா டியாறே.

**இதன்பொருள்** - இடமென்று சொல்லப்படுபவை மலை, நாடு, யாறு என்பனவாம் என்றவாறு.

'மலை'யாவது இமயம், பொதியம் முதலியன. 'நா'டாவது பதினெண் பாஷையும் வழங்கும் நிலங்கள். 'யாறு' கங்கை முதலியன. இவற்றுள் ஒன்றினுள்ள பொருளை மற்றொன்றினுள்ளதாகச் சொல்லுதல் இடமலைவாகும். மலைவு - விரோதம்.

உதாரணம்:

'தென்மலையின் மான்மதமுஞ் சாமரையுந் தேமருசீர்ப்
பொன்மலையின் சந்தனமு மாரமும் — பன்முறையும்
பொன்னி வளநாடன் முன்றிற் பொதுளுமே
மன்னர் திறைகொணர வந்து.'

எனவும்,

'தண்பொருநைச் செங்கநக மாதங் கிரித்தாளம்
வண்கலிங்கந் தந்த வயப்புரவி — பண்பு
மருவும் யவநத்து மால்யானை சென்னி
பொருநர்க்கு வீசும் பொருள்.'

எனவும் வரும். இங்கே மலை முதலிய இடமலைவுகளை முறையே காண்க.

## உ. காலமலைவு

ககஅ. காலம் பொழுதொடு பருவமென் றிரண்டே.

**இதன்பொருள்** - காலமாவது பொழுதும் பருவமும் என்று சொல்லப்பட்ட இரண்டுமாம் என்றவாறு.

'பொழு'தாவன காலை, உச்சி, மாலை, யாமம், வைகறை என்னுஞ் சிறுபொழுதுகள். 'பருவ'மாவன கார், கூதிர் முதலிய அறுவகைப் பருவங்கள். இவற்றுள் ஒன்றற்குரியது மற்றொன்றற்குரியதாகச் சொல்லப்படுவது காலமலைவாகும்

உதாரணம் :

'செங்கமலம் வாய்குவியத் தேங்குமுதங் கண்மலர
எங்கு நெடுவானின் மீனிமைப்பப் — பொங்குதயத்
தேராழி வெய்யோ னுகந்தான் மலர்ந்ததே
நீராழி சூழ்ந்த நிலம்.'

எனவரும்.

இங்கே மாலைக்காலத்திற் குரியனவாகிய 'கமலங் குவிதன்' முதலியன காலைக்குரியனவாகச் சொல்லப்பட்டுப் பொழுது மலைவாயிற்று.

உதாரணம் :

'காதலர் வாரார் களிக்கு மயிலகவத்
தாதவிழ் பூங்குருந்தின் றண்பனையின் — மீதே
தளவேர் முகைநெகிழத் தண்கொன்றை பூப்ப
இளவேனில் வந்த திதோ.'

எனவரும்.

இங்கே கார்ப்பருவத்திற் குரியனவாகிய மயிலகவுதல் முல்லை பூத்தன் முதலியன இளவேனிற் பருவத்திற் குரியனவாகச் சொல்லப்பட்டமையினாற் பருவமலைவாயிற்று.

## ரு. கலைமலைவு

கககூ. கலையெனப் படுபவை காண்டக விரிப்பிற்
காமமும் பொருளு மேமுறத் தழுவி
மறுவறக் கிளந்த வறுபத்து நான்கே.

இதன்பொருள் - கலையென்று சொல்லப்படுபவை காமத்தினையும் பொருளினையுந் தழுவிச் சொல்லப்பட்ட அறுபத்துநான்குமாம் என்றவாறு.

கலை - சாஸ்திரம். அவை கீதம், வாத்தியம், கணிதம் முதலியன. இவற்றிற்கு விரோதமாக வருவது கலைமலை வாகும். உதாரணம் :

'ஐந்தாம் நரம்பாம் பகைவிரவா தாருக
வந்த கிளைகொள்ள நான்காய — முந்தை

இணைகொண்ட யாழியற்று மேந்திழைதன் னாவித்
துணைவன் புகழே தொடுத்து.'

எனவரும்.

இங்கே நின்ற நரம்பிற்கு ஐந்தாவதாகிய 'கிளை'யைப் 'பகை' என்றும், ஆறாவதாகிய 'பகை'யைக் 'கிளை' என்றும், நான்காவதாகிய நட்பினை எட்டாவதாகிய 'இணை' என்றுஞ் சொன்னமையினாற் சங்கீதநூற்கு விரோதமாயிற்று.

## ச. உலகமலைவு

கஉ0. உலகெனப் படுவதீண் டொழுக்கின் மேற்றே.

இதன்பொருள் – உலகமென்று சொல்லப்படுவது இங்கே ஒழுக்கம் என்னும் பொருளுடையதாகும் என்றவாறு.

உலகத்தொழுகலாற்றோடு மாறுபடக் கூறுவது உலகமலைவாகும்.

உதாரணம் :

'அலைகடல்க ளேழுந்தூர்த் தந்தரத்தி னூடே
மலையனைய மால்யானை யோட்டிக் — கலவாரை
நீறாக்கி வைய நெடுங்குடையின் கீழ்வைத்தான்
மாறாச்சீர் மாநிலத்தார் மன்.'

எனவரும்.

இங்கே ஒரு நிலவேந்தனை 'ஏழுகடலையுந் தூர்த்தான்' என்றும், பகைவரை வென்றான் என்றும் உலகொழுக்கோடு மாறுபடக் கூறினமையால் உலகமலைவாதல் உணர்க.

## ரு. நியாயமலைவு

கஉக நியாய மென்பது நெறியுறக் கிளக்கின்
அளவையிற் றெளிக்கும் விளைபொருட் டிறமே.

இதன்பொருள் – நியாயமென்று சொல்லப்படுவது காட்சி முதலிய அளவைகளாலே பொருட்கூறுபாடுகளைத் தெளிவிப்பதாகும் என்றவாறு.

நியாயம் - பொருந்துமாறுடையது. கௌதமர், கபிலர் முதலியோர்களாற் செய்யப்பட்டுள்ள நியாயசூத்திரம் முதலியன நியாயநூல் எனப்படும்.

உதாரணம் :

'ஆய பொருள்கள் கணத்தோ றழியுமெனத்
தூய வசோகின் முனியுரைத்த — தாய்வன்றே
காதலர் நீங்க வெழுங்காம வெங்கனல்வாய்
மாத ருயிர்தாங்கு மாறு.'

எனவரும்.

இங்கே கணந்தோறழியும் என்னும் புத்தன் வாக்கியத்தை அருகன் சொன்னதாகச் சொல்லியது நியாயநூற்கு விரோதமாகும்.

## ௬. ஆகமமலைவு

௧௨௨ ஆகம மென்பன மநுமுத லாகிய
அறனொடு புணர்ந்த திறனறி நூலே.

இதன்பொருள் - ஆகமமென்று சொல்லப்படுவன அறத்தொடு பொருந்திய வகைகளை அறிதற்குக் காரணமாகிய மநுஸ்மிருதி முதலிய நூல்களாகும் என்றவாறு.

மநுஸ்மிருதி முதலிய விதிப்பிரமாணத்திற்கு மாறாக வருவது ஆகமமலைவாகும். ஆகமம் - ஆப்தர்கள் கூறிய சாத்திரம்.

உதாரணம் :

'தெய்வம் விருந்தொக்க றென்புலத்தார் தாமென்னும்
ஐவகையுந் தம்பொருள்கொண் டாற்றுவார் — மையிலா
முக்கோலுங் கற்றோய் முழுமடியுந் தாங்கியே
தக்கோ ரெனப்படுவார் தாம்.'

எனவரும்.

இங்கே 'தெய்வம்', 'விருந்து' முதலியவைகளைப் பேணுதலாகிய இல்லறத்தார்க்குரிய தொழிலைத் துறவிகளுக்குரியனவாகச் சொல்லியது ஆகமவிரோதமேயாம்.

## மலைவமைதி

கஉ௬. கூறிய நெறியி னறுவகை மலைவு
நாடக வழக்கி னட்டேற் குரிய.

இதன்பொருள் – மேலே சொல்லப்பட்ட அறு வகை மலைவும் நாடகவழக்கிலே நிலையாகக் கொள்ளுதற் குரியனவாகும் என்றவாறு.

'நாடகவழக்'காவது உள்ளனவற்றோடு இல்லனவுஞ் சிறிது கூறுதலாகிய புனைந்துரை.

### க. இடமலைவமைதி

உதாரணம்:

'மரகதச் சோதியுடன் மாணிக்கச் சோதி
இருமருங்குஞ் சேர்ந்தரிவை பாகன் — உருவ
மலைக்கு மகில்சுமந் தாரத்து வான்கோ
டலைத்து வரும்பொன்னி யாறு.'

எனவரும்.

இங்கே 'பொன்னியாறு' பிறமலைக்கும், பிறநாட்டிற்கு முரிய 'மரகதம்' முதலியவைகளை அலைத்து வருகின்றதென்றது இடவிரோதமாயினும் வர்ணனைவகையால் அமைவ தாயிற்று.

### உ. காலமலைவமைதி

உதாரணம்:

'மண்டபத்து மாணிக்கச் சோதியான் வாவிவாய்ப்
புண்டரிக மாலைப் பொழுதலருந் — தண்டரளத்
தாமஞ் சொரியுந் தகைநிலவான் மெல்லாம்பற்
பூவலருங் காலைப் பொழுது.'

எனவரும்.

இங்கே காலையிலே மலர்தற்குரிய கமலம் மாலையிலே மலரும் என்றும், மாலையிலே மலர்தற்குரிய ஆம்பல் காலையிலே மலரும் என்றுங் கூறுதல் காலவிரோதமாயினும் புனைந்துரைவகையாதலிற் பொருந்துவதாயிற்று.

## ௩. கலைமலைவமைதி

உதாரணம் :

'கூடம் விரவிக் குறைநிலத்தா னத்தியன்ற
பாட லமுதம் பருகினான் — ஆடுகின்ற
ஊச லயற்றோன்றி யொளியிழைக்கு நாணளித்த
ஆசில் வடிவே லவன்.'

எனவரும்.

இங்கே ஆறும் நரம்பாகிய பகையோடு கூடிக் 'குறை நிலத்தா னியன்ற' தனைப் 'பாடலமுதம்' என்றது கலைமலைவா யினும் புனைந்துரையாதலிற் பொருந்துவதாயிற்று.

## ௪. உலகமலைவமைதி

உதாரணம் :

'கடனாகம் வந்தலைக்குங் காலானுந் தேரும்
அடல்செய் திருதுணியாயிற்றே — உடலொன்றி
அந்தரமே யேகுவன் காண்மினோ யானியற்றும்
இந்திர சால மிது.'

எனவரும்.

இஃது உலகமலைவாயினும் இந்திரசாலம் என்றமையாற் பொருந்துவதாயிற்று.

## ௫. நியாயமலைவமைதி

உதாரணம் :

'வானாகி மண்ணாய் மறிகடலாய் மாருதமாய்த்
தேனாகிப் பாலாந் திருமாலே — ஆனாயர்
வெண்ணெய் விழுங்க நிறையுமோ மேலொருநாள்
மண்ணை யுமிழ்ந்த வயிறு.'

எனவரும்.

இங்கே 'வான்' முதலிய எல்லாமானாய் என்பதற்கு 'மண்ணை யுமிழ்ந்த வயிறு' என்பது மாறாய் நியாயமலைவாயினும் புனைந்துரையாதலிற் பொருந்துவதாயிற்று.

## ௬. ஆகமமலைவமைதி

உதாரணம்:

> 'காய்கதி ரோனுக்குக் கன்னனையீன் றுங்கன்னி
> யாகிப்பின் மூவரையு மீன்றளித்த — தோகை
> தலைமைசேர் கற்பினு டான்வணங்கு முன்னாள்
> மலையெடுத்துக் கார்காத்த மால்.'

எனவரும். இங்கே முன்னர்க் 'கன்னனைப்' பெற்றவளைப் பின்னர் 'கன்னி' என்றும், 'கற்புடையாள்' என்றுங் கூறியது ஆகமமலைவாயினும் திருமால் வணங்குந் தகுதிபற்றிப் பொருந்துவதாயிற்று.

### புறனடை

௧௨௪. மெய்பெற விரித்த செய்யுட் டிறனு
மெய்திய நெறியு மீரைங் குணனு
மையேழ் வகையி னறிவுறு மணியு
மடியினுஞ் சொல்லினு மெழுத்தினு மியன்று
முடிய வந்த மூவகை மடக்குங்
கோமூத் திரிமுதற் குன்று மரபி
னேமுற மொழிமிறைக் கவியீ ராறு
மிவ்வகை யியற்றுதல் குற்ற மிவ்வகை
யெய்த வியம்புத லியல்பென மொழிந்த
வைவகை மூத்திறத் தாங்கவை யுளப்பட
மொழிந்த நெறியி னொழிந்தவுங் கோட
லான்ற காட்சிச் சான்றோர் கடனே.

இதன்பொருள் — முத்தகம் முதலிய செய்யுள் வகைகளும், வைதருப்பம், கௌடம் என்னும் நெறிகளும், அவற்றோடு தொடர்ந்த செறிவு, தெளிவு முதலிய பத்துக் குணங்களும், தன்மை உவமை முதலிய முப்பத்தைந்து பொருளணிகளும், மூன்றுவகை மடக்கலங்காரமும், கோமூத்திரி முதலிய பன்னிரு சித்திரகவிகளும், பதினைந்து வகைக் குற்றங்களும் உளப்படச் சொல்லப்பட்ட நெறிகொண்டு சொல்லாதொழிந்தவைகளையும் தழுவியமைத்துக் கொள்ளுதல் அறிஞர் கடனாகும் என்றவாறு.

# அருஞ்சொற்றொடர்ப்பொருள்கோள்

௧. என்னேய் சில மடவார் - என்போன்ற சிலமகளிர்; ஏய் - உவமவுருபு.

௨. தனவே யென்று - தன்னுடையனவே என்று கருதி.

௧௧. இரவுலவா - இரவினுங்குறையாத.

ஆயர்வாய் - தாய்மாருடையவாய்.

௧௨. இடர்த்திறத்தைத்துற - வருந்தும் வகையை யொழி.

௨௨. வீழ்ந்த பெரும்பாசத்தார் - நீங்கிய பெரிய பாசத்தினை யுடையவர்; (பாசமில்லாரென்றபடி).

௩௮. வில்லேர் புருவத்து - வில்லினையொத்த புருவத்தை யுடைய.

௪௧. செந்திருவுந் திங்களும் பூவுந் தலைசிறப்ப - செம்மையாகிய சீதேவியென்னுந் தலைக்கோலமும், பிறையென்னுமணியும், பூவும் தலையிலே சிறந்திருக்க; திரு, திங்கள், பூ, என்னும் மங்கலச் சொற்கள் முதற்சீரின் முதலிலே சிறந்து நிற்க. சந்தத் தொடையோடணிதழுவி - அழகிய மாலைகளோடும் ஆபரணங்களையும் பொருந்தி; சந்த மமைந்த மோனை, எதுகை முதலிய தொடைகளோடும் அலங்காரத்தினையுந் தழுவி.

௪௫. வாளரவு - கொலைத்தொழிலினையுடைய பாம்பு; வாள் - கொலை.

௫௦. சுடராழியான் - ஒளிபொருந்திய சக்கரப் படையினை யுடையவராகிய விட்டுணு.

௫௧. தேனக்கலர் கொன்றை - தேன் விளங்கி விரியுங் கொன்றை.

௬௦. ஆராததேறல் - உண்டமைவுபெறாத தேன்.

௬௫. 'புறத்தன ஊரன நீரன மாவின்பிறத்தன கொற்சேரியல்வே.' புறத்தன - (கண்கள்) முல்லைநிலத்துள்ளனவாகிய மான்களாம். 'ஊரன' முதலியவற்றையும் இவ்வாறு முடிக்க.

௬௭. மான்மருவி வாளரிகள் சேர்ந்து (சிலேடை) - மயக்கஞ் செய்தலைப் பொருந்திச் சிங்கங்கள் சேரப்பெற்று; மானேக்கின் றன்மை பொருந்தி ஒளியையுடைய வரிகள் பொருந்தி. வாளரி - சிங்கம், வாள் - கொலை.

௭௦. அருக்கிய வறற்றமரம் - அருக்கிய நீரினெலழுமொலி.

௮௬. பூத்தகையுஞ்செங்காந்தள் (செங்காந்தள் பூத்து அகையும்) - செங்காந்தள் மலர்ந்து பூத்துத்தழைக்கும்; முற்று.

௮௯. சேனை போன்ம் - சேனையை யொக்கும்; முற்று.

மலர் இவரும் கூந்தலார் - மலரிவரப்பெற்ற கூந்தலையுடையார்.

௯௦. காட்டுங் கடல் (கடல் காட்டும்) - கடல் காண்பிக்கும்.

௯௯. கடைகொலுலகியற்கை (உலகு இயற்கை கடைகொல்)- பெரியோரியற்கை இழிந்ததோ?

௧௦௫. தேசிவன் சிறிது கொல்லோ (இவன் தேசு சிறிது கொல்லோ - இவனுடைய இராஜகாந்தி சிறியதோ?

௧௦௬. மண்படு தோட்கிள்ளி - பூமியைத் தாங்கும் புயங்களையுடைய சோழன்.

௧௧௫. பொன்னி வளநாடன் - சோழன், பொன்னி - காவேரியாறு.

௧௩௪. தள்ளா விடத்தேர் தடந்தா மரையடைய - தவறுத நிலத்திலே பொருந்திய பகட்டேர் வாவியிலுள்ள தாமரையை அடைய; அசைக்கப்படாத விடத்தேர் என்னும் மரங்களையுடைய மலையைத் தாவுகின்ற மரைகளடைய. எள்ளா வரிமானிடர் மிகுப்ப - இகழப்படாத நெற்கூடுகளை உழவர்கள் திரட்ட; இகழப்படாத சிங்கங்கள் துயரினை மிகச்செய்ய. உள் வாழ் தேம் சிந்துந் தகைமைத்து - உள்ளம் விரும்புந் தேனைச் சிந்துந் தகைமையுடையது; உள்ளேயிருக்கும் இடங்கள் அழியுந்தன்மையுடையது. நந்துந் தொழில் - வளர்தற்குக் (கெடுதற்குக்) காரணமான தொழில்.

௧௩௫. அம் பொற் பணைமுகத்துத் திண்கோட்டணி நாகம் - அழகிய அலங்காரம் பொருந்திய முகத்திலே திண்ணிய கொம்பினையுடைய பெரிய (விநாயகராகிய) யானை; அழகிய பொன்னிறமான மூங்கில் பொருந்திய இடங்களையும், வலிய சிகரங்களையுமுடைய அழகிய மலை. வம்புற்றவோடை - புதுமைபொருந்திய பட்டம்; பரிமளம் பொருந்திய வாவி.

தவிரா மது - நீங்காததேன் (கள்ளு). செவி மருவி - பருவத்தினையடைந்து; காதளவுஞ் சென்று.

க௫௫. மாலை மருவி மதி திரிய - மயக்கத்தினைப் பொருந்தி அறிவு வேறுபட; மாலைக்காலத்தினைப் பெற்றுச் சந்திரன் உலாவ. மணஞ் செய் காலைத் துணைமேவலார் கடிய - நறுமணங் கமழும்போது துணைவரை மேவாதார் அச்சமுற; பெரிய மணம் புணர்தற்குரிய காலத்திலே துணைவரைப் பொருந்தினர் விளக்கமடைய.

க௫௬. வெண்ணீர்மை தாங்குவன் - வெண்மையைப் பொருந்துவன; அறிவின்மையைத் தரிப்பன.

வெறியவாய்க் கண்ணீர்மை சோர்வ - வாசனையுடையனவாய்க் கள்ளாகிய நீர் சொரியப்பெறுவன; பித்துடையனவாய்க் கண்ணீர் சொரிய நிற்பன.

க௫௭. சிறைபகிவ - சிறகினைப் பொருந்துவன, கரையினைப் பொருந்துவன, சிறைச்சாலையையடைவன. கொடியன - பதாகையையுடையன; படர்கொடிகளையுடையன; கொடுந்தொழிலுடையன.

க௫௮. விச்சா தரனேனு மந்தரத்து மேவானுல் - வித்தையைத் தரித்தவ (வித்தியாதர) னாயினும் கேட்டின்கண் (ஆகாயத்திலே) மேவான்; வித்தியாதரனாயின் விண்ணிலே மேவுவான். அச்சுதனேனு மாயனலன் - கேடில்லாதவ (நாராயண) னாயினும் மாயமுடையவனல்லன்; நாராயணன் மாயமுடையவன். நிச்சம் நிறைவான் கலையான் - என்றும் நிறைகின்ற பெரிய கல்வியுடையவ (கலையையுடைய சந்திர) னாயினும்; அகளங்கன் - களங்கமில்லாதவன்; சந்திரன் களங்கமுடையவன்; நீதியிறையான நகனெங்கோ - நீதி பொருந்திய மேன்மையையுடைய (சிவ) னாயினும் பாவமில்லாதவன் (நகமுடையவனல்லன், நகம் - மலை.) எம்முடைய தலைவனாகிய சோழன்; சிவன் மலையினையுடையவன்.

காத்திருந்தும் - சோலையின்கண்ணே திருந்திய; காவல்செய்யப்பட்டிருந்தும். எத்திருந்தும் - அம்புகள் பொருந்தப்பெற்ற; தூக்கப்பட்டும். பாத் திருந்தும் - பாவின்கண்ணே திருந்திய, பார்க்கப்பட்டும்.

க௫௯. சோதியிரவி கரத்தா னிரவொழிக்கும்-ஒளியையுடைய சூரியன் தன் கிரணங்களினாலே இருளை நீக்குவான், புகழ்பொருந்திய சூரியகுலத்தவனாகிய சோழன் தன் கையினாலே வறியவருடைய யாசகத்தொழிலை நீக்குவான். மாதிடத்தான் மன்மகனை

மாறழிக்கும் - சிவன் காமனை நீங்கும்படி அழிப்பான்; மிக்க திடத் தினையுடையனாகிய சோழன் பகையரசருடைய வலியை எதிராக அழிப்பான். அநக மதி தோற்றி - குற்றமில்லாத சந்திரன் (அறிவு) தோற்றி; குமுதமளிக்கும் - ஆம்பலை மலரச்செய்யும்; பூமிக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்; கு - பூமி. தன தனிருநிதிக்கோ - குபேரன் இருவகை நிதிகளுக்குத் தலைவன்; திரவிய தாதாவாகிய சோழன் பெருஞ் செல்வமுடைய தலைவன்.

கருரு. துறைவா துறைவார் பொழில் - நெய்தனிலத்தலைவனே! துறையின்கணீண்ட சோலையில்.

கருசு. இனியா ரினியார் - இனியவராயுள்ளவர் இனி யாவர்!

நீங்கா மருளா, மருளாத ரித்துரைக்கு மாற்றம் - நீங்காத ஆசையாகிய மருளினை மேற்கொண்டு சொல்லும் வார்த்தை.

மலையா மலையா நிலம் - பொதியமலையின்கணுள்ள தென்றற் காற்று; மலயம் - பொதியம், அநிலம் - காற்று.

நினையா நினையா (நினை யாம் நினையா) - நின்னை யாம் நினைத்து. இனையா வினையாமிலம் (யாம் இனையா வினையிலம்) - யாம் வருந்தி ஒருசெயலு மிலமாயினேம்.

கருஎ. அடையா ரடையா ரரணழித்தற்கு - பகைவ ரடைந்த அரிய அரணை அழித்தற்கு. ஏர் மயில் ஆம் - சாயல் மயிலாகும்; மதர் நெடுங்கண் அயிலாம் - மதர்த்த நெடியகண் வேற்படையாகும்.

மானவா மானவா நோக்கின் - மநுகுலவேந்தனே! மான்கள் அவாவும் நோக்கினையும். கழியா கழியா தரவு (கழி ஆதரவு கழியா) - மிக்க ஆசைகளோ நீங்கா.

யாதும் வரையா வரையா மெனும்- யாதொன்றினையுங் கொள்ளாத மலைபோலு மென்கின்ற. இரையா விரையா வெழும் - இரையாக நினைத்து இரைத்து எழும்பும்.

விரவா விரவா மென்றென்றல் (விரவா இரவு ஆம்மென் தென்றல் - (நீ) விரவாத இரவின்கணுண்டாகும் மெல்லிய தென்றற் காற்று. வரவா வரவா மென நினையாய் (வரவு ஆ அரவு ஆம் என நினையாய்) - வருகையோ ஆ! பாம்பாகும் என நினையாய்.

கருஅ. விழையார் விழையார் மெல்லாடை - பகைவரும் விரும்புதல் பொருந்திய மெல்லிய சீலை. இனமும் உழையாம் - சுற்றமும் மான்களாம். உறை முழையாம் - உறையிடமுங் குகையாம்.

இறைவா விறைவால்வளை - இறைவனே கையின்கணுள்ள வெள்ளிய வளையல்கள். வண்டளவு வண்டளவு நாளின் - சிறந்த முல்லைமலரிலே வண்டுகளளாவுங் கார்காலத்திலே.

கொடியார் கொடியார் மதில் - விருதுக் கொடிகள் பொருந்திய கொடு வினையாளருடைய மதில். கடியாருரியார் - அச்சம் பொருந்திய தோலினையுடையவர்.

மலையு மலையு மகிழ்ந்து - மலையின் கண்ணுங் கடலின் கண்ணு மகிழ்ந்து; அலை - கடல். வேயுங் கலையும் (கலையும் வேயும்) - சந்திரனையுந் தரிப்பாள்; கலையும் கடவும் - மானையுஞ் செலுத்துவாள். நிற்குமரி குமரி மேற்கொண்டு (குமரி அரி மேற்கொண்டு நிற்கும்) - துர்க்கை சிங்கத்தின் மேலேறி வந்து நிற்பாள்.

௧௪௯. மாலைவாய் மாலைவா யின்னிசை - மாலைக் காலத்திலே பாமாலையின் கணுண்டாகிய இனிய இசை. உரை மேவலர் மேவலர் - புகழினைப் பொருந்ாதவர் விரும்பிக் கூறும் பழிமொழி. காவலர் காவலராங் கால் - தலைவர் காத்தல் செய்யாரான போது.

வரைய வரைய சுரஞ்சென்றார் - விவாகஞ் செய்யும் பொருட்டு மலைகளையுடைய சுரஞ்சென்றவர். புரைய புரைய - பெரியனவாகிய குற்றமுடையன. நரைய நரைய தொடை - தேனையுடையனவும் முகைகளை யுடையனவுமாகிய மாலை. வினையர் வினையர் விரைந்து - பலசெயலுடையராயும் வீரமுடையராயும் விரைந்து.

மனமேங் குழைய குழையவாய் - மனந் தளர்கின்ற மானினோக்குடையனவாய்க் காதினையவாவி. உள்வாவி - உள்ளே பாய்ந்து. கள்வாள வாளவாங் கண் - களவு செய்தலுடைய அவ்வாளினை ஒத்த கண்.

வஞ்சியான் வஞ்சியான் - வஞ்சி நகருடையவனாகிய சோழன் வஞ்சகஞ் செய்யான்.

௧௫௦. நிரையா நிரையா மணிபோல் - வரிசையாகிய பசுங்களிற் பொருந்திய மணிபோல. நிறை கோடல் கோடல் (கோடல் நிறை கோடல்) - காந்தனே! நிறையைக் கொள்ளாதே. அரையாமிருள் - பாதி யிரவில். விரையா விரையா - விரைந்து முழங்கி. ஏகமுரையா வுரையாரினும் - ஒன்றுஞ் சொல்லாத புகழாளரினும்.

கம்புளினம் புளினம் பயில்வேலை - சம்பங் கோழிகள் மணற்குன்றிற் பயிலும்போது.

௧௫௧. தோடுதைந்த (தோள் துதைந்த) - புயங்களிலே நெருங்கிய

படியவாம் - பூமியிலுள்ளாரவாவுகின்ற வாரணம் படியவாம் புலர் - யானை முழுக நீர் வற்றுகின்ற.

வாமான - (வழிகள்) பாய்கின்ற மான்களை யுடையன; மான மழைபோன் மதமான மான - பெரிய முகில்போல மதமமைந்த யானைகளையுடையன; நாமான மானக முற்று - அச்சமான புலியின் நகம் பொருந்தி; ஆழக மான மான - ஆழ்ந்த விடமுடையவான மிருகங்களையுடையன;

கூஉ. தீமான - தீமையையுடையன; காமான மான கல்சுரம் - சோலையை யொப்ப வலிய கற்களையுடைய வழிகள்; கனன் மான மான - நெருப்பினளவை யுடையன.

அனைய காவலங் காவலர் காவலர் - அவ்வியல்புடைய சோலையின் மலர்களாகிய மதபாணங்களை நமது தலைவர் காத்தல் செய்யார்; இனைய மாலை மாலைய மாலைய வினை - இத்தன்மையுடைய மயக்கத்தினையுடைய மாலைப்பொழுது அத்தன்மையுடையவென்னை; அவாவிய வாவிய வாவிய வினைய மாதரம் - நீங்காது விரும்பிய உயிர்போன்ற வருந்துந் தொழிலுடைய மாது அரம் போன்றாள்; ஆதர மாதரம் - ஆசையோ மேன்மையுடையன.

விரைமேவு மதமாய விடர்கூடு கடுநாக விரை - வாசம் பொருந்திய மதங்கொண்டனவாய்த் துயர்கூடிய கடிய யானையாகிய உணவை; மேவு மதமாய விடர்கூடு கடுநாக வரைமேவு நெறியூடு - விரும்புகின்ற வலிய முழைஞ்சிலிருக்கும் நஞ்சினையுடைய பாம்புகளிருக்கும் மலையின் வழியிலே;

கூங. கடன்மேவு கழிகாதன் மிக - கடலைகப் பொருந்திய மிக்க காதல் வளர; கடன்மேவு கழி - கடற்கரையிற் பொருந்திய கழிநிலத்திலே. மகிழ்வார்கள் - மகிழமரத்தினின்றுஞ் சொரியுந் தேன்.

கருமாலை - பிறவித்தொடர்ச்சி. உருமாய மதனாக மடுமாறு - உருவமழிய மன்மதனுடைய உடம்பினைக் கெடுக்குந்தன்மை. உருமாய மதனாகம் - இடியினையொத்த மதயானை.

[illegible]றநுவல் கங்கை தாங்கினார் - இரகசியப் பொருள்களை உபதேசிக்கும் பிரமகபாலத்தினைக் கையிலே தரித்தார்; கம் - தலை.

வல்லியந் தாமரை வனங்களாயின - வல்லியோடு கூடிய அழகிய தாமரைப் பொய்கைகளாயுள்ளன, வல்லியந் தாமரை வனங்களாயின - புலிகளையுந் தாவுகின்ற மரைகளையுமுடைய காடுகளாயின.

கசுச. குலத்தகை பணிகொளே காம்பரத்தன் - நங் குலத்தாருடைய கைகளை ஏவல்கொள்ளும் ஏகாம்பரநாத சுவாமி; குலத்தகை பணிகொளே காம்பரத்தன் - கூட்டமாகிய பாம்புகளாற் கொள்ளப்பட்ட ஒன்றாகிய வஸ்திரமுடையவர்.

காம ரம்பயி னீரமது கரம் - சோலையிலே பயிலுந்தன்மையுடையனவாகிய வண்டுகள்; காமரம் பயினீர - இசைப்பாட்டினைப் பாடுங் குணமுடையன; மதுகரங் காமரம் பயினீர - தேனைச் செய்யும் மதபாணங்கள் வேற்படையின் தன்மையையுடையன. மதுகர நாம் - வேனிற் காலத்தெதிர்ந்த நாம்.

அரியவாங்கய தானவனங்கள் - அடைதற்கரிய அவ்விடத்திலே பள்ளங்களிற் பொருந்திய வழிகள்; அரிய வாங்கயதான வனங்கள் - வண்டுகளவாவுகின்ற யானையின் மதசலங்கள். அரிய வாங்கய தான வனங்களே - சிங்கங்களுலாவுகின்ற பெரிய இடங்களாகிய காடுகள்.

கடிய வாயின காமரு வண்டினம் - பிரகாசமுடையனவாயின அழகிய வளையல்கள். கடிய வாயின காமரு வண்டினம் - நறுநாற்றத்தினை விரும்பின சோலையிற் பொருந்திய வண்டுக் கூட்டங்கள். கடியவாயின காமரு வண்டினம் - அஞ்சத்தக்கனவாயின காத்தலைப் பொருந்திய சிறந்த தினம்.

கசுரு. கோவளர்ப்பன கோநகரங்கள் - ஒளியை மிகுப்பன தலைமையமைந்த நகரங்கள்; கோவளர்ப்பன கோனகரங்கள் - அரசனாலே வளர்க்கப்படுவன அரசருடைய திறைகள். கோவளர்ப்பன கோனகரங்கள் - பூமியைக் காப்பன அரசன் கைகள்.

வானகந்தரு மிசையவாயின - பெரிய மலைகள் மரங்களை மேலேயுடையவாயின; வானகந்தரு மிசையவாயின - மேகங்கள் தம்மிடத்திற் கொடுக்கும் ஒலியையுடைய வாயின; வானகந்தரு மிசைவாயின - ஆகாயத்தினைக் கவரும் அழகினை விரும்பின; வானகந்தரு மிசையவாயின - விண்ணுலகினையொத்த புகழின வாயின.

உமாதர னுமாதர - னுமாதர னுமாதர - னுமாதர னுமாதர - னுமாதர னுமாதரன். (இ - ள்.) உமையைத் தாங்குவானும் ஆதரிக்கப்படுவோனும் பெரியனவற்றுட் பெரியவனும் மானினை ஏந்துவோனும் இலக்குமியைத் தரிப்பவனும் யானைத் தோலினைத் தரிப்பவனும் இடபத்தினை நடாத்துவோனும் பெருமையைத் தரித்த சிவன்.

பணிபவ ணந்தன தாக மன்னுவார் - பாம்புகளுக்கு வீடு தனது மார்பாகப் பொருந்துவார்; பணிபவ நந்தனதாக - தாழ்ந்த பிறப்பிறப்பின்மையதாக. அன்பராகம் - அன்பருடைய மனம். மன்பராகம் - நிலைபேறுடைய திருநீறு.

கசுசு: காவிரி மலர் - சோலையிலே விரிந்த மலர்.

வாவா வார் - பாய்ந்து நீண்ட.

அமல லகல மகல லபய (அபய அல் அகலம் அமலல் அகல்) - சோழனே! இரவின் கண் மார்பினை யணைந்து நெருங்காதே, அகலுதி. கமல பவன மவுள - தாமரைப்பூங்கோயிலிலிருக்கும் இலக்குமி போல்பவளுடைய; அமல மடர வளக வதனம் - குற்ற மற்ற நெருங்கிய அளகத்தினையுடைய முகத்தினை; அடர மதன - அடராதே மதன்போன்றவனே!

கசுஎ. கூகாகீகைக்கு - பூமியைக் காத்தற்கு. காக்கைக்கு - கற்பக சோலைக்குத் தலைவனாகிய இந்திரனுக்கும்; கைக்கைக்கு - வெறுத்தற்கு.

கசுஅ. துடிப்பெடுத்த கோடல் - முகையை உயர்த்திய காந்தள்.

கசுகூ. ஆறுமினல் - நீங்காத மின்னல்.

கஎக. கனமாலை - மேகவரிசை. மருவுமாசை (ஆசை மருவும்) - திக்குகளிலே பொருந்தும்; விடாகன மாலையே (கனம் மாலை விடா) - அதிகமாக மாலைப்பொழுதிலே மழைபெய்தலை விடா.

கஎஉ. நீவாத மாதவா - நீங்காத பெருந்தவ முடையோனே, தா மோகராகமோ தாவாது - வலிய மயக்கவேட்கையோ நீங்காது; அம்மா தவாநீ - ஆதலால் அழகிய பெண்ணினுடைய அவாவினை நீக்குதி.

வாயாயா - வாயாதன யாவை; நீகாவாய் - நீ காத்துக் கொள்; யாதாம் - யாதாகும்?; மாதா மாதா (மாது மாதா ஆம்) - இம்மாது பெரிய வருத்த முறுவள்; யாவாகா - நினக்கு எவைகள் ஆகாதன?; நீயாயாவா (ஆயா நீ வா) - ஆயனே! நீ வருக.

கஅக. மதந விராகா வாமா - மதனன்மேல் விருப்பில்லாதவனே! ஒளியுடையவனே! தநத சகாவே - தநபோனுக்குத் தோழனே! வானத தநதா தாவே - முகிலினுமதிகமான கொடையாளனே! வீசந விரோதா காரா - வியசனஞ் செய்யும் விரோதமான நஞ்சினை யுணவாக வுடையோனே! நீ வாகா - நீ வருக காக்க.

௧அ௨. மாவா - பெருமையையுடையவனே! நீதா - நீதியையுடையவனே! தா நீ வா மாவா - வலிமை நீங்காத செல்வமுடையவனே! யாவாமே மேவாயாவா (மே வாயாவா யாவாமே) - சேரக் கடவாய் வாயாதனவாக எவைதாமாகும்! நீவா - நீ வருதி; ராமமாரா - இராமனை யொப்பவனே! மாரனை ஒப்பவனே! ஆ - எருதினை யொப்பவனே! நீதாமே மாரா ராமா மேதா; (ஆமா மேதா) - ஒழுக்குடையவனே! நல்லுணர்வுடையவனே! மே மார் ஆர் - மேன்மை பொருந்திய நின்மார்பிலுள்ள ஆத்திமாலையை; நீதா - நீ தருதி. (ஆமன் - ஒழுக்குடையவன். மேதன் - நல்லுணர்வுடையவன்)

௧அ௩. பொற்றூணில் வந்த சுடர் - நரசிங்கமூர்த்தி; பொய்கை பயந்த வண்ணல் - சரவணவாவியினுற் பெறப்பட்ட முருகக் கடவுள்; சிற்றுயன் முன்வனிதையாகி யளித்த செம்மல் - விட்டுணு மோகினி என்னும் பெண்ணாகிப் பெற்ற ஐயனார்.

௧அ௭. கானவாரண...... கான வாரண மரிய வாயினனே. இ-ள். இனன் மான வாரண மரிய வாயினன் - சூரிய குலத்தவனாகிய சோழன் வலிய போர்செய்து தடுத்தலைப் பொருந்திய இடங்களையுடையவனாகிய பகையரசன்; கான ஆரணம் அரியவாய் - இசையினையுடைய வேதமுழக்கங்களு மில்லாதனவாய்; இனன் ஏதான வாரணம் அரியவாய் - கூட்டமாகப் பொருந்திய மதயானைகளின் முழக்கங்களுமில்லாதன வாய்; கான வாரணம் அரிய வாயினன் - காட்டுக் கோழி சிங்கம் என்பவற்றின் ஒலிகளையுடைய இடங்களுடையவனுவன். எ - று. (இனன் - சூரியன்; சோழன், அரசன் வாரணம் - தடை, கோழி. வாய் - இடம்.)

# அருஞ்சொற்பொருள் கோவை

அகவல் - ஒலித்தல்; "மயிலகவி யாடலும்"

அகளங்கன் - சோழராசர்களு ளொருவன், களங்கமில்லாதவன்; அ-இன்மை, களங்கம்-குற்றம். குலோத்துங்கசோழனென்பாருமுளர். கம்பநாடரும் "புவிபுகழ் சென்னிபோரமலன் ரேள்புகழ்" என்றார். (இராமா. பில. ௩௫)

அத்தியூர் - அத்திகிரி; அத்தி - யானை.

அதுலன் - ஒப்பில்லாதவன்; அ-இன்மை, துல்யன் - ஒப்புள்ளவன்.

அநங்கன் - உருவமில்லாதவன்; "யானை யிரதம் பரியாளிவையில்லை தானுமநங்கன்." (அந்-இன்மை, அங்கம்-உருவம்.)

அநபாயன் - சோழராசர்களு ளொருவன்; அந் - இன்மை, அபாயம் - கேடு.

அப்பு - நீர்; "சடைமருவு மப்பணிந்தே."

அபயன் - சோழன்.

அம்பு - நீர்; "தீட்டாதவம்பு"

அம்போருகம் - தாமரை; அம்போ - நீரில், ருகம்-பிறந்தது.

அரவம் - ஒலி, பாம்பு.

அரவிந்தம் - தாமரை.

அரன் - சிவன்; "நாணுமரற்கு."

அரியேறு - சிங்கவேறு; "அரியேறுகைப்பாடோள்"

அருமந்-தன்னார் - அருமருந்து போல்வார்.

அற்றம் - அவகாசம்; "வள்ளல் பிரிவற்றம்."

அறுகால் - வண்டு; "பெடைகூடு மறுகாலு முறையாகொல்."

அன்னை-அத்தன்மையை யுடையை; "மண்ணின்மே லன்னை வயவேந்தே."

ஆக்கம் - மேன்மேலுயர்தல்; "ஆக்கம் புகழ் பெற்றது."

ஆகம் - மனம், மார்பு.

ஆய் - கடைவள்ளல்களு ளொருவன்; "போர்வேளாயைக் காணியசென்மே."

ஆயர் - தாயர்.

ஆயாயாள்-அன்னையாயுள்ளாள்; "ஆயாயாளிற் சேர்த்துவது."

ஆரம் - முத்துமாலை; "ஆரத்தாளேமருங்குல்."

ஆல - ஆரவாரிக்க; "மயின்மருங்கால"

ஆழி - சக்கரம், தேர்ச்சில்லு.

இசை - ஒலி.

இடையூறு - நீங்கு; இடை - நடு, ஊறு - உறுவது.

இந்திரசாலம் - மந்திரம்; மருந்து முதலியவற்றினால் ஒன்றினை வேறொன்றாகக் காட்டல், மறைத்தல் முதலிய கபடவித்தை; இந்திரம்-இரவு, சாலம்-கண்ணுக்கு மறைத்தல்.

இந்தீவரம்-நீலோற்பலம்; இந்தி-இலக்குமி, வரம் - விருப்பம்.

இயமானன் - ஆன்மா.

இரங்குதல் - ஒலித்தல், அழுதல்; "யாழே யிரங்குவன."

இயல் - சாயல்.

இறந்தவர் - சென்றவர்.

இனன் - சூரியன், சோழன்.

ஈனம் - குறைவு.
ஈமம் - சவஞ்சுடும் விறகுகளின் அடுக்கு; "தளிர்மேனி யீமந் தரிக்குமோ வென்று."

உரை - கீர்த்தி.
உழை - இடம், பக்கம், மான்.

ஊசல் - அசைத்தல்.
ஊசலாடல் - அங்குமிங்குமலை தல்.

எயிறு-பல்லு; "துளையெயிற்ற."
எக்கறல்-யாமஇத்தன்மை பெற் றிலேமே என்று விரும்புதல்; "இன்றுமையாண் மாசிலா முகங்கண் டேக்கற்றே."
ஏதிலன் - அந்நியன்.
ஏர் - ஒப்பு.
ஏரி - ஒருவகை நீர்நிலை.
ஏனல் - தினை.

ஓதம் - அலை.

கச்சாலை - கச்சபாலயம்; "கச்சாலை எம்மான்." கச்ச-ஆமை, ஆலை - ஆலயம்.
கடம்-காடு, பெறுமுறை, யானை மதம்.
கடையமகளிர் - கடைசியர்.
கண்கூடுதல் - சேர்தல்.
கண்டல் - தாழை; "கண்டல் கண்டகமகிழ்."
கந்து - கம்பம்.
கமலம் - தாமரை.
கரடம் - யானையின் கண்டம்.
கருநடர் - கருநடதேசத்தார்.
கலசம் - குடம்; "செங்கலசக் கொங்கை."
கவ்வை - ஒலி; "கவ்வைவிரிதிரை."
கவி - குரங்கு, புலவன்.

கவிகை - குடை.
கவுத்துவம் - விட்டுணுவின் மார்பிலே அணியப்பட்டிருக்கும் ஓரிரத்திநம்; கடலிற் பிறந்தது; தத்திதாந்த பதம். குஸ்துபம் - கடல்.
கறை - களங்கம்.
கன்றல் - கோபித்தல்; "கன்றும் வயவ ரினம்."

காப்பியம்-ஒருவகை யிலக்கியம்; இது, கவியாற் செய்யப்பட்டது என்னும் பொருளுடைய ஒரு தத்திதாந்தபதம். கவி- புலவன்.
கார் - இருள்; "கார்மாலை."
காவிரி - காவேரியாறு.
காவிரிநாடு - சோழநாடு.
காவேரி - பொன்னியாறு; இது, கவேரன் மகளெனப் பொருள்படும் தத்திதாந்தபதம்.
கானல் - நெய்தனிலம்.

கிள்ளி - சோழன்.
கிள்ளை - கிளி; "மாற்றத்தாற் கிள்ளை."
கிளைத்தல் - கிண்டுதல்.

குடதிசை - மேற்றிசை.
குமிழ் - குமிழமரம், நீர்க்குமிழி; "குமிழ் மேன்மறியா."
குமுதம் - ஆம்பல்.
குருதி - இரத்தம்.
குழை-சேறு, காதணி; "குழை பொருது."
குளகம் - ஒருவாக்கியமாக முடியும் பல கவிகளின் கூட்டம்; நான்குகவிகளின் மேற்படச் சென்று முடிவதென்பாருமுளர். குள - ஓரினக்கூட்டம்.

கூற்று - இயமன்.

கேதகை - தாழை.

கொண்டல் - கீழ்காற்று; "கொண்டல் கொண்டலர்."
கொல்லி-மருதயாழ்த் திறவகையின்றொன்று; சேரநாட்டுள்ள ஒருமலை.
கொற்றவன் - அரசன்.

கோட்டம் - வளைவு; "கோட்டந் திருப்புருவங் கொள்ளா."
கோட்டல் - வளைத்தல்; "கோட்டாமே கோடும்புருவம்."
கோடல் - காந்தள்.
கோடு - கொம்பு.
கோபம் - இந்திரகோபம்.
கோரம்-சோழன்குதிரை;"கோரந் தொழுத கொடிக்கு."

சயமடந்தை - துர்க்கை.

சாபம்-வில்லு; "மேருசாபமும்."

சிமயமலை - இமயமலை.
சிலம்பு - மலை; "உறைவது திருமறைச் சிலம்பே."
சிற்றில் - சிறுவீடு.

சீலம் - நல்லொழுக்கம்.

செயலை - அசோகமரம்
சென்னி - சோழன்.

சேயர்-தூரமுடையவர்.
சேவகம் - யானைதுயிலிடம்.

சோகம் - துக்கம்.

தகைதல் - தடுத்தல்.
தடித்து - மின்னல்; "தடித்துச் சுடர்க்கொடி."

தாது - பூந்தாது.
தார் - பூ.

துத்தி - பாம்பின்படப்பொறி.
துப்புரவு - நுகரப்படுவது.

தேரடி - சக்கரம்; "தேரடிக்கூர் வெம்படையால்."
தேறல் - தேன்.

தைவரல் - தடவுதல்; "மெல்லவே தைவந்தாள்."

தோகை - மயில்.
தோடு - கூட்டம்.

நானா-பலவிதமான; அவ்வியயம்.
நாவாய் - மரக்கலம்.

நீர்நாடன் - சோழன்.

நுழை-நுண்மை; "நுழைமருங்குல்."

நேரியன் - சோழன்.

பஞ்சவர் - ஐவர், பாண்டவர்.
பணை-மகளிர்கூட்டம், வயல்.
பரிதல் - அற்றுப்போதல்;"கண் பரிய வல்லியோ."

பாஞ்சாலி - பாஞ்சாலதேசராசன் மகள்: திரௌபதி; தத்திதாந்தபதம்.
பாண் - பாணன்; "பாண்போனும்."
பார்த்தன் - அருச்சுனன்; பிருதையின் மகன்; தத்திதாந்தம். (பிருதை - குந்தி)

பீலி - மயிலிறகு.

புகார் - காவிரிப்பூம் பட்டினம்.
புயவலயம் - வாகுவலயம்.
புழை - துவாரம்.
புனநாடு - சோழநாடு.

பூழியன் - சோழன்.

பெற்றம்-இடபம்; "அணிகொள் பெற்றமன்றே."

பொங்குதல் - மேலேயெழுதல்.

பை - பாம்பின்படம்.

மடு - நீர்நிலை; "எடுத்தமைந்த தாமரை."
மண்டல் - நெருங்கற்க; வியங்கோள். "துறைவெள்ள மண்டல்."
மதன் - வலி.
மரவம் - பிடவமரம்.
மலயம் - பொதியமலை.
மலயாநிலம் - தென்றற்காற்று.
மறை - இரகசியம்.

மாதங்கிரி - ஓர் யாறு.
மாதர் - காதல், பெண்.
மாதவி-குருக்கத்திக்கொடி; மதுவிற் பூத்தலுடையதென்னும் பொருளுடைய ஒரு தத்திதாந்தபதம். மது - வசந்தகாலம்.
மாரி - மழை, முகில்.
மால் - மயக்கம், "மால்கரி காத்தளித்த" பெருமை, "மால்வரைத்தோள்" கருமை, "மாவிருள்சூழ்" காற்று, "மால்கடல்" (பக். ௫௧.)
மாற்றம் - வார்த்தை.
மானம் - வலி, கர்வம்.

மீகான் - மாலுமி.

முத்தகம்-வேறுகவியோடு தொடாது தனி நின்று பொருண்முடியுங் கவி; மற்றையகவிகளாற் றொடராது விடப்பட்டதெனப் பொருள்படும்.
முண்டகம் - தாமரை.
முல்லை-முல்லைக்கொடி, முல்லைநிலம்.

வஞ்சி - கருவூர்.
வண்டானம் - கொய்யடிநாரை.
வயவர் - வீரர்.
வல்லி - படர்கொடி, விலங்கு.
வல்லியம் - புலி.

வாடை - வடகாற்று.
வாரணம் - யானை.
வாரி - நீர்.
வானவன் - சோழன்.

விடத்தேர் - ஒருமரம்.
விராகன் - ஆசையற்றவன்.
விலங்குதல் - விலகுதல்; "சிலை விலங்கு நீள்புருவம்."
வில்லி - விற்படையுடையவன்.
விரவலர் - கலவாதவர்.

வீறு - பெருமை.

வெய்யோன் - சூரியன், விருப்பமுடையவன்.
வெருவல் - அஞ்சற்க; "வெருவலாயிழை."

வேய் - மூங்கில்.
வேலை - கரை.

வைகல் - நாள், தங்குதல்.
வையகம் - பூமி.

# விஷயக்கிரமசூசிகை

[இலக்கம் பக்கத்தைக் குறிக்கும்]


அக்கரசுதகம் ௧௮௩
அச்சச்சுவை ௧௨௩
அடிதோறுமொன்றிடத்துமடக்கு ௧௯௦
அடிமுழுதுமடக்கு ௧௯௨
அடைபொதுவாக்கிப்பொருள் வேறுபடமொழிதல் ௯௮
அடையும்பொருளுமயல்பட மொழிதல் ௯௭
அடைவிபரீதப்படுத்தல் ௯௯
அடைவிரவத்தொடுத்தல் ௯௯
அதிசயவணி ௧௦௧
அதிசயவணிவகை ௧௦௧
அதிசயவுவமை ௪௨
அந்தாதிமடக்கு ௧௯௯
அநியமவுவமை ௩௧
அநேகாங்கவுருவகம் ௫௪
அபாவவேது ௧௧௦
அபூதவுவமை ௩௯
அயுத்தவேது ௧௧௫
அவநுதியணி ௧௩௧
அவநுதியுருவகம் ௫௮
அவயவவுருவகம் ௫௫
அவயவியுருவகம் ௫௯
அவலச்சுவை ௧௨௯
அவிரோதச்சிலேடை ௧௩௮
அழிவுபாட்டபாவவேது ௧௧௨
அற்புதவுவமை ௪௦

ஆகமமலைவமைதி ௨௦௭
ஆகமமலைவு ௨௦௪
ஆர்வமொழி ௧௨௦

இகழ்ச்சிவிலக்கு ௭௯
இடமலைவமைதி ௨௦௫
இடமலைவு ௨௦௧
இடைநிலைக்குணத்தீவகம் ௯௪
இடைநிலைச்சாதித்தீவகம் ௯௪
இடைநிலைத்தொழிற்றீவகம் ௯௪
இடைநிலைப்பொருட்டீவகம் ௯௪
இடைமுற்றுமடக்கு ௧௫௯
இடையிட்டுமிடாதும்வந்த விடையிறுதிகண்மடக்கு ௧௯௧
இடையிட்டுவந்தமுதன்முற்று மடக்கு ௧௯௧
இடையிட்டுவந்தவிடைமுற்று மடக்கு ௧௯௧
இடையிட்டுவந்தவிறுதிமுற்று மடக்கு ௧௯௧
இடையிணப்பாட்டு ௧௯௯
இடையீரடிமுழுதுமடக்கு ௧௯௩
இடையுமிறுதியுமுற்றுமடக்கு ௧௯௦
இதரவிதரவுவமை ௨௯, ௪௭
இயம்புதல்வேட்கையுவமை ௩௪
இயல்புவிபாவனை ௯௫
இயைபிலியுருவகம் ௫௧
இயைபுருவகம் ௫௦
இரங்கல்விலக்கு ௭௯
இரண்டடிப்பாடகமடக்கு ௧௯௫
இரண்டாமடிமுதன்மடக்கு ௧௫௯
இரண்டாமடியுமீற்றடியுமுதன் மடக்கு ௧௫௮
இரண்டாமடியுமீற்றடியுமுழுது மடக்கு ௧௯௪
இரண்டாமடியுமூன்றாமடியு முதன்மடக்கு ௧௫௭

இரண்டாமடியொழிந்தமூன்றடியுமுதன்மடக்கு ௧௫௮
இரண்டாமடியொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு ௧௬௪
இருபொருள்வேற்றுமைச்சமம் ௮௯, ௯௦
இருமையியற்கை ௮௭
இருவருக்கப்பாட்டு ௧௬௭
இலேசவணி ௧௧௭
இழிப்புச்சுவை ௧௨௪
இறந்தகாலவிலக்கு ௭௨
இறுதிமுற்றுமடக்கு ௧௫௯
இறுதியொழிந்தமூன்றடியுமுழுதுமடக்கு ௧௬௪
இன்சொலுவமை ௩௨
இன்பம் ௧௩
இன்மையதபாவவேது ௧௧௧

ஈற்றடிமுதன்மடக்கு ௧௫௬
ஈற்றயலொழிந்தமூன்றடியுமுதன்மடக்கு ௧௫௮

உடன்படல்விலக்கு ௭௯
உண்மையுவமை ௨௭
உதாத்தவணி ௧௩௦
உதாரம் ௧௫
உபாயவிலக்கு ௭௮
உய்த்தலில்பொருண்மை ௧௬
உயர்ச்சிவேற்றுமை ௮௯, ௯௧
உருத்திரச்சுவை ௧௨௬
உருவகதீவகம் ௬௮
உருவகப்பின்வருநிலை ௭௧
உருவகம் (புறனடை) ௬௦
உருவகவகை ௪௯
உருவகவணி ௪௮
உருவகவுருவகம் ௫௪
உலகமலைவமைதி ௨௦௬
உலகமலைவு ௨௦௩
உவமப்பொருட்பின்வருநிலை ௭௧
உவமவழுவமைதி ௪௫
உவமவுருபு ௪௬
உவமவுருவகங்களின்புறனடை ௧௫௨
உவமவுருவகம் ௫௬
உவமாதீவகம் ௬௮
உவமை (புறனடை) ௬௦
உவமையணி ௨௩
உள்ளதனபாவவேது ௧௧௨
உள்ளப்பெருமை ௧௩௧
உறுப்புக்குறைவிசேடம் ௧௪௧

எதிர்காலவிலக்கு ௭௨
எழுத்துவருத்தனம் ௧௭௨
என்றுமபாவவேது ௧௧௦

ஏகாங்கவுருவகம் ௫௪
ஏதுவணி ௧௦௭
ஏதுவிலக்கு ௮௧
ஏதுவுருவகம் ௫௭
ஏதுவுவமை ௪௫

ஐயவதிசயம் ௧௦௩
ஐயவிலக்கு ௮௦
ஐயவுவமை ௩௧, ௪௭
ஐயவேது ௧௧௬

ஒட்டணி ௯௬
ஒட்டணிவகை ௬௭
ஒப்புமைக்கூட்டவணி ௧௪௧
ஒப்புமைக்கூட்டவுவமை ௪௩
ஒருங்குடன்றோற்றவேது ௧௧௩
ஒருசொல்லேநான்கடியுமடக்கு ௧௬௫
ஒருபொருட்டீவகம் ௬௭
ஒருபொருள்வேற்றுமைச்சமம் ௮௮
ஒருவயிற்போலியுவமை ௩௭
ஒருவருக்கப்பாட்டு ௧௬௭
ஒருவழிச்சேறல் ௮௩
ஒருவினைச்சிலேடை ௧௩௫
ஒழுகிசை ௧௪
ஒற்றுப்பெயர்த்தல் ௧௮௪
ஒற்றெழுத்தில்லாப்பாட்டு ௧௬௮
ஒன்றினொன்றபாவவேது ௧௧௧

ஓருயிர்மடக்கு ௧௬௬

ஓரெழுத்துமடக்கு ௧௬௬

கடைநிலைக்குணத்தீவகம் ௬௫
கடைநிலைத்தொழிற்றீவகம் ௬௫
கடைநிலைப்பொருட்டீவகம் ௬௫
கடையீரடிமுழுதுமடக்கு ௧௯௩
கர்த்தாகாரகவேது ௧௦௮
கரந்துறைப்பாட்டு ௧௭௬
கருமகாரகவேது ௧௦௯
கருவிகாரகவேது ௧௦௯
கவர்படுபொருண்மொழி ௧௯௪
கலைமலைவமைதி ௨௦௬
கலைமலைவு ௨௦௨

காதைகரப்பு ௧௭௫
காந்தம் ௧௬
காப்பியம் ௭
காமச்சுவை ௧௨௫
காரகவேது ௧௦௭
காரணவிலக்கு ௭௪
காரியமுந்துறுங்காரணநிலை ௧௧௪
காரியவிலக்கு ௭௪
காலமலைவமைதி ௨௦௫
காலமலைவு ௨௦௧

குணக்குறைவிசேடம் ௧௩௯
குணத்தன்மை ௨௧
குணவதிசயம் ௧௦௨
குணவவநுதி ௧௩௨
குணவிலக்கு ௭௩
குணவேற்றுமை ௯௩
குளகம் ௨
குறிப்புநுட்பம் ௧௧௬

கூடசதுர்த்தம் ௧௭௧
கூடாவியற்கை ௮௫
கூடாவுவமை ௩௮
கூடுமியற்கை ௮௬

கையறல்விலக்கு ௭௮

கோமூத்திரி ௧௬௯

கௌடம் ௯

சக்கரபந்தம் ௧௭௭
சங்கீர்ணவணி ௧௫௨
சந்திவழு ௨௦௦
சமநிலை ௧௨
சமாகிதவணி ௧௨௯
சமர்த்தானவுருவகம் ௫௩
சமாதி ௧௮
சமுச்சயவுவமை ௨௭
சருப்பதோபத்திரபந்தம் ௧௮௧

சாதிக்குறைவிசேடம் ௧௪௦
சாதித்தன்மை ௨௨
சாதிவேற்றுமை ௯௨

சித்திரகவி ௧௬௯
சித்திரவேது ௧௧௩
சிலேடைத்தீவகம் ௬௭
சிலேடையணி ௧௩௩
சிலேடையின்முடித்தல் ௮௫
சிலேடையுருவகம் ௫௯
சிலேடையுவமை ௪௧
சிலேடைவிலக்கு ௮௧
சிலேடைவேற்றுமை ௯௩
சிறப்பவநுதி ௧௩௨
சிறப்புருவகம் ௫௨

சுழிகுளம் ௧௮௧
சுவையணி ௧௨௧

செம்மொழிச்சிலேடை ௧௩௪
செய்யுணெறி ௮
செய்யுள்வழு ௧௯௮
செல்வப்பெருமை ௧௩௦
செறிவு ௧௦

சொல்வழு ௧௯௬
சொல்விரோதம் ௧௪௩
சொற்பின்வருநிலை ௬௯
சொற்பொருட்பின்வருநிலை ௭௦
சொற்றொடர்நிலை ௮

ஞாபகவேது ௧௦௯

தலைமைவிலக்கு ௭௬
தற்குறிப்பேற்றவணி ௧௦௫
தற்குறிப்பேற்றவுவமை ௪௪
தன்மேம்பாட்டுரை ௧௨௭
தன்மையணி ௨௦

திரிபங்கி ௧௮௮
திரிபதிசயம் ௧௦௬, ௪௭
திரிபாகி ௧௮௭

தீமைநிதரிசநம் ௧௪௯
தீவகவணி ௬௧

துணிவதிசயம் ௧௦௩
துணைசெயல்விலக்கு ௭௭

தூரகாரியவேது ௧௧௩

தெளிவு ௧௧

தேற்றவுவமை ௩௨

தொகைநிலை ௨
தொகையுருவகம் ௪௯
தொகையுவமை ௨௫
தொகைவிரியுருவகம் ௫௦
தொடர்நிலை ௩
தொழிநுட்பம் ௧௧௭
தொழில்வேற்றுமை ௯௩
தொழிலதிசயம் ௧௦௨
தொழிற்குறைவிசேடம் ௧௪௦
தொழிற்றன்மை ௨௨

நகைச்சுவை ௧௨௭

நாகபந்தம் ௧௭௩
நால்வருக்கப்பாட்டு ௧௬௮
நான்கடியுமுழுதுமடக்கு ௧௬௫

நிகழ்காலவிலக்கு ௭௨
நிதரிசநவணி ௧௪௮, ௪௮
நிந்தையுவமை ௩௦

நியமச்சிலேடை ௧௩௬
நியமவிலக்குச்சிலேடை ௧௩௭
நியமவுவமை ௩௦
நியாயமலைவமைதி ௨௦௬
நியாயமலைவு ௨௦௩
நிரநிறையணி ௧௨௦
நிரநிறைவழு ௧௬௫
நிரோட்டம் ௧௮௩
நிலையியற்பொருட்டற்குறிப்
பேற்றம் ௧௦௬

நுட்பவணி ௧௧௬

பண்புப்புணர்நிலை ௧௫௦
பரவசவிலக்கு ௭௭
பரியாயவணி ௧௨௮
பரிவருத்தனையணி ௧௫௦
பலபொருளுவமை ௩௪
பலவயிற்போலியுவமை ௩௭
பலவினைச்சிலேடை ௧௩௫
பழிப்பதுபோலப்புகழ்தல் ௧௧௯
பழிப்பொப்புமைக்கூட்டம்
௧௪௩

பாவிகவணி ௧௫௩

பிரிபொருட்சொற்றொடர் ௧௯௧
பிரிமொழிச்சிலேடை ௧௩௪
பிறிதுபடுபாட்டு ௧௮௯
பின்வருநிலை ௬௮

புகழ்தலுவமை ௨௯
புகழ்மைநிதரிசநம் ௧௪௮
புகழ்வதுபோலப்பழித்தல் ௧௧௯
புகழாப்புகழ்ச்சியணி ௧௪௭
புகழொப்புமைக்கூட்டம் ௧௪௨
புணர்நிலையணி ௧௪௯

பெயர்பொருட்டற்குறிப்பேற்
றம் ௧௦௫
பெருங்காப்பியம் ௪

பொதுநீங்குவமை ௩௯
பொருட்குறைவிசேடம் ௧௪௧

பொருட்டன்மை ௨௧
பொருட்டொடர்நிலை ௩
பொருட்பின்வருநிலை ௬௯
பொருள்விலக்கு ௭௩
பொருள்விரோதம் ௧௪௪
பொருள்வேற்றுமை ௯௨
பொருளதிசயம் ௧௦௯
பொருளவநுதி ௧௩௨

மடக்கு ௧௫௪
மறுபொருளுவமை ௨௮, ௪௮,
மலைவமைதி ௨௦௫

மாத்திரைச்சுருக்கம் ௧௮௪
மாத்திரைவருத்தனம் ௧௮௫
மாலைத்தீவகம் ௬௯
மாலைமாற்று ௧௭௧
மாலையுவமை ௩௯
மாறுபடுபொருண்மொழி ௧௬௨
மாறுபடுபுகழ்நிலை ௧௪௫

முத்தகம் ௧
முதலடிமுதன்மடக்கு ௧௫௫
முதலடியுமிரண்டாமடியுமுதன் மடக்கு ௧௫௬
முதலடியுமீற்றடியுமுதன்மடக்கு ௧௫௭
முதலடியுமீற்றடியுமுழுதுமடக்கு ௧௯௩
முதலடியுமூன்றாமடியுமுதன் மடக்கு ௧௫௭
முதலடியுமூன்றாமடிமுழுது மடக்கு ௧௬௩
முதலீரடியுமுழுதுமடக்கு ௧௬௨
முதலுமிடையுமீற்றுமடக்கு ௧௬௦
முதலுமிறுதியுமுற்றுமடக்கு ௧௬௦
முதலொழிந்தமூன்றடியுமுதன் மடக்கு ௧௫௯
முதலொழிந்தமூன்றடியுமுழுது மடக்கு ௧௬௪
முதனிலைக்குணத்தீவகம் ௬௨
முதனிலைச்சாதித்தீவகம் ௬௩
முதனிலைத்தொழிற்றீவகம் ௬௩
முதனிலைப்பொருட்டீவகம் ௬௩
முயற்சிவிலக்கு ௭௭
முரசபந்தம் ௧௮௫
முரண்வினைச்சிலேடை ௧௩௬,
முரணித்தோன்றல் ௮௪
முழுவதுஞ்சேறல் ௮௩
முற்றுமடக்கு ௧௫௯
முற்றுருவகம் ௫௫
முன்னவிலக்கணி ௭௧
முன்னையமூன்றடியுமுதன் மடக்கு ௧௫௮

மூவருக்கப்பாட்டு ௧௬௮
மூன்றாமடிமுதன்மடக்கு ௧௫௬
மூன்றாமடியுநான்காமடியுமுதன் மடக்கு ௧௫௭
மூன்றாமடியொழிந்தமூன்றடியு முழுதுமடக்கு ௧௬௪

மெல்லினப்பாட்டு ௧௬௯

மொழிந்ததுமொழிவு ௧௯௩

மோகவுவமை ௩௫

யதிவழு ௧௯௭

யுத்தவேது ௧௧௪

வல்லினப்பாட்டு ௧௬௮
வலி ௧௭
வழுக்களின்வகை ௧௯௦
வன்சொல்விலக்கு ௭௫

வாழ்த்தணி ௧௫௧
வாழ்த்துவிலக்கு ௭௫

விகாரவுவமை ௩௫
விசேடவணி ௩௯
விபரீதப்படுத்தல் ௮௭
விபரீதவுவமை ௩௩, ௪௭
விபாவனையணி ௯௪
வியநிலையுருவகம் ௫௨

வியப்புச்சுவை ௧௨௪
விரியுருவகம் ௫௦
விரியுவமை ௨௫
விருத்ததீவகம் ௯௭
விரூபகம் ௫௩
விரோதச்சிலேடை ௧௩௭
விரோதவணி ௧௪௩
விரோதவுவமை ௪௨
விலக்கணிவகை ௭௩
விலக்கியல்வேற்றுமை ௯௩
விலக்குவமை ௪௪
விலக்குருவகம் ௫௮
விஞவுத்தரம் ௧௭௫
வினைப்புணர்நிலை ௧௪௯
வினையெதிர்மறுத்துப்பொருள் புலப்படுத்தல் ௯௮
வீரச்சுவை ௧௨௨
வெகுளிவிலக்கு ௭௯
வேற்றுப்பொருள்வைப்பணி ௮௨
வேற்றுப்பொருள்வைப்பணிவகை ௮௨
வேற்றுப்பொருள்வைப்புவிலக்கு ௮௧
வேற்றுமையணி ௮௮
வேற்றுமையுருவகம் ௫௭
வேறொருகாரணவிபாவனை ௯௪
வைதருப்பம் ௯

# அரும்பதவகராதி


அசம்பாவிதோபமை ௩௮
அசாதாரணோபமை ௩௯
அந்நியோந்நியோபமை ௨௬
அநந்நுவயவணி ௪௭
அநுசயாக்கேபம் ௭௮
அநேகேவசத்தம் ௩௭
அப்பிரத்துதப்பிரசஞ்சை ௧௪௬
அபார்த்தகம் ௧௧௧
அபிந்நபதச்சிலேடை ௧௩௪
அயுக்தரூபகம் ௫௧
அர்த்தவியக்தி ௧௯
அர்த்தாந்தரநியாசம் ௮௨
அழுகை ௧௨௬

ஆக்கேபம் ௭௧
ஆகமம் ௨0௪
ஆக்ஷிபரூபகம ௫௮
ஆசி ௫, ௧௫௧
ஆசிக்கியாசோபமை ௩௪
ஆர்ச்சக்கரம் ௧௭௭
ஆரைச்சக்கரம் ௧௭௭
ஆவிருத்தி ௬௯

இளிவரல் ௧௨௪
இரீதி ௯

உபமானம் ௨௩
உபமேயம் ௨௩
உபமேயோபமை ௨௬, ௪௭
உருவகம் ௪௭
உல்லேகாலங்காரம் ௪௮
உவகை ௧௨௫
உவமப்போலி ௯௭
உவமையணி ௪௭
உற்பிரேக்ஷிதோபமை ௪௪
உற்பிரேட்சை ௧0௫

ஊர்ஜச்சுவி ௧௨௮

எதிர்ப்பொருளுவமை ௨௮
எடுத்துக்காட்டு ௧௧௧

ஏகார்த்தம் ௧௧௩
ஏகேவசத்தம் ௩௮

ஐயவணி ௪௭

ஒப்புமைக்கூட்டம் ௪௮
ஒழிப்பணி ௪௮

ஓசம் ௧௭

கலாபம் ௨

காரியானந்தரசம் ௧௧௪

குறிப்பு ௧௫, ௧௧௬

சகோத்தியணி ௪௮, ௧௪௯
சஞ்சயம் ௧௯௪
சஞ்சயோபமை ௩௧
சந்தேகாலங்காரம் ௩௧
சமதை ௧௨
சமாசோக்தி ௯௭
சடுபமை ௩௨
சர்வதோபத்திரம் ௧௮௨

சாதாரணதர்மம் ௨௩
சாதி ௨௨

சிலிட்டம் ௧0
சிறுகாப்பியம் ௭

சுகுமாரதை ௧௫
சுட்டிக்கூறாவுவமம் ௨௬
சுவபாவோக்தி ௨௧

சூக்குமாலங்காரம் ௧௧௬

தத்துவாக்கியாரோபமை ௨௮
தடுமாறுவம் ௨௯
தர்மோபமை ௨௫

தானவீரம் ௧௨௨

திரிபணி ௪௭
திருட்டாந்தவணி ௪௮

தீபகம் ௬௨
துல்லியயோகிதை ௧௪௨
துல்லியயோகோபமை ௪௩

தொகைநிலை ௩, ௧௭

நமஸ்கிரியை ௫

நாடகவழக்கு ௨0௫
நாற்பொருள் ௫

நிர்ணயோபமை ௩௨
நிவிர்த்தி ௧0௮
நினைப்பணி ௪௭

நுவலாநுவற்சி ௯௭

நெகிழிசை ௧0
நெறி ௯, ஆறுவகை ௧௯

பருவம் ௫

பாட்டு ௮
பாடை ௮
பாவம் ௧௨௧
பாவிகம் ௧௫௩

பிந்நபதச்சிலேடை ௧௩௪
பிரசஞ்சோபமை ௨௯
பிரசாதம் ௧௧
பிரத்துதப்பிரமிசையணி ௪௮
பிரதிவஸ்தூபமை ௨௮, ௪௮
பிரதிஷேதோபமை ௪௪
பிரதீபாலங்காரம் ௩௩, ௪௭
பிரவிருத்தி ௧0௮

பிறிதுமொழிதல் ௯௭

பெருமிதம் ௧௨௨

பொருட்காரகம் ௧0௯
பொருளுவமை ௨௯

மயக்கவணி ௪௭
மருட்கை ௧௨௫

மாதுரியம் ௧௩

முத்தகம் ௨

மெய்ப்பாடு ௧௨௧

மேற்கோள் ௧௯௧

யதாசங்கியம் ௧௨0
யதிப்பிரஷ்டம் ௧௯௭
யமகம் ௧௫௪

யானைத்தொழில் ௩

யுக்குமம் ௨
யுக்தரூபகம் ௫௧

வஸ்துநிர்த்தேசம் ௫
வஸ்தூபமை ௨௯

விக்கிரியோபமை ௩௫
விசேடணரூபகம் ௫௨
விஷமரூபகம் ௫௨
விபரியாசோபமை ௩௩
வியதிரேகம் ௮௮
வியதிரேகவணி ௪௮
வியர்த்தகம் ௧௯௨
வியாசஸ்துதி ௧௪௭
விளக்கணி ௪௮

வீறுகோளணி ௧௩0

வெகுளி ௧௨௯
வெகூபமை ௩௪

# சூத்திரக்கிரமசூசிகை

அடிமுழுதுமடக்கலும் ௧௬௨
அதுதான், ஓரடி ௧௫௪
அதுவே, அடையும் ௯௭
அதுவே, குணம்பொருள் ௯௧
அதுவே, செம்மொழி ௧௩௩
அதுவே, பொருள்குணங்காரணை ௭௩
அதுவே, பொருள்குணஞ்சாதி ௨௧
அதுவே, பொருள்குணந்தொழில் ௧௦௧
அதுவே, மாலை ௫௬
அதுவே, விரியே ௨௪
அப்பாவர்தானும் ௧௧௦
அவற்றன், பிரிபொருட்சொற்றொடர் ௧௯௧
அவற்றுள், முத்தகச்செய்யுள் ௧
அவைதாம், ஒருதிறப் ௭
அவைதாம், வீரமச்சம் ௧௨௨
அவையல. ௧௦௯
அற்புதஞ்சிலேடை ௪௦
அரமுதனென்கினும் ௭
அன்னபோலெனும் ௧௦௭

ஆகமமென்பன ௨௦௪
ஆதியிடைகடை ௧௫௪
ஆர்வமொழி ௧௨௦
ஆரிடத்துள்ளும் ௧௯௯

இடமெனப்படுபவை ௨௦௧
இரண்டாம்வேற்றுமை ௨௦௦
இன்னோர்க்கின்ன ௧௫௧

உண்ணிகழ்தன்மை ௯௨௧
உதாரமென்ப ௧௫
உய்த்துணரவரும்வழி ௧௯௬
உரியபொருளின்றி ௧௮
உருவகமுவமை ௫௯
உலகறிகாரணம் ௯௪
உலகெனப்படுவது ௨௦௩
உலகொழுக்கிறவா ௧௬
உவமையும்பொருளும் ௪௮
உவமையேது ௫௬

எவ்வகைப்பொருளும் ௨௦
எழுத்தின்கூட்டம் ௧௫௪
என்றுமபாவம் ௧௧௦

எற்றசெய்யுட் ௧௯

ஒப்புமையில்லது ௧௫௨
ஒருவிரன்முன் ௧௯௫
ஒருபொருடுணிய ௧௯௪
ஒருவகைச்சொற்றொடர் ௧௩௩
ஒருவகைநிகழ் ௧௪௮
ஒருவினைபலவினை ௧௩௫
ஒழுகிசையென்பது ௧௪

ஓரடியொழிந்தன ௧௫௫
ஓரெழுத்துமடக்கலும் ௧௬௬

கருதியகுணத்தின் ௧௪௧
கருதியதுகிளவா ௧௨௮
கருதியபொருடொகுத்தது ௯௬
கருதியபொருடொகுத் ௧௪௫

கருதியபொருளை ௧௬
கலையெனப்படுபவை ௨௦௨
களியினும்பித்தினும் ௧௯௨

காமமுமச்சமும் ௧௯௫
காலம்பொழுதொடு ௨௦௧

குணந்தொழில்சாதி ௬௧
குணந்தொழில்முதலிய ௧௫௯
குளகம்பலபாட் ௨
குறிப்புவெளிப்படுக்கும் ௧௧௭

கூற்றினுங்குறிப்பினும் ௮௮
கூறியநெறியின் ௨௦௫
கூறியவுறுப்பிற் ௭

கோமூத்திரியே ௧௬௯

கௌடமென்பது ௯

சந்திவழுவே ௨௦௦

சிறப்பினும்பொருளினும் ௧௫௧

செய்யுளந்தாதி ௮
செய்யுளென்பவை ௧
செய்யுள்வழு ௧௯௮
செறிவெனப்படுவது ௧௦
செறிவேதெளிவே ௯

சொல்லின்கிழத்தி ௧
சொல்லினும்பொருளினும் ௧௫
சொல்வழு ௧௯௬

தன்மையுவமை ௨௦

தான்றற்புகழ்வது ௧௨௭

தாரகாரியமு ௧௩௫

தெரிபுவேறுகிளவாது ௧௧௬
தெளிவெனப்படுவது ௧௧

தொகையேவிரியே ௪௯

தொகைநிலைச்செய்யுள் ௨

நியாயமென்பது ௨௦௫
நிரனிறுத்தியற்றுதல் ௧௨௦

பண்புந்தொழிலும் ௨௫
பழிப்பதுபோலும் ௧௪௭

பாவிகமென்பது ௧௫௫

பிரிபொருட்சொற்றொடர் ௧௯

புகழ்வதுபோல ௧௩௮
புகழினும்பழிப்பினும் ௧௪௨

பெயர்பொருள் ௧௦௫
பெருங்காப்பியநிலை ௪
பெருங்காப்பியமே ௫

பொருள்பரிமாறுதல் ௧௫௦
பொருளினுஞ்சொல்லினும் ௨

போலமான ௬௬

மனப்படுமொருபொருள் ௧௦௯

மாறுபடுசொற்பொருள் ௧௪௫
மாறுபடுபொருண்மொழி ௧௬௨

மிகுதலுங்குறைதலும் ௪௫

முதல்வனும்பொருளும் ௧௦௭
முந்துதான்முயல்வுறாஉந் ௧௨௯
முழுவதுஞ்சேறல் ௮௨
முன்வருஞ்சொல்லும் ௬௮
முன்னத்தின்மறுப்பின் ௭௧
முன்னென்றுதொடங்கி ௮௨

மெய்பெறவிரித்த ௨௦௭
மெய்பெறுமரபின் ௮

மேற்கோளேது ௧௯௦

மொழிந்ததுமொழிவே ௧௯௫

மொழியப்பட்ட் க௫உ
பதிவழூஉவென்பது க௬எ
யாதன்றிறத்தினும் க0எ
மழையுளி க௬அ
வலியெனப்படுவது கஎ
வழக்காறுயின் க௬எ
வழூஉப்படலில்வழீ க௬௫
வன்சொல்வாழ்த்து எச
வியத்தகுசெல்வமும் க௫0
விரவத்தொடுப்பது கஉ
விரைவினுஞ்சிறப்பினும் ககூச
வினைபண்பெனு கசகூ
வேற்றுப்பொருள் அ0

## குமாரசுவாமிப்புலவர் இயற்றிய நூல்கள்

**தமிழ்ப்புலவர்சரித்திரம்.** இது தமிழ்மொழிக்கணுள்ள இலக்கியலக்கணங்களைக் கலக்கமறக் கற்றுத் தெளிந்த மெய்யுணர்வும் பிரபந்தஞ்செய்யும் பெருவலியுமுடைய இரு நூறு புலவர்களின் சரித்திரச் சுருக்கம் அமைந்துள்ளது. இதனைக் கற்பவர் முற்காலத்திலே அரசர்களும் பிரபுக்களும் புலவர்கட்குச் செய்த ஔபசாரிகங்களையும், கல்வி வளர்ச்சிக்கும் உள்ளக் கிளர்ச்சிக்கும் காரணமான சரித்திர பாகங்களையும், பல்வகை நூல்களின் நாமதேயங்களையும், சொல்லும்பொருளும் சுவைபடப்பாடிய பல்வகைக் கவிகளையும், கவிகளின் பொருள்களையும், திருக்கு, மடக்கு, சிலேடை முதலிய சொல்லணிச் சுவைகளையும், வேறு சுவைகளையும், அரியசொற்களையும் அறியவல்லவராவர். ரூ. உ.

"இச்சரித்திரம் வித்தைக்கண் விருப்புடைய பாலகர் பொருட்டுச் செய்யப்பட்டது" — நூலாசிரியர்.

**இலக்கியச்சொல்லகராதி.** இது சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலியவைகளிலும் பாரதம், இராமாயணம், கந்தபுராணம் முதலியவைகளிலும் வருகின்ற அருஞ்சொற்களாகிய இலக்கியச்சொற்கள் பலவிற்குப் பொருள் விளக்குவது. ரூ. க. அணா ச.

"பெரிய இலக்கியங்களிலுள்ள அரிய சொற்களெல்லாம் இதன்கண் உண்மையால் இது தமிழ்நூலாராய்வார்க்கெல்லாம் அதிகமாகப் பயன்படுமென்று கருதுகிறேன்" — பா. ராஜாராஜேசுவர சேதுபதி.

**யாப்பருங்கலக்காரிகைப்புத்துரை** (இரண்டாம் பதிப்பு) இது நிரநிறையாகக் கூறிய இலக்கணப்பாக்களையும் உதாரணப் பாக்களையும் இயைபுறப் பிரித்துக் காட்டியும் முன்னிலாது கட்டளைக்கலிப்பா கட்டளைக்கலித்துறை என்னுமிவற்றினங்களைப் புதிதாகச் சேர்த்தும் வண்ணங்களின் பொருள்களை விளக்கியும் சிற்சில உதாரணச் செய்யுட்களைப் புதிதாகக் காட்டியும் சிறப்பும் விளக்கமுமுற எழுதப்பட்டது. ரூ. க. அணா அ.

"தங்கள் நூலை ஆங்காங்குப் பார்த்து வந்தவளவில் விஷயங்களை எவ்வளவு தெளிவுபடுத்தக் கூடுமோ அவ்வளவு தெளிவுடனும் ஏற்ற உதாரணச் செய்யுட்களுடனும் அது விளங்காநின்றது"
— பொ. பாண்டித்துரைத் தேவர்.

**தண்டியலங்காரப்புத்துரை** (இரண்டாம் பதிப்பு). இது முன்னைய பதிப்பிலும் பார்க்கப் பல திருத்தங்கள் பெற்றுள்ளது. விஷயங்கள் ஒவ்வொன்றும் விளக்கமுறும் வண்ணம் வேறு வேறாகப்பிரித்தும், உதாரணச் செய்யுட்களைத் தக்கவாறு அமைத்தும் விளங்குகின்றது. ரூ. க. அணா கஉ.

"கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பெரிதும் பயன்படுமாறு சொற்சுருக்கமும் பொருட்சுருக்கமும் பொருந்த யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப்பிள்ளையவர்களால் உரையியற்றப் பெற்று வெளிவந்தது." — செந்தமிழ்.

**கம்பராமாயணம், பாலகாண்டம்** அரும்பதவுரை. புலவரவர்களும் திரு. தி. த. கனகசுந்தரம்பிள்ளையவர்களும் இயற்றியது. இது முன்னுள்ள அச்சுப் பிரதிகளிலும் பார்க்கத் திருத்தம் பெற்றுள்ளது. பல செய்யுட்கள் பல ஏட்டுப்பிரதிகளோடு ஒப்புநோக்கித் திருத்தப்பெற்றுள்ளன. திருத்தப்பட்ட மூலபாடங்கள் மிகப்பொருத்தமுள்ளன. அரியனவும் புதியனவுமாகிய அரும்பதவுரையும் அமைந்துள்ளது. ரூ. உ.

**அகப்பொருள்விளக்கப்புத்துரை.** புலவரவர்களும் மேற்படி திரு. தி. த. க. பிள்ளையவர்களும் இயற்றியது. இது பல சூத்திரங்களுக்குப் புத்துரை கூறியும், விடயங்களையும் உதாரணங்களையும் ஒருங்கு கூட்டி விளக்கியும் பலவாறு புதுக்கியது. ரூ. க. அணா ச.

**திருவாதவூரர்புராணவுரை.** பல ஏட்டுப் பிரதிகள் கொண்டு திருத்தப்பட்ட மூலபாடமுடையது. உரை புதிதாக எழுதப்பட்டிருக்கின்றது. ரூ. க. அணா ச.

**மேகதூதக்காரிகை.** இது குபேரன் சாபத்தாற் பிரிந்திருந்த இயக்கனொருவன் தன்மனைவிக்குத் தூது விட்டதாகப் பலவித வருணனையமைத்து வடமொழியிற் காளிதாச மகாகவி செய்த மேகதூதத்தின் பொருள்களைத் தமி

ழிற் பெயர்த்துக் கட்டளைக்கலித்துறையிற் செய்தது. அணா ௬.

"இதன்கண் உள்ள செய்யுளெல்லாம் சொல்வளம் நிரம்பி 'நன்றிசைக்கு முறைவழி நன்னெடுங் குன்றிசைப்பது போல்' முதனூலை ஒத்த மொழிபெயர்ப்புக் கொண்டு விளங்குகின்றன."
— செந்தமிழ்.

சாணக்கிய நீதிவெண்பா. இது வடமொழியிற் சாணக்கிய பண்டிதர் செய்த சாணக்கியசதகம் என்னும் நீதி நூலின் மொழி பெயர்ப்பு. வெண்பாக்கள் பழைய வெண்பாக்கள் போல மிக்க சுவையும் இசையும் அமைந்துள்ளன. அணா ௨.

இதோபதேசம். இது எல்லா நூல்களையும் நன்கு கற்றுப் பண்டிதனாய் விளங்கிய விட்டுணு சர்மர் என்னும் வேதியராலே சுதர்சனன் என்னும் அரசனுடைய பிள்ளைகளுக்கு அரசியலுணருமாறு உபதேசிக்கப்பட்ட நீதி வாக்கியங்களும் சுலோகங்களும் அவற்றிற்கியைந்த கதைகளும் அமைந்துள்ள வடமொழி நீதிநூலைச் சுருக்கித் தமிழில் வசனரூபமாகச் செய்யப்பட்டது. படிப்பவர்க்கெல்லாம் இனிமை, நன்மை, விநோதம், விருப்பம், விற்பத்தி முதலியவைகளைப் பயக்கும் பண்புடையது. இது தற்காலப் பள்ளிக்கூட மாணவர் உபயோகிக்கத் தக்கது. அணா அ.

சிசுபாலசரிதம். இது வடமொழியிற் சிசுபாலவதம், மகாபாரதம், பாகவதம் முதலிய இதிகாசங்களிற் சொல்லப்படும் சிசுபாலன் என்பவனுடைய கதையைத் தமிழில் மொழி பெயர்த்து வசனரூபமாகப் பள்ளிக்கூடமாணவர் பொருட்டு எழுதப்பட்டது. அணா ௬.

"தமிழிலே உரை நடையில் இதுபோலும் மொழிபெயர்ப்பு நூல்செய்தவர் இல்லையெனலாம்."

சூடாமணி நிகண்டு, முதலாந் தொகுதி. இது அருகன் சிவன் முதலிய தேவர்களின் நாமங்களாகிய அருகன், எண்குணன், சங்கரன் முதலிய பதங்களுக்கெல்லாம் வடநூல்களிலும், தமிழ் நூல்களிலும் தேடி எழுதப்பட்ட ஒன்றும் பலவுமாகிய பொருள்களையும் சில பதங்களின் கதைகளையும் உடையது. அணா ௪.

சூடாமணி நிகண்டு, இரண்டாந் தொகுதி. இது முதற் றொகுதி போல எழுதப்பட்ட சொற்பொருளுடையது. அணா ௫.

மாவைப்பதிகம். இது மாவைச் சுப்பிரமணிய சுவாமி மீது பாடப்பட்டது. அணா ௨.

சதாசாரக்கவித்திரட்டு. இது சைவநூல்களாகிய சித்தியார், ஞானாமிர்தம் முதலியவைகளுள் ஆங்காங்குவரும் சில கவிகளும் புறத்திரட்டு என்னும் பழைய நீதிநூலினின்று சிலகவிகளுமாக ஏறக்குறைய நூறுகவிகள் வரையிலே எடுத்துக்கோவை செய்யப்பட்டது. அணா ௪.

கண்ணகிகதை. சிலப்பதிகாரக்கதைச் சுருக்கம். அணா ௧.

சிவத்தோத்திரக்கவித்திரட்டு. இது தேவாரம், திருவாசகம், திருப்பல்லாண்டு, திருப்புகழ், பெரியபுராணம், திருப்பொற்சுண்ணம், முதலிய அடங்கியது. அணா ௫.

முத்தகபஞ்சவிஞ்சதி. இது சுன்னாகம் முத்துக்குமார கவிராசரவர்கள் இயற்றிய பல தனிநிலைக்கவிகளைத் திரட்டி அச்சிடப்பட்டது. அணா ௨.

ஞானக்கும்மி, யேசுமதபரிகாரம். இவை மேற்படி கவிராசரவர்கள் கிறிஸ்த பாதிரிமார் போதனைகளைக் கண்டு பாடிய அரிய நூல்கள். அணா ௫.

மறைசையந்தாதி, அரும்பதவுரை. அணா ௨.

கலைசைச்சிலேடைவெண்பா, அரும்பதவுரை. அணா ௨.

கு. அம்பலவாணபிள்ளை
சுன்னாகம், யாழ்ப்பாணம், இலங்கை.